SHANKAR IAS ACADEMY™

SINCE 2004

Best Academy for Civil Services Exam Coaching

# TNPSC தேர்வுப் பெட்டகம்

tnpscthervupettagam.com







## மைக்ரோ நடப்பு நிகழ்வுகள் மார்ச் 2025

www.shankariasacademy.com

# உள்ளடக்கம்

TNPSC துளிகள் ........ 2
தமிழ்நாடு செய்திகள் ........ 19
தேசியச் செய்திகள் ........ 33
சர்வதேசச் செய்திகள் ........ 51
பொருளாதாரச் செய்திகள் ........ 61
அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள் ........ 67
சுற்றுச்சூழல் செய்திகள் ........ 74
அறிக்கைகள் மற்றும் குறியீடுகள் ........ 81
மாநிலச் செய்திகள் ........ 88
பிரபலமானவர்கள், விருதுகள், மற்றும் நிகழ்வுகள் ........ 93
இசை அகாடமி விருதுகள் ........ 93
விளையாட்டுச் செய்திகள் ........ 99
முக்கிய தினங்கள் ........ 100
இதரச் செய்திகள் ........ 102

# TNPSC துளிகள்

- அரக்கோணத்தில் உள்ள மத்தியத் தொழில்துறை பாதுகாப்புப் படையின் (CISF) ஆட் சேர்ப்பு பயிற்சி மையம் (RTC) ஆனது, சோழ இளவரசரின் நினைவாக, இராஜாதித்ய சோழன் (RTC) தக்கோலம் (ராணிப் பேட்டை மாவட்டம்) என மறுபெயரிடப்பட்டுள்ளது.
- தமிழ்நாடு அரசு ஆனது ஓய்வு பெற்ற இந்திய ஆட்சிப் பணி அதிகாரியும் அறிஞருமான R. பாலகிருஷ்ணனை சர்வதேச தமிழ் ஆய்வுகள் நிறுவனத்தின் இயக்குநராக நியமித்து உள்ளது.
- தமிழ்நாட்டில் உள்ள 25 மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் அமைக்கப்பட்டுள்ள 'களங்கரை' எனப்படும் ஒரு விரிவான போதைப்பொருள் அடிமையாதல் ஒழிப்பு மற்றும் மறுவாழ்வு மையத்தினை தமிழக முதல்வர் திறந்து வைத்தார்.
- 2025-26 ஆம் கல்வியாண்டு முதல் அந்த மாநிலத்தில் உள்ள CBSE, ICSE, IB மற்றும் பிற வாரியங்களுடன் இணைக்கப்பட்டப் பள்ளிகளில் 1 முதல் 10 ஆம் வகுப்பு வரையிலான மாணவர்களுக்கு தெலுங்கு மொழியைக் கட்டாயப் பாடமாகக் கற்பிக்க தெலுங்கானா அரசு உத்தரவுகளைப் பிறப்பித்துள்ளது.
- பஞ்சாப் அரசு ஆனது, அதன் அனைத்துப் பள்ளிகளிலும், அவற்றின் வாரிய இணைப்பு எதுவாக இருந்தாலும், 1 முதல் 10 வகுப்பு மாணவர்களுக்கு பஞ்சாபி மொழி மீதானப் பாடத்தினை ஒரு முக்கியப் பாடமாக கட்டாயமாக்கியுள்ளது.
- முதலாவது மகளிர் அமைதி காப்புப் படையினர் மாநாடு ஆனது 'Women in Peacekeeping: A Global South Perspective' என்ற கருத்துருவுடன் புது டெல்லியில் நடைபெற்றது.
- இந்திய அரசானது, சமூக நீதிக்கான உலகளாவியக் கூட்டணியின் கீழ் சமூக நீதி குறித்த முதல் பிராந்திய பேச்சுவார்த்தையினை புது டெல்லியில் நடத்தி வருகிறது.
- கத்தார் நாட்டின் தோஹா நகரில் நடைபெற்ற இறுதிப் போட்டியில் ஈரானின் வீரரை தோற்கடித்து, இந்தியாவின் பங்கஜ் அத்வானி 2025 ஆம் ஆண்டு ஆடவருக்கான ஆசிய ஸ்னூக்கர் சாம்பியன்ஷிப் போட்டியில் பட்டத்தை வென்றார்.
- மிக நல்ல ஆரோக்கியத்திற்கு நமது உணவில் புரதத்தினை உள்ளடக்கச் செய்வதன் ஒரு பெரும் முக்கியத்துவத்தைக் குறிக்கும் வகையில் ஒவ்வோர் ஆண்டும் பிப்ரவரி 27 ஆம் தேதியன்று உலகப் புரத தினம் கொண்டாடப்படுகிறது.
- ஐந்தாவது தமிழ்நாடு காவல் ஆணையமானது, காவல்துறையினரின் பெரும் அதிகார துஷ்பிரயோகத்திற்கு எதிராக, குறிப்பாக வாய்மொழி வாயிலான துஷ்பிரயோகம், உண்மையான வழக்குகளைப் பதிவு செய்யாதது, பொய்யான வழக்குகளைப் பதிவு செய்தல், மிகத் தவறான தடுப்புக் காவல்கள் அல்லது கைதுகள், குற்றம் சாட்டப் பட்ட நபர்களை மிருகத்தனமாக நடத்துதல், பாரபட்சமான அல்லது மிகவும் நியாயமற்ற விசாரணை மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட சட்ட அமலாக்கம் ஆகியவற்றிற்கு எதிராக கடுமையான ஒழுங்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அழைப்பு விடுத்துள்ளது.
- ஆப்பிரிக்க-ஆசிய கிராமப்புற மேம்பாட்டு அமைப்பு (AARDO) ஆனது, புது டெல்லியில் நடைபெற்ற அதன் 21வது பொது மாநாட்டின் பொதுக் கூட்டத்தில், 2025-27 ஆம் ஆண்டு வரையிலான மூன்று ஆண்டுகளுக்கான ஒரு காலக் கட்டத்திற்காக வேண்டி தலைமை பொறுப்பிற்கு இந்தியாவை ஒருமனதாகத் தேர்ந்தெடுத்தது.
- கொல்கத்தா விமான நிலையத்திற்கு அடுத்தபடியாக மலிவு விலையில் சிற்றுண்டி உணவுகளை வழங்குவதற்காக சென்னை விமான நிலையத்தில் UDAN யாத்ரி கஃபே எனும் சிற்றுண்டியகமானது திறக்கப்பட்டுள்ளது.

- சென்னை இந்தியத் தொழில்நுட்பக் கல்விக் கழக நிறுவனத்தில் IInvenTiv2025 எனப் படும் இரண்டு நாட்கள் அளவிலான தேசிய ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு கண்காட்சி ஆனது நடைபெற்றது.
- டாக்டர் S.பாலச்சந்திரனுக்குப் பதிலாக சென்னை வானிலை மையத்தின் புதியத் தலைவராக டாக்டர் B. அமுதா நியமிக்கப்பட்டுள்ளார்.
    - இவ்வகையில் சென்னை வானிலை மையமானது முதல்முறையாக ஒரு பெண் தலைமையை ஏற்றுக் கொண்டு இருக்கும்.
- கன்னட எழுத்தாளர் பானு முஷ்டாக் என்பவரின் Heart Lamp எனப்படும் கதைத் தொகுப்பு ஆனது, இந்த ஆண்டு சர்வதேசப் புக்கர் பரிசிற்கான தகுதிப் பட்டியலில் இடம் பெற்றுள்ள 13 புத்தகங்களில் ஒன்றாக இடம் பெற்றுள்ளது.
- சென்னை உயர்நீதிமன்றம் ஆனது, வெவ்வேறு சாதிக் குழுக்கள் ஒரு தெய்வத்தை வழிபடுவதில் வெவ்வேறு வழிகளைப் பின்பற்றலாம் என்றும், ஆனால் எந்தவொரு சாதிக் குழுவையும் சேர்ந்தவர்கள் ஒரு கோயில் தங்களுக்கு மட்டுமே சொந்தமானது என்று கூறி, அதனை நிர்வகிக்க அவர்களுக்கு மட்டுமே பிரத்தியேக உரிமையை கோர முடியாது என்றும் தீர்ப்பளித்துள்ளது.
- காஷ்மீர் சமீபத்தில் பல்குன மாதத்தின் தேய்பிறைக் காலத்தின் 13வது நாளில் ஹேரத் விழாவைக் கொண்டாடியது.
- எரிசக்தி திறன் வாரியம் (BEE) ஆனது, PRAKRITI 2025 (தகவமைப்பினை உறுதிப்படுத்தல், விழிப்புணர்வு, தகவல் மற்றும் வளங்களை ஊக்குவித்தல்) எனப்படுகின்ற கார்பன் சந்தைகள் குறித்த சர்வதேச மாநாட்டினைப் புது டெல்லியில் ஏற்பாடு செய்தது.
- டென்மார்க் நாடானது, நிலையான எரிசக்தி தீர்வுகள் என்ற தொழில்துறையில் இரு நாடுகளுக்கும் இடையிலான பல்வேறு கூட்டு முயற்சிகளை அதிகரிக்கவும், கார்பன் நடுநிலைமையை நோக்கிய அவற்றின் உலகளாவிய கூட்டு இலக்கை முன்னோக்கிக் கொண்டு செல்வதற்காகவும் தனது பசுமை எரிபொருள் கூட்டணி இந்தியா (GFAI) முன்னெடுப்பினை அறிவித்துள்ளது.
- UPI மற்றும் RuPay கடன் அட்டை கொடுப்பனவு முறைகளை ஏற்றுக் கொள்ளும், சூரிய சக்தியில் இயங்கும் இந்தியாவின் முதல் Paytm கட்டண அங்கீகார ஒலிப்பு பெட்டிகளை Paytm நிறுவனம் அறிமுகப்படுத்தியுள்ளது.
- பெண் தொழில்முனைவோர் சுய உதவிக் குழுக்களுக்கு (SHG) அதிகாரம் அளிக்கவும், அவர்களின் சிறப்பான கைவினைத் திறனை நன்கு வெளிப்படுத்தவும், சரஸ் ஆஜீவிகா மேளா 2025 என்ற நிகழ்வானது உத்தரப் பிரதேசத்தில் நொய்டா நகரில் நடைபெற்றது.
- பழமைவாத கிறிஸ்தவ ஜனநாயக ஒன்றியத்தின் (CDU) தலைவரான பிரீட்ரிக் மெர்ஸ், ஜெர்மனியின் அடுத்த அதிபராகப் பதவி ஏற்க உள்ளார்.
- இந்தியப் பங்குகள் மற்றும் பரிவர்த்தனைகள் வாரியத்தின் (SEBI) 11வது தலைவராக துஹின் காந்தா பாண்டே பொறுப்பேற்றுள்ளார்.
- சைடஸ் லைஃப் சயின்சஸ் என்ற ஒரு நிறுவனமானது, புதிய வகை இன்ஃப்ளூயன்ஸா வைரஸுக்கு எதிராக பாதுகாப்பினை வழங்குவதற்காக என்று வாக்ஸிஃப்ளூ-4 என்ற தடுப்பூசியை அறிமுகப்படுத்தியுள்ளது.
- அமேசான் நிறுவனமானது, Ocelot எனப்படும் அதன் முதல் உள் வளாக குவாண்டம் கணினி சில்லுகளின் முன்மாதிரியை வெளியிட்டுள்ளது.

- பொதுச் சுகாதார அமைப்பில் முறையான மற்றும் உதாரணமாகக் கொள்ளக்கூடிய நடைமுறைகள் மற்றும் புத்தாக்கங்கள் குறித்த 9வது தேசிய உச்சி மாநாடு ஆனது ஒடிசாவின் பூரி நகரில் நடைபெற்றது.
- "10,000 வேளாண் உற்பத்தியாளர் அமைப்புகளை (FPOs) உருவாக்குதல் மற்றும் அதை ஊக்குவித்தல்" என்ற மத்திய அரசின் திட்டத்தின் கீழ் பீகாரில் 10,000வது FPO சமீபத்தில் தொடங்கப்பட்டது.
- இந்திய வானிலை ஆய்வுத் துறை (IMD) தரவுகளின் படி, 2025 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதமானது கடந்த 125 ஆண்டுகளில் இல்லாத அளவிற்கு இந்தியாவில் மிகவும் அதிக வெப்பமான ஆண்டாகும்.
- ICC தலைவர் ஜெய் ஷாவுக்கு 2025 ஆம் ஆண்டு FILA விழாவில் ஐகான் ஆஃப் எக்ஸலன்ஸ் விருது வழங்கப்பட்டது.
- டெசர்ட் ஹண்ட் 2025 எனப்படுகின்ற இந்தியாவின் ஒருங்கிணைந்த முப்படைகளின் ஒரு சிறப்புப் படைப் பயிற்சியானது ஜோத்பூர் விமானப்படை நிலையத்தில் நடத்தப் பட்டது.
- அமெரிக்க அதிபரான டொனால்ட் டிரம்ப் ஆங்கில மொழியினை அமெரிக்காவின் அதிகாரப் பூர்வ மொழியாக நியமிக்கும் நிர்வாக உத்தரவில் கையெழுத்திட்டுள்ளார்.
- அகில இந்திய மசாலா ஏற்றுமதியாளர்கள் மன்றத்தினால் (AISEF) ஏற்பாடு செய்யப் பட்ட 2025 ஆம் ஆண்டு சர்வதேச நறுமணப் பொருட்கள் மீதான மாநாடு (ISC) ஆனது, பெங்களூரில் 'Building the Trust Beyond the Borders: Transparency, Sustainability, Confidence - எல்லைகளுக்கு அப்பால் ஒரு நம்பிக்கையை உருவாக்குதல்: வெளிப்படைத் தன்மை, நிலைத் தன்மை, நம்பிக்கை' என்ற கருத்துருவின் கீழ் நடைபெற்றது.
- இரண்டாவது இந்திய-ஐரோப்பிய ஒன்றிய வர்த்தக மற்றும் தொழில்நுட்ப சபை (TTC) கூட்டம் ஆனது புது டெல்லியில் நடைபெற்றது.
- நோபல் பரிசு பெற்றவரும் ஒரு சமூகச் சீர்திருத்தவாதியுமான கைலாஷ் சத்யார்த்தி 'Diyasalaai' எனப்படும் தனது சுயசரிதையை வெளியிட்டார்.
- ஒரு சக்கர நாற்காலி அன்றாட வாழ்வில் ஏற்படுத்தும் நேர்மறையான தாக்கத்தினைக் கொண்டாடச் செய்வதற்கு மார்ச் 01 ஆம் தேதியன்று சர்வதேச சக்கர நாற்காலி தினம் அனுசரிக்கப் படுகிறது.
- முதலாம் உலகப் போரில் போராடிய இந்திய வீரர்களின் பெரும் துணிச்சல் மற்றும் தியாகங்களையும், இந்திய ராணுவம் தேசத்திற்கு அளித்த பெரும் பங்களிப்பையும் கௌரவிக்கும் வகையில் மார்ச் 03 ஆம் தேதியன்று தேசியப் பாதுகாப்பு தினம் ஆனது முதன்முதலில் கொண்டாடப்பட்டது.
- விருதுநகர் மாவட்டம் இராஜபாளையத்தில் உள்ள அரசுப் பள்ளியில் இந்தியாவின் முதல் வரைகதை புத்தக நூலகம் ஆனது திறக்கப்பட்டுள்ளது.
- கிரிக்கெட்டில் நமது நாட்டின் சிறந்த இடது கை சுழற்பந்து வீச்சாளர்களில் ஒருவரான மகாராஸ்டிராவின் பத்மகர் ஷிவல்கர் காலமானார்.
- மாற்றுத் திறனாளிகளுக்கான (PwDs) அணுகல் மற்றும் உள்ளடக்கத்தினை மிக நன்கு ஊக்குவிப்பதற்காக என்று, டேராடூனில் உள்ள தேசிய பார்வைத் திறன் குறைபாடுகள் உள்ளவர்களின் அதிகாரமளிப்பு நிறுவனம் (NIEPVD) ஆனது 'சுகம்ய யாத்ரா' (அணுகக் கூடிய வகையிலான பயணம்) எனும் செயலியை வெளியிட்டுள்ளது.
- உலக வங்கி மற்றும் ஆப்பிரிக்க மேம்பாட்டு வங்கி (AfDB) ஆனது, முக்கியப் பங்குதாரர்களுடன் இணைந்து 2030 ஆம் ஆண்டிற்குள் ஆப்பிரிக்காவின் துணை-சஹாரா பகுதிகளில் 300 மில்லியன் மக்களுக்கு மின்சார வசதி வழங்குவதற்காக திட்டம் 300 எனும் திட்டத்தினைத் தொடங்கியுள்ளன.

- சிற்பங்கள் மற்றும் நவீன ஓவியக் கலைக்குப் புகழ் பெற்ற பிரபல இந்தியக் கலைஞரான குஜராத்தின் ஹிம்மத் ஷா காலமானார்.
- அமைதி, அகிம்சை/வன்முறையற்ற தன்மை மற்றும் உலகளாவிய நல்லிணக்கத்தினை மேம்படுத்துவதற்கான இந்தியாவின் முதல் உலக அமைதி மையம் ஆனது ஹரியானாவின் குருகிராமில் திறக்கப் பட்டுள்ளது.
- உலகின் மிக வயதான (98 வயது 63 நாட்கள்) டெஸ்ட் கிரிக்கெட் வீரரான ரான் டிராப்பர் தென்னாப்பிரிக்காவில் காலமானார்.
- விதர்பா அணியானது, 2024-25 ஆம் ஆண்டு இறுதிப் போட்டியில் கேரளா அணியினை வீழ்த்தி, ஏழு போட்டித் தொடர்களில் தனது மூன்றாவது ரஞ்சிக் கோப்பையை வென்றது.
    - இது கேரளா அணியினைப் பொருத்தவரை, அதனுடைய முதல் ரஞ்சி கோப்பை இறுதிப் போட்டியாகும்.
- அசாம் மாநில அரசானது, சிராங்-ரிப்பு யானைகள் வளங்காப்பகத்தினை அந்த மாநிலத்தின் 8வது தேசியப் பூங்காவாக அதிகாரப்பூர்வமாக அறிவித்துள்ளது.
    - இந்தப் புதியத் தேசியப் பூங்காவானது சிக்னா ஜ்வாலாவ் தேசிய பூங்கா என்று பெயரிடப் பட உள்ளது.
- சர்வதேச தற்கொலைத் தடுப்பு சங்கமானது (IASP), ஒரு மனநல மருத்துவரும் மற்றும் சென்னை SNEHA தற்கொலை தடுப்பு மையத்தின் நிறுவனருமான லட்சுமி விஜயகுமார் பெயரில் ஒரு விருதை நிறுவியுள்ளது.
- 'நந்தலாலா' என்ற புனைப்பெயரால் பரவலாக அறியப்பட்ட பிரபலத் தமிழ் கவிஞரும் எழுத்தாளருமான நெடுஞ்செழியன் சிங்காரவேலு சமீபத்தில் காலமானார்.
- ஆசியா மற்றும் பசிபிக் பகுதியில், 12வது பிராந்திய 3R மற்றும் சுழற்சிப் பொருளாதார மன்றம் ஆனது ராஜஸ்தானில் ஜெய்ப்பூரில் நடத்தப் பட்டது.
- உலகின் உயிரி எரிபொருள் உற்பத்தியில் இந்தியா மூன்றாவது இடத்தினைப் பெற்று உள்ளது என்பதோடு ஜனவரி மாதத்தின் நிலவரப்படி, பெட்ரோல் எரிபொருளில் 19.6% எத்தனால் கலப்பு செய்யும் இலக்கினையும் இந்தியா அடைந்துள்ளது.
- எரிபொருள் கலன் தொழில்நுட்ப மையம் (CFCT) ஆனது, தொலைத்தொடர்புச் சேவை பரப்பு கோபுரங்களுக்கு நம்பகமான மாற்றீட்டுத் தீர்வாக ஹைட்ரஜனில் இயங்கும் எரிபொருள் கலன்களை வெற்றிகரமாக செயல் விளக்கிக் காட்டியுள்ளது.
- மத்தியப் பஞ்சாயத்து ராஜ் துறை அமைச்சகம் ஆனது, புது டெல்லியில் பஞ்சாயத்து ராஜ் அமைப்புகளின் தேர்ந்தெடுக்கப்பட்ட மகளிர் பிரதிநிதிகளின் தேசிய அளவில் ஆன ஒரு பயிலரங்கத்தினையும் ஏற்பாடு செய்துள்ளது மற்றும் "சஷக்த் பஞ்சாயத்து-நேத்ரி அபியான்" என்ற திட்டத்தினையும் தொடங்கியுள்ளது.
- திறன் மேம்பாடு மற்றும் தொழில்முனைவுத் துறை அமைச்சகமானது நிதி ஆயோக் என்ற அமைப்புடன் இணைந்து, நாடு முழுவதும் உள்ள உயர்கல்வி நிறுவனங்களில் (HEIs) மாணவிகளுக்கு கட்டமைப்பு சார் ஆதரவினை வழங்குவதனை நோக்கமாகக் கொண்ட ஸ்வவலம்பினி திட்டத்தினைத் தொடங்கியுள்ளது.
- அகமதாபாத் மாநகராட்சிக் கழகமானது, பருவநிலை நடவடிக்கைக்காக சுமார் 5,619.58 கோடி ரூபாயை ஒதுக்கியதுடன் அதன் நிதிநிலை அறிக்கையில் பருவநிலை தொடர்பான அத்தியாயத்தினை உள்ளடக்கிய இந்தியாவின் முதல் உள்ளாட்சி அமைப்பாக மாறியுள்ளது.

- குஜராத்தின் ஜுனாகத் நகரில் அமைக்கப்பட உள்ள வனவிலங்குச் சுகாதாரம் மற்றும் நோய் மேலாண்மை தொடர்பான பல்வேறு அம்சங்களின் ஒருங்கிணைப்பு மற்றும் நிர்வாகத்திற்கான ஒரு மையமாக செயல்பட உள்ள வனவிலங்குகளுக்கான தேசியப் பரிந்துரை மையத்திற்குப் பிரதமர் அடிக்கல் நாட்டினார்.
- குஜராத்தில் உள்ள கிர் தேசியப் பூங்காவில் தேசிய வனவிலங்கு வாரியத்தின் 7வது கூட்டத்திற்குப் பிரதமர் தலைமை தாங்கினார்.
- பத்திரிகையாளர்கள் நக்கீரன் R.கோபால் மற்றும் சுகிதா சாரங்கராஜ் ஆகியோருக்கு 2023 ஆம் ஆண்டு கலைஞர் எழுதுகோல் விருதினை தமிழக முதல்வர் வழங்கினார்.
- மனித-வனவிலங்கு மோதலைத் திறம்பட நிர்வகிப்பதற்காக, கோயம்புத்தூரில் உள்ள சலீம் அலி நினைவு பறவையியல் மற்றும் இயற்கை வரலாற்று மையத்தில் (SACON) இந்திய வனவிலங்கு கல்வி நிறுவன வளாகத்தில் ஒரு சிறப்பு மையம் நிறுவப்படும் என பிரதமர் அறிவித்துள்ளார்.
- NLC இந்தியா லிமிடெட் (NLCIL) நிறுவனமானது அதன் வளாகத்தில், 'விபத்துகளற்ற' சூழலை உறுதி செய்வதில் முக்கியப் பங்கு வகிக்கும் வகையில், அரண் எனப்படும் ஒரு கைபேசி சார்ந்தப் பாதுகாப்புச் செயலியை அறிமுகப்படுத்தியுள்ளது.
- "பார்வை குறைபாடுள்ள நபர்கள் நீதித்துறையின் கீழ்நிலை பதவிகளுக்கான தேர்வில் பங்கேற்க மிகத் தகுதியுடையவர்கள்" என்று உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்து குறைபாடு அடிப்படையிலான பாகுபாட்டிற்கு எதிரான உரிமையை ஓர் அடிப்படை உரிமையாக அங்கீகரித்து தீர்ப்பளித்துள்ளது.
- 404.991 லட்சம் ரூபாய் செலவில் 17 புதிய மரகதப் பூஞ்சோலை அல்லது கிராம வனப் பகுதிகளை உருவாக்குவதற்குத் தமிழக அரசு உத்தரவுகளைப் பிறப்பித்துள்ளது.
    - இந்த மூன்றாம் கட்ட மேம்பாட்டுடன் சேர்த்து இங்கு கிராமங்களில் உள்ள மொத்த மரகதப் பூஞ்சோலைகளின் எண்ணிக்கையானது 100 என்ற அளவை எட்டி பசுமை தமிழ்நாடு திட்டத்தில் ஒரு குறிப்பிடத்தக்க படிநிலையைக் குறிக்கிறது.
- நான்கு நாட்கள் அளவிலான 2025 ஆம் ஆண்டு உலக கைபேசி மாநாடானது (MWC) ஸ்பெயின் நாட்டின் பார்சிலோனா நகரில், "Converge, Connect, Create" என்ற முக்கிய ஒரு கருத்துருவின் கீழ் நடைபெற்றது.
- சீனாவைச் சேர்ந்த கட்டிடக் கலைஞர் லியு ஜியாகுனுக்கு 2025 ஆம் ஆண்டு பிரிட்ஸ்கர் கட்டிடக்கலை பரிசு வழங்கப்பட்டது.
- மைக்ரோசாப்ட் நிறுவனமானது, மருத்துவர்கள் மற்றும் சுகாதார நிபுணர்களுக்கு உதவுவதற்காக டிராகன் கோபைலட் எனப்படுகின்ற ஒரு புதிய குரல் வழி கட்டுப்பாடு கொண்ட செயற்கை நுண்ணறிவு உதவியாளரை அறிமுகப்படுத்தியுள்ளது.
- பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பானது, LCA தேஜாஸ் எனப்படும் இலகுரக போர் விமானத்திற்கான உள்நாட்டிலேயே உருவாக்கப்பட்ட ஒருங்கிணைந்த உயிர்காப்பு அமைப்பின் (ILSS) உயர் மட்ட உயரச் சோதனைகளை வெற்றிகரமாக மேற் கொண்டுள்ளது.
- டாடா மோட்டார்ஸ் நிறுவனமானது, மிக நீண்ட தூரப் போக்குவரத்து தீர்வுகளுக்கான அவற்றின் நம்பகத்தன்மையை மதிப்பிடுவதற்காக என்று, ஹைட்ரஜன் எரிபொருளில் இயங்கும் கனரக சரக்குந்துகளின் முதல் சோதனை ஓட்டத்தினைத் தொடங்கியுள்ளது.
- இந்திய மருத்துவ ஆராய்ச்சி சபையானது (ICMR), ஒரு ஒருங்கிணைந்த மருத்துவத்தில் ஆராய்ச்சிக்கான (RIM) முறையாக கட்டமைக்கப்பட்ட நெறிமுறை சார்ந்த சுகாதாரக்

கட்டமைப்பை வழங்குவதற்காக வேண்டி, மனிதப் பங்கேற்பினை உள்ளடக்கிய உயிரி மருத்துவ மற்றும் சுகாதார ஆராய்ச்சிக்கான ICMR தேசிய நெறிமுறை வழிகாட்டுதல் விதிகளின் (2017) பின் இணைப்பை வெளியிட்டுள்ளது.

- ❖ மனித கடத்தல் மற்றும் பாலியல் சுரண்டலை எதிர்த்துப் போராடுவதற்காக மார்ச் 04 ஆம் தேதியன்று பாலியல் சுரண்டலுக்கு எதிரான போராட்டத்திற்கான உலக தினம் அனுசரிக்கப் படுகிறது.
- ❖ கோவிட்-19 பெருந்தொற்று காலத்தில் அவரது உத்தி சார் தலைமைத்துவம் மற்றும் முக்கிய உதவியை அங்கீகரிக்கும் விதமாக இந்தியப் பிரதமருக்கு “Honorary Order of Freedom of Barbados” வழங்கப்பட்டுள்ளது.
- ❖ இந்திய சட்ட சேவை அதிகாரியான அஞ்சு ரதி ராணா, சட்டம் மற்றும் நீதித்துறை அமைச்சகத்தில் சட்டத் துறைச் செயலாளராக நியமிக்கப்பட்ட முதல் பெண்மணி ஆகியுள்ளார்.
- ❖ காஞ்சிபுரம், ஈரோடு, தர்மபுரி, சிவகங்கை, தேனி, கடலூர், நாகப்பட்டினம், இராணிப் பேட்டை மற்றும் கரூர் ஆகிய மாவட்டங்களில் வேலை செய்யும் பெண்களுக்கான விடுதிகள் தொடங்கப்படும் என்று தமிழக முதல்வர் அறிவித்துள்ளார்.
- ❖ கேர் எர்த் டிரஸ்ட் நிறுவனத்தின் இணை நிறுவனர் ஜெயஸ்ரீ வெங்கடேசனுக்கு, தமிழ் நாட்டின் நீர்நிலைகள் மற்றும் ஈரநிலங்களைப் பாதுகாப்பதற்குப் போராடியதற்காக, 'ஈரநிலங்களின் முறையானப் பயன்பாடு' என்ற ராம்சர் விருது வழங்கப்பட்டுள்ளது.
- ❖ குஜராத் மாநிலதின் தோலேரா நகரில் நாட்டின் முதல் வணிக ரீதியான குறைக்கடத்தி உற்பத்தி மையத்தினை நிறுவுவதற்காக என்று, இந்தியக் குறைக்கடத்தி உற்பத்தித் திட்டமானது (ISM) ஒரு நிதி ஆதரவு ஒப்பந்தத்தில் (FSA) கையெழுத்திட்டுள்ளது.
- ❖ அமுல் (குஜராத்தின் ஆனந்த் மில்க் யூனியன் லிமிடெட்) நிறுவனமானது அங்கு உள்ளூர் விவசாயிகளுக்கு ஒரு கூட்டுறவு மாதிரியை வழங்குவதற்காக வேண்டி, படிப்படியாக தமிழ்நாட்டின் பால் சந்தையில் நுழையத் திட்டமிட்டுள்ளது.
- ❖ எழுத்தாளர் நளினி ஜமீலாவின் சுயசரிதையான 'எனது ஆண்கள்' என்ற மலையாள மொழி புத்தகத்தின் மொழிபெயர்ப்பிற்காக தமிழ்நாட்டைச் சேர்ந்த P. விமலா, 2024 ஆம் ஆண்டிற்கான சாகித்ய அகாடமி மொழிபெயர்ப்பு பரிசுக்குத் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளார்.
- ❖ பெண்கள் அதிகாரமளிப்பதில் பங்களித்ததற்காக வேண்டி அன்னை தெரசா மகளிர் பல்கலைக் கழகத்தின் முன்னாள் துணைவேந்தர் யசோதா சண்முக சுந்தரத்திற்கு தமிழக முதல்வர் அவ்வையார் விருதை வழங்கினார்.
- ❖ FIFA கூட்டமைப்பானது, பல்வேறு சர்ச்சைகள் காரணமாக 2026 ஆம் ஆண்டு கால்பந்து உலகக் கோப்பைப் போட்டியில் ரஷ்யா, காங்கோ மற்றும் பாகிஸ்தான் ஆகிய நாடுகளை FIFA போட்டிகளில் பங்கேற்பதில் இருந்து விலக்கியுள்ளது.
- ❖ இந்திய அணியானது, 2025 ஆம் ஆண்டு ICC சாம்பியன்சிப் கோப்பை கிரிக்கெட் போட்டியின் இறுதிப் போட்டியில் நியூசிலாந்து நாட்டின் அணியை வீழ்த்தி மூன்றாவது முறையாக கோப்பையினை வென்றுள்ளது.
- ❖ பெங்களூரு நகரத்தின் பல்கலைக்கழகம் ஆனது, மறைந்த டாக்டர் மன்மோகன் சிங் அவர்களின் நினைவாக மறுபெயரிடப்படும் என கர்நாடகா அரசு அறிவித்துள்ளது என்ற வகையில் அவரது பெயரைக் கொண்ட இந்தியாவின் முதல் கல்வி நிறுவனமாக இது இருக்கும்.

- இருக்கை அளவு அடிப்படையில் உலகின் இரண்டாவது வேகமாக வளர்ந்து வரும் ஒரு விமான நிறுவனமாகவும், விமான இயக்க எண்ணிக்கையில் வேகமாக வளர்ந்து வரும் விமான நிறுவனமாகவும் இண்டிகோ நிறுவனம் உருவெடுத்துள்ளது.
- இந்திய ஆயுள் காப்பீட்டுக் கழகம் (LIC) ஆனது, வலுவான காப்பீட்டு நிறுவனமாகவும் 9.8 பில்லியன் டாலர்கள் மதிப்புடன் 12வது நிலையான நிறுவனமாகவும் உருவெடுத்து உள்ளது.
- அசாம் மாநில அரசு ஆனது, இந்தியாவின் தொழில்துறை மற்றும் தொழில்நுட்பங்கள் மேம்பாட்டிற்கு ரத்தன் டாடா அவர்கள் அளித்த ஒரு பங்களிப்பைப் பாராட்டி அவரது பெயரை அம்மாநில மின்னணு நகரத்திற்கு சூட்ட முடிவு செய்துள்ளது.
- இந்தியாவின் புலிகள் மாநிலமான மத்தியப் பிரதேசத்தின் மாதவ் தேசியப் பூங்கா என்பது, இந்தியாவின் 58வது புலிகள் வளங்காப்பகமாகவும் அந்த மாநிலத்தின் 9வது புலிகள் வளங்காப்பகமாகவும் அதிகாரப் பூர்வமாக நியமிக்கப்பட்டுள்ளது.
- பாரத் ஸ்டேட் வங்கி (SBI) ஆனது, பெண் தொழில்முனைவோருக்காக பிரத்தியேகமாக பிணை எதுவும் சமர்ப்பிப்பு இல்லாத 'SBI அஸ்மிதா' எனப்படும் எண்ணிம SME கடனை அறிமுகப் படுத்தியுள்ளது.
- கனடாவின் தாராளவாதக் கட்சியின் புதியத் தலைவராகவும், ஜஸ்டின் ட்ரூடோவுக்குப் பதிலாக நாட்டின் அடுத்தப் பிரதமராகவும் மார்க் கார்னி என்பவர் நியமிக்கப் பட்டு உள்ளார்.
- செங்கல்பட்டு மாவட்டம் திருப்போரூர் தாலுக்காவில் 515 கோடி ரூபாய் செலவில் அமைக்கப் பட்டுள்ள கோத்ரெஜ் நுகர்வோர் பொருட்கள் உற்பத்தி நிறுவனத்தின் ஒரு உற்பத்தி மையத்தினைத் தமிழக முதல்வர் திறந்து வைத்துள்ளார்.
- சீர்காழி மற்றும் மயிலாடுதுறை வனப் பகுதிகளின் இணைப்புடன் விரிவாக்கப்பட்ட மயிலாடுதுறை வனச்சரகம் ஆனது, ஏப்ரல் 01 ஆம் தேதி முதல் செயல்படத் தொடங்க உள்ளது.
- 14,500 உள்நாட்டுத் தாவரங்கள் மற்றும் மர இனங்கள் மற்றும் 3,20,000 நதிக்கரைப் புற்கள் இனங்களைக் கொண்ட அம்ருத் பல்லுயிர்ப் பெருக்கப் பூங்கா புது டெல்லியில் திறக்கப்பட்டுள்ளது.
- மாண்டினீக்ரோவில் நடைபெற்ற 20 வயதுக்குட்பட்டோருக்கான உலக இளையோர் சதுரங்க சாம்பியன்ஷிப் போட்டியில் இந்தியாவைச் சேர்ந்த பிரணவ் வெங்கடேஷ் முதல் இடத்தைப் பிடித்துள்ளார்.
- கரக்பூரின் இந்தியத் தொழில்நுட்பக் கல்விக் கழகத்தினைச் சேர்ந்தப் பேராசிரியர் சுமன் சக்ரவர்த்திக்குப் பொறியியல் மற்றும் கணினி அறிவியல் பிரிவில் யுனெஸ்கோ அமைப்பின் 2026 ஆம் ஆண்டிற்கான TWAS விருது வழங்கப்பட்டுள்ளது.
- இந்தியக் கால்பந்து ஜாம்பவான் சுனில் சேத்ரி, கடந்த ஆண்டு தான் ஓய்வு பெறுவதாக அறிவித்த தனது முடிவை மாற்றிக் கொண்டு, தனது 40வது வயதில் தேசிய அணியில் மீண்டும் பங்கேற்க உள்ளார்.
- உதகமண்டலத்தில் உள்ள நீலகிரி நூலகத்தில் 2025 ஆம் ஆண்டு ஊட்டி இலக்கிய விழா தொடங்கியுள்ளது.
- INS சுஜாதா, INS ஷர்துல் மற்றும் ICGS வீரா ஆகியவற்றைக் கொண்ட இந்தியக் கடற் படையின் முதல் பயிற்சிப் படை (1TS) ஆனது, தாய்லாந்து நாட்டின் ஃபூகெட் ஆழ்கடல் துறைமுகத்திற்கான தனது பயணத்தை வெற்றிகரமாக நிறைவு செய்துள்ளது.

- அசாம் மாநில அரசானது, IN-SPACE நிறுவனத்துடன் இணைந்து ASSAMSAT எனப்படும் அதன் சொந்தச் செயற்கைக்கோளினைக் கட்டமைக்கும் திட்டத்தை முன் மொழிந்து உள்ளது.
- சுற்றுலா சேவை வழங்கீட்டு நிறுவனங்கள், பயணச் சேவை வழங்கீட்டு முகமைகள் மற்றும் தொழில்நுட்ப நிறுவனங்கள் உள்ளிட்ட உலகளாவியத் தொழில்துறைக்கான ஒரு முக்கியச் சந்திப்புத் தளமாக விளங்கும் சர்வதேச சுற்றுலா வர்த்தகக் கண்காட்சி- பெர்லின் - ITB பெர்லின் 2025 நிகழ்ச்சியில் இந்தியா சமீபத்தில் பங்கேற்றது.
- உலகளாவிய போதைப் பொருள்கள் தொடர்பான விவகாரங்களுக்கான முதன்மை கொள்கை உருவாக்க அமைப்பான ஐக்கிய நாடுகள் போதைப்பொருள் ஆணையம் என்பதின் (CND) 68வது அமர்வின் தலைமைப் பொறுப்பை இந்தியா ஏற்றுக் கொண்டு ள்ளது.
- தெஹ்ரானில் நடைபெற்ற 2025 ஆம் ஆண்டு ஆசிய மகளிர் கபடி சாம்பியன்ஷிப் போட்டியில் ஈரான் அணியினை வீழ்த்தி இந்திய அணி பட்டத்தை வென்றது.
  - இதுவரையில் நடைபெற்ற ஆறு போட்டிகளுள், இந்தியா தற்போதைய பட்டத்துடன் ஐந்து போட்டிகளில் பட்டத்தை வென்றுள்ளது.
- TuTr ஹைப்பர்லூப் எனப்படுகின்ற இந்தியத் தொழில்நுட்பக் கல்விக் கழகத்தின் புத்தொழில் நிறுவனமானது, இந்தியாவில் அதிவேகப் போக்குவரத்தினை (ஹைப்பர் லூப்) வணிகமயமாக்குவதற்கு என பல சர்வதேச மற்றும் தேசியப் பங்குதாரர்களுடன் கூட்டு சேர்ந்துள்ளது.
- தமிழ்நாடு மாநில அரசானது, ஒவ்வொரு மாதமும் குடும்ப அட்டைதாரர்களுக்கு "துவரம் பருப்பு" மற்றும் பாமாயில்/சமையல் எண்ணெய் வழங்கப்படுகின்ற சிறப்புப் பொது விநியோக முறையைத் தொடர முடிவு செய்துள்ளது.
- பாரதி ஏர்டெல் மற்றும் ரிலையன்ஸ் ஜியோ ஆகிய நிறுவனங்கள் ஆனது, இந்தியாவில் பரவலான செயற்கைக்கோள் அகலப்பட்டை சேவைகளைத் வழங்குவதற்காக என்று ஸ்டார்லிங் நிறுவனத்துடன் ஓர் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளன.
- சர்வதேச உணவு மற்றும் விருந்தோம்பல் கண்காட்சி (AAHAR 2025) எனும் B2B நிகழ்ச்சி ஆனது இந்திய வர்த்தக மேம்பாட்டு அமைப்பால் (ITPO) புது டெல்லியில் ஏற்பாடு செய்யப் பட்டது.
- மூன்றாவது "சுகாதாரத் தொழில்நுட்ப மதிப்பீடு குறித்த சர்வதேசக் கருத்தரங்கு (ISHTA 2025)" ஆனது சமீபத்தில் புது டெல்லியில் நடைபெற்றது.
- போரூரில் உள்ள பூந்தமல்லி நெடுஞ்சாலையின் மிக அருகில் உள்ள OSR நிலத்தில் சென்னையின் முதல் சதுப்பு நில மழைநீர் உறிஞ்சும் பூங்காவினை தமிழக முதல்வர் திறந்து வைத்துள்ளார்.
- ஆஸ்திரேலியா மற்றும் இங்கிலாந்து ஆகிய நாடுகள் ஆனது, டெஸ்ட் கிரிக்கெட் போட்டிகளின் 150வது ஆண்டு நிறைவை ஒட்டி, 2027 ஆம் ஆண்டில் மெல்போர்ன் கிரிக்கெட் மைதானத்தில் (MCG) பகல் இரவாக நடைபெற உள்ள ஒரு வரலாற்றுச் சிறப்பு மிக்க போட்டியுடன் கொண்டாட உள்ளது.
- மத்திய அமெரிக்காவில் உள்ள கௌத்திமாலாவில் அமைந்துள்ள மிக அதிகளவில் செயல்பாட்டில் உள்ள எரிமலையான வோல்கன் டி ஃபியூகோ ஆனது, 2018 ஆம் ஆண்டிற்குப் பிறகு சமீபத்தில் மீண்டும் வெடித்துள்ளது.
- பெண்கள் நிலை குறித்த ஐக்கிய நாடுகள் ஆணையத்தின் (UNCSW) 69வது அமர்வில் இந்தியாவானது மத்தியப் பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத் துறை அமைச்சர் தலைமையில் பங்கேற்றது.

- தீவிரவாதத்திற்கு நிதியளிப்பதைத் தடுக்கச் செய்வதில் சர்வதேச ஒத்துழைப்பை மேம்படுத்தவதற்காக ஜெர்மனியில் 4வது தீவிரவாத நிதியளிப்புத் தடுப்பு (NMFT) மாநாடு ஆனது நடைபெற்றது.
- டெல்லி சர்வதேச விமான நிலையமானது, தொடர்ந்து ஏழாவது ஆண்டாக ஆசிய-பசிபிக் பகுதியில் ஆண்டிற்கு 40 மில்லியன் பயணிகளுக்கு மேலான பயண பதிவு கொண்ட சிறந்த விமான நிலையம் பிரிவில் மதிப்பு மிக்க ASQ விருதை வென்று உள்ளது.
- நீர் பயன்பாட்டு திறன் வாரியம் (BWUE) என்பது, எரிசக்தி மற்றும் வளங்கள் என்ற நிறுவனத்துடன் (TERI) இணைந்து, புது டெல்லியில் "நீர் நிலைத்தன்மை மாநாடு 2025" என்ற தலைப்பிலான ஒரு நாள் மாநாட்டை ஏற்பாடு செய்தது.
- விபத்துகளைத் தடுப்பதை ஊக்குவிப்பதற்கும் ஊழியர் நல்வாழ்வை நன்கு உறுதி செய்வதற்கும் தொழிற்சாலைகள் மற்றும் தொழிலாளர்களின் பணியிடங்களில் பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக மார்ச் 04 முதல் மார்ச் 10 ஆம் தேதி வரை 54வது தேசியப் பாதுகாப்பு வாரம் அனுசரிக்கப் பட்டது.
- வங்கி சாரா நிதி நிறுவனமான IFL ஃபைனான்ஸ் நிறுவனமானது, மகளிர் தினத்தினை முன்னிட்டு, ஏற்கனவே உள்ள ஏழு கிளைகளை அனைத்து மகளிர் பணியாளர்களைக் கொண்ட 'சக்தி' வங்கிக் கிளைகளாக மாற்றியுள்ளது.
- பிரதான் மந்திரி சூர்யா கர்: முஃப்த் பிஜிலி யோஜனா (PMSGMBY) திட்டமானது, 2025 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 10 ஆம் தேதி நிலவரப்படி, சூரிய சக்தியில் இயங்கும் 10 லட்சம் வீடுகளை நிறுவி வரலாற்று மைல்கல்லை எட்டியுள்ளது.
- சென்னை மெட்ரோ இரயில் லிமிடெட் (CMRL) நிறுவனமானது மெட்ரோ ரயில் நிலையம் கட்டமைப்பதற்காக வேண்டி இரண்டு கோயில்களில் இருந்து நிலம் கையகப்படுத்தும் திட்டத்தினை தொடர்வதற்கு சென்னை உயர் நீதிமன்றம் அனுமதித்துள்ளது.
  - பொது நோக்கங்களுக்காக நிலம் கையகப்படுத்துவதில் இருந்து விலகுவதற்கு மத நிறுவனங்களுக்கு எந்தச் சிறப்பு உரிமையும் இல்லை என்றும் அது தீர்ப்பளித்து உள்ளது.
- உலகம் முழுவதும் உள்ள சுழற்சங்கங்கள் (ரோட்டரி) வழங்கும் பல்வேறு சேவைகளை அங்கீகரிக்கும் வகையில் ஒவ்வோர் ஆண்டும் மார்ச் 13 ஆம் தேதியன்று உலகச் சுழற் சங்கங்கள் தினம் கொண்டாடப்படுகிறது.
- சென்னை வழக்கறிஞர் சங்கத்தின் 160வது ஆண்டு நிறைவு மற்றும் இந்திய அரசியலமைப்பு ஏற்றுக் கொள்ளப் பட்டதன் 75வது ஆண்டு விழா நிறைவுக் கொண்டாட்டங்கள் ஆனது சென்னையில் நடைபெற்றன.
- தமிழ்நாட்டின் முன்னணி எழுத்தாளர்களில் ஒருவரான R. நாறும்பூ நாதன் (64) சமீபத்தில் காலமானார்.
- தஞ்சாவூர் மாவட்டம் கும்பகோணம் அருகே உள்ள பட்டீஸ்வரத்தில் உள்ள 1,000 ஆண்டுகள் பழமையான சைவக் கோவிலில் ஒரு சிறிய பாதாள அறை கண்டறியப்பட்டுள்ளது.
- பெங்களூரு நீர் வழங்கீட்டு மற்றும் கழிவுநீர் வாரியம் (BWSSB) ஆனது, அதன் குழாய் வழி குடிநீர் விநியோக மேலாண்மை கட்டமைப்புக்காக என இந்தியத் தரநிலைகள் வாரியத்திலிருந்து (BIS) சான்றிதழைப் பெற்ற இந்தியாவின் முதல் குடிநீர் வாரியமாக மாறியுள்ளது.
- கூகுள் நிறுவனமானது, தொலைபேசிகள், மடிக் கணினிகள் மற்றும் இன்ன பிற சாதனங்களில் நேரடியாக இயங்குவதற்காக என்று வடிவமைக்கப்பட்டு உள்ள அதன்

மிகவும் இலகுரக பொதுப் பயன்பாட்டுச் செயற்கை நுண்ணறிவு மாதிரிகளின் குழுமத்தில் ஜெம்மா 3 எனும் மாதிரியினைச் சமீபத்தில் சேர்த்து உள்ளது.

- ❖ கடந்த 42 நாட்களாகப் புதிய பாதிப்புகள் எதுவும் பதிவாகாமல் இருந்ததை அடுத்து, தான்சானியா நாட்டில் ஏற்பட்ட இரண்டாவது மார்பர்க் வைரஸ் (MVD) தொற்றானது முடிவுக்கு வந்ததாக அந்நாட்டு அரசு அறிவித்துள்ளது.
- ❖ சமத்துவம், மனித உரிமைகள் மற்றும் கண்ணியத்தை நிலை நிறுத்தவும், மக்களின் மதம் சார் நம்பிக்கையைப் பொருட்படுத்தாமல் அனைவரையும் உள்ளடக்கிய வகையிலான சமூகங்களை உருவாக்க இஸ்லாமியத்திற்கு எதிரான மிகப் பெரும் வெறுப்பு உணர்வினை எதிர்ப்பதற்கான ஒரு சர்வதேச தினம் ஆண்டுதோறும் மார்ச் 15 ஆம் தேதியன்று அனுசரிக்கப்படுகிறது.
- ❖ தமிழ்நாடு சட்டமன்ற சபாநாயகர் பதவியில் இருந்து M. அப்பாவுவை நீக்கக் கோரி அ.தி.மு.க. கட்சியினால் அவையில் முன் வைக்கப்பட்ட ஒரு தீர்மானத்திற்கு எதிராக 154 வாக்குகளும், ஆதரவாக 63 வாக்குகளும் கிடைத்து, 91 வாக்குகள் வித்தியாசத்தில் அது தோல்வியுற்றது.
- ❖ ஜனவரி மற்றும் ஏப்ரல் ஆகிய மாதங்களுக்கு இடையில் தனுஷ்கோடிக்கு அருகிலுள்ள இராமேஸ்வரம் தீவில் வலசை போதலின்போது இடைநிற்கும் செந்நாரைகளுக்காக (ஃபிளமிங்கோ) என சரணாலயத்தினை அமைக்க தமிழ்நாடு நிதிநிலை அறிக்கையில் முன்மொழியப்பட்டுள்ளது.
- ❖ மும்பை இந்தியன்ஸ் அணியானது, டெல்லி கேபிடல்ஸ் அணியினை வீழ்த்தியதை அடுத்து, மூன்று போட்டித் தொடர்களில் இரண்டாவது மகளிர் பிரீமியர் லீக் பட்டத்தை வென்றது.
- ❖ நீர் வளப் பயன்பாட்டுத் திறன் வாரியத்தினால் (BWUE) ஏற்பாடு செய்யப்பட்ட 2025 ஆம் ஆண்டு நீர் வள நிலைத்தன்மை மாநாடானது புது டெல்லியில் நடைபெற்றது.
- ❖ ஃபிட் இந்தியா கார்னிவல் எனப்படும் மூன்று நாட்கள் அளவிலான முதலாவது உடற் பயிற்சி மற்றும் நல்வாழ்வு நிகழ்ச்சியானது புது டெல்லியில் நடைபெற்றது.
- ❖ ஹிலால் அகமது, முகமது சஞ்சீர் ஆலம் மற்றும் நஜிமா பர்வீன் ஆகியோரால் எழுதப் பட்டு கடந்த மாதம் வெளியான 'Rethinking Affirmative Action for Muslims in Contemporary India' என்ற ஒரு அறிக்கையானது, கடந்த 10 ஆண்டுகளில் வெளியான இது போன்ற முதல் விரிவான கொள்கை சார் ஆவணமாகும்.
- ❖ உலக சுகாதார அமைப்பு (WHO) ஆனது, நெதர்லாந்தில் உள்ள டெல்ஃப்ட் தொழில் நுட்பக் கல்விப் பல்கலைக் கழகத்தில் உள்ள எண்ணிம நெறிமுறைகள் மையத்தினை சுகாதார நிர்வாகத்திற்கான செயற்கை நுண்ணறிவு (AI) குறித்த WHO ஒத்துழைப்பு மையமாக நியமித்துள்ளது.
- ❖ மிகப் புகழ்பெற்ற ஒடியா கவிஞரும் முன்னாள் அரசு அதிகாரியுமான இராமகாந்த ராத் சமீபத்தில் காலமானார்.
- ❖ மேவாரின் முன்னாள் அரச குடும்பத்தைச் சேர்ந்தவரும் HRH என்ற தங்கும் விடுதிகள் குழுமத்தின் தலைவருமான அரவிந்த் சிங் மேவார் சமீபத்தில் காலமானார்.
- ❖ உத்தரப் பிரதேசத்தில் உள்ள பிலிபிட் புலிகள் சரணாலயம் (PTR) ஆனது, நேபாளத்தைச் சேர்ந்த காண்டாமிருகங்களுக்கான புதிய சரணாலயமாக மாற உள்ளது.
- ❖ இந்தி மொழிக் கவிஞர் ககன் கில் மற்றும் ஆங்கில மொழியில் எழுதும் நாகா மொழி எழுத்தாளர் ஈஸ்டரின் கைர் 2024 ஆம் ஆண்டிற்கான மதிப்பு மிக்க சாகித்ய அகாடமி விருதைப் பெற்றுள்ளனர்.

  - திரு. கில் "Main Jab Tak Aai Bahar" எனும் தனது கவிதைப் புத்தகத்திற்கும், திருமதி. கைர் "Spirit Nights" எனும் தனது புதினத்திற்கும் விருதைப் பெற்றுள்ளனர்.

- சங்க காலம் முதல் இன்று வரையில் மாநிலத்தின் நிதி மேலாண்மையை மிக நன்கு விவரிக்கும் 'தமிழ்நாடு நிதி மேலாண்மை: தொன்மை மற்றும் அதன் தொடர்ச்சி' என்ற புத்தகத்தினை தமிழ்நாடு முதலமைச்சர் வெளியிட்டார்.

- சென்னையின் இந்தியத் தொழில்நுட்பக் கல்விக் கழகக் நிறுவனத்தில் (IIT-M) திரவம் மற்றும் வெப்ப அறிவியலுக்கான மிக அதிநவீன ஆராய்ச்சி மையம் சமீபத்தில் தொடங்கப்பட்டுள்ளது.

- கடற்படைக்கான ஐந்து கடற்படை ஆதரவுக் கப்பல்களில் (FSS) இரண்டாவது கப்பலின் கட்டுமானப் பணித் தொடக்க விழாவானது, காட்டுப்பள்ளியில் உள்ள L&T கப்பல் கட்டும் தளத்தில் நடைபெற்றது.

- மேகாலயாவின் ஷில்லாங் நகரில், வடகிழக்குத் தொழில்நுட்பப் பயன்பாடு மற்றும் அணுகல் மையத்தின் (NECTAR) புதிய நிரந்தர வளாகத்தினை நிறுவச் செய்வதற்கான அடிக்கல் நாட்டப்பட்டது.

- நாட்டின் வெளிக் கொணரப்படாத/பயன்படுத்தப்படாத முக்கியமான மற்றும் ஆழமான பகுதிகளில் காணப்படும் கனிம வளங்களை கொணர்வதை ஒரு நோக்கமாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்ட மிகவும் ஒரு குறிப்பிடத்தக்கச் சீர்திருத்தமான இந்தியாவின் முதல் ஆய்வு உரிமத்திற்கான ஏலம் ஆனது கோவாவில் நடைபெற்றது.

- Valueattics Re என்ற நிறுவனமானது, இந்தியாவில் மறுகாப்பீட்டு வணிகத்தைத் தொடங்குவதற்காக என்று காப்பீட்டு ஒழுங்குமுறை நிறுவனமான இந்தியக் காப்பீடு ஒழுங்குமுறை மற்றும் மேம்பாட்டு ஆணையத்தின் ஒப்புதலைப் பெற்று இந்தியாவில் மறுகாப்பீட்டு உரிமம் வழங்கப்பட்ட முதல் தனியார் மறு காப்பீட்டு நிறுவனமாக மாறியுள்ளது.

- உலக சுகாதார அமைப்பு ஆனது, "Compassion and primary health care" என்ற ஒரு அறிக்கையை வெளியிட்டுள்ளது என்ற ஒரு நிலையில் இது ஆரம்ப சுகாதாரப் பராமரிப்பில் இரக்க உணர்வினை ஒரு மாற்றத்தினை ஏற்படுத்தும் சக்தியாக அங்கீகரிக்கிறது.

- சர்வதேசத் தொழிலாளர் அமைப்பின் 353வது ஆளுகைக் குழு கூட்டம் ஆனது சுவிட்சர்லாந்தின் ஜெனீவா நகரில் நடைபெற்று வருகிறது.

- தமிழ்நாடு மாநிலமானது, மார்ச் 21 முதல் 25 ஆம் தேதி வரையில் அலுவல் மொழி சட்ட வாரத்தைக் கொண்டாடுகிறது.

- தமிழ்நாடு சுற்றுலா மேம்பாட்டுக் கழகம் ஆனது, ஒரு சுற்றுலாத் தலமாக மாநிலத்தின் திறனை வெளிப்படுத்துவதற்கும், சுற்றுலா வணிகத்தினை ஊக்குவிப்பதற்கும், என்று சுற்றுலா தொடர்பான முதலீடுகளை ஈர்ப்பதற்கும் 2025 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு பயணச் சந்தையை ஏற்பாடு செய்ய உள்ளது.

- தமிழ்நாடு அரசு ஆனது, அதன் கூடுதல் தலைமை வழக்கறிஞர் (AAG) பதவியை மூத்த வழக்கறிஞர் M. அஜ்மல் கான் என்பவருக்கு அளித்ததையடுத்து தற்போது அவர் AAG-I ஆக நியமிக்கப்பட உள்ளார்.

- ஆசிய மேம்பாட்டு வங்கியானது, உள்ளூர் வணிகங்களை ஆதரிப்பதற்கும், மூலதனச் சந்தைகளை வலுப்படுத்துவதற்கும், மேலும் பசிபிக் பிராந்தியத்தில் மிக நிலையான பொருளாதார மேம்பாட்டினை ஊக்குவிப்பதற்கும் எல்லைப்புற ஊக்குவிப்பு (பசிபிக்) திட்டத்தினைத் தொடங்கியுள்ளது.

- தானேயின் பிவாண்டி எனுமிடத்தில் சத்ரபதி சிவாஜி மகாராஜாவிற்காக நிறுவப்பட்டு உள்ள அந்த மாநிலத்தின் முதல் கோவிலை மகாராஷ்டிரா மாநில முதல்வர் திறந்து வைத்துள்ளார்.
- அசாமின் டெர்கானில் லச்சித் பர்புகன் காவல் துறை பயிற்சிக் கழகம் திறக்கப்பட்டு உள்ளது.
- இந்தியா மற்றும் மலேசியா ஆகியவை இரண்டும் இணைந்து தலைமை தாங்கிய ஆசியான் அமைப்பின் தீவிரவாத எதிர்ப்பு தொடர்பான பாதுகாப்பு அமைச்சர்கள் கூட்டம் - பிளஸ் (ADMM-பிளஸ்) அமைப்பின் நிபுணர்கள் பணிக்குழுவின் (EWG) 14வது கூட்டம் ஆனது புது டெல்லியில் நடைபெற்றது.
    - இந்தத் தீவிரவாத எதிர்ப்புக் குழுவிற்கு இந்தியா முதல் முறையாகத் தலைமை தாங்கியுள்ளது.
- சிந்து சமவெளி நாகரிகத்தின் ஹரப்பா மற்றும் மொகஞ்சதாரோ தளங்களின் மீதான அகழ்வாராய்ச்சியில் மிகவும் முக்கியப் பங்கினை வகித்த பிரிட்டிஷ் தொல்பொருள் ஆராய்ச்சியாளர் சர். ஜான் ஹூபர்ட் மார்ஷலின் சிலையைச் சென்னை எழும்பூரில் தமிழக முதல்வர் திறந்து வைத்தார்.
- தெரு நாய்களால் வளர்ப்பு விலங்குகள் /பறவைகள் ஏதேனும் கொல்லப்பட்டால் அந்த விவசாயிகளுக்கு, ஒரு மாடுகளுக்கு 37,500 ரூபாயும், செம்மறி ஆட்டிற்கு 6,000 ரூபாய் மற்றும் ஒரு கோழிக்கு 200 ரூபாய் என்ற வீதத்தில் இழப்பீடு வழங்க உள்ளதாக தமிழக அரசு அறிவித்துள்ளது.
- புதுச்சேரி ஆரோவில் அறக்கட்டளையானது, சுற்றுச்சூழல் ஏற்பு இசைவு இல்லாமல் புதுச்சேரியில் கட்டமைக்கப்படுவதற்காக வேண்டி முன்மொழியப்பட்டுள்ள நகரக் கட்டமைப்புத் திட்டத்தினை தொடர்வதற்கு தடை விதித்த சென்னை தேசியப் பசுமை தீர்ப்பாயத்தின் 2022 ஆம் ஆண்டு உத்தரவை உச்ச நீதிமன்றம் ரத்து செய்துள்ளது.
- பொது-தனியார் கூட்டாண்மை (PPP) மாதிரியின் கீழ், பசுமைக் கழிவுகளைச் மிக நன்கு செயல்முறையாக்கும் இந்தியாவின் முதலாவது ஆலையை நிறுவுவதன் மூலம் நிலையான கழிவு மேலாண்மையில் இந்தூர் நகரம் மற்றொரு மைல்கல்லை அடைய உள்ளது.
- 2025 ஆம் ஆண்டு கபடி உலகக் கோப்பை போட்டியானது, இங்கிலாந்தில் தொடங்க உள்ளது என்பதோடு இது ஆசியாவிற்கு வெளியே வேறொரு கண்டத்தில் நடைபெறும் முதல் போட்டியாகும்.
- தமிழ்நாட்டின் மதுரையைச் சேர்ந்த சம்யுக்தா நாராயணன் (7), உலகின் மிகவும் இளம் டைக்வாண்டோ பயிற்றுவிப்பாளராக மாறி கின்னஸ் உலக சாதனையினைப் படைத்துள்ளார்.
- 2024 ஆம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலத்தில் 1,540 கொலை வழக்குகள் பதிவாகியுள்ளது என்பதோடு இது கடந்த 12 ஆண்டுகளில் பதிவான மிகவும் குறைந்த ஒரு வருடாந்திர எண்ணிக்கை ஆகும்.
- சென்னை மெட்ரோ இரயில் அமைப்பின் இரண்டாம் கட்டத்திற்கான மெட்ரோ ரயில் போக்குவரத்து வலையமைப்பிற்கான முதல் ஓட்டுநர் இல்லாத இரயிலின் சோதனை ஓட்டம் சமீபத்தில் மேற்கொள்ளப்பட்டது.
- புது டெல்லியில் ஏற்பாடு செய்யப்பட்ட 2025 ஆம் ஆண்டு Medical Colleges Research Connect நிகழ்வில் அதன் செயல்திறனுக்காக மெட்ராஸ் மருத்துவக் கல்லூரி சிறப்பு விருதைப் பெற்றுள்ளது.

- அறிஞரும் கோட்பாட்டாளருமான காயத்ரி சக்ரவர்த்தி ஸ்பிவாக் 2025 ஆம் ஆண்டு ஹோல்பெர்க் பரிசை வென்றுள்ளார் என்ற ஒரு நிலைமையில் இது மனித நேயம், சமூக அறிவியல், சட்டம் அல்லது இறையியல் ஆராய்ச்சித் துறையில் நோபல் பரிசுக்கு சமமான விருதாகக் கருதப்படுகிறது.
- சுரங்க அமைச்சகம் ஆனது, இந்தியப் புவியியல் ஆய்வு மையத்துடன் (GSI) இணைந்து கனிம இலக்கு குறித்த IndiaAI ஹேக்கத்தானைத் தொடங்கியுள்ளது.
- ஹரியானாவில் உள்ள கோரக்பூர் என்ற ஒரு சிறிய நகரத்தில் 10,380 மெகாவாட் திறன் கொண்ட வட இந்தியாவின் முதல் அணுசக்தி நிலையம் நிறுவப்படவுள்ளது.
- சமீபத்தில் நீலகிரி மாவட்டத்தில் கூடலூர் வனப் பிரிவில் நடத்தப்பட்டப் பறவைகள் கணக்கெடுப்புகளின் போது 162 இனங்களைச் சேர்ந்த 3,100க்கும் மேற்பட்ட பறவைகள் பதிவு செய்யப்பட்டன.
- திருச்சியில் கலைஞர் மாபெரும் நூலகம் மற்றும் அறிவுசார் மையம் என்பது அதிநவீன வசதிகளுடன் நிறுவப்பட உள்ளது.
- வேலூரின் CMC நிறுவனத்தின் முன்னாள் இயக்குனர் டாக்டர் V.I. மதன், "To the Seventh Generation: The Journey of Christian Medical College Vellore" என்ற ஒரு தலைப்பிலான தனது புத்தகத்தினை சென்னையில் வெளியிட்டார்.
- உலக வங்கியின் உதவியுடன் இயங்கும் தமிழ்நாடு அரசின் நீர்ப்பாசன வேளாண்மை நவீனமயமாக்கல் திட்டம் (TNIAMP) ஆனது, மத்திய நீர்ப்பாசனம் மற்றும் மின் வாரியத்தின் (CBIP) 'ஒருங்கிணைந்த நீர்வளத்தின் மேலாண்மையில் சிறந்து விளங்கச் செய்வதற்கான 2024 ஆம் ஆண்டு' தேசிய விருதை வென்றுள்ளது.
- மேம்பட்ட திறன் கொண்ட போர்க் கப்பலான ஹிம்கிரி மற்றும் நீர்மூழ்கி எதிர்ப்பு போர்க்கப்பலான ஆண்ட்ரோத் ஆகியவை கட்டுமான நிறுவனத்தின் கடல் சார் இயக்க சோதனைகளை வெற்றிகரமாக நிறைவு செய்துள்ளன.
- அசாமின் நம்ரூப் எனுமிடத்தில் உள்ள பிரம்மபுத்திரா பள்ளத்தாக்கு உர உற்பத்திக் கழக லிமிடெட் (BVFCL) என்ற நிறுவனத்தில் முன்னதாக மேம்பாட்டுப் பணிகள் மேற் கொள்ளப் பட்ட பகுதியில் புதிய அம்மோனியா-யூரியா உற்பத்தி வளாகத்தினை நிறுவுவதற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.
- இந்தியப் பத்திரிகைத் துறைக்கு என மிகவும் சிறந்தப் பங்களிப்பை வழங்கிய 27 பத்திரிகையாளர்களுக்கு என்று குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு அவர்களால் இராம்நாத் கோயங்கா பத்திரிகை சிறப்பு விருதுகள் வழங்கப்பட்டன.
- தென்னிந்தியாவிற்கான டென்மார்க்கின் கௌரவத் தலைமை தூதரும், சன்மார் குழுமத்தின் தலைவருமான விஜய் சங்கருக்கு, டென்மார்க் மன்னரால் மதிப்புமிக்க நைட்ஸ் கிராஸ் ஆஃப் தி ஆர்டர் ஆஃப் டேன்பிராக் விருது வழங்கப்பட்டுள்ளது.
- சுற்றுச்சூழல் வளங்காப்பு மற்றும் நீண்ட கால நிலைத் தன்மைக்கான ஒரு முக்கியச் செயற்கருவியாக மறுசுழற்சியினை நன்கு அங்கீகரித்து ஊக்குவிப்பதற்காக வேண்டி ஆண்டுதோறும் மார்ச் 18 ஆம் தேதி உலகளாவிய மறுசுழற்சி தினம் கொண்டாடப் படுகிறது.
- மொழியியல் மற்றும் கலாச்சாரப் பன்முகத்தன்மை மற்றும் சர்வதேச உறவுகளில் பிரெஞ்சு மொழியின் முக்கியப் பங்கைக் கொண்டாடுவதற்காக ஒவ்வோர் ஆண்டும் மார்ச் 20 ஆம் தேதியன்று ஐக்கிய நாடுகள் பிரெஞ்சு மொழி தினம் அனுசரிக்கப் படுகிறது.

- தொகுதி மறுசீரமைப்பு நடவடிக்கைகளால் பாதிக்கப்படும் மாநிலங்களுக்கான முதல் கூட்டு நடவடிக்கைக் குழுக் (JAC) கூட்டத்தினைத் தமிழ்நாடு அரசு ஏற்பாடு செய்தது.
- துறைமுகங்கள், கப்பல் போக்குவரத்து மற்றும் நீர்வழிகள் துறை அமைச்சகம் (MoPSW), பசுமை முறையிலான ஒரு கப்பல் போக்குவரத்து, திறன்மிகு துறைமுகங்கள் மற்றும் தளவாடங்களில் கடல்சார் புத்தாக்கங்களை ஊக்குவிப்பதற்காக வேண்டி சாகர்மாலா புத்தொழில் புத்தாக்க முன்னெடுப்பினைத் (S2I2) தொடங்கியுள்ளது.
- 2024–25 ஆம் நிதியாண்டிற்கான தனிநபர் வணிகத்திற்கு மேற்கொள்ளும் குறைந்த மதிப்புள்ள அதாவது சுமார் 2,000 ரூபாய் அல்லது அதற்கும் குறைவான BHIM-UPI பரிவர்த்தனைகளை ஊக்குவிப்பதற்கான ஒரு ஊக்கத் திட்டத்தினை நிதி அமைச்சகம் அறிமுகப்படுத்தியுள்ளது.
- டார்ஜிலிங்கின் பத்மஜா நாயுடு இமயமலை விலங்கியல் பூங்காவானது, அருகி வரும் இமயமலை உயிரினங்களின் மரபணுத் தகவல்களைப் பாதுகாப்பதற்காக என்று இந்தியாவின் முதல் உறைந்த/பதப்படுத்தப்பட்ட விலங்கியல் பூங்காவைத் தொடங்கி உள்ளது.
- டாடா கம்யூனிகேஷன்ஸ் லிமிடெட் நிறுவனமானது, நிறுவனங்களுக்கு என்று செலவு குறைந்த மேகக் கணினி நுட்பத்தினை வழங்குவதற்காக வேண்டி வாயு எனும் அடுத்த தலைமுறை நுட்பத்திலான மேகக் கணிம கட்டமைப்பினை அறிமுகப்படுத்தியுள்ளது.
- 1975 ஆம் ஆண்டில் இந்தியாவின் முதல் ஹாக்கி உலகக் கோப்பை போட்டியில் பெற்ற வெற்றியின் பொன் விழாவை நினைவு கூரும் வகையில், ஹாக்கி வரலாற்றாசிரியர் K.ஆறுமுகம் மற்றும் பத்திரிகையாளர் எரோல் டி'குரூஸ் இணைந்து எழுதிய 'March of Glory' என்ற புத்தகம் சமீபத்தில் வெளியிடப்பட்டுள்ளது.
- 2025 ஆம் ஆண்டு மாற்றுத் திறனாளிகளுக்கான கேலோ இந்தியா விளையாட்டுப் போட்டிகளுக்கான கீதம், உருவச்சின்னம் (உஜ்வாலா) மற்றும் முத்திரையினை புது டெல்லியில் வெளியிடப்பட்டுள்ளது.
- நயாரா எனர்ஜி நிறுவனம் ஆனது, குஜராத் ஜாம்நகரில் உள்ள கிஜாடியா பறவைகள் சரணாலயத்தின் வளங்காப்பு மற்றும் மறுசீரமைப்பிற்காக குஜராத் மாநில அரசின் வனத்துறையுடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டது.
- கிழக்குக் கடற்கரை இரயில்வே (ECoR) நிர்வாகமானது, 2024-25 ஆம் நிதியாண்டில் 250 மில்லியன் டன் (MT) சரக்குகளை ஏற்றிய இந்தியாவின் முதல் இரயில்வே மண்டலமாக மாறி சரக்கு ஏற்றுதலில் ஒரு வரலாற்று மைல்கல்லை அமைத்துள்ளது.
- ஆந்திரப் பிரதேச மாநில அரசானது, 1953 ஆம் ஆண்டு தெலுங்கு மொழி பேசும் மக்கள் வசிக்கும் தனி ஆந்திர மாநிலத்தினை உருவாக்குவதில் மிக முக்கியப் பங்கு வகித்த சுதந்திரப் போராட்ட வீரர் பொட்டி ஸ்ரீராமுலுவின் 58 அடி உயரம் கொண்ட சிலையை அமராவதியில் நிறுவ உள்ளதாக அறிவித்துள்ளது.
- நமீபியாவின் முதல் பெண் அதிபராக நெடும்போ நந்தி-நதைத்வா பதவியேற்றுள்ளார்.
  - லைபீரியாவின் எலன் ஜான்சன் சர்லீஃப் என்பவருக்குப் பிறகு நேரடியாக ஒரு அதிபராகத் தேர்ந்தெடுக்கப் பட்ட இரண்டாவது ஆப்பிரிக்கப் பெண்மணி இவரே ஆவார்.
- ஒரு முன்னாள் சர்வதேச நீச்சல் வீராங்கனையான ஜிம்பாப்வே நாட்டினைச் சேர்ந்த கிறிஸ்டி கோவென்ட்ரி, சர்வதேச ஒலிம்பிக் குழுவின் 130 ஆண்டு கால வரலாற்றில் அதன் தலைவராகப் பொறுப்பேற்க உள்ள முதல் பெண் மற்றும் ஆப்பிரிக்கக் கண்ட வம்சாவளியினைச் சேர்ந்த நபர் ஆவார்.

- வேளாண் மற்றும் பதப்படுத்தப்பட்ட உணவுப் பொருட்கள் ஏற்றுமதி மேம்பாட்டு ஆணையம் (APEDA) ஆனது, மிசோரமில் இருந்து சிங்கப்பூருக்கு முதன் முறையாக அந்தூரியம் பூக்களை ஏற்றுமதி செய்ய உதவியுள்ளது.
- இந்தியக் கடற்படையானது தவாஸ்யா எனப்படும் 1135.6 கூடுதல் வகைத் தொடர் சார் கப்பல்கள் திட்டத்தின் கீழான தன் இரண்டாவது போர்க் கப்பலினை அறிமுகப்படுத்தி உள்ளது.
  - இந்தத் தொடரில் முதல் கப்பலான திரிபுட் 2024 ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில் படையில் இணைக்கப்பட்டது.
- உலகளாவிய வெளிப்பாட்டு ஊடகமாக கவிதை திகழ்வதன் முக்கியத்துவத்தினை எடுத்துக்காட்டும் வகையில் 2025 ஆம் ஆண்டு மார்ச் 21 ஆம் தேதியன்று உலக கவிதை தினம் கொண்டாடப் படுகிறது.
- தேசிய e-vidhan செயலியினை (NeVA) செயல்படுத்தச் செய்வதற்கான ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திடும் 28வது சட்டமன்றமாக டெல்லி சட்டமன்றமானது மாற உள்ளது.
- வாகன நிறுத்தம், பாதுகாப்பு மற்றும் தெருநாய் மேலாண்மை தொடர்பான பல்வேறு பிரச்சினைகள் காரணமாக ஆந்திரப்பிரதேச மாநிலத்தின் விசாகப்பட்டின நகரத்தில் உள்ள ருஷிகொண்டா கடற்கரைக்கான நீலக் கொடிச் சான்றிதழைச் சுற்றுச்சூழல் கல்வி அறக்கட்டளை (FEE) ரத்து செய்துள்ளது.
- முன்னாள் அமைச்சரவை செயலாளரான இராஜீவ் கௌபா நிதி ஆயோக் அமைப்பின் முழு நேர உறுப்பினராக நியமிக்கப்பட்டுள்ளார்.
- இந்தோனேசியா நாட்டு அரசானது, BRICS நாடுகளால் நிறுவப் பட்ட ஒரு பலதரப்பு நிதி நிறுவனமான புதிய மேம்பாட்டு வங்கியில் (NDB) இணைய உள்ளதாக அறிவித்துள்ளது.
- ஐக்கியப் பேரரசின் வால்வர்ஹாம்டனில் நடைபெற்ற 2025 ஆம் ஆண்டு ஆடவர் மற்றும் மகளிர் கபடி உலகக் கோப்பை போட்டிகளில் இந்திய அணிகளானது வெற்றிப் பெற்றுள்ளன.
- இந்திய மல்யுத்த வீரர் சுனில் குமார் ஜோர்டான் நாட்டின் அம்மான் என்னுமிடத்தில் நடைபெற்ற 2025 ஆம் ஆண்டு ஆசிய மல்யுத்தச் சாம்பியன்ஷிப் போட்டியில் 87 கிலோ எடைப் பிரிவின் கிரேக்க-ரோமன் பிரிவில் வெண்கலப் பதக்கத்தினை வென்றுள்ளார்.
- புதிய மேம்பாட்டு வங்கியானது 2025 ஆம் ஆண்டு ஜூலை முதல் 2030 ஆம் ஆண்டு ஜூலை மாதம் வரையிலான காலக் கட்டத்திற்கு தில்மா வனா ரூசெஃப்பினை அதன் தலைவராக மீண்டும் தேர்ந்தெடுத்துள்ளது.
- ஒட்டு மொத்த மனித உரிமை மீறல்கள் மற்றும் பாதிக்கப்பட்டவர்களின் கண்ணியம் தொடர்பான உண்மையறியும் உரிமைக்கான சர்வதேச தினமானது ஆண்டுதோறும் மார்ச் 24 ஆம் தேதியன்று அனுசரிக்கப்படுகின்றது.
- தமிழ்நாடு சட்ட சபையானது, 2024 ஆம் ஆண்டு வக்ஃப் (திருத்த) மசோதாவானது நம் நாட்டில் உள்ள முஸ்லிம்களின் நலன்களுக்கு எதிரானது என்ற ஒரு வாதத்தினை முன் வைத்து, அதனை திரும்பப் பெறுமாறு மத்திய அரசினை மிக நன்கு வலியுறுத்தும் ஒரு தீர்மானத்தினை ஒருமனதாக ஏற்றுக்கொண்டுள்ளது.
- தமிழ்நாட்டின் இராமேஸ்வரத்தைச் சேர்ந்த மீனவத் தலைவர்களும், இலங்கையின் வடக்கு மாகாணத்தில் உள்ள மீனவர் குழு தலைவர்களும் ஒன்பது ஆண்டு கால (2016-2025) இடைவெளிக்குப் பிறகு பேச்சுவார்த்தை நடத்தியுள்ளனர்.

- புகழ்பெற்ற கிரிக்கெட் வீரர் சையத் கிர்மானியின் சுயசரிதையான 'Stumped: Life Behind and Beyond the Twenty-Two Yards' என்ற தலைப்பில் வெளியிடப்பட்டுள்ளது.
- கைது செய்யப்பட்ட மற்றும் காணாமல் போன ஐநா பணியாளர்களுக்கான சர்வதேச ஒன்றிணைவு தினமானது, நடவடிக்கைகளை ஒன்று திரட்டுவதற்காகவும், நீதியைக் கோருவதற்காகவும், ஐக்கிய நாடுகள் சபையின் ஊழியர்களையும் அமைதி காக்கும் படையினரையும் பாதுகாப்பதற்கான தீர்மானத்தை வலுப்படுத்துவதற்காகவும் மார்ச் 25 ஆம் தேதியன்று அனுசரிக்கப்படுகிறது.
- 2025-26 ஆம் ஆண்டில் கலைஞர் கனவு இல்லம் திட்டத்தின் கீழ் மாநிலம் முழுவதும் ஒரு லட்சம் வீடுகள் கட்டமைப்பதற்காக என தமிழ்நாடு அரசு 3,500 கோடி ரூபாய் நிதியை ஒதுக்கியுள்ளது.
- பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பு மற்றும் இந்தியக் கடற்படை ஆனது உள்நாட்டிலேயே உருவாக்கப்பட்ட செங்குத்தாக ஏவப்படக்கூடிய குறுகிய தூர தாக்குதல் வரம்புடைய நிலத்திலிருந்து வானில் ஏவக்கூடிய எறிகணையின் (VLSRSAM) ஏவுதல் சோதனையை வெற்றிகரமாக நடத்தியது.
- சர்வதேச நாணய நிதியத்தினால் (IMF) வெளியிடப்பட்ட சமீபத்திய தரவுகளின்படி, இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தி (GDP) ஆனது கடந்த பத்து ஆண்டுகளில் இரு மடங்காக அதிகரித்துள்ளது.
- புது டெல்லியில் உள்ள வடக்கு மற்றும் தெற்குத் தொகுதிகளில் யுகே யுகீன் பாரத் தேசிய அருங்காட்சியகம் என்று பெயரிடப்பட்டப் புதிய தேசிய அருங்காட்சியகம் அமைக்கப்பட உள்ளது.
- இந்திய உச்ச நீதிமன்றம் ஆனது, நாட்டின் உயர்கல்வி நிறுவனங்களில் மாணவர் தற்கொலைகளைத் தவிர்ப்பதற்காக ஒரு தேசியப் பணிக் குழுவை (NTF) அமைத்து உள்ளது.
- முன்னாள் அமலாக்க இயக்குநரக (ED) தலைவர் சஞ்சய் குமார் மிஸ்ரா, பிரதமரின் பொருளாதார ஆலோசனைக் குழுவின் (EAC-PM) ஒரு முழுநேர உறுப்பினராக என நியமிக்கப் பட்டுள்ளார்.
- சஜ்ஜன் ஜிண்டால் தலைமையிலான அவரது நிறுவனமானது சுமார் 30 பில்லியன் டாலர்களுக்கும் அதிகமான சந்தை மூலதனத்தைக் கடந்த பிறகு, அவரது JSW எஃகு நிறுவனமானது உலகின் மிகவும் மதிப்புமிக்க எஃகு உற்பத்தி நிறுவனமாக மாறி உள்ளது.
- HCL டெக்னாலஜிஸ் நிறுவனத்தின் தலைவரான ரோஷ்னி நாடார் மல்ஹோத்ரா, ஹுருன் நிறுவனத்தின் 2025 ஆம் ஆண்டிற்கான உலகின் மிகவும் பணக்காரப் பெண்மணிகள் பட்டியலில் முதல் 10 இடங்களுக்குள் (5வது இடம்) இடம் பெற்ற முதல் இந்தியர் என்ற வரலாற்றைப் படைத்துள்ளார்.
- பிஸ்லெரி இன்டர்நேஷனல் நிறுவனம் ஆனது, 'பாரம்பரியத் தளங்களை தத்தெடுத்தல் 2.0 திட்டத்தின்' கீழ், இந்தியத் தொல்பொருள் ஆய்வு மையத்துடன் (ASI) இணைந்து ஓர் உத்தி சார் கூட்டாண்மையை மேற்கொள்ள உள்ளதாக அறிவித்துள்ளது.
- பெருநகர சென்னை மாநகராட்சியில் 15 ஆக உள்ள மாநகர நிர்வாக மண்டலங்களின் எண்ணிக்கையை 20 ஆக உயர்த்த தமிழக மாநில அரசு உத்தரவு பிறப்பித்துள்ளது.
- மின்னணுவியல் மற்றும் தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சகம் (MeitY) ஆனது, ஆதார் நல்லாட்சி இணைய தளத்தினைத் தொடங்கியுள்ளது.
- புகையிலைக் கட்டுப்பாடு தொடர்பான உலக சுகாதார அமைப்பின் கட்டமைப்பு உடன்படிக்கை (WHO FCTC) ஆனது நடைமுறைக்கு வந்ததன் 20 ஆம் ஆண்டு நிறைவைக் கொண்டாடப்பட்டது.

- விக்ரம் தரையிறங்கு கலம் அனுப்பிய ஒரு உலாவிக் கலமான பிரக்யான் தரவைப் பயன்படுத்தி நிலவின் தென் துருவப் பகுதியின் முதல் மிகவும் விரிவான புவியியல் வரைபடத்தினை ஆராய்ச்சியாளர்கள் உருவாக்கியுள்ளனர்.
- கேரள மாநிலத்தின் செந்துாரனி வனவிலங்கு சரணாலயத்திலிருந்து எபிடெலாக்ஸியா இனத்தைச் சேர்ந்த இரண்டு புதிய வகை குதிக்கும் சிலந்திகளை ஆராய்ச்சியாளர்கள் கண்டறிந்துள்ளனர்.
- உத்தரகாண்ட் மாநிலத்தில் கோவிந்த்காட் முதல் ஹேம்குண்ட் சாஹிப் ஜி (12.4 கி.மீ) மற்றும் சோன்பிரயாக் முதல் கேதார்நாத் (12.9 கி.மீ) வரையில் ஆகிய இரண்டு முக்கிய கம்பிவடப் போக்குவரத்து சேவைத் திட்டங்களுக்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.
- மத்திய மின்சார ஆணையம் (CEA) ஆனது, டாடா பவர்-DDL நிறுவனத்துடன் இணைந்து 5வது மின் தொழிலாளிகள் தினத்தினைக் கொண்டாடியது.
- இந்தியாவின் புகழ்பெற்ற டேபிள் டென்னிஸ் வீரரான அச்சந்தா ஷரத் கமல், தொழில் முறை டேபிள் டென்னிஸ் போட்டியிலிருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்துள்ளார்.
- இந்தியத் தேசியக் கண்டுபிடிப்பு அறக்கட்டளையானது (NIF) மார்ச் 01 ஆம் தேதியன்று அதன் வெள்ளி விழா கொண்டாட்டத்தைத் தொடங்கியது.
- இந்தியாவின் மிகவும் சமீபத்திய மற்றும் மிகவும் மேம்பட்ட ஒரு வான்வழித் தாக்குதல் எறிகணையான அஸ்ட்ரா MK-III ஆனது, தற்போது அதிகாரப்பூர்வமாக காண்டீவா என மறுபெயரிடப்பட்டுள்ளது.
- பாதுகாப்பு அமைச்சகம் ஆனது T-72 ரக பீரங்கி எந்திரங்களை வாங்குவதற்காக என்று ரஷ்யாவின் ரோசோபோரோனெக்ஸ்போர்ட்டு என்ற நிறுவனத்துடன் 248 மில்லியன் அமெரிக்க டாலர் மதிப்பிலான ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது.
- இந்தியத் தேசிய ஆவணக் காப்பகம் (NAI) ஆனது, மார்ச் 11 ஆம் தேதியன்று அதன் 135வது ஸ்தாபன தினத்தினை "Indian Heritage through Architecture" என்ற கருத்துருவிலான ஒரு கண்காட்சியுடன் கொண்டாடியது.
- விண்கலமிணைப்புப் பரிசோதனை (SpaDeX) திட்டத்தின் ஒரு முக்கியப் பகுதியாக இருக்கும் இரண்டு செயற்கைக் கோள்களின் துண்டிப்பு முயற்சியினை இஸ்ரோ மிக வெற்றிகரமாக நிறைவு செய்துள்ளது.
- ஒடிசா கடற்கரையில் தேஜாஸ் AF MK 1 எனப்படும் இலகுரகப் போர் விமானத்திலிருந்து அஸ்த்ரா எனப்படும் புலனாகும் வரம்பிற்கு அப்பால் உள்ள இலக்குகளைத் தாக்கும் ஒரு திறன் கொண்ட வான்வழி எறிகணையினை (BVRAAM) இந்தியா வெற்றிகரமாகப் பரிசோதித்துள்ளது.
- மத்திய உள்துறை அமைச்சகத்தின் இந்திய இணையவெளிக் குற்ற ஒருங்கிணைப்பு மையம் (I4C) ஆனது குற்றவாளிகளின் இருப்பிடங்களை மிக நன்கு கண்காணிக்கும் வகையிலான 'பிரதிபிம்ப்' தொகுதியை அறிமுகப்படுத்தியுள்ளது.
- இந்தியா மற்றும் அமெரிக்காவில் உள்ள தனியார் நிறுவனங்கள் ஆனது, அலை இயக்கத்தின் மூலம் இயங்கும் தானியங்குக் கருவி (வேவ் கிளைடர்) எனப்படும் நீர் மூழ்கி எதிர்ப்புப் போர்க் கருவிகளுக்கான (ASW) தானியங்கு மேற்பரப்புக் கப்பல்களை (ASVs) ஒருங்கிணைந்து உருவாக்குவதற்கும் இணைந்து தயாரிப்பதற்குமான ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளன.
- 2025 ஆம் ஆண்டு உலக நிலையான மேம்பாட்டு உச்சி மாநாடு (WSDS) ஆனது புது டெல்லியில் நடைபெற்றது.
    - இந்த நிகழ்வின் கருத்துரு, "Partnerships for Accelerating Sustainable Development and Climate Solutions" என்பதாகும்.

# தமிழ்நாடு செய்திகள்

## HPWMI நபர்களுக்கான புதியக் கொள்கை – தமிழ்நாடு

- மனநலம் பாதிக்கப்பட்ட ஆதரவற்ற நபர்களின் பராமரிப்பு மற்றும் அமலாக்கக் கட்டமைப்புக்கான 2024 ஆம் ஆண்டிற்கான மாநிலக் கொள்கையை முதலமைச்சர் வெளியிட்டு ள்ளார்.
- மனநலம் பாதிக்கப்பட்ட ஆதரவற்ற / சில வீடற்ற நபர்களுக்கு (HPWMI) வழங்கப்படும் சேவையை மீட்பு மற்றும் தீவிர நலப் பராமரிப்பு, இடைநிலை பராமரிப்பு, நீண்ட கால பராமரிப்பு மற்றும் சமூக ஒருங்கிணைப்பு ஆகிய நான்கு நிலைகளாக இக்கொள்கை வரையறுக்கிறது.

## தமிழ்நாட்டில் குறைவாக அறியப்படும் இனங்கள்

- தமிழ்நாடு அரசு ஆனது, "தமிழ்நாடு மாநிலத்தின் அருகி வரும் உயிரினங்களின் வளங்காப்பு நிதி" என்ற பிரத்யேக நிதியை உருவாக்கியுள்ளது.
- இது பெரும் அழிவின் விளிம்பில் உள்ள பல்லுயிர்ப் பெருக்கத்தில் சிலவற்றை மீட்டு எடுப்பதற்காக 50 கோடி ரூபாய் மதிப்பிலான ஒரு தொகுப்பு நிதியாக இருக்கும்.
- அருகி வரும் மற்றும் மிகவும் அருகி வரும் உயிரினங்களைப் பாதுகாப்பதற்கான சில புதியத் திட்டங்களை உருவாக்குவதற்கு இந்த நிதி உதவும்.
- 2011 ஆம் ஆண்டில், மத்திய சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை அமைச்சகம் ஆனது, தமிழ்நாட்டில் அழிவின் விளிம்பில் உள்ள 23 தாவர வகை இனங்கள் மற்றும் 16 விலங்கு இனங்களின் பட்டியலை அரசிதழில் வெளியிட்டது.

## கடன் பெறுதலில் தமிழ்நாட்டுப் பெண்களின் பங்கு

- நிதி ஆயோக் அமைப்பு வெளியிட்ட அறிக்கையின்படி, தமிழ்நாட்டில் கடன் பெறுதலில் பெண்களின் பங்கு 44% அதிகமாக உள்ளது.
- தமிழ்நாடு (44%), ஆந்திரப் பிரதேசம் (41%), தெலுங்கானா (35%), கர்நாடகா (34%) போன்ற தென் மாநிலங்களில் குறைந்தபட்சம் ஒரு நேரடிக் கடனையாவது கொண்டுள்ள பெண்களின் பங்கு அதிகமாக உள்ளது.
- 2024 ஆம் ஆண்டு டிசம்பர் மாத நிலவரப்படி நாடு முழுவதுமான ஒட்டுமொத்த அளவு 31% ஆக இருந்தது.
- கடந்த ஐந்து ஆண்டுகளில் தமிழ்நாடு மாநிலத்தில் கடன் பெறும் பெண்களின் பங்கில் 10% கூட்டு வருடாந்திர வளர்ச்சி விகிதம் பதிவானது.
- மகாராஷ்டிராவில் கடன் பெறுதலில் பெண்களின் பங்கு 30% ஆகவும், இராஜஸ்தான் மாநிலத்தில் 26% ஆகவும், மத்தியப் பிரதேச மாநிலத்தில் 25% ஆகவும், உத்தரப் பிரதேச மாநிலத்தில் 23% ஆகவும் உள்ளது.
- 2024 ஆம் ஆண்டில், மகாராஷ்டிரா, தமிழ்நாடு, கர்நாடகா, உத்தரப் பிரதேசம் மற்றும் தெலுங்கானா ஆகியவை அனைத்து CIBIL குறியீடு சுயக் கண்காணிப்புப் பெண்களின் கடன் பெறுதல் பங்கானது 49% ஆகவும் இருந்தன.
- இதில் தமிழ்நாடு மாநிலத்தின் பங்கு மட்டும் 11% ஆக இருந்தது.

## மக்காச்சோளத்திற்கான சந்தை வீதவரி

- மக்காச்சோளத்தின் மீது விதிக்கப்படும் 1% சந்தை வீத வரியினை தமிழக அரசு ரத்து செய்துள்ளது.
- இது 1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளைபொருள் சந்தைப்படுத்தல் (ஒழுங்கு முறை) சட்டத்தின் கீழ் தயாரிக்கப்படுகிறது.
- தமிழ்நாடு முழுவதும் சுமார் 4 லட்சம் ஹெக்டேர்கள் பரப்பளவில் மக்காச்சோளம் பயிரிடப் படுகிறது மற்றும் அதன் உற்பத்தி சுமார் 29 லட்சம் மெட்ரிக் டன் ஆகும்.

## 8வது பொருளாதாரக் கணக்கெடுப்பு 2025-26

- 8வது பொருளாதாரக் கணக்கெடுப்பினை எளிதாக்குவதற்காக வேண்டி தமிழ்நாடு அரசு மாநில மற்றும் மாவட்ட அளவிலான குழுக்களை அமைத்துள்ளது.
- இது ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு முறை நடத்தப்படுகிறது.
- பொருளாதாரக் கணக்கெடுப்பு ஆனது, ஒரு மாநிலத்திற்குள் உள்ள அனைத்து வணிக நிறுவனங்களின் முழுமையான எண்ணிக்கையை உறுதி செய்வதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- நாடு முழுவதுமான 7வது பொருளாதாரக் கணக்கெடுப்பு ஆனது 2019 ஆம் ஆண்டில் நடத்தப்பட்டாலும் மேற்கு வங்காளம் பங்கேற்கவில்லை.
- 6வது பொருளாதாரக் கணக்கெடுப்பின் அகில இந்திய அறிக்கையின்படி (2013-14 ஆம் ஆண்டிற்கு இடையில் சேகரிக்கப்பட்டத் தரவுகள்), தமிழ்நாட்டில் 8.60% நிறுவனங்கள் இருந்தது என்பதோடு இது நாட்டின் மொத்த நிறுவனங்களின் எண்ணிக்கையில் நான்காவது இடத்தில் உள்ளது.
- நாட்டின் மொத்த வேலைவாய்ப்பில் தமிழ்நாடு 8.91% பங்குடன், நாட்டின் மாநிலங்கள் மற்றும் ஒன்றியப் பிரதேசங்களில் நான்காவது இடத்தில் உள்ளது.
- நாட்டில் அதிகபட்சமாக பெரிய நிறுவனங்கள் தமிழ்நாட்டில் (13.81%) பதிவாகியுள்ளன.
- தமிழ்நாடானது, பெண் தொழில்முனைவோரின் தலைமையின் கீழ் உள்ள வணிக நிறுவனங்களின் எண்ணிக்கையில் மிகப்பெரிய பங்கினை (13.51%) கொண்டுள்ளது.
- அதைத் தொடர்ந்து கேரளா (11.35%), ஆந்திரப் பிரதேசம் (10.56%), மேற்கு வங்காளம் (10.33%) மற்றும் மகாராஷ்டிரா (8.25%) உள்ளன.

## ஆத்தூர் வெற்றிலை சாகுபடி

- கடுமையானப் பூச்சி தாக்குதல் மற்றும் கணிக்க முடியாத பருவநிலை மாற்றம் காரணமாக ஆத்தூர் (ஆத்தூர் வெற்றிலை) பகுதியில் பிரபலமான வெற்றிலை சாகுபடி கடந்த ஓராண்டாக குறைந்து வருகிறது.
- பருவநிலையானது, நல்ல விளைச்சலை உற்பத்தி செய்வதில் பெரும் பங்கு வகிக்கிறது மற்றும் அதில் ஏற்படும் எந்தவொரு இடையூறும் உற்பத்தியினை கணிசமான அளவில் பாதிக்கிறது.
- தனித்துவமான காரச் சுவைக்குப் பெயர் பெற்ற 'ஆத்தூர் வெற்றிலை' ஆனது 2022 ஆம் ஆண்டில் புவிசார் (GI) குறியீட்டினைப் பெற்றது.

## 2025 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதிநிலை அறிக்கையின் சிறப்பம்சங்கள்

- தமிழ்நாடு அரசானது, 2025-26 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையினை மார்ச் 14 ஆம் தேதியன்று சட்டமன்றத்தில் தாக்கல் செய்தது.
- மார்ச் 15 ஆம் தேதியன்று மாநில அரசு ஆனது 2025-26 ஆம் ஆண்டிற்கான வேளாண் நிதி நிலை அறிக்கையினையும் தாக்கல் செய்தது.
- நிதி நிலை அறிக்கையின் முழக்கம் ஆனது, உள்ளடக்கம் என்ற ஒரு கருத்தினை மிக நன்கு வெளிப் படுத்துகின்ற 'எல்லாருக்கும் எல்லாம்' (அனைவருக்கும் அனைத்தும்) என்ற வாசகத்தைக் கொண்டிருந்தது.
- நிதிநிலை அறிக்கையில் பொதுக் கடன் தவிர்த்து, 3,32,330 கோடி ரூபாய் என்ற மொத்த வருவாயுடன் மொத்தமாக 4,39,293 கோடி ரூபாய் செலவினம் பதிவாகியுள்ளது.
- 2025-26 ஆம் ஆண்டில், மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தி (GSDP) ₹35,67,818 கோடியாக இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது.
- 2025-26 ஆம் ஆண்டில் GSDP ஆனது 14.5% வளர்ச்சியடையும் என மதிப்பிடப்பட்டுள்ளது.
- இது 2024-25 ஆம் ஆண்டின் திருத்தப்பட்ட மதிப்பீடுகளில் பதிவு செய்யப்பட்ட 14.49% வளர்ச்சி விகிதத்திலிருந்து சற்று அதிகமாகும்.
- 2025-26 ஆம் ஆண்டிற்கான நிதிப் பற்றாக்குறையானது, சுமார் 1,06,963 கோடி ரூபாயாக மதிப்பிடப் பட்டுள்ளது என்பதோடு இது 2021-22 ஆம் ஆண்டிற்குப் பிறகு மதிப்பிடப் பட்ட மிக அதிகமாகும்.
- இருப்பினும், மொத்த உள்நாட்டு உற்பத்தியில் (GSDP) நிதிப் பற்றாக்குறையின் சதவீதம் ஆனது, 2024-25 ஆம் ஆண்டில் 3.26 சதவீதத்திலிருந்து 2025-26 ஆம் ஆண்டில் 3% ஆகக் குறையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.
- நிதிநிலை அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள நிதிப் பற்றாக்குறை என்பது மொத்த வருவாய்களுக்கும் மொத்தச் செலவினங்களுக்கும் உள்ள வித்தியாசமாகும்.
- 2025-26 ஆம் ஆண்டிற்கான வருவாய் செலவினம் ஆனது, 3,31,568 கோடி ரூபாயாகவும், வருவாய் செலவினம் ஆனது 3,73,203 கோடி ரூபாயாகவும் மதிப்பிடப்பட்டுள்ளது.
- இது வருவாய்ப் பற்றாக்குறையினை 41,635 கோடி ரூபாயாக உள்ளது அல்லது மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தியில் 1.17% ஆக உள்ளது.
- வருவாய்ச் செலவினம் என்பது ஊதியம், செயல்பாடு மற்றும் பராமரிப்பு, உதவித் தொகைகள் மற்றும் மானியங்கள், ஓய்வூதியங்கள் மற்றும் ஓய்வூதியச் சலுகைகள் மற்றும் வட்டி செலுத்துதல்களுக்கு செலவிடப்படும் பணமாகும்.
- வருவாய் வரவுகள் என்பது வரிகள் மற்றும் வரி அல்லாத வருவாய் ஆதாரங்கள், மத்திய அரசிலிருந்துப் பெறப்படும் மானியங்கள் மற்றும் மத்திய வரிகளில் அதன் பங்கு ஆகியவற்றிலிருந்து மாநில அரசு பெறும் பணம் ஆகும்.
- 2025-26 ஆம் ஆண்டிற்கான மூலதனச் செலவினம் 57,231 கோடி ரூபாய் ஆக மதிப்பிடப் பட்டுள்ளது.
- மூலதனச் செலவினம் என்பது மக்கள் பயன்பாட்டு உள்கட்டமைப்பு, கட்டிடங்கள் மற்றும் பொதுத்துறை நிறுவனங்களில் செய்யப்பட்ட முதலீடுகள் போன்ற நிலையான சொத்துக்களை உருவாக்குவதில் ஏற்படும் செலவுகளைக் குறிக்கிறது.
- முக்கியத் துறை ஒதுக்கீடுகளில், சுமார் 55,261 கோடி ரூபாய் கல்விக்கு ஒதுக்கப்பட்டது அதைத் தொடர்ந்து நகர்ப்புற மேம்பாடு மற்றும் கிராமப்புற மேம்பாட்டிற்கு ஒதுக்கப் பட்டது.

- 2025-26 ஆம் ஆண்டில் மொத்தம் 1,62,096.76 கோடி ரூபாய் கடன் பெற்று, 55,844.53 கோடி ரூபாயைத் திருப்பிச் செலுத்த அரசாங்கம் திட்டமிட்டுள்ளது.
- மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தியில் (GSDP) நிலுவையில் உள்ள கடன் பங்கு 26.07 சதவீதமாக இருக்கும்.

## தமிழ்நாடு நிதிநிலை அறிக்கையின் முக்கிய அறிவிப்புகள்

- அடுத்த இரண்டு ஆண்டுகளில், சுமார் 20 லட்சம் கல்லூரி மாணவர்களுக்கு அவர்களின் விருப்பத் தேர்வின் அடிப்படையில் வரைப்பட்டிகை அல்லது மடிக்கணினி வழங்கப் படும்.
- 2025 ஆம் ஆண்டு ஏப்ரல் 01 ஆம் தேதி முதல், பெண்களின் பெயரில் 10 லட்சம் வரை மதிப்புள்ள சொத்துக்கள் பதிவு செய்யப்பட்டால் 1% குறைவான பத்திர வரி விதிக்கப் படும்.
- பெற்றோர் இருவரையும் இழந்த குழந்தைகள் தங்கள் கல்வியைத் தொடர 2,000 ரூபாய் உதவித்தொகை வழங்கப்படும்.
- கீழடி (சிவகங்கை), தெலுங்கனூர் (சேலம்), ஆதிச்சனூர் (கள்ளக்குறிச்சி) மற்றும் நாகப்பட்டினம் உள்ளிட்ட 8 இடங்களில் தொல்பொருள் அகழ்வாராய்ச்சிகள் இனிமேல் மேற்கொள்ளப் பட உள்ளன.
- கலைஞர் வீட்டு வசதித் திட்டத்தின் கீழ், 3,500 கோடி ரூபாய் செலவில் 1 லட்சம் வீடுகள் கட்டப்படும்.
- சென்னைக்கு அருகில் சுமார் 2000 ஏக்கருக்கும் அதிகமான பரப்பளவில் ஒரு புதிய நகரம் உருவாக்கப்பட உள்ளது.
- அரசுப் பள்ளிகளின் உள்கட்டமைப்பை மேம்படுத்துவதற்காக 1,000 கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.
- மிகவும் அதிகரித்து வரும் சுற்றுலாப் பயணிகளின் வருகையைக் கருத்தில் கொண்டு, இராமநாதபுரம் மாவட்டத்தின், இராமேஸ்வரத்தில் புதிய விமான நிலையம் நிறுவப் பட உள்ளது.
- தமிழ்நாட்டில் சுமார் 1.50 லட்சம் தொழிலாளர்களுக்கு தொகுப்புக் காப்பீட்டுத் திட்டம் அறிமுகப்படுத்தப்பட உள்ளது.
- மதுரை, கோயம்புத்தூர், திருச்சி, சேலம், திருப்பூர், ஈரோடு, தூத்துக்குடி, வேலூர், தஞ்சாவூர் மற்றும் திண்டுக்கல் ஆகிய இடங்களில் 10 கோடி ரூபாய் செலவில் 'அன்புச்சோலை' எனும் முதியோர் இல்லங்கள் அமைக்கப்பட உள்ளன.
- அருகி வரும் உயிரினங்கள் வளங்காப்பு நிதியிலிருந்து 1 கோடி ரூபாய் செலவில் வேட்டைப் பறவை ஆராய்ச்சி அறக்கட்டளை நிறுவப்படும்.
- இதுவரையில் 28 இந்திய மொழிகளிலும் 35 உலக மொழிகளிலும் திருக்குறள் மொழி பெயர்க்கப் பட்டுள்ளது.
- மூன்று ஆண்டுகளுக்குள் ஐக்கிய நாடுகள் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட சுமார் 193 அதிகாரப் பூர்வ மொழிகளிலும் திருக்குறள் கிடைக்கப் பெறச் செய்யும் வகையில், இதனை மொழிபெயர்க்க 133 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.
- ஈரோட்டில் கொடுமணல் அகழ்வாராய்ச்சிகளை மையமாகக் கொண்ட 'நொய்யல் அருங்காட்சியகம்' மற்றும் இராமநாதபுரத்தில் 'நாவாய் அருங்காட்சியகம்' ஆகிய இரண்டு புதிய அருங்காட்சியகங்கள் நிறுவப்படும்.

- 'உலகத் தமிழ் ஒலிம்பியாட்' போட்டியானது ஆண்டுதோறும் மாணவர்களுக்கு கணினி அடிப்படையிலான தேர்வாக உலகளவில் நடத்தப்படும் என்பதோடு இதில் முன்னணி இடங்களைப் பெறுபவர்களுக்கு 1 கோடி ரூபாய் பரிசளிக்கப்படும்.
- தமிழின் தொன்மையை வெளிப்படுத்துவதற்காக மதுரை உலகத் தமிழ்ச் சங்கத்தில் 'அகரம் - மொழிகளின் அருங்காட்சியகம்' நிறுவப்படும்.

## நிதிநிலை அறிக்கையின் முத்திரையில் ரூபாய் சின்னம்

- தமிழ்நாடு அரசானது, மாநிலத்தின் 2025-26 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையின் முத்திரையில் "₹" என்ற ரூபாய் சின்னத்திற்குப் பதிலாக "ரூ" எனும் தமிழ் வடிவ எழுத்துருவினை பயன்படுத்தியுள்ளது.
- 'ரூபாய்' என்ற தமிழ் சொல்லே 'வார்க்கப்பட்ட வெள்ளி' அல்லது 'வேலைப் பாடுகள் கொண்ட வெள்ளி நாணயம்' என்று பொருள்படும் 'ருப்யா' என்ற சமஸ்கிருத மொழியில் வேரூன்றியத் தோற்றுருவினைக் கொண்டுள்ளது.
- இந்த ரூபாய் சின்னத்தைத் தமிழ்நாட்டைச் சேர்ந்த D. உதய குமார் வடிவமைத்தார்.
- இந்த சின்னம் ஆனது 2010 ஆம் ஆண்டில் அங்கீகரிக்கப்பட்டது.

## தமிழ்நாடு கனிமங்களைக் கொண்டுள்ள நிலங்களுக்கு வரிச் சட்டம், 2024

- மாநிலச் சட்டமன்றமானது, 2024 ஆம் ஆண்டு தமிழ்நாடு கனிமங்களைக் கொண்டுள்ள நிலங்களுக்கு வரி விதிக்கும் சட்டத்தினை நிறைவேற்றியது என்பதோடு இது 2025 ஆம் ஆண்டு பிப்ரவரி 20 ஆம் தேதியன்று அரசிதழில் வெளியிடப்பட்டது.
- இந்தச் சட்டம் ஆனது சுண்ணாம்புக்கல் உள்ளிட்ட பல்வேறு கனிமங்களை அகழ்ந்து எடுப்பதற்கு மெட்ரிக் டன்னுக்கு 160 ரூபாய் என்ற விகிதத்தில் வரி விதிக்கிறது.

## தமிழ்நாடு வேளாண் நிதிநிலை அறிக்கை 2025

- தமிழ்நாட்டில் ஐந்தாவது பிரத்தியேக வேளாண் நிதிநிலை அறிக்கை சமர்ப்பிக்கப் பட்டது.
- ஐந்து ஆண்டுகளில், வேளாண்மை மற்றும் அதைச் சார்ந்தத் துறைகளுக்கான மொத்த நிதி ஒதுக்கீடு 2021-22 ஆம் ஆண்டில் 34,221 கோடி ரூபாயிலிருந்து 2025-26 ஆம் ஆண்டில் 45,661 கோடி ரூபாயாக உயர்ந்துள்ளது.
- 2019-20 ஆம் ஆண்டில் 146.77 லட்சம் ஏக்கராக இருந்த மொத்தப் பயிர் பரப்பளவு ஆனது 2023-24 ஆம் ஆண்டில் 151 லட்சம் ஏக்கராக அதிகரித்துள்ளது.
- இம்மாநிலத்தில் 2019-20 ஆம் ஆண்டில் 29.74 லட்சம் ஏக்கராக இருந்த இரட்டைப் பயிர் சாகுபடி பரப்பளவு ஆனது 2023-24 ஆம் ஆண்டில் சுமார் 33.60 லட்சம் ஏக்கராக அதிகரித்துள்ளது.
- தமிழ் நாடானது, ராகி உற்பத்தியில் இந்தியாவில் முதல் இடத்தையும், மக்காச்சோளம், எண்ணெய் வித்துக்கள் மற்றும் கரும்பு உற்பத்தியில் இரண்டாவது இடத்தையும், நிலக் கடலை மற்றும் சிறு தானிய உற்பத்தியில் மூன்றாவது இடத்தையும் பெற்று உள்ளது.
- நிதி ஒதுக்கீட்டின் முக்கிய சிறப்பம்சமாக 1,000 முதலமைச்சரின் விவசாயிகள் சேவை மையங்கள் அமைக்கப்படவுள்ளது.

- சிறு தானிய உற்பத்தியை ஊக்குவிப்பதற்காக தமிழ்நாடு சிறு தானியத் திட்டத்திற்கு 55.44 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.
- தமிழ்நாடு எண்ணெய் வித்துக்கள் உற்பத்தியில் தன்னிறைவை அடைவதற்காக 108.06 கோடி ரூபாய் செலவில் தமிழ்நாடு எண்ணெய் வித்துக்கள் என்ற திட்டமானது செயல் படுத்தப் பட உள்ளது.
- மாற்றுப் பயிர் சாகுபடி திட்டம் ஆனது, ஒரு லட்சம் ஏக்கர் பரப்பளவில் நெல் மற்றும் கரும்பு சாகுபடிக்குப் பதிலாக சிறு தானியங்கள், பருப்பு வகைகள் மற்றும் எண்ணெய் வித்துக்கள் சாகுபடியாக மாற்றுவதை ஒரு நோக்கமாகக் கொண்டுள்ளது என்பதோடு இதற்கு 12.50 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.
- மத்திய அரசினால் நிர்ணயிக்கப்பட்ட நியாயமான மற்றும் இலாபகர விலையை (FRP) விட கூடுதலாக ஒரு மெட்ரிக் டன் கரும்புக்கு சுமார் 215 ரூபாய் சிறப்பு ஊக்கத் தொகை வழங்கப் படும்.
- மேலும் கூடுதலாக, ஆற்றுப்படுகை மற்றும் ஆற்றுப்படுகை அல்லாத மாவட்டங்களில் இயந்திர மயமாக்கப்பட்ட நெல் சாகுபடிக்கு 160 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.
- மாநில விவசாயிகள் மிகவும் சமீபத்திய தொழில்நுட்பங்களைக் கற்றுக் கொள்ளவும், அவற்றைத் தங்கள் துறையில் செயல்படுத்தவும் உதவும் வகையில், ஜப்பான், சீனா மற்றும் வியட்நாம் ஆகிய நாடுகளுக்கு 100 முற்போக்கான விவசாயிகளுக்கு சர்வதேச ஆய்வு சார் சுற்றுலாவிற்கு 2 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படுவதாக இந்நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்டுள்ளது.
- முந்திரி விவசாயிகள் மற்றும் கிராமப்புறத் தொழிலாளர்களுக்கு ஆதரவளிப்பதற்காக 10 கோடி ரூபாய் செலவில் தமிழ்நாடு முந்திரி வாரியம் அமைக்கப்படும்.
- அதிக விலைமதிப்பு மிக்க மரங்களை வளர்ப்பதை ஊக்குவிப்பதற்கும், மர வளர்ப்பு மீதான விதிமுறைகளை ஒழுங்குபடுத்துவதற்கும் தமிழ்நாடு வேளாண் வனவியல் கொள்கை அறிவிக்கப்படும்.
- 70 சதவீதம் வரையிலான மானியத்துடன் சுமார் 1000 விவசாயிகளுக்கு சூரிய சக்தியில் இயங்கும் நீரேற்றிகளை வழங்குவதற்கு 24 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.
- மலைவாழ் உழவர் முன்னேற்றத் திட்டமானது (மலை வாழ் விவசாயிகள் மேம்பாட்டுத் திட்டம்) சுமார் 63,000 மலை வாழ் விவசாயிகளின் நலனுக்காகச் செயல்படுத்தப்பட உள்ளது.

## பழங்குடியினர் வாழ்வாதாரக் கொள்கை

- தமிழ்நாடு அரசானது, பழங்குடியினர் வாழ்வாதாரக் கொள்கையினை உருவாக்கச் செய்வதற்குத் திட்டமிட்டுள்ளது.
- பழங்குடியினர் சமூகங்களின் உறுப்பினர்களுக்குப் பல்வேறு நலத் திட்டங்களை மிக எளிதாக அணுகுவதை உறுதி செய்வதையும், பல்லுயிர்ப் பெருக்க வளங்காப்பில் அப் பிரிவினர் கொண்டுள்ள ஒரு பாரம்பரிய அறிவைப் பாதுகாப்பதையும், பயன்படுத்தச் செய்வதையும் இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- மேற்கு மற்றும் கிழக்குத் தொடர்ச்சி மலைகளின் மலைப்பகுதிகளில் வசிக்கும் பெரும் தனித்துவமான கலாச்சார அடையாளங்களைக் கொண்ட சுமார் 37 பழங்குடியினர் சமூகங்கள் உள்ளன.
- இந்தக் கொள்கையானது பகுதி சார்ந்த சிறப்புத் திட்டங்களைச் செயல்படுத்துவதிலும் கவனம் செலுத்தும்.

- இந்தத் திட்டத்தின் முதல் கட்டத்தில் சிறப்புத் திட்டங்களைச் செயல்படுத்துவதற்காக ஈரோடு மாவட்டத்தில் பர்கூர் மற்றும் கடம்பூர் மலைப் பகுதிகள் மற்றும் கள்ளக் குறிச்சி மாவட்டத்தில் கல்வராயன் மலைகள் ஆனது தேர்வு செய்யப்பட்டுள்ளன.

## 2024 ஆம் ஆண்டில் மாநிலத்தின் சதுப்புநிலப் பரப்பளவு

- தமிழ்நாட்டில் சதுப்புநிலக் காடுகளின் பரப்பளவு ஆனது கடந்த சில ஆண்டுகளில் சுமார் இரு மடங்காக அதிகரித்துள்ளது என்பதோடு இது 2021 ஆம் ஆண்டில் 4,500 ஹெக்டேராக இருந்த இது 2024 ஆம் ஆண்டில் 9,039 ஹெக்டேராக அதிகரித்துள்ளது.
- மொத்தப் பரப்பளவில் புதிய தோட்டங்களின் பங்கு 40.1% (3,625 ஹெக்டேர்) ஆகவும், தற்போதுள்ள சதுப்புநிலக் காடுகளின் பங்கு 59.9% (5,414 ஹெக்டேர்) ஆகவும் உள்ளன.
- 'தமிழ்நாட்டின் சதுப்புநிலக் காடுகளுக்கான கடல்சார் சூழலமைவுகளில் காணப்படும் கார்பன் கண்காணிப்பு' என்ற தலைப்பிலான அறிக்கையானது, திருவாரூர் மாவட்டம் ஆனது 2,142 ஹெக்டேர் பரப்பினை உள்ளடக்கிய மிகப்பெரிய சதுப்புநிலப் பரப்பைக் கொண்டுள்ளது என்று கூறுகிறது.
- தஞ்சாவூர் மாவட்டம் ஆனது மொத்தம் சுமார் 2,063 ஹெக்டேர்கள் பரப்புடன் அதனைத் தொடர்ந்து இடம் பெற்றுள்ளது என்பதோடு இதில் 854 ஹெக்டேர்கள் பரப்பிலான தோட்டங்களும் சுமார் 1,209 ஹெக்டேர்கள் பரப்பிலான இயற்கைச் சதுப்பு நிலங்களும் உள்ளன.
- இந்த இரண்டு மாவட்டங்களும் ஒருசேர, தமிழ்நாட்டின் மொத்த சதுப்புநிலக் காடுகள் மற்றும் தோட்டப் பரப்பில் சுமார் பாதியளவினைக் கொண்டுள்ளன.
- கடலூர், திருவாரூர் மற்றும் தஞ்சாவூர் ஆகிய சில மாவட்டங்களில் உள்ள சதுப்புநிலப் பகுதிகளும் கணிசமான கார்பன் சேமிப்புத் திறனைக் கொண்டுள்ளன என்பதோடு இவற்றின் மொத்த கார்பன் இருப்பு முறையே ஹெக்டேருக்கு 249 டன், ஹெக்டேருக்கு 145 டன் மற்றும் ஹெக்டேருக்கு 77.5 டன் ஆகும்.
- விழுப்புரம் (ஹெக்டேருக்கு சுமார் 2.59 டன்) மற்றும் திருவள்ளூர் (ஹெக்டேருக்கு 13.1 டன்) ஆகியவை குறைந்த அளவு கார்பன் பிடிப்புத் திறனுடன் ஒரு குறைவான அடர்த்தி கொண்ட சதுப்புநிலப் பகுதிகள் ஆகும்.

## இடைநிலைப் பள்ளி இடைநிற்றல் விகிதம் 2023-24

- தமிழ்நாட்டின் பள்ளி இடைநிற்றல் விகிதம் ஆனது தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளி மட்டங்களில் 0% ஆகக் குறைந்துள்ள நிலையில், இடைநிலைப் பள்ளி மட்டத்தில் இடை நிற்றல் விகிதம் 7% ஆக உள்ளது.
- சமீபத்திய ஆண்டுகளில் இடைநிற்றல் விகிதம் குறைந்து வருகிறது என்பதோடு 2022-23 ஆம் ஆண்டில் 10.3% ஆக இருந்த இடைநிற்றல் விகிதம் ஆனது 7.7% ஆகக் குறைந்து உள்ளது.
- தமிழ்நாட்டின் இடைநிற்றல் விகிதம் ஆனது, 10.9% என்ற தேசியச் சராசரியினை விடக் குறைவாக உள்ளது.
- யுனெஸ்கோ அமைப்பின் அறிக்கையின்படி, உலகளாவிய பள்ளி இடைநிற்றல் சராசரி விகிதம் 13% ஆகும்.

- இங்கு ஆண் குழந்தைகளிடையே நிலவும் பள்ளி இடை நிற்றல் விகிதம் ஆனது பெண் குழந்தைகளிடையே உள்ள விகிதத்தினை விட தொடர்ந்து அதிகமாக உள்ளது என்ற ஒரு நிலையில் 2023-24 ஆம் ஆண்டில் இடைநிலைப் பள்ளி நிலையில் 4.4% ஆக இருந்த பெண் குழந்தைகளின் இடை நிற்றல் விகிதத்துடன் அதனை ஒப்பிடும் போது, ஆண் குழந்தைகள் மத்தியிலான இடைநிற்றல் விகிதம் 10.8% ஆக உள்ளன.
- 2014-15 ஆம் ஆண்டில், ஆண் குழந்தைகள் மத்தியில் பள்ளிப் படிப்பு இடைநிற்றல் விகிதம் சுமார் 16.1% ஆகவும், பெண் குழந்தைகள் மத்தியில் இந்த விகிதம் 8% ஆகவும் இருந்தது.

## பெற்றோர் பராமரிப்பு குறித்து சென்னை உயர்நீதிமன்றம்

- பத்திரத்தில் குறிப்பிடப் பட்டுள்ள வெளிப்படையான நிபந்தனை இல்லாவிட்டாலும், குழந்தைகள் தங்களைப் பராமரிக்கத் தவறினால் அந்தப் பெற்றோர்கள் தானப் பத்திரங்களை ரத்து செய்ய உரிமை உண்டு என்று சென்னை உயர்நீதிமன்றம் கூறி உள்ளது.
- ஆனால், 2007 ஆம் ஆண்டு பெற்றோர் மற்றும் மூத்தக் குடிமக்கள் மீதான பராமரிப்புச் சட்டத்தின் 23(1) பிரிவானது, தான/சொத்துத் தகராறு தீர்வுப் பத்திரங்களில் அத்தகைய நிபந்தனை விதிக்கப்பட்டிருக்க வேண்டும் என்று குறிப்பிடுகிறது.
- 23(1) வது பிரிவின் கீழ் உள்ள நிபந்தனையானது வெளிப்படையாக இருக்க வேண்டிய அவசியமில்லை என்றும், பெற்றோருக்கும் அவர்களின் குழந்தைகளுக்கும் இடையில் உள்ள உறவின் அடிப்படையில் அது மறைமுகமாக இருக்க அனுமதிக்கப்பட வேண்டும் என்றும் நடுவர் ஆயம் கூறியுள்ளது.

## சிலஹல்லா நீர்மின் நிலையம்

- நீலகிரியின் மிகப் பலவீனமான சூழலியலைக் கருத்தில் கொண்டு சில்ஹல்லா என்ற நீரேற்று நீர்மின் நிலைய மின்னாற்றல் சேமிப்புத் திட்டத்தினை உடனே கைவிடுமாறு சில்லஹல்லா சுற்றுச்சூழல் சமூகப் பாதுகாப்பு சங்கம் (SESPA) வலியுறுத்தியுள்ளது.
- முன்மொழியப்பட்ட இந்த நீர்மின் நிலையமானது, 10 கி.மீ நீரேற்றுக் குழாயுடன் கூடிய இரண்டு அணைகளைக் கட்டுவதை நோக்கமாகக் கொண்டுள்ளது என்பதோடு மேலும் இது 25 கிராமங்களின் நடுவில் உருவாக்கப்பட உள்ளது.
- சுமார் 1,000 ஏக்கர் வேளாண் நிலங்களும் 500 ஏக்கர் வன நிலங்களும் இதனால் நீரில் மூழ்க வாய்ப்புள்ளது என்று எச்சரிக்கப்பட்டுள்ளது.

## பெருநகர சென்னை மாநகராட்சி நிதிநிலை அறிக்கை 2025-26

- பெருநகர சென்னை மாநகராட்சி (GCC) ஆனது, வரி மற்றும் வர்த்தகம் மீதான உரிமக் கட்டணங்களுக்கான QR குறியீடு முறையை அறிமுகப்படுத்தியுள்ளது.
- இது 8,267.17 கோடி ரூபாய் என்ற அளவில் மொத்த வரவினையும் 8,404.7 கோடி ரூபாய் என்ற அளவில் மொத்தச் செலவினையும் கொண்டுள்ளது.
- இதன் மன்ற உறுப்பினர்களின் மன்ற/வார்டு மேம்பாட்டு நிதி ஆனது ஒரு மன்றத்திற்கு 50 லட்சம் ரூபாயிலிருந்து 60 லட்சம் ரூபாயாக அதிகரிக்கப்படும்.
- மேயரின் சிறப்பு மேம்பாட்டு நிதியானது 3 கோடி ரூபாயிலிருந்து 4 கோடி ரூபாயாக உயர்த்தப் படும்.

- இங்கு 25 லட்சம் ரூபாய் ஒதுக்கீட்டில் காயமடைந்த செல்லப் பிராணிகளுக்கான ஒரு சிறப்பு அவசரச் சிகிச்சை மையம் அமைக்கப்படும்.
- பெருநகர சென்னை மாநகராட்சியின் தற்போதைய விலங்குப் பிறப்புக் கட்டுப்பாடு மையங்களுக்குள் தலா 15 லட்சம் ரூபாயில் 10 புதிய கால்நடை மருத்துவமனைகள் கட்டப் படும்.
- ஒன்பதாம் வகுப்பு முதல் பன்னிரெண்டாம் வகுப்பு வரையிலான மாணவர்களுக்கு ஆங்கிலம் பேசும் திறனை மேம்படுத்துவதற்காகச் சிறப்பு வகுப்புகளை நடத்தச் செய்வதற்காக 20 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டது.
- இதில் போட்டித் தேர்வு விழிப்புணர்வுத் திட்டங்கள் மற்றும் மாணவர்களுக்கான பல ஊக்கத் தொகைகளுக்கு 40.50 கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டது.
- வாட்ஸ்அப் அடிப்படையிலான தகவல் தொடர்பு மூலம் குடிமக்கள் சேவைகள், குறை தீர்ப்புச் சேவைகள் மற்றும் தானியங்கியில் அடிக்கடி கேட்கப்படும் கேள்விகள் (FAQs) ஆகியவற்றை எளிதாக்குவதற்காக 4.46 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## கம்ப இராமாயண திருவிழாக்கள்

- ஒன்றிய கலாச்சாரத் துறை அமைச்சகத்தின் கீழ் உள்ள தென் மண்டலக் கலாச்சார மையம் (SZCC) ஆனது, 'கம்ப இராமாயண' பாராயணங்களின் வாய்மொழி மரபையும் அதன் பரந்த கலாச்சாரத் தாக்கத்தையும் புதுப்பிக்கும் நோக்கில் ஒரு விரிவான முன்னெடுப்பினைத் தொடங்குகிறது.
- கம்பரின் பிறப்பிடமான மயிலாடுதுறை மாவட்டத்தின் தேரழுந்தூரில் உள்ள கம்பர் மேடுவில் ஒரு வார கால விழாவை நடத்த அது திட்டமிட்டுள்ளது.
- இந்தத் திருவிழாவில் 'கம்ப இராமாயணத்தின்' தொடர்ச்சியான சில பாராயணங்கள், நடன நாடகங்கள் மற்றும் அறிவார்ந்த விவாதங்கள் இடம் பெறும்.

## 2025 ஆம் ஆண்டில் தமிழகத்தின் நிதிநிலை

- தமிழக அரசின் நிதிநிலை ஆனது முன்னேற்றத்தின் அறிகுறிகளைக் காட்டுகிறது.
- 2021-22 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது, ஒட்டு மொத்த செலவினங்களில் மூலதனச் செலவினத்தின் விகிதம் ஆனது 2017-18 ஆம் ஆண்டில் 10.4% ஆகக் குறைந்த பிறகு படிப் படியாக 13% நோக்கி முன்னேறி வருகிறது.
- பதினைந்து ஆண்டுகளுக்கு முன்பு, சுமார் 86% என்ற அளவுப் பொதுக் கடனானது மூல தனச் செலவினங்களுக்காகப் பயன்படுத்தப்பட்டது.
- அப்போதிலிருந்து, 2021-22 ஆம் ஆண்டில் இந்தப் பங்கு சீரான நிலையிலும் நேர் இறங்கு முகத்திலும் சுமார் 44% ஆகக் குறைந்தது.
- எதிர் வரும் ஆண்டின் நிதிநிலை அறிக்கையின் மதிப்பீடுகளின்படி, இது சுமார் 55% ஆக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.
- எதிர்வரும் ஆண்டில், ஒட்டு மொத்த உணவு மானியச் செலவினம் ஆனது 14,000 கோடி ரூபாயாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.
- மாநில அரசானது, எதிர்வரும் ஆண்டில் மின் கட்டண மானியமாக மட்டும் 17,000 கோடி ரூபாயையும், இழப்பீடு நிதியாக 7,700 கோடி ரூபாயையும் வழங்க உள்ளது.

## தமிழ்நாடு அரசின் இறுதி துணை மதிப்பீடுகள் 2024-25

- 2024-25 ஆம் ஆண்டிற்கான சுமார் 19,287.44 கோடி ரூபாய்க்கான இறுதி துணை மதிப்பீடுகளை தமிழ்நாடு நிதியமைச்சர் சட்டமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார்.
- மொத்த மதிப்பீடுகளில் வருவாய்க் கணக்கில் உள்ள 12,639.36 கோடி ரூபாய், மூலதனக் கணக்கில் 6,429.20 கோடி ரூபாய் மற்றும் கடன் கணக்கில் சுமார் 218.88 கோடி ரூபாய் ஆகியவை அடங்கும்.
- தமிழ்நாடு பொது விநியோகக் கழகத்திற்கான மூலதன உதவியாக 2,000 கோடி ரூபாய் கூடுதல் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 2024 ஆம் ஆண்டு தமிழ்நாட்டில் பதிவான காட்டுத்தீ நிகழ்வுகள்

- 2023-24 ஆம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலத்தில் 3,380 காட்டுத் தீ விபத்துகள் பதிவானது: இது கடந்த நான்கு ஆண்டுகளில் இல்லாத அளவிற்கு அதிகமாகும்.
- இது 2021-22 ஆம் ஆண்டில் பதிவான 1,035 விபத்துகள் மற்றும் 2022-23 ஆம் ஆண்டில் பதிவான 1,998 தீ விபத்துகளிலிருந்து கடுமையான அதிகரிப்பைக் குறிக்கிறது.
- 2001 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளுக்கு இடையில் ஏற்பட்ட தீ விபத்துகளால் தமிழ்நாடு மாநிலத்தில் 1.04 கிலோமீட்டர் ஹெக்டேர் (கிலோஹெக்டேர்) மரங்கள் அழிந்துள்ளது.
- 2023 ஆம் ஆண்டில் அதிகபட்சமாக 148 ஹெக்டேர் (ஹெக்டேர்) இழப்பு பதிவானது என்ற ஒரு நிலையில் இது அந்த ஆண்டு இழந்த மொத்த மரப் பரப்பில் 6.8 சதவீதத்தைக் குறிக்கிறது.
- VIIRS (கட்புலனாகும் அகச்சிவப்பு வரைபடமாக்கல் கதிர்வீச்சுமானி தொகுப்பு) போன்ற கண்காணிப்பு அமைப்புகள் ஆனது, சமீபத்தியக் காலங்களில் வழக்கத்திற்கு மாறாக அதிக தீ எச்சரிக்கைகளைக் கண்டறிந்துள்ளன.
- 1951 ஆம் ஆண்டில் பதிவு செய்யப்படத் தொடங்கியதிலிருந்து, 2024 ஆம் ஆண்டில் ஊட்டி பகுதியில் அதன் அதிகபட்ச வெப்பநிலையான 29 டிகிரி செல்சியஸ் பதிவானது.
- சமீபத்தியத் தமிழக வரலாற்றில் மிகவும் அழிவுகரமான காட்டுத் தீகளில் ஒன்று 2018 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் தேனி மாவட்டத்தில் உள்ள குரங்கணியில் ஏற்பட்டது.

## அனைத்துக் கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டம் – II

- 'அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டம்-II' திட்டத்தினை அமல்படுத்தச் செய்வதற்காக 1,087 கோடி ரூபாய் நிதி ஒதுக்க தமிழக அரசு நிர்வாக அனுமதி வழங்கி உள்ளது.
- 2025-26 ஆம் ஆண்டில் கிராமப் புறங்களில் அடிப்படை உள்கட்டமைப்பை மிக நன்கு மேம்படுத்துவதே இதன் நோக்கமாகும்.
- இந்தத் திட்டம் ஆனது ஊரக மேம்பாடு மற்றும் பஞ்சாயத்து ராஜ் துறையால் அமல் படுத்தப் படுகிறது.
- 2006 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட இந்தத் திட்டம் ஆனது, அனைத்து கிராமப் பஞ்சாயத்துகளிலும் உள்ள ஒட்டு மொத்த அடிப்படை உள்கட்டமைப்பு வசதிகளைப் படிப்படியாக மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

- இந்த முன்னெடுப்பின் கீழ், குளங்களைப் புனரமைத்தல், தெருக்கள் மற்றும் சாலைகளை நன்கு மேம்படுத்துதல், புதிய தெரு விளக்குக் கம்பங்களை நிறுவுதல், வாழ்வாதாரம் மற்றும் சந்தைப்படுத்தல் வசதிகள் கிடைக்கப் பெறுவதை உறுதி செய்தல் உள்ளிட்டவை மேற்கொள்ளப்படுகின்றன.
- தமிழ்நாட்டில் 12,482 கிராமப் பஞ்சாயத்துகள் உள்ளன.
- 2025-26 ஆம் ஆண்டில், இந்தத் திட்டம் ஆனது 2,329 கிராமப் பஞ்சாயத்துகளில் செயல் படுத்தப்பட உள்ளது.
- ஒரு கிராமப் பஞ்சாயத்தில் மேற்கொள்ளப் பட வேண்டிய பல பணிகளைத் தொகுதி அளவிலான குழுக்கள் முடிவு செய்யும்.
- அந்தத் தேர்வுக் குழுவால் பட்டியலிடப்பட்ட அனைத்துப் பணிகளும் சிறப்புக் கிராம சபையால் அங்கீகரிக்கப்பட வேண்டும்.
- பட்டியலிடப்பட்ட சாதியினர்/பட்டியலிடப்பட்ட பழங்குடியினர் வசிக்கும் குடியிருப்புப் பகுதிகளுக்கு குறைந்தபட்சம் 30% நிதி ஒதுக்கப்பட வேண்டும்.

## பசுமைப் பள்ளித் திட்டம்

- நாகப்பட்டினம் மாவட்டத்தில் உள்ள மூன்று அரசுப் பள்ளிகள் ஆனது, பசுமைப் பள்ளித் திட்டத்தின் கீழ் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன.
- தமிழக அரசின் இந்த ஒரு முன்னெடுப்பானது, மாணவர் ஈடுபாடு மற்றும் நிலையான நடைமுறைகள் மூலம் பருவநிலை மாற்றத்தின் பிரச்சினைகளை நிவர்த்தி செய்வதை நோக்கமாகக் கொண்டதாகும்.
- இந்தத் திட்டம் ஆனது, கட்டம் கட்டமாக/கட்டம் வாரியாக மாநிலம் முழுவதும் செயல் படுத்தப் படுகிறது என்ற ஒரு நிலையில் இந்த ஆண்டு முதல் முறையாக இத்திட்டத்தில் நாகப்பட்டினம் மாவட்டம் சேர்க்கப்பட்டுள்ளது.
- இந்தத் திட்டத்தின் கீழ் தேர்ந்தெடுக்கப்பட்ட மூன்று பள்ளிகள்
    - திருக்குவளை அரசு மேல்நிலைப் பள்ளி, நாகப்பட்டினம் நகரம்
    - அகரக்கடம்பனூர் அரசு மேல்நிலைப் பள்ளி, மற்றும்
    - அரசு மாதிரி மேல்நிலைப் பள்ளி, தோப்புத்துறை.

## சொற்பிறப்பு ஒப்பியல் அகராதி

- தமிழ் மற்றும் இந்தோ-ஐரோப்பிய மொழிகளின் பொது அறிமுகப் புத்தகம் மற்றும் சொற்பிறப்பு ஒப்பியல் அகராதியின் முதல் தொகுதியைத் தமிழ்நாடு முதலமைச்சர் வெளியிட்டார்.
- இந்த முயற்சியானது, தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகமானது, ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழக அச்சகத்துடன் இணைந்து செயல்படச் செய்வதன் ஒரு பகுதியாக மேற்கொள்ளப்படுகிறது.
- இது தமிழ் மற்றும் இந்தோ-ஐரோப்பிய மொழிகளின் சுமார் 12 தொகுதிகள் கொண்ட சொற்பிறப்பு ஒப்பியல் அகராதியை வெளியிடுவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- 2022 ஆம் ஆண்டு முதல் பேராசிரியர் G. அரசேந்திரன் தலைமையிலான 20 நிபுணர்கள் கொண்ட குழுவினால் செயலாற்றப்பட்டு வரும் இந்தத் திட்டத்திற்காக மாநில அரசு 8 கோடி ரூபாய் ஒதுக்கியுள்ளது.

- இந்தப் புத்தகத்தின் முதல் தொகுதியானது, இலத்தீன், கிரேக்கம், ஜெர்மன், பிரெஞ்சு, ஆங்கிலம் போன்ற மேற்கத்திய இந்தோ-ஐரோப்பிய மொழிகள் மற்றும் தமிழிலிருந்து தோன்றிய சமஸ்கிருதம், பாலி மற்றும் சிங்களம் போன்ற கிழக்கு இந்தோ-ஐரோப்பிய மொழிகளில் சுமார் 19 சொற்களின் சொற்பிறப்பியல் கருதுகோளின் அடிப்படையில் தொகுக்கப் பட்டுள்ளது.

## 2018 ஆம் ஆண்டிலிருந்து பதிவான சுய மரியாதைத் திருமணங்கள்

- 2018 ஆம் ஆண்டிலிருந்து தமிழ்நாட்டில் 12,114 சுயமரியாதைத் திருமணங்கள் பதிவு செய்யப் பட்டுள்ளன.
- Self-Respect Marriage என்றும் அழைக்கப்படும் சுயமரியாதைத் திருமணங்கள் ஆனது, பொதுவாக ஒரு புரோகிதர் முன்னிலையிலும் அல்லாமல் மற்றும் எந்தவொரு பாரம்பரிய திருமணச் சடங்குகளையும் பின்பற்றாமல் மேற்கொள்ளப்படுகின்றன.
- சுய மரியாதைத் திருமணங்களின் பதிவு ஆனது, 1955 ஆம் ஆண்டு இந்து திருமணச் சட்டத்தின் 7 (a) பிரிவின் கீழ் வருகிறது.
- 7 (a) பிரிவானது 1967 ஆம் ஆண்டு தமிழ்நாடு திருத்தச் சட்டத்தினால் சேர்க்கப்பட்டது.

## இரண்டாவது பல்லுயிர்ப் பெருக்கப் பாரம்பரியத் தளம்

- தமிழ்நாடு மாநில அரசானது, திண்டுக்கல்லில் உள்ள காசம்பட்டி (வீரக் கோவில்) புனிதத் தோப்புகளை 2002 ஆம் ஆண்டு உயிரியல் பன்முகத்தன்மைச் சட்டத்தின் கீழ் ஒரு பல்லுயிர்ப் பெருக்கப் பாரம்பரியத் தளமாக (BHS) அறிவித்துள்ளது.
- இது 2022 ஆம் ஆண்டில் பல்லுயிர்ப் பெருக்கப் பாரம்பரிய தளமாக அறிவிக்கப்பட்ட மதுரையில் உள்ள அரிட்டாபட்டியை அடுத்து, மாநிலத்தின் இரண்டாவது பல்லுயிர்ப் பெருக்கப் பாரம்பரிய தளமாகும்.
- இது அழகர் மலை காப்புக் காடுகளுக்கு அருகில் சுமார் 4.97 ஹெக்டேர் பரப்பளவில் அமைந்துள்ளது.
- 48 மர இனங்கள், 22 புதர்ச் செடிகள், 21 படரும் கொடிகள் மற்றும் 29 மூலிகைகள் உள்ளிட்ட பல்லுயிர்த் தொகுப்புகளின் தாயகமாக இந்தத் தோப்பு திகழ்கிறது.

## கார்பன் நடுநிலைமையை நோக்கிய மாற்றம்

- கார்பன் நடுநிலைமையை நோக்கிய மாற்றத்தினை மிகவும் விரைவுபடுத்துவதற்காக ஐக்கியப் பேரரசு-தமிழ்நாடு என்ற கூட்டாண்மையினைத் தொடங்குவதற்கு ஐக்கியப் பேரரசின் அரசாங்கமும் தமிழ்நாடு மாநில அரசாங்கமும் கூட்டு சேர்ந்துள்ளன.
- இந்தக் கூட்டாண்மையானது, மாநில அரசின் கார்பன் நடுநிலைமையை நோக்கிய ஒரு மாற்றத்திற்காக ஈரோடு மற்றும் தூத்துக்குடி நகரங்களில் மேற்கொள்ளப்படும் நகர்ப்புறத் திட்டமிடல் மற்றும் போக்குவரத்து முன்னேற்றத்தில் கவனம் செலுத்தும்.
- இரண்டு நகர்ப்புறப் போக்குவரத்துத் திட்டங்கள் அறிமுகப் படுத்தப் பட்டுள்ளன.
- இதில் முதல் திட்டமானது, "ஈரோடு நகரில் பருவநிலை தகவமைவு, நிலையான மற்றும் உள்ளடக்கிய வகையிலான நகர்ப்புறப் போக்குவரத்து" தொடர்பானதாகும்.
- இதன் இரண்டாவது திட்டமானது தூத்துக்குடி நகரில் மேற்கொள்ளப்படும் பல்வேறு திட்டங்களை இலக்காகக் கொண்ட "PACT-Digi-PULSE" திட்டமாகும்.

- PACT-Digi-PULSE என்பது நகர்ப்புற வாழ்க்கை மற்றும் நிலையானச் சூழலுக்கான நேரடி அமைப்புகளின் எண்ணிம இரட்டை மாதிரி அடிப்படையிலான ஒரு திட்டமிடலைப் பயன்படுத்தி கார்பன் நடுநிலையை நோக்கிய மாற்றங்களை மேம்படுத்துவதற்கான ஒரு கூட்டாண்மை என்பதைக் குறிக்கிறது.

## புளியங்குடி - இந்தியாவின் எலுமிச்சை நகரம்

- இந்தப் பகுதியில் உள்ள எலுமிச்சைப் பண்ணைகள் விலங்குகளின் தாக்குதல்களில் இருந்து மிகப் பாதுகாப்பாக உள்ளன என்பதோடு அவற்றின் உற்பத்தியும் இங்கு மிக அதிகமாக உள்ளது.
- 1950 ஆம் ஆண்டுகளின் முற்பகுதியில், புளியங்குடி பகுதியின் விவசாயிகள் ஒரு புதிய முயற்சியினை முன்னெடுத்து, அதன் மூலம் எலுமிச்சைச் சாகுபடியை மேற்கொள்ள முடிவு செய்தனர்.
- இந்த மாற்றம் தான் புளியங்குடியினை 'இந்தியாவின் எலுமிச்சை நகரம்' என்பதாக மாற்றியது.
- மிக அதிகளவிலான சிட்ரஸ் தன்மை மற்றும் ஏராளமான சாறு நிறைந்ததாகவும் உள்ள புளியங்குடி எலுமிச்சை ஆனது நறுமணம் கொண்ட மெல்லியத் தோலைக் கொண்டது.
- PKM 1 என அழைக்கப்படும் இந்த பழங்கள் ஆனது, 100 கிராம் பழச்சாறுக்கு 34.29 மில்லி கிராம் என்ற மிக அதிக அஸ்கார்பிக் அமில உள்ளடக்கம் மற்றும் 8.0° பிரிக்ஸ் என்ற அளவில் மொத்தக் கரையக்கூடிய திடப்பொருட்களைக் கொண்டுள்ளன.
- இந்தப் பழத்தில் காணப்படும் சாறு உள்ளடக்கம் ஆனது, எடையின் அடிப்படையில் 52.3% ஆக உள்ளது என்பதோடு இது அதிக மகசூல் தரும் எலுமிச்சை வகையாகும்.
- தமிழ்நாடு மாநில வேளாண் சந்தைப்படுத்தல் வாரியம் மற்றும் மேலப் புளியங்குடி விவசாயிகள் சங்கம் ஆகியவை புளியங்குடி தேசிக்காய் /அமில எலுமிச்சைக்குப் புவி சார் குறியீடு பெற விண்ணப்பித்துள்ளன.

## முதல்வரின் கிராம சாலைகள் மேம்பாட்டுத் திட்டம்

- இந்தத் திட்டத்தின் கீழ், 2025-26 ஆம் ஆண்டில் கிராமப் பஞ்சாயத்துகள் மற்றும் பஞ்சாயத்து ஒன்றியங்களில் சாலைகளை மேம்படுத்துவதற்காக தமிழக அரசானது 1,000 கோடி ரூபாய் நிதி ஒதுக்கியுள்ளது.
- மொத்த தொகையான 1,000 கோடி ரூபாயில், ஒருங்கிணைந்த திரட்டப்பட்ட வருவாய்த் (SCPAR) திட்டக் கூறுகளிலிருந்து 344 கோடி ரூபாய், மூலதன மானிய நிதியிலிருந்து (CGF) (மாவட்டம்) 200 கோடி ரூபாய், CGF (மாநிலம்) நிதியிலிருந்து 300 கோடி ரூபாய் மற்றும் CGF (பிற மாவட்ட சாலைகள்) 156 கோடி ரூபாய் ஆகியவை அடங்கும்.
- 2025-26 ஆம் ஆண்டில் சுமார் 2,500 கி.மீ. தூர சாலை மேம்பாட்டுத் திட்டங்களை மேற் கொள்வதற்கு முன்மொழியப்பட்டுள்ளது.

## வாழ்ந்து காட்டுவோம் 3.0

- வாழ்ந்து காட்டுவோம் 2.0 திட்டத்தின் வெற்றியைத் தொடர்ந்து, தமிழ்நாடு அரசானது வாழ்ந்து காட்டுவோம் 3.0 திட்டத்தினை நமது மாநிலம் முழுவதும் 120 தொகுதிகளில் செயல்படுத்த உள்ளது.

- இது உலக வங்கியின் உதவியுடன் 1,000 கோடி ரூபாய் செலவில் செயல்படுத்தப்பட உள்ளது.
- இது கிராமப்புற நிறுவனங்களை ஊக்குவித்தல், நிதி அணுகல் மற்றும் தமிழ்நாட்டின் தேர்ந்தெடுக்கப்பட்டத் தொகுதிகளில் வேலை வாய்ப்புகளை நன்கு உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

## தமிழ்நாட்டின் வளங்காப்பு முன்னெடுப்புகள்

- தமிழ்நாடு மாநில அரசானது, ஆனைமலை புலிகள் வளங்காப்பகத்தில் ஒரு சிறப்பு மையத்தினை நிறுவச் செய்வதன் மூலம் இருவாச்சி பறவைகளின் வாழ்விடங்களைப் பாதுகாப்பதற்கான வளங்காப்பு முயற்சிகளைத் தொடங்க உள்ளது.
- சிங்கவால் குரங்கு, சென்னை முள்ளெலி/முள்ளம்பன்றி, கழுதைப் புலிகள் மற்றும் பெளி மீன்கள் போன்ற அருகி வரும் உயிரினங்களின் வாழ்விடப் பாதுகாப்பு, அதன் எண்ணிக்கை மதிப்பீடு மற்றும் சமூக விழிப்புணர்வு திட்டங்களுக்காக 1 கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டு பாதுகாக்கப்படும்.
- வங்காள நரி மற்றும் குள்ள நரி ஆகியவற்றின் வளங்காப்பிற்கு வேண்டி முன்னுரிமை அளிக்கப் படும்.
- வனத்துறையானது, சிற்றாமைகள் திரளும் பகுதிகளை அடையாளம் காண்பதற்காக 84 லட்சம் ரூபாய் செலவில் தனது முதல் தொலை அளவியல் ஆய்வை மேற்கொள்ள உள்ளது.
- மாநில அரசானது, சமூக வளங்காப்பு தலைமைத்துவ விருதுகளை உருவாக்குவதோடு, 20,000 மாணவர்களுக்கு சான்றிதழ் திட்டத்தைத் தொடங்க உள்ளது.
- சென்னை வண்டலூரில் உள்ள மேம்பட்ட வனவிலங்கு வளங்காப்பு நிறுவனத்தில், வளங்காப்பு மற்றும் பரிணாம மரபியல் மையம் மற்றும் உயிரினங்களின் உயிர்ப் பிழைப்பு மையம் ஆகிய இரண்டு புதிய ஆராய்ச்சி மையங்களை மாநில அரசு நிறுவ உள்ளது.
- விருதுநகர், கள்ளக்குறிச்சி, இராமநாதபுரம், நாகப்பட்டினம், நீலகிரி மற்றும் மேக மலை ஆகிய ஆறு இடங்களில் ஆறு புதிய வனவிலங்கு வளங்காப்பு காப்பு மையங்கள் அமைக்கப் படும்.
- சேலத்தில் உள்ள குரும்பப்பட்டி உயிரியல் பூங்கா மற்றும் வேலூரில் உள்ள அமிர்தி உயிரியல் பூங்காவை மேம்படுத்துவதற்காக என அரசாங்கம் 5 கோடி முதலீடு செய்ய உள்ளது.
- கடல் சார் பல்லுயிர்ப் பெருக்கத்தைப் பாதுகாக்க சென்னை கடற்கரைக்கான சிறப்புக் கடல் சார் படை உருவாக்கப்படும்.
- மனித-யானை மோதலைத் தணிப்பதற்காக வேண்டி திண்டுக்கல்லில் விரைவு பதில் நடவடிக்கைக் குழு உருவாக்கப்படும்.
- சென்னை, கோயம்புத்தூர், மதுரை, திருச்சி, திருப்பூர் மற்றும் சேலம் ஆகிய சில இடங்களில் மரக் கணக்கெடுப்பு மற்றும் பசுமைத் தளங்கள் மதிப்பீடு நடத்தப்படும்.

# தேசியச் செய்திகள்

## ஹைப்பர்லூப் இரயிலுக்கான இந்தியாவின் முதல் சோதனை பாதை

- இரயில்வே அமைச்சகத்தின் ஒரு ஆதரவுடன் சென்னையின் இந்தியத் தொழில்நுட்பக் கல்விக் கழகம் ஆனது, சுமார் 422 மீட்டர் நீளமுள்ள, இந்தியாவின் முதல் ஹைப்பர்லூப் சோதனை பாதையை உருவாக்கியுள்ளது.
- இதன் மூலம், 350 கி.மீ தூரத்தினை வெறும் 30 நிமிடங்களில் கடக்க முடியும்.
- இது 'ஐந்தாம் போக்குவரத்து முறைமை' என்று குறிப்பிடப்படுகிறது.

## இந்தியாவின் முன்னணி தூய்மையான நகரங்கள் 2024

- ஸ்வச் சர்வேக்சன் (SS) எனப்படுகின்ற உலகின் மிகப்பெரிய 9வது நகர்ப்புற தூய்மை கணக்கெடுப்பிற்கான மிகவும் புதுப்பிக்கப்பட்டதொரு வடிவமைப்பை மத்திய அரசு அறிமுகப் படுத்த யுள்ளது.
- இந்தூர் ஆனது தொடர்ந்து ஏழு ஆண்டுகளாக ஒட்டு மொத்தமாக தூய்மையான நகர விருதை வென்றதன் மூலம் தன்னை மிகவும் தனித்துவமாக நிலை நிறுத்தியுள்ளது என்பதோடு இந்த ஆண்டு கணக்கெடுப்பிலும் இடம்பெற்றுள்ளது.
- இது சூரத் மற்றும் நவி மும்பையுடன் சேர்ந்து 'மில்லியன் பிளஸ் நகரங்கள் (10 லட்சம் மக்கள் தொகை)' பிரிவில் தரவரிசைப் படுத்தப்பட்டுள்ளது.

## ஐஎன்எஸ் குல்தார் – கடலடி அருங்காட்சியகம்

- இந்தியக் கடற்படையானது படையிலிருந்து நீக்கப்பட்ட ஐஎன்எஸ் குல்தார் எனப்படும் கடற்கரையில் நிலை நிறுத்தும் வகையிலான ஒரு கப்பலினை மகாராஷ்டிரா சுற்றுலா மேம்பாட்டுக் கழகத்திடம் ஒப்படைத்துள்ளது.
- இந்தக் கப்பலானது, இந்தியாவின் முதல் கடலடி அருங்காட்சியகமாகவும் செயற்கைப் பவளப்பாறையாகவும் மாற்றப்பட உள்ளது.

## Pig Butchering மோசடி

- 'Pig Butchering மோசடி' எனப்படும் புதிய இணைய வெளி மோசடி குறித்து அரசாங்கம் எச்சரிக்கை விடுத்துள்ளது.
- புதிய இயங்கலை மோசடி தொகுதி ஆனது, 'Pig Butchering மோசடி' அல்லது 'முதலீட்டு மோசடி' என்று அழைக்கப்படுகிறது.
- இது வேலைவாய்ப்பில்லாத இளையோர்கள், மாணவர்கள் மற்றும் எளிதில் பாதிக்கப் படக் கூடிய நபர்களை குறிவைக்கும் விதமாக மேற்கொள்ளப்படுகிறது.
- பாதிக்கப்பட்டவர்கள் பணத்தை இழப்பது மட்டுமல்லாமல் இணையவெளி அடிமைத் தனத்திற்கும் தள்ளப்படுகிறார்கள்.
- இத்தகைய மோசடி ஆனது முதன்முதலில் 2016 ஆம் ஆண்டு சீனாவில் தோன்றியதாக நம்பப்படுகிறது.

## ஒரு நாடு - ஒரு துறைமுக செயல்முறை

- மத்திய அரசு ஆனது, சமீபத்தில் 'ஒரு நாடு, ஒரு துறைமுகச் செயல்முறை' என்ற ஒரு முன்னெடுப்பினை அறிமுகப்படுத்தியுள்ளது.
- திறமையின்மை, அதிகரித்தச் செலவினங்கள் மற்றும் செயல்பாட்டு தாமதங்களுக்கு வழி வகுக்கும் ஆவணமாக்கல் மற்றும் செயல்முறைகளில் உள்ள முரண்பாடுகளை நீக்குவதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இது இந்தியாவின் முக்கியத் துறைமுகங்களில் மேற்கொள்ளப்பட்டு வரும் பல்வேறு செயல்பாடுகளைத் தரமுறைப்படுத்தவும் நெறிமுறைப்படுத்துவதற்குமான முயற்சி ஆகும்.
- முதல் கட்டமானது குடியேற்றம், துறைமுக சுகாதாரக் கட்டமைப்பு மற்றும் துறைமுக அதிகாரிகள் குறித்த தரப்படுத்தப்பட்ட ஆவணமாக்கல் ஆகும்.

## மாநிலங்களின் நிலை குறித்த அறிக்கை - AAD 2025

- இந்தியாவானது ஐக்கிய நாடுகள் சபையினால் வலியுறுத்தப்பட்ட 16 நிலையான மேம்பாட்டு இலக்குகளுள் (SDGs) ஒன்பது இலக்குகளில் பின்தங்கியுள்ளது.
- 36 இந்திய மாநிலங்களும் ஒன்றியப் பிரதேசங்களும் (UTs) இந்த 15 SDG இலக்குகளில் நான்கில் மட்டுமே, இலக்கின் பூர்த்தி நிலையில் குறைந்தது பாதியளவை அடைந்து உள்ளன.
- உத்தரகாண்ட் மற்றும் தமிழ்நாடு ஆகிய மாநிலங்கள் மிகக் குறைவான பின்தங்கிய குறிகாட்டிகளைக் கொண்டிருந்தாலும், அவை ஒவ்வொன்றிலும் ஆறு குறிகாட்டிகளில் ஒன்றில் சவால்கள் நீடிக்கின்றன.
- உத்தரப் பிரதேசம், குஜராத், மேற்கு வங்காளம், மத்தியப் பிரதேசம் மற்றும் ராஜஸ்தான் உள்ளிட்ட பதினாறு மாநிலங்கள் மற்றும் ஒன்றியப் பிரதேசங்கள், அவற்றின் 30-43 சதவீத SDG குறிகாட்டிகளில் நிர்ணயிக்கப்பட்ட இலக்கில் பாதிக்கும் குறைவாகவே எட்டியுள்ளன.
- இந்த ஒரு அறிக்கையானது 2025 ஆம் ஆண்டிற்கான அனில் அகர்வால் பேச்சுவார்த்தை என்பதின் போது வெளியிடப் பட்டது

## INS தமால்

- ரஷ்யாவில் கட்டுமானத்தில் உள்ள ரேடாருக்குப் புலப்படாத போர்க்கப்பலான தமால் ஜூன் மாதத்தின் தொடக்கத்தில் இயக்கப்பட உள்ளது.
- இந்திய நாட்டிற்கு வெளியே வேறொரு நாட்டில் செயலாக்கப்படுகின்ற அல்லது அங்கு இருந்து இறக்குமதி செய்யப்படுகின்ற கடைசி போர்க்கப்பலாக தமால் இருக்கும்.
- இது ரேடாருக்குப் புலப்படாத நான்கு போர்க் கப்பல்களை கட்டமைப்பதற்கான சுமார் 2.5 பில்லியன் டாலர் ஒப்பந்தத்தின் ஒரு பகுதியாகும் என்பதோடு அவற்றில் இரண்டு கப்பல்கள் ரஷ்யாவிலும் இரண்டு கப்பல்கள் கோவாவிலும் கட்டமைக்கப்படுகின்றன.
- இந்த ரகத்திலான கப்பலில் முதலாவது கப்பலான INS துஷில் என்பது, 2024 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் படையில் இணைக்கப்பட்டது.

## MoPSW அமைச்சகத்தின் முன்னெடுப்புகள்

- இந்தியாவின் முக்கியத் துறைமுகங்கள் முழுவதும் உள்ள பல செயல்பாடுகளைத் தர நிலைப் படுத்தவும் நெறிமுறைப்படுத்தவும் துறைமுகங்கள், கப்பல் போக்குவரத்து மற்றும் நீர்வழிகள் துறை அமைச்சகம் (MoPSW) ஆனது, 'ஒரு நாடு - ஒரு துறைமுகம் என்ற செயல்முறையினை (ONOP)' அறிமுகப்படுத்தியது.
- 2023-24 ஆம் நிதியாண்டிற்கான தளவாடத் துறைமுகச் செயல்திறன் குறியீடு (LPPI) ஆனது சமீபத்தில் வெளியிடப்பட்டது.
- இந்தியாவின் கடல்சார் பரவலை விரிவுப்படுத்துவதன் மூலம் உலகளாவிய அளவில் வர்த்தகத்தினை வலுப்படுத்துவதற்கும், ஒரு உலகளாவிய வர்த்தகத் தகவமைப்பினை மேம்படுத்துவதற்கும் என பாரத் உலகளாவியத் துறைமுகக் கூட்டமைப்பு தொடங்கப் பட்டது.
- வர்த்தகச் செயல்முறைகளை நெறிப்படுத்துவதற்கும், அதிகாரத்துவம் சார்ந்த அதிகப் படியான சில பணி நீக்கங்களைக் குறைப்பதற்கும் மற்றும் அனுமதி பெறும் பல்வேறு செயல்முறைகளை விரைவுப்படுத்துவதற்கும் என MAITRI செயலி (சர்வதேச வர்த்தகம் மற்றும் ஒழுங்குமுறை இடைமுகத்திற்கான முதன்மைச் செயலி) அறிமுகப்படுத்தப் பட்டது.

## பதிலீட்டு வழித் தலைமைத்துவம்

- பஞ்சாயத்து ராஜ் அமைச்சகத்தினால் (MoPR) அமைக்கப்பட்ட குழுவானது, நிரூபிக்கப் பட்ட பதிலீட்டு வழித் தலைமைத்துவ வழக்குகளில் "மிகப்பெரியத் தண்டனைகளை" பரிந்துரைத்துள்ளது.
- நாடு முழுவதும் உள்ள கிராமப் பஞ்சாயத்துகளில் நிலவும் 'பிரதான் பதி', 'சர்பஞ்ச் பதி' அல்லது 'முக்கிய பதி' போன்ற நடைமுறைகளைக் கட்டுப்படுத்துவதே இதன் முக்கிய நோக்கமாகும்.
- இதில் பரிந்துரைக்கப்பட்ட பிற முன்னெடுப்புகள்:
    - கேரளா போன்று சில பஞ்சாயத்து துறைக் குழுக்கள் மற்றும் மன்ற அளவிலான குழுக்களில் பிரத்தியேக பாலினம் சார் ஒதுக்கீடுகள்;
    - பிரதான் பதி எதிர்ப்பு சாம்பியன்களுக்கான வருடாந்திர விருது;
    - மகளிர் குறைதீர்ப்பாளர்களை நியமித்தல்;
    - கிராம சபைகளில் மகளிர் பிரதான்களின் பொதுவெளி பதவியேற்பு;
    - பெண் பஞ்சாயத்துத் தலைவர்களின் கூட்டமைப்பை உருவாக்குதல்; மற்றும்
    - தலைமைத்துவப் பயிற்சி, சட்ட ஆலோசனை மற்றும் ஆதரவு வலையமைப்புகள் ஆகியவற்றுக்கான மையங்களாகச் செயல்படும் வகை பாலின வள மையங்களை அமைத்தல்.
- இந்தியாவில் கிராமப் பஞ்சாயத்து (ஒரு கிராம அளவில்), பஞ்சாயத்து சமிதி (தொகுதி மட்டத்தில்) மற்றும் ஜில்லா பரிஷத் (மாவட்ட அளவில்) போன்ற மூன்று நிலைகளிலும் 32.29 லட்சம் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளுடன் சுமார் 2.63 லட்சம் பஞ்சாயத்துகள் உள்ளன.
- இதில் 15.03 லட்சம் (46.6 சதவீதம்) பேர் பெண்கள் ஆவர்.

## இந்தியச் சுற்றுச்சூழல் நிலை குறித்த அறிக்கை 2025

- அறிவியல் மற்றும் சுற்றுச்சூழல் மையம் (CSE) மற்றும் டவுன் டு எர்த் (DTE) இதழ் ஆனது 2025 ஆம் ஆண்டு இந்தியச் சுற்றுச்சூழல் நிலை குறித்த அறிக்கையினை வெளியிட்டு உள்ளது.
- உண்மையில், 2024 ஆம் ஆண்டில் மிகச் சராசரியாக உலகத்தின் வெப்பநிலையானது தொழில்துறைக்கு முந்தைய சகாப்தத்தில் (1850-1900) பதிவான சராசரியை விட 1.60°C அதிகமாக பதிவானதுடன் இதுவரை பதிவு செய்யப்பட்ட மிக வெப்பமான ஆண்டாக இருந்தது.
- முந்தைய ஒரு இரண்டு ஆண்டுகளுடன் ஒப்பிடும் போது, 2024 ஆம் ஆண்டில் இந்தியா அவ்வப்போது மற்றும் தீவிரமான வானிலை நிகழ்வுகளை எதிர்கொண்டது.
- 2024 ஆம் ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களில், 274 நாட்களுள் 255 நாட்களில் இந்தியா தீவிர வானிலை நிகழ்வுகளை எதிர்கொண்டது ஆனால் 2023 ஆம் ஆண்டில் இதே ஒரு காலக் கட்டத்தில் 235 நாட்களும், 2022 ஆம் ஆண்டில் 241 நாட்களும் மிகக் கடுமையான வானிலை நிகழ்வுகளை எதிர்கொண்டன.
- இந்த நிகழ்வுகள் ஆனது வேளாண்மையினைக் கடுமையாகப் பாதித்தன என்பதோடு 2024 ஆம் ஆண்டில் 3.2 மில்லியன் ஹெக்டேர் பயிர் நிலங்கள் பாதிக்கப் பட்டன என்ற ஒரு நிலையில் இது 2022 ஆம் ஆண்டில் இருந்ததை விட 74 சதவீதம் அதிகமாகும்.

## IRCTC மற்றும் IRFC - நவரத்னா அந்தஸ்து

- இந்திய இரயில்வே உணவு வழங்கீடு மற்றும் சுற்றுலாக் கழகம் (IRCTC) மற்றும் இந்திய இரயில்வே நிதிக் கழகம் (IRFC) ஆகியவை முறையே நாட்டின் 25வது மற்றும் 26வது நவரத்னா நிறுவனங்களாக மாறியுள்ளன.
- இந்திய இரயில்வே நிர்வாகத்தின் பட்டியலிடப்பட்ட ஏழு மத்தியப் பொதுத்துறை நிறுவனங்களும் (CPSEs) தற்போது நவரத்னா நிறுவன அந்தஸ்தைப் பெற்றுள்ளன.
- இந்திய இரயில்வே நிர்வாகத்தில் மொத்தம் 12 CPSE நிறுவனங்கள் உள்ளன.

## விவசாயிகளின் பங்கு குறித்த இந்திய அளவிலானக் கணக்கெடுப்பு

- இந்திய ரிசர்வ் வங்கியின் (RBI) அதிகாரிகளால் இந்த இந்திய அளவிலான கணக்கெடுப்பு நடத்தப்பட்டது.
- விவசாயிகள், முக்கிய ராபி பருவப் பயிர்களுக்கான நுகர்வோர் விலையில் 40 முதல் 67 சதவீதம் வரையிலான பங்கைப் பெற்றனர்.
- கோதுமை விவசாயிகள், நுகர்வோர் விலையில் 67 சதவீதப் பங்கைப் பெற்றுள்ளதுடன் மிகப்பெரிய பயனாளிகளாக உருவெடுத்துள்ளனர்.
- அரிசி விவசாயிகள், சில்லறை விலையில் 52 சதவீத பங்கைப் பெற்றனர்.
- விரைவில் கெட்டுப் போகும்/ அழுகக் கூடியப் பொருட்களின் (பழங்கள் மற்றும் காய்கறிகள்) விலையில் விவசாயிகளின் பங்கு ஆனது சுமார் 40-63 சதவீதம் என மதிப்பிடப் பட்டுள்ளது.
- எண்ணெய் வித்துக்களில், 2021 ஆம் ஆண்டு அறிக்கை செய்த 55 சதவீத மதிப்பீட்டோடு ஒப்பிடும்போது, ராப்சீட் மற்றும் கடுகு (R&M) விவசாயிகளின் பங்கு 52 சதவீதமாக இருந்தது.

## சுங்க மற்றும் சரக்கு & மற்றும் சேவை வரி அதிகாரிகளின் கைது அதிகாரங்கள்

- சுங்கச் சட்டம் 1962 மற்றும் சரக்கு & சேவை வரிச் சட்டம் 2017 ஆகியவற்றின் கீழ் கைது செய்வதற்கு வேண்டி அங்கீகாரம் அளிக்கப்பட்ட அதிகாரிகளின் உரிமைகளை உச்ச நீதிமன்றம் உறுதி செய்துள்ளது.
- சுங்கச் சட்டம் மற்றும் GST சட்டத்தின் கீழ் பணியாற்றும் அதிகாரிகள் காவல்துறை அதிகாரிகள் அல்ல என்றாலும், அவர்கள் "விசாரணை, கைது, பறிமுதல், குறுக்கு விசாரணை போன்ற சில அதிகாரங்களைக் கொண்டுள்ளனர்" என்று உச்ச நீதிமன்றம் கூறியது.
- ஆனால் கைது, பரிசோதனை மற்றும் பறிமுதல் அதிகாரங்கள் ஆனது, 1973 ஆம் ஆண்டு குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின் (CrPC) கீழ் காவல்துறை அதிகாரிகள் எதிர் கொள்ளும் அதே கட்டுப்பாடுகளுக்கு கட்டுப்பட வேண்டும்.
- சுங்கச் சட்டத்தின் 104(4)வது பிரிவின் கீழ், சில தேர்ந்தெடுக்கப்பட்ட குற்றங்களானது 'பிடியாணையின்றி கைது செய்யத்தக்கக் குற்றம்' என வகைப்படுத்தப்பட்டுள்ளது.
- எனவே ஒரு சுங்க அதிகாரி (காவல் அதிகரியைப் போல) இந்தக் குற்றங்களில் ஏதேனும் ஒன்றில் சந்தேகிக்கப்பட்டால், பிடியாணை இன்றி ஒருவரைக் கைது செய்யலாம்.
- 104(5)வது பிரிவின் படி, சுங்கச் சட்டத்தின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள மற்ற அனைத்துக் குற்றங்களும் ஒபிடியாணை பெறத்தகுந்த குற்றமாக கைது செய்யப்பட முடியாதவை ஆகக் கருதப்படும் என்றும், கைது மற்றும் விசாரணை நடைபெறுவதற்கு ஒரு நீதிபதி ஒரு பிடியாணையில் கையெழுத்திட வேண்டும் என்றும் கூறுகிறது.
- இதே போல், CGST சட்டத்தின் 132வது பிரிவானது, சில பல குற்றங்களைப் பிடியாணை எதுவுமின்றி கைது செய்யத் தக்கக் குற்றம் மற்றும் பிடியாணை பெறத்தகு குற்றம் என வகைப்படுத்துகிறது என்பதோடு மேலும் இது குற்றத்தின் தீவிரத்தின் அடிப்படையில் தண்டனைகளை வழங்குகிறது.

## PM-SYM திட்டம் 2025

- பிரதான் மந்திரி ஷ்ரம் யோகி மான்தன் (PM-SYM) திட்டத்தினைச் செயல்படுத்துவதை மேம்படுத்துவதற்காக அரசாங்கம் ஆனது சில புதிய அம்சங்களை அறிமுகப்படுத்தி, பரந்த அளவிலான விழிப்புணர்வு முயற்சிகளை விரிவுபடுத்தியுள்ளது.
- PM-SYM என்பது அமைப்புசாராதத் துறையில் உள்ள தொழிலாளர்களுக்கு நிதி சார் பாதுகாப்பை வழங்குவதை முக்கிய நோக்கமாகக் கொண்ட ஒரு தன்னார்வ மற்றும் பங்களிப்பு சார் ஓய்வூதியத் திட்டமாகும்.
- இது தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை அமைச்சகத்தினால் நிர்வகிக்கப் பட்டு, இந்திய ஆயுள் காப்பீட்டு நிறுவனத்தினால் மேலாண்மை செய்யப்படுகிறது.
- இந்திய அரசானது, 1:1 பங்கு அடிப்படையில் தொழிலாளிகளின் பங்கிற்கு இணையாக பங்களிப்பை வழங்குகிறது.
- 60 வயதிற்குப் பிறகு மிகவும் குறைந்தபட்ச உறுதி செய்யப்பட்ட ஓய்வூதியம் ஆனது மாதத்திற்கு 3,000 ரூபாய் ஆகும்.
- திட்டத்தின் பயனாளி உயிரிழந்துவிட்டால், மனைவி/கணவர் ஓய்வூதியத் தொகையில் 50% தொகையினைக் குடும்ப ஓய்வூதியமாகப் பெறுவார்.
- குடும்ப ஓய்வூதியம் மனைவி/கணவருக்கு மட்டுமே பொருந்தும்.

## இந்தியாவில் உடல் பருமன் பாதிப்பு 2025

- லான்செட் ஆய்வு, 2050 ஆம் ஆண்டிற்குள், இந்தியாவில் 218 மில்லியன் ஆண்களும் 231 மில்லியன் பெண்களும் அதாவது நாட்டின் மக்கள் தொகையில் சுமார் மூன்றில் ஒரு பங்கினர் உடல் பருமனால் பாதிக்கப்படுவார்கள் என்று கணித்துள்ளது.
- 2021 ஆம் ஆண்டில், சீனா மற்றும் அமெரிக்காவை விட இந்தியாவில் மிக அதிக எடை அல்லது பருமனான இளையோர்கள் அதிக அளவில் இருந்தனர்.
- சீனா (சுமார் 627 மில்லியன் பாதிக்கப்பட்ட நபர்களுடன்), இந்தியா (450 மில்லியன்) மற்றும் அமெரிக்கா (214 மில்லியன்) ஆகியவை அதிக எடை மற்றும் உடல் பருமனான மக்களைக் கொண்ட மூன்று நாடுகளாகத் தொடர்ந்து இடம் பெற்றுள்ளன.

## பெண்களுக்கு ஏற்ற மாதிரி கிராமப் பஞ்சாயத்துகள்

- பஞ்சாயத்து ராஜ் துறை அமைச்சகம் ஆனது, பெண்களுக்கு ஏற்ற மாதிரி கிராமப் பஞ்சாயத்து (MWFGP) முன்னெடுப்பினைத் தொடங்கியுள்ளது.
- இது அடிமட்ட நிலையில் பெண்களின் பங்கேற்பு, அவர் பாதுகாப்பு மற்றும் அவர்களின் தலைமைத்துவத்தினை மேம்படுத்துவதற்காக வடிவமைக்கப்பட்ட பாலினம் சார்ந்த உள்ளடக்கத்தினை கொண்ட நிர்வாக முன்னெடுப்பாகும்.
- சர்வதேச மகளிர் தினத்துடன் சேர்த்து, 2025 ஆம் ஆண்டு மார்ச் 08 ஆம் தேதியன்று அந்த அமைச்சகம் ஆனது, நாடு தழுவிய மகிளா கிராம சபைகளை ஏற்பாடு செய்து உள்ளது.

## விவித்தா கா அம்ரித் மஹோத்சவ்

- "விவித்தா கா அம்ரித் மஹோத்சவ்" என்பது பல்வேறு பிராந்தியங்களின் மிகவும் தனித்துவமான மரபுகளை காட்சிப்படுத்தச் செய்வதன் மூலம் இந்தியாவின் பன்முகத் தன்மை கொண்ட பாரம்பரியத்தைக் கொண்டாடும் ஒரு வருடாந்திர கலாச்சார விழா ஆகும்.
- கடந்த ஆண்டு நடைபெற்ற முதல் விழாவானது, வடகிழக்கு இந்தியாவை ஒரு மையக் கருவாகக் கொண்டதாகும்.
- இரண்டாவது விழாவானது, லட்சத்தீவு மற்றும் புதுச்சேரி உட்பட கர்நாடகா, கேரளா, தமிழ்நாடு, தெலுங்கானா மற்றும் ஆந்திரா ஆகிய ஐந்து மாநிலங்களை உள்ளடக்கிய தென்னிந்தியாவை காட்சிப்படுத்துகிறது.

## இராஷ்ட்ரிய கர்மயோகி ஜன் சேவா திட்டம்

- மத்திய அரசானது, இராஷ்ட்ரிய கர்மயோகி ஜன் சேவா என்ற திட்டத்தின் முதல் பணித் தொகுதியைத் தொடங்கியுள்ளது.
- ஒரு தீர்வு சார்ந்த, மிகக் கனிவான மற்றும் குடிமக்களை மையமாகக் கொண்ட அரசு அதிகாரிகளிடையே மிகவும் வலுவான சேவா பவ் (சேவை மனப்பான்மை) உணர்வை வளர்ப்பதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்தத் திட்டத்தில் நான்கு குறுகிய காலப் பயிற்சிச் சுற்றுகள் (ஒவ்வொன்றும் மிகவும் தோராயமாக 1.5 மணி நேரம்) உள்ளன.

## GSI மையத்தின் புதிய முன்னெடுப்புகள்

- இந்தியப் புவியியல் ஆய்வு மையம் (GSI) ஆனது, சமீபத்தில் அதன் 175வது நிறுவன தினத்தைக் கொண்டாடியது.
- இந்த நிகழ்வின் போது, களம் சார் தரவு கையகப்படுத்துதல் செயலி மற்றும் 'புவிராசத்' எனப்படும் புவி சார்ந்த பாரம்பரியச் செயலி என இரண்டு குறிப்பிடத்தக்க எண்ணிம முயற்சிகளை அறிமுகப் படுத்தியுள்ளது.
- இந்த முன்னெடுப்புகள் ஆனது, தரவுச் சேகரிப்பு செயல்திறனை மேம்படுத்துவதையும் இந்தியாவின் வளமான புவி சார் பாரம்பரியம் குறித்ததொரு பெரும் விழிப்புணர்வை ஊக்குவிப்பதையும் நோக்கமாகக் கொண்டுள்ளன.

## பசு ஔஷதி முன்னெடுப்பு

- நம் நாடு முழுவதும் ஒன்றிய அரசாங்கம் ஆனது, "பசு ஔஷதி" கடைகளைத் திறக்க உள்ளது.
- கால்நடை வளர்ப்பு மற்றும் பால் பண்ணையில் ஈடுபட்டுள்ள மக்களுக்கு மிக மலிவு விலையில் பொது கால்நடை மருந்துகளை வழங்குவதை இது நோக்கமாகக் கொண்டு உள்ளது.

## A Million Women Arise முன்னெடுப்பு

- நிதி ஆயோக் மற்றும் இந்திய சிறிய மற்றும் நடுத்தர நிறுவனங்கள் (SME) மன்றம் ஆனது, இந்தியா முழுவதும் உள்ள பெண் தொழில்முனைவோருக்கு நன்கு அதிகாரம் அளிப்பதற்காக "A Million Women Arise" என்ற கூட்டு முன்னெடுப்பினைத் தொடங்கி உள்ளன.
- நிதி, சந்தைகள், இணக்க ஆதரவு, திறன் மேம்பாடு, வழிகாட்டுதல் மற்றும் வலை ஆக்கம் ஆகியவற்றை அணுகுவதன் மூலம் ஒரு ஒருங்கிணைந்த ஆதரவு அமைப்பை உருவாக்குவதே இதன் நோக்கமாகும்.
- இந்தியாவில் பதிவு செய்யப்பட்ட ஆறு கோடி குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில்துறை நிறுவனங்களில் 35% பெண்களுக்குச் சொந்தமான நிறுவனங்களாகும்.

## NAMAN திட்டம்

- HDFC வங்கி, இந்திய இராணுவம் மற்றும் CSC அகாடமி ஆகியவை NAMAN திட்டத்தை விரிவுபடுத்த உள்ளன.
- படை வீரர்களை நன்கு கௌரவிக்கும் இந்த முன்னெடுப்பானது, தற்போது 26 இந்திய இராணுவ வீரர்களின் இயக்குநரகங்களில் (DIAV) செயல்படுத்தப்பட உள்ளது.
- NAMAN திட்டமானது இராணுவ வீரர்கள், அவர்களது குடும்பங்கள் மற்றும் அவர்களது நெருங்கிய உறவினர்களுக்கான ஆதரவு மற்றும் சேவைகளை வழங்குவதற்காக என வடிவமைக்கப்பட்டுள்ளது.

## கப்பல் சரக்குப் போக்குவரத்து மசோதா 2025

- மக்களவையானது, 2024 ஆம் ஆண்டு கப்பல் சரக்குப் போக்குவரத்து மசோதாவினை நிறைவேற்றியுள்ளது.

- இது காலனித்துவ கால 1856 ஆம் ஆண்டு சட்டத்திற்கு மாற்றாக, கப்பல் போக்குவரத்து ஆவணங்களுக்கான சட்டப்பூர்வக் கட்டமைப்பைப் புதுப்பித்து எளிமைப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- சீர்தர ரத்து மற்றும் சேமிப்பு விதியைச் சேர்ப்பதன் மூலம் அச்சட்டத்தினைச் செயல் படுத்துவதை எளிதாக்குவதற்கான பல வழிமுறைகளை வெளியிடுவதற்கென மத்திய அரசிற்கு இது அதிகாரம் அளிக்கிறது.
- கப்பல் ஏற்றுமதி ஒப்பந்தச் சீட்டு என்பது ஒரு சரக்குப் போக்குவரத்து நிறுவனங்கள், ஒரு கப்பல் சார் சரக்கு ஏற்றுமதி நிறுவனங்களுக்கு வழங்கப்படும் ஒரு ஆவணத்தைக் குறிக்கிறது.
- இது கொண்டு செல்லப்படும் பொருட்களின் வகை, அளவு, நிலை மற்றும் சேருமிடம் போன்ற விவரங்களைக் கொண்டுள்ளது.

## இந்தியாவில் நீர்ப்பள்ள அரிப்பு 2025

- இந்தியாவின் நிலத் தரமிழப்பு நடுநிலையாக்கல் திட்டத்தின் முன்னேற்றத்திற்கு நீர்ப் பள்ளத்தாக்கு அரிப்பு ஆனது ஒரு கடுமையான தடையாக உள்ளது.
- 2030 ஆம் ஆண்டிற்குள் ஐக்கிய நாடுகள் சபையின் நிலத் தரமிழப்புச் செயல்பாட்டு நிரலைப் பூர்த்தி செய்வதற்கு 77 மாவட்டங்களில் நிலவும் நீர்ப் பள்ள அரிப்பினைத் தடுப்பதற்கு இந்தியா நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.
- 70 சதவீத அரிப்பானது, கிழக்கு மற்றும் தென்னிந்தியாவில் பதிவாகியுள்ளது.
- UNCCD கூற்றுப் படி, உலகின் மொத்தப் பரப்பளவில் சுமார் 20 முதல் 40 சதவீதம் ஆனது நிலத் தரமிழப்பினால் பாதிக்கப்படுகிறது.

## “75/25” முன்னெடுப்பு குறித்த புதிய தகவல்கள்

- 2025 ஆம் ஆண்டு மார்ச் 05 ஆம் தேதி நிலவரப்படி, மொத்தம் 42.01 மில்லியன் நபர்கள் உயர் இரத்த அழுத்தத்திற்கு சிகிச்சை பெற்றுள்ளனர்.
- சுமார் 25.27 மில்லியன் பேர் நீரிழிவு நோய்க்குச் சிகிச்சை பெற்றுள்ளதுடன், அதற்கான இலக்கில் 89.7 சதவீதம் எட்டப்பட்டுள்ளது.
- 2023 ஆம் ஆண்டு மே 17 ஆம் தேதியன்று கொண்டாடப் பட்ட உலக உயர் இரத்த அழுத்த தினத்தன்று அரசாங்கம் "75/25" முன்னெடுப்பினை தொடங்கியது.
- 2025 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்திற்குள், உயர் இரத்த அழுத்தம் மற்றும் நீரிழிவு ஆகிய நோயால் பாதிக்கப்பட்ட 75 மில்லியன் நபர்களுக்கு தரப்படுத்தப்பட்டச் சிகிச்சையை வழங்குவதே இதன் நோக்கமாகும்.

## எண்ணெய் வயல்கள் (ஒழுங்குமுறை மற்றும் மேம்பாடு) திருத்த மசோதா, 2024

- மக்களவையானது 2024 ஆம் ஆண்டு எண்ணெய் வயல்கள்/கிணறுகள் (ஒழுங்குமுறை மற்றும் மேம்பாடு) திருத்த மசோதாவினை நிறைவேற்றியுள்ளது.
- இந்த மசோதாவானது 2018 ஆம் ஆண்டு எண்ணெய் வயல்கள் (ஒழுங்குமுறை மற்றும் மேம்பாடு) சட்டத்தினை புதுப்பிக்க முயல்கிறது.

- நிலக்கரி, லிக்னைட் மற்றும் ஹீலியம் ஆகியவை, 1957 ஆம் ஆண்டு சுரங்கங்கள் மற்றும் கனிமங்கள் (மேம்பாடு மற்றும் ஒழுங்குமுறை) சட்டத்தின் கீழ் நிர்வகிக்கப் படுவதால் அவை இந்த மசோதாவில் இருந்து வெளிப்படையாக விலக்கப்படுகின்றன.
- இந்த மசோதாவானது, 'சுரங்கக் குத்தகைகள்' என்ற சொல்லினைத் தற்போது ஆய்வு, உற்பத்தி மற்றும் அகற்றல் நடவடிக்கைகளை நிர்வகிக்கச் செய்கின்ற 'பெட்ரோலியக் குத்தகைகள்' என்ற சொல்லாக மாற்றுகிறது.

## PM-YUVA 3.0

- மூன்றாவது இளம் எழுத்தாளர்களுக்கு வழிகாட்டுவதற்கான பிரதமரின் திட்டத்தினை (PM-YUVA 3.0) கல்வி அமைச்சகம் தொடங்கியுள்ளது.
- இந்தியாவில் வாசிப்பு, எழுத்து மற்றும் புத்தகக் கலாச்சாரத்தினை ஊக்குவிப்பதற்கு 30 வயதிற்குட்பட்ட இளம் எழுத்தாளர்களுக்குப் பயிற்சி அளிப்பதே இந்த மிகப்பெரும் முன்னெடுப்பின் நோக்கமாகும்.
- இந்தத் திட்டமானது, இந்திய இலக்கியத்தினை உலகளாவியத் தளத்தில் பெருமளவு மேம்படுத்துவதற்கான வழிகாட்டுதல் மற்றும் வெளியீட்டு வாய்ப்புகளை வழங்கச் செய்கிறது.
- PM-YUVA 3.0 ஆனது, அதன் முந்தையத் திட்டங்களில் 22 இந்திய மொழிகள் மற்றும் ஆங்கிலத்தில் இளம் எழுத்தாளர்களின் பங்கேற்பை அடிப்படையாகக் கொண்டது.

## நீர்வளம் குறித்த பாராளுமன்றக் குழு

- நீர் வளங்களுக்கான நிலைக் குழுவானது, சமீபத்தில் இந்தியப் பாராளுமன்றத்தில் தனது அறிக்கையை தாக்கல் செய்துள்ளது.
- ஒதுக்கப்பட்ட நிதியில் சுமார் 40% ஆனது, செலவிடப்படாமல் உள்ளது என்பதோடு இது நிதி ஒதுக்கீடு மற்றும் திட்ட அமலாக்கத்தில் தாமதங்களை எடுத்துக் காட்டுகிறது.
- இத்துறைக்காக 2025-26 ஆம் ஆண்டிற்காக ஒதுக்கப்பட்ட மொத்த நிதியானது 25,276.83 கோடியாக உயர்த்தப்பட்டுள்ளது என்பதோடு இது முந்தைய ஆண்டில் ஒதுக்கப்பட்ட 21,323.10 கோடி ரூபாயிலிருந்து 18.54% அதிகமாகும்.
- நிலத்தடி நீர் மேலாண்மை மற்றும் ஒழுங்குமுறைக்கான ஒதுக்கீடு ஆனது சுமார் 56.61% அதிகரித்து, 2025-26 ஆம் ஆண்டில் 509 கோடி ரூபாயாக உள்ளது.
- நதிப் படுகை மேலாண்மைத் திட்டத்திற்கான நிதியும் 56.98% அதிகரித்து, 2025-26 ஆம் ஆண்டில் 243 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.
- ஆனால் தேசிய நீரியல் திட்டத்திற்கான (NHP) நிதி 98% குறைக்கப்பட்டது என்ற ஒரு நிலையில் 2024-25 ஆம் ஆண்டில் சுமார் 661.20 கோடி ரூபாயாக இருந்த இதற்கான நிதி ஒதுக்கீடு 2025-26 ஆம் ஆண்டில் 13 கோடி ரூபாயாகக் குறைந்தது.
- மழை நீர் சேகரிப்புத் திட்டப் பிரச்சாரம் ஆனது முன்னேற்றம் கண்டுள்ளது என்பதோடு மழைநீர் சேகரிப்புக்காக மாநிலங்களுக்கு நேரடி நிதி உதவி வழங்கப் படவில்லை.

## NREGA திட்டம் தொடர்பான பாராளுமன்ற நிலைக்குழு

- மிக அதிகரித்து வரும் வாழ்க்கைச் செலவினத்தினைக் கருத்தில் கொண்டு மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதித் திட்டத்தின் (MGNREGS) கீழ் ஊதியங்களை திருத்தியமைக்கப் பரிந்துரைத்துள்ளது.

- காங்கிரஸ் கட்சியினைச் சேர்ந்தப் பாராளுமன்ற உறுப்பினர் சப்தகிரி சங்கர் உலகா தலைமையிலான கிராமப்புற மேம்பாட்டுக்கான பாராளுமன்ற நிலைக் குழுவானது நாடு முழுவதும் ஒரே மாதிரியான ஊதிய விகிதங்களை நிர்ணயிக்கக் கோரியுள்ளது.
- தற்போது, நாகாலாந்து மற்றும் அருணாச்சலப் பிரதேசத்தில் ஒரு நாளைக்கு சுமார் 234 ரூபாய் என்ற வீதம் முதல் ஹரியானா மற்றும் சிக்கிம் ஆகிய சில மாநிலங்களில் 374 ரூபாய் என்ற அளவிலும் ஊதிய வழங்கீடு வேறுபடுகிறது.
- மேற்கு வங்காளம் ஆனது 2022 ஆம் ஆண்டு மார்ச் மாதத்திலிருந்து MGNREGA திட்ட நடவடிக்கைகளுக்கான நிதியினைப் பெறவில்லை.
- 2005 ஆம் ஆண்டு MGNREGA சட்டத்தின் 27வது பிரிவினைச் செயல்படுத்தி, மத்திய அரசானது அந்த நிதியை முடக்கியுள்ளது.
- இந்தப் பிரிவு ஆனது, இத்திட்டத்தினைச் செயல்படுத்துவதில் விதிகளை மீறினால் நிதி வழங்கீட்டினை நிறுத்த அனுமதிக்கிறது.

## இந்தியாவின் யுனெஸ்கோ தற்காலிகப் பட்டியல் 2025

- தற்போது ஆறு இந்தியத் தளங்களானது, யுனெஸ்கோ அமைப்பின் உலகப் பாரம்பரிய மையத்தினால் இந்தியத் தற்காலிகப் பாரம்பரியத் தளங்களின் பட்டியலில் சேர்க்கப் பட்டுள்ளன.
- இதில் தெலுங்கானா மாநிலத்தில் உள்ள முதுமால் பெருங்கற்கால நெடுங்கற்கள் மற்றும் மத்தியப் பிரதேசம் மற்றும் உத்தரப் பிரதேசம் ஆகிய மாநிலங்களில் உள்ள பண்டேலாக்களின் அரண்மனைக் கோட்டைகள் அடங்கும்.
- இந்தப் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ள பிற தளங்களில் சத்தீஸ்கரில் உள்ள கங்கர் பள்ளத்தாக்கு தேசியப் பூங்கா, பல்வேறு மாநிலங்களில் மௌரிய வழித்தடங்களில் உள்ள அசோகரின் கல்வெட்டுத் தளங்கள், பல்வேறு மாநிலங்களில் உள்ள சௌசத் யோகினி என்ற கோயில்கள் மற்றும் வட இந்தியாவின் பல்வேறு மாநிலங்களில் உள்ள குப்தர் கோயில்கள் ஆகியவை அடங்கும்.
- இவற்றுடன், தற்போது தற்காலிகப் பட்டியலில் மொத்தம் 62 இந்தியத் தளங்கள் இடம் பெற்று உள்ளன.
- தற்போது, இந்தியாவில் இருந்து மொத்தம் 43 தளங்கள் யுனெஸ்கோ அமைப்பின் இந்த உலகப் பாரம்பரிய பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளன.
- இதில் 'கலாச்சார' பிரிவில் 35 தளங்களும், 'இயற்கை' பிரிவில் ஏழு தளங்களும் மற்றும் 'கலப்பு' பிரிவில் ஒரு தளமும் அடங்கும்.

## ரைசினா பேச்சுவார்த்தை 2025

- வருடாந்திர ரைசினா பேச்சுவார்த்தையின் 10வது பதிப்பானது புது டெல்லியில் தொடங்கப் பட்டுள்ளது.
- 2025 ஆம் ஆண்டு ரைசினா பேச்சுவார்த்தையின் மையக் கருத்துரு, "Kālachakra – People, Peace and Planet" என்பதாகும்.
- இந்த முக்கியப் பேச்சுவார்த்தையில் சுமார் 125 நாடுகளைச் சேர்ந்த பங்கேற்பாளர்கள் பங்கேற்கின்றனர்.

- இது 2016 ஆம் ஆண்டில் "முதன்மையான இந்தியச் சர்வதேசப் பேச்சுவார்த்தையாக" வெளியுறவு அமைச்சகத்தினால் தொடங்கப்பட்டது.
- ரைசினா பேச்சுவார்த்தையானது உலகம் முழுவதிலுமிருந்துப் பல தலைவர்களையும் சிந்தனையாளர்களையும் ஒன்றிணைப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

## சுகாதாரத்திற்கான பாராளுமன்ற நிலைக்குழு

- 1940 ஆம் ஆண்டு மருந்துகள் மற்றும் அழகுசாதனப் பொருட்கள் சட்டத்திற்கு இணங்கி, ஒரு சுயாதீன மருந்துக் கட்டுப்பாட்டு அமைப்பின் கீழ், அனைத்து ஆயுஷ் மருந்து தொடர்பான தரநிலை நிர்ணய செயல்முறைகளையும் ஒருங்கிணைக்க இந்தக் குழு பரிந்துரைத்துள்ளது.
- ஆயுஷ் முன்னெடுப்புகளின் பரவலை அதிகரிக்க வேண்டிய அவசியத்தினை இக்குழு அடையாளம் கண்டுள்ளது.
- இந்தியப் புலம்பெயர்ந்தோர் மற்றும் உள்நாட்டு மக்களிடையே இந்த ஆயுஷ் மருத்துவ முறையினை ஊக்குவிப்பதற்காக வேண்டி முதல் முறையாக உலக நாடுகளுடனான ஒத்துழைப்பை இது ஊக்குவிக்கிறது.

## அஸ்த்ரா BVRAAM

- ஒடிசா கடற்கரையில் தேஜாஸ் AF MK 1 எனப்படும் இலகுரகப் போர் விமானத்திலிருந்து அஸ்த்ரா எனப்படும் புலனாகும் வரம்பிற்கு அப்பால் உள்ள இலக்குகளைத் தாக்கும் ஒரு திறன் கொண்ட வான்வழி எறிகணையினை (BVRAAM) இந்தியா வெற்றிகரமாகப் பரிசோதித்துள்ளது.
- இந்த எறிகணையானது பல்வேறு தொலைவு வரம்புகள் மற்றும் உயரங்களில் உள்ள இலக்குகளை அழிக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.

## சமையல் எண்ணெய் பயன்பாட்டைக் குறைத்தல்

- பிரதான் மந்திரி போஷன் சக்தி நிர்மாண் (PM-POSHAN) திட்டத்தின் கீழ், அனைத்து அரசு மற்றும் உதவி பெறும் பள்ளிகளிலும் மேற்கொள்ளப் படுகின்ற மதிய உணவுத் திட்டத்தில் சமையல் எண்ணெயின் பயன்பாட்டை 10% குறைக்குமாறு மத்திய அரசு மாநிலங்களுக்கு அறிவுறுத்தியுள்ளது.
- மிகவும் புதுமையான வழிகள் மூலம் அன்றாட வாழ்க்கையில் சமையல் எண்ணெயின் பயன்பாட்டை 10% குறைப்பது குறித்த ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.
- 2022 ஆம் ஆண்டில் 5 முதல் 19 வயதிற்குட்பட்ட 12.5 மில்லியன் குழந்தைகள் அதிக உடல் எடையுடன் இருந்தனர் என்பதோடு இது 1990 ஆம் ஆண்டில் சுமார் 0.4 மில்லியன் ஆக இருந்தது.
- ஆக நகர்ப்புறங்களில் இந்த எண்ணிக்கையானது பெண் குழந்தைகளை விட ஆண் குழந்தைகளில் அதிகமாக இருந்தது.
- PM-POSHAN என்பது மாணவர்களுக்கு சத்தான உணவை வழங்குவதை நோக்கமாகக் கொண்ட மத்திய அரசின் நிதியுதவி பெறும் திட்டமாகும்.
- இந்த முன்னெடுப்பானது, மழலையர் பள்ளிகள் மற்றும் அரசு மற்றும் உதவி பெறும் பள்ளிகளில் 1 முதல் 8 ஆம் வகுப்பு வரை சேரும் அனைத்து குழந்தைகளுக்கும் பயன் அளிக்கிறது.

## NIDAR சவால்

- மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சகமானது, ஆளில்லா வாகனங்கள் கூட்டமைப்பு இந்தியா (DFI) நிறுவனத்துடன் இணைந்து, ஆளில்லா வாகனங்களின் பயன்பாடு மற்றும் ஆராய்ச்சிக்கான தேசியப் புத்தாக்க சவால் (NIDAR) என்ற ஒரு முன்னெடுப்பினை அறிமுகப்படுத்தியுள்ளது.
- இது 'SwaYaan - ஆளில்லா வாகன அமைப்புகளில் மனித வள மேம்பாட்டிற்கான திறன் மேம்பாடு' முன்னெடுப்பின் கீழ் தொடங்கப்பட்டுள்ளது.
- பாதிக்கப்பட்ட பகுதிகளில் அத்தியாவசியப் பொருட்களின் தேவையினை ஆராய்ந்து வழங்குவதன் மூலம் பேரிடர் மேலாண்மைக்குப் பங்களிக்கும் வகையில் ஆளில்லா வாகனங்கள் வடிவமைக்கப்பட்டுள்ளன.

## சன்சத் பாஷினி முன்னெடுப்பு

- மக்களவை செயலகம் மற்றும் MeitY ஆகியவை சன்சத் பாஷினி முன்னெடுப்பினை உருவாக்குவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளன.
- பன்மொழி ஆதரவை மேம்படுத்துவதற்கும், பாராளுமன்ற செயல்பாடுகளை மிகவும் ஒழுங்குமுறைப் படுத்துவதற்கும், பாராளுமன்ற விவாதங்கள் மற்றும் பதிவுகளின் மாபெரும் காப்பகங்களுக்கான அணுகலை மேம்படுத்துவதற்கும் வேண்டி அதிநவீன செயற்கை நுண்ணறிவினைப் பயன்படுத்துவதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இதன் முக்கிய விவாதங்கள், குழுக் கூட்டங்கள் மற்றும் செயல்பாட்டு நிரல் கோப்புகள் உள்ளிட்ட பாராளுமன்ற உள்ளடக்கத்தினைப் பல்வேறு பிராந்திய மொழிகளில் நிகழ் நேரத்தில் மொழிபெயர்க்க உதவும் செயற்கை நுண்ணறிவு அடிப்படையிலான மொழி பெயர்ப்பை இது கொண்டிருக்கும்.
- இது அனைத்து குடிமக்களும் ஆவணங்களை அணுகக் கூடியதாக மாற்றும்.

## நான்கு கருத்துரு சார்ந்த மையங்கள் - தேசிய துளிமத் திட்டம்

- தேசியத் துளிமத் திட்டம் என்பது துளிமத் தொழில்நுட்பத்தில் பெருமளவு அதி நவீன முன்னேற்றங்களை மேற்கொள்ளும் ஒரு நாடு தழுவிய முன்னெடுப்பாகும்.
- இந்தத் திட்டத்தின் ஒரு பகுதியாக, 17 மாநிலங்கள் மற்றும் 2 ஒன்றியப் பிரதேசங்களில் 14 தொழில்நுட்பக் குழுக்களை ஒன்றிணைத்து நான்கு கருத்துரு சார் மையங்கள் (T-Hubs) அமைக்கப்பட்டுள்ளன.
- இந்தியாவில் உள்ள முன்னணி நிறுவனங்களில் நான்கு கருத்துரு சார் மையங்கள் நிறுவப் பட்டுள்ளன:
    - இந்திய அறிவியல் கல்வி நிறுவனம் (IISc) பெங்களூரு
    - புது டெல்லியின் தகவல் தொடர்பு மேம்பாட்டுக் கல்வி மையத்துடன் இணைந்து சென்னையின் இந்தியத் தொழில்நுட்பக் கல்விக் கழகம் (IIT)
    - இந்தியத் தொழில்நுட்பக் கல்விக் கழகம் (IIT), மும்பை
    - இந்தியத் தொழில்நுட்பக் கல்விக் கழகம் (IIT), புது டெல்லி.

## அஸ்வினி ரேடார்

- பாதுகாப்புத் துறை அமைச்சகமானது, காஜியாபாத்தில் உள்ள பாரத் எலக்ட்ரானிக்ஸ் லிமிடெட் (BEL) நிறுவனத்துடன் இணைந்து LLTR எனப்படும் தாழ் மட்டத்திலான ரேடார் கருவியினை (அஸ்வினி) கொள்முதல் செய்வதற்காக ஒரு மூலதனக் கையகப்படுத்தல் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது.
- LLTR (அஸ்வினி) என்பது அதிநவீன திட-நிலை தொழில்நுட்பத்தினை அடிப்படையாகக் கொண்ட ஒரு செயலில் உள்ள மின்னணு முறையில் ஊடுகதிர் ஆய்வு செய்யப்பட்ட நிலை சார் தொகுப்பு ரேடார் ஆகும்.

## சுதேச தரிசனத் திட்டம் 2.0

- மத்திய அரசானது பல்வேறு திட்டங்களின் கீழ், நாடு முழுவதும் மொத்தம் 116 புதிய சுற்றுலாத் தலங்களை அனுமதித்துள்ளது.
- இவற்றில் 34 தலங்கள் ஆனது, சுதேச தரிசனம் 2.0 திட்டத்தின் கீழ் அனுமதிக்கப் பட்டு உள்ள நிலையில் அவற்றில் 42 தலங்கள் ஆனது சுதேச தரிசனத் திட்டத்தின் துணைத் திட்டமான "சவால் அடிப்படையிலான இலக்கு மேம்பாடு (CBDD)" என்ற திட்டத்தின் கீழ் அடையாளம் காணப்பட்டுள்ளன.
- 40 தலங்கள் ஆனது, மாநிலங்களுக்கான மூலதன முதலீட்டிற்கான சிறப்பு உதவி (SASCI) திட்டத்தின் கீழ் உருவாக்கப்படும்.
- சுதேச தரிசனத் திட்டம் ஆனது, மத்திய சுற்றுலாத் துறை அமைச்சகத்தின் ஒரு மிகவும் முதன்மை முன்னெடுப்பாகும்.
- இது கருத்துரு அடிப்படையிலான தலச் சுற்றுகளில் கவனம் செலுத்துவதன் மூலமும், உள்கட்டமைப்பு மேம்பாட்டிற்காக மாநில அரசுக்கு நிதி உதவி வழங்குவதன் மூலமும் நிலையான மற்றும் மிகவும் பொறுப்பு மிக்கச் சுற்றுலா தலங்களை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- நிலையான சுற்றுலாத் தலங்களை உருவாக்கும் நோக்கத்துடன் இந்தத் திட்டம் ஆனது சுதேச தரிசனம் 2.0 (SD2.0) ஆக புதுப்பிக்கப்பட்டுள்ளது.

## பால் பொருள் உற்பத்தித் துறை மேம்பாட்டிற்கான திருத்தப்பட்ட தேசிய திட்டம்

- திருத்தப்பட்ட தேசிய பால் பொருட்கள் உற்பத்தித் துறை மேம்பாட்டுத் திட்டத்திற்கு (NPDD) மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.
- இது இந்தியாவின் பால் பொருட்கள் உற்பத்தித் துறையை நவீனமயமாக்குவதையும் அதன் நீண்டகால வளர்ச்சியை உறுதி செய்வதையும் நோக்கமாகக் கொண்டதாகும்.
- மத்திய அரசின் முன்னெடுப்பாக வகைப்படுத்தப்பட்ட இந்தத் திட்டத்திற்கு கூடுதலாக 1,000 கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

## உச்ச நீதிமன்றம் - இந்தியாவில் உணவுப் பாதுகாப்புச் சமத்துவமின்மை

- சில மாநிலங்களின் மக்கள் தொகையில் சுமார் 70% பேர் வறுமைக் கோட்டுக்குக் கீழே வாழும் நிலையில், அதிக மேம்பாட்டு விகிதம் மற்றும் தனிநபர் வருமானம் என்ற சில கூற்றுக்கள் குறித்து உச்ச நீதிமன்றம் கேள்வி எழுப்பியுள்ளது.

- அரசியலமைப்பின் 21வது சரத்தின் கீழ் ஏழ்மை நிலையில் உள்ள மக்களின் ஒரு அடிப்படை வாழ்க்கை உரிமையின் அடிப்படையில் ஒரு நாளைக்கு என்று குறைந்தது இரண்டு வேளை உணவைப் பெற ஒரு உரிமை உண்டு என்று உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பில் கூறப்பட்டுள்ளது.
- தேசிய உணவுப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் உணவு தானியங்களை வழங்க மத்திய அரசு கடமைப்பட்டுள்ளது.
- இந்தச் சட்டத்தின் கீழ், உணவு தானிய வழங்கீடு ஆனது 81.35% சதவீதமாக இருந்தது.
- அங்கன்வாடி திட்டத்தின் கீழ் சுமார் 11 கோடி மக்களுக்கு கூடுதல் உதவிகள் வழங்கப் படுகின்றன என்பதோடு இது மேலும் 22 கோடி மக்களை உள்ளடக்குகிறது.

## சமர்த் காப்பு மையத் திட்டம்

- தகவல் தொடர்பு மேம்பாட்டு மையம் (C-DoT) "சமர்த்" என்று பெயரிடப்பட்ட காப்பு மையத் திட்டத்தின் முதல் குழுவைத் தொடங்க உள்ளது.
- இது இந்தியாவின் தொலைத்தொடர்பு மற்றும் தகவல் தொழில்நுட்பத் துறைகளில் புதுமைகளை வளர்ப்பதிலும் தொழில்நுட்ப முன்னேற்றங்களை ஊக்குவிப்பதிலும் கவனம் செலுத்துகிறது.
- இது தொலைத்தொடர்பு மென்பொருள் செயலிகள், இணையவெளிப் பாதுகாப்பு, 5G/6G, AI, IoT மற்றும் துளிமத் தொழில்நுட்பங்களில் புத்தொழில் நிறுவனங்கள் மற்றும் கண்டுபிடிப்பாளர்களை ஆதரிக்கும்.

## வணிகத்திற்கான பாராளுமன்ற நிலைக் குழு

- வர்த்தகத்திற்கான பாராளுமன்ற நிலைக் குழுவானது, இந்திய அரசாங்கத்திற்கு தனது பரிந்துரையை வழங்கியுள்ளது.
- தற்போதைய உற்பத்தி ஊக்குவிப்புத் (PLI) திட்டத்தின் கால வரம்பினையும் அதன் மிக முக்கிய நோக்கத்தையும் மேலும் பல துறைகளுக்கு நீட்டிக்கவும், "நிர்வாக ரீதியான தாமதங்கள்" மற்றும் "விதிகளின் இணக்க நெருக்கடிகளைக்" குறைப்பதன் மூலம் அதன் செயல்திறனை மேம்படுத்தவும் கோரியுள்ளது.
- மேலும், இந்தத் திட்டத்தின் பரவல் எல்லையினை இரசாயனங்கள், தோல் பொருட்கள், ஆடைகள் மற்றும் கைவினைப் பொருட்கள் போன்ற தொழிலாளர் வளம் அதிகம் தேவைப்படும் துறைகளை உள்ளடக்கியதாக விரிவுபடுத்தவும் பரிந்துரைத்துள்ளது.
- தற்போது, PLI திட்டம் ஆனது சுமார் 1.97 டிரில்லியன் டாலர் ஒதுக்கீட்டுடன் கைபேசிகள், ஆளில்லா விமானங்கள், மிகப் பெரிய மின் துறைப் பொருட்கள், தொலைத்தொடர்பு, ஜவுளி, வாகனங்கள், சிறப்பு எஃகு மற்றும் மருந்துப் பொருட்கள் உள்ளிட்ட சுமார் 14 துறைகளை உள்ளடக்கியது.
- உள்நாட்டு உற்பத்தியை வலுப்படுத்துவதற்காக என பாதுகாப்பு உற்பத்தி, விண்வெளி மற்றும் கப்பல் கொள்கலன்கள் போன்ற கூடுதல் துறைகளுக்கு இந்தத் திட்டத்தை விரிவுபடுத்தவும் குழு பரிந்துரைத்துள்ளது.

## படிவம் 17C வெளியீடு - இந்தியத் தேர்தல் ஆணையம்

- ❖ அங்கீகரிக்கப்பட்ட வாக்காளர் வாக்குப்பதிவு தகவல்களை உடனடியாக வெளியிடக் கோரும் மனுதாரரர்களுடன் தொடர்பு கொள்ள இந்தியத் தேர்தல் ஆணையம் (ECI) முன்வந்துள்ளது.
- ❖ 17C படிவத்தினை வெளியிட ECI மறுப்பதை எதிர்த்து உச்ச நீதிமன்றத்தில் ஒரு வழக்கு தொடரப் பட்டது.
- ❖ 17C படிவம் என்பது ஒவ்வொரு வாக்குச் சாவடியிலும் பதிவான வாக்குகளைப் பதிவு செய்யும் ஒரு முக்கியத் தேர்தல் ஆவணமாகும்.
- ❖ இதன் முதல் பகுதியில் (PART I) ஒரு வாக்குச் சாவடிக்கு ஒதுக்கப்பட்ட வாக்காளர்களின் எண்ணிக்கை, பதிவு செய்யப்பட்ட வாக்காளர்கள், வாக்களிக்காத சில வாக்காளர்கள் மற்றும் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களில் பதிவு செய்யப்பட்ட ஒட்டு மொத்த வாக்குகள் போன்ற விவரங்கள் உள்ளன.
- ❖ வேட்பாளர் வாரியான வாக்கு எண்ணிக்கையை உள்ளடக்கிய II பகுதியானது, தேர்தல் அதிகாரியால் சரி பார்க்கப்படுவதற்கு மிக முன்னதாக வாக்குச் சாவடி முகவர்களால் கையொப்பமிடப்படுகிறது.
- ❖ வாக்குச் சாவடி முகவர்கள், வாக்குச் சாவடிச் செயல்பாட்டின் முடிவில் 17C படிவத்தின் நகலைப் பெறுகிறார்கள், ஆனால் ECI வரலாற்றில் இதற்கு முன்னதாக அதனை இயங் கலையில் பொது மக்களின் பார்வைக்காக வழங்கியதில்லை.

## நிதி ஆயோக் அமைப்பின் காசநோய் ஒழிப்பு இலக்கு – குஜராத்

- ❖ குஜராத் மாநிலமானது, நிதி ஆயோக் அமைப்பு நிர்ணயித்த 2024 ஆம் ஆண்டிற்கான காசநோய் பதிவு இலக்கில் சுமார் 95% இலக்கினையும், அதன் சிகிச்சை இலக்கில் 90% இலக்கினையும் அடைந்துள்ளது.
- ❖ 2024 ஆம் ஆண்டில் 1,45,000 காசநோய் நோயாளிகளைக் கண்டறிந்து பதிவு செய்ய குஜராத்திற்கு இலக்கு நிர்ணயிக்கப்பட்டதோடு அந்த ஆண்டில் 1,37,929 நோயாளிகள் கண்டறியப்பட்டு பதிவு செய்யப் பட்டது.
- ❖ இந்தக் காலக் கட்டத்தில் 1,31,501 நோயாளிகள் காசநோய்க்கான சிகிச்சையினைப் பெற்றனர்.

## பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான ஊதியம் மற்றும் ஓய்வூதிய உயர்வு

- ❖ 2023 ஆம் ஆண்டு ஏப்ரல் 01 ஆம் தேதி முதல் (பின்னோக்கிய தேதியில்) அமலுக்கு வரும் வகையில் பாராளுமன்ற உறுப்பினர்களின் ஊதியம், கொடுப்பனவுகள் மற்றும் அவர் ஓய்வூதியங்களை மத்திய அரசு உயர்த்தியுள்ளது.
- ❖ மக்களவை மற்றும் மாநிலங்களவை உறுப்பினர்களின் ஊதியம் ஆனது, தற்போது 1 லட்சம் ரூபாயில் இருந்து 1.24 லட்சம் ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது.
- ❖ முன்னதாக 2,000 ரூபாயாக இருந்த தினப்படி ஆனது 2,500 ரூபாயாக உயர்த்தப் பட்டு உள்ளது.
- ❖ மேலும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப் படும் ஓய்வூதியம் ஆனது, தற்போது 25,000 ரூபாயில் இருந்து 31,000 ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது.

- இதில் ஐந்து ஆண்டுகளுக்கு மேல் பணியாற்றிய நபர்களுக்கு, ஒவ்வோர் ஆண்டிற்கும் வழங்கப் படும் கூடுதல் ஓய்வூதியம் 2,000 ரூபாயில் இருந்து 2,500 ரூபாயாக உயர்த்தப் பட்டுள்ளது.
- அவர்கள் தங்களுக்கும் தங்கள் குடும்பத்தினருக்கும் ஆண்டிற்கு 34 இலவச உள்நாட்டு விமானப் பயணங்களையும், தொழில்முறை மற்றும் தனிப்பட்டப் பயன்பாட்டிற்காக எந்த நேரத்திலும் வேண்டி முதல் வகுப்பு ரயில் பெட்டியில் பயணம் செய்யும் ஒரு வாய்ப்பினையும் பெறுகின்றனர்.
- பாராளுமன்ற உறுப்பினர்கள் ஆண்டுதோறும் 50,000 அலகுகள் மின்சாரத்தினையும் மற்றும் 4,000 கிலோ லிட்டர் தண்ணீரையும் இலவசமாகப் பெறுகின்றனர்.

## சிறப்பு விரைவு நீதிமன்றங்கள்

- மத்திய அமைச்சரவையானது, சிறப்பு விரைவு நீதிமன்றங்கள் (FTSCs) திட்டத்தினை 2026 ஆம் ஆண்டு மார்ச் 31 ஆம் தேதி வரையில் நீட்டித்துள்ளது.
- மத்திய அரசின் நிதியுதவி பெறும் இத்திட்டம் (CSS) ஆனது 2019 ஆம் ஆண்டு அக்டோபர் 02 ஆம் தேதியன்று தொடங்கப்பட்டது.
- பாலியல் குற்றங்கள் தொடர்பான வழக்குகளில் குறிப்பாக பாலியல் குற்றங்களில் இருந்து குழந்தைகளைப் பாதுகாத்தல் (POCSO) சட்டம் மற்றும் பாலியல் வன்கொடுமை வழக்குகளில் விரைவான நீதி வழங்குவதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்தத் திட்டம் ஆனது 96.28% என்ற சிறப்பான தீர்வு காணல் விகிதத்தைக் கொண்டு உள்ளது.
- 2024 ஆம் ஆண்டில் மட்டும், இந்தத் திட்டத்தின் கீழ் 88,902 புதிய வழக்குகள் தொடரப் பட்டன என்பதோடு மேலும் 85,595 வழக்குகள் இதன் மூலம் தீர்க்கப்பட்டன.

## இந்தியாவில் நீதிபதிகளுக்கான உள்ளக விசாரணை செயல்முறை

- யஷ்வந்த் வர்மா மீதான நன்னடத்தையின்மை குற்றச்சாட்டுகள் குறித்து விசாரணை நடத்துவதற்கு ஓர் உள்ளக விசாரணைக் குழுவை இந்தியத் தலைமை நீதிபதி நிறுவி உள்ளார்.
- நீதிபதிகளுக்கு எதிரான பல்வேறு நடவடிக்கைகள் குறித்த உள்ளக விசாரணை மீதான நடைமுறைகளுக்கான ஒரு தீர்மானம் ஆனது 1999 ஆம் ஆண்டில் ஏற்றுக் கொள்ளப் பட்டு 2014 ஆம் ஆண்டில் அறிவிக்கப்பட்டது.
- உயர்நீதிமன்றத்தின் நீதிபதி மீது புகார் பெறப்படும் போது, இந்தப் பிரச்சினையானது பொருத்தமானதா இல்லையா என்பதை இந்தியத் தலைமை நீதிபதி தீர்மானிக்கிறார் அல்லது விசாரணைக்கு உத்தரவாதம் அளிக்கிறார்.
- இதன்பின் விசாரணை அவசியமானதாகக் கருதப்பட்டால், அந்த நீதிபதியின் ஆரம்பக் கட்டப் பதில்களுடன் சேர்த்து அது தொடர்புடைய அந்த மாநில உயர்நீதிமன்றத்தின் தலைமை நீதிபதியின் கருத்துக்களும் கருத்தில் கொள்ளப் படுகிறது.
- பின்னர் இந்தியத் தலைமை நீதிபதி மற்ற உயர் நீதிமன்றங்களைச் சேர்ந்த இரண்டு தலைமை நீதிபதிகள் மற்றும் ஒரு மாநில உயர் நீதிமன்ற நீதிபதியைக் கொண்ட மூன்று உறுப்பினர்களைக் கொண்ட குழுவை அமைக்கிறார்.

- அந்தக் குழுவானது விசாரணைக்குப் பின்னர், அந்த தவறான நடத்தையானது பதவி நீக்கத்திற்கு உத்தரவாதம் அளிக்கும் அளவுக்கு தீவிரத் தன்மை கொண்டது அல்லது போதுமான தீவிரத் தன்மை கொண்டதல்ல என்ற பரிந்துரையை வழங்க முடியும்.
- பதவி நீக்கம் செய்ய வேண்டியதில்லை என்று பரிந்துரைக்கப்பட்டால், அந்நீதிபதிக்கு அதற்கேற்ப பதவி மதிப்பீடு வழங்கப்படும்.
- ஆனால், அந்நீதிபதியை பதவி அகற்றுவதற்காக பரிந்துரைக்கப்பட்டால், அவர் அந்தப் பதவியிலிருந்து இராஜினாமா செய்யும்படி கோரப்படுவார்.
- ஆனால் அந்த நீதிபதியானவர் இராஜினாமா செய்ய விரும்பவில்லை என்றால், இந்திய அரசியலமைப்பின் விதிகளின் படி, பாராளுமன்றம் அவரை அந்தப் பதவியிலிருந்து அகற்றுவதற்கான நடவடிக்கைகளைத் தொடங்குவதற்காக, கண்டறிந்தத் தகவல்கள் குறித்து குடியரசுத் தலைவருக்கும் பிரதமருக்கும் தெரிவிக்கப்படும்.
- உயர்நீதிமன்றத்தின் தலைமை நீதிபதிக்கு எதிரான எந்தவொருப் புகாரும், உச்ச நீதிமன்ற நீதிபதி மற்றும் பிற உயர் நீதிமன்றங்களின் இரண்டு தலைமை நீதிபதிகள் அடங்கிய குழுவினால் விசாரிக்கப்படும்.
- ஒரு உச்சநீதிமன்ற நீதிபதி மீது புகார் வைக்கப்பட்டால், அந்தக் குழு மூன்று உச்ச நீதிமன்ற நீதிபதிகளைக் கொண்டதாக அமைக்கப்படும்.

## நிதியியல் மசோதா 2025

- மக்களவையானது 2025 ஆம் ஆண்டு நிதியியல் மசோதாவிற்கு ஒப்புதல் அளித்துள்ளது. இதில் 35 அரசாங்க திருத்தங்கள் அடங்கும்.
- 2025-26 ஆம் ஆண்டு மத்திய நிதிநிலை அறிக்கையானது மொத்தம் 50.65 லட்சம் கோடி ரூபாய் செலவினத்தினை மதிப்பிட்டுள்ளது என்பதோடு தற்போதைய நிதியாண்டை விட இது 7.4 சதவீதம் அதிகரித்துள்ளது.
- அடுத்த நிதியாண்டில் முன்மொழியப்பட்ட மொத்த மூலதனச் செலவினம் ஆனது 11.22 லட்சம் கோடி ரூபாய் ஆகும் என்ற நிலையில் பயனுள்ள மூலதனச் செலவினமானது இதில் 15.48 லட்சம் கோடி ரூபாயாகும்.
- மொத்த வரி வருவாய் வசூல் 42.70 லட்சம் கோடி ரூபாயாகவும், மொத்தக் கடன் 14.01 லட்சம் கோடி ரூபாயாகவும் இருக்கும் என முன் மொழியப்பட்டுள்ளது.
- 2026 ஆம் நிதியாண்டிற்கான நிதிப் பற்றாக்குறையானது, நடப்பு நிதியாண்டில் உள்ள 4.8 சதவீதத்திற்குப் பதிலாக 4.4 சதவீதமாக இருக்கும் என கணிக்கப்பட்டுள்ளது.
- 2025 ஆம் ஆண்டு நிதியியல் மசோதாவின் புதியக் கட்டமைப்பின் கீழ், ஒரு நபர் வரி விதிப்பிற்குத் தகுதியான வருமானம் அல்லது இணைய சங்கேதப் பணப் பங்குகளை மறைத்து விட்டதாக என கருதினால் வரி அதிகாரிகள் மறைகுறியாக்கப்பட்டத் தகவல் தொடர்புகள், மேகக் கணிமைச் சேமிப்பு மற்றும் எண்ணிம சொத்துப் பரிமாற்றங்கள் குறித்த தகவல்களை அணுகலாம்.

## பேரிடர் மேலாண்மை (திருத்தம்) மசோதா, 2024

- மாநிலங்களவையானது, 2024 ஆம் ஆண்டு பேரிடர் மேலாண்மை திருத்த மசோதா என்ற மசோதாவினை நிறைவேற்றியுள்ளது.
- இது தேசிய இடர்/நெருக்கடி மேலாண்மைக் குழு (NCMC) மற்றும் உயர் மட்டக் குழு (HLC) போன்ற தற்போதைய அமைப்புகளுக்கு சட்டப்பூர்வ அந்தஸ்தினை வழங்குகிறது.

- ஒரு நகராட்சிக் கழகத்துடன் இணைந்து, மாநிலத் தலைநகரங்களிலும் நகரங்களிலும் ஒரு தனி ஆணையத்தினை உருவாக்க மாநில அரசாங்கங்களுக்கு இது அதிகாரம் அளிக்கிறது.
- இது மத்திய அரசின் முன் கூட்டிய ஒப்புதலுடன், அதிகாரிகள் மற்றும் ஊழியர்களின் எண்ணிக்கை மற்றும் வகையைக் குறிப்பிடுவதற்குத் தேசியப் பேரிடர் மேலாண்மை ஆணையத்திற்கு அதிகாரம் அளிக்கிறது.
- இது பேரிடர் அபாயங்களின் தொடர் மறு ஆய்வு, மிகவும் குறைந்தபட்சமான நிவாரண தரங்களுக்கான வழிகாட்டுதல்களை நிர்ணயித்தல், தேசிய மற்றும் மாநிலப் பேரிடர் தரவுத் தளங்களை உருவாக்குதல் போன்ற புதியச் செயல்பாடுகளை உள்ளடக்கியது.

## உலகின் முன்னணி பால் உற்பத்தியாளர் – இந்தியா

- இந்தியா உலகின் முன்னணி பால் உற்பத்தி நாடாக மாறியுள்ளது.
- அடுத்த ஐந்து ஆண்டுகளில் தற்போதைய 239 மில்லியன் மெட்ரிக் டன் அளவிலிருந்து, 300 மில்லியன் மெட்ரிக் டன் (MMT) பால் உற்பத்தி செய்வதற்கான இலக்கை இந்தியா நிர்ணயித்துள்ளது.
- 2014 ஆம் ஆண்டிலிருந்து, இந்திய நாட்டின் பால் உற்பத்தியானது சுமார் 63.5 சதவீதம் அதிகரித்துள்ளதோடு அடுத்த மூன்று ஆண்டுகளில் அது மேலும் சுமார் 15 சதவீதம் என்ற அளவில் அதிகரிக்கும் என்று அரசாங்கம் நம்பிக்கை கொண்டுள்ளது.
- 2014 ஆம் ஆண்டில் தொடங்கப் பட்ட இராஷ்டிரிய கோகுல் திட்டமானது, 2021-2022 முதல் 2025-2026 ஆம் ஆண்டு வரையில் துறையின் திருத்தப்பட்ட மறுசீரமைக்கப்பட்ட திட்டங்களின் கீழ் தொடரப்படுகிறது.

## தங்கத்தைப் பணமாக்குதல் திட்டம்

- மார்ச் 26 ஆம் தேதி முதல் தங்கத்தைப் பணமாக்குதல் திட்டத்தின் கீழ் நடுத்தர கால மற்றும் நீண்ட கால வைப்பு வசதியினை மத்திய அரசு நிறுத்தியுள்ளது.
- கணக்கில் பயனின்றி இருக்கும் தங்கத்தைப் பயன் மிக்கதாக மாற்றுவதற்காக 2015 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் தங்கத்தைப் பணமாக்குதல் திட்டம் தொடங்கப் பட்டது.
- இது நுகர்வோர் தங்கள் தங்கத்தை விற்கவோ அல்லது வங்கிகளில் சேமிக்கவோ வழி வகை செய்தது என்பதோடு இது நடைமுறை / முறைசார் பொருளாதாரத்தில் ஒன்று இணைந்து நாட்டின் தங்க இறக்குமதியைக் குறைக்க உதவும்.
- GMS என்பது பழைய தங்க வைப்புத் திட்டத்தின் புதுப்பிக்கப்பட்ட வடிவமாகும்.
- இது மூன்று கூறுகளைக் கொண்டிருந்தது:
  - குறுகிய கால வங்கி வைப்பு (1-3 ஆண்டுகள்);
  - நடுத்தர கால அரசு வைப்பு (5-7 ஆண்டுகள்); மற்றும்
  - நீண்ட கால அரசு வைப்பு (12-15 ஆண்டுகள்).
- இதில் அனுமதிக்கப்பட்ட குறைந்த பட்ச வைப்பு வரம்பு 10 கிராம் தங்கம் (கட்டிகள், நாணயங்கள், கற்கள் மற்றும் பிற உலோகங்கள் தவிர நகைகள்).
- இந்தத் திட்டத்தின் கீழ் வைக்கப்படும் வைப்புத் தொகைக்கு அதிகபட்ச வரம்பு எதுவும் இல்லை.

# சர்வதேசச் செய்திகள்

## தேயிலை குதிரை வர்த்தக சாலை

- 2,000 கி.மீ.க்கும் மேலான பரப்பில் பரவியிருந்த வரலாற்றுச் சிறப்புமிக்கத் தேயிலை குதிரை வர்த்தக சாலையானது, சீன நாட்டினைத் திபெத் வழியாக இந்தியாவுடன் இணைத்தது.
- இப்பண்டைய தேயிலை-குதிரை வர்த்தக சாலையானது, பழங்காலத்தில் சீனாவிற்கும் இந்தியாவிற்கும் இடையிலான பரிமாற்றங்கள் மற்றும் தொடர்புகளுக்குச் சாட்சியாக உள்ளது.
- சீனாவையும் ஐரோப்பாவையும் இணைத்த பட்டு வர்த்தகச் சாலையைப் போல மிகவும் நன்கு அறியப் படாவிட்டாலும், தேயிலை குதிரை வர்த்தகச் சாலையானது பல நூற்றாண்டுகளாக ஒரு முக்கிய வணிகப் பாதையாக இருந்தது.
- இத்தேயிலை குதிரை வர்த்தகச் சாலை என்பது ஒற்றை சாலையைக் குறிக்கவில்லை, மாறாக தென்மேற்கு சீனாவில் தொடங்கி இந்திய துணைக் கண்டத்தில் முடிவடைந்த பல்வேறு கிளைப் பாதைகளின் வலையமைப்பைக் குறிக்கிறது.
- இரண்டு முக்கியப் பாதைகள் யுன்னான் மாகாணத்தில் உள்ள டாலி மற்றும் லிஜியாங் போன்ற சில நகரங்கள் வழியாகச் சென்று, திபெத்தில் உள்ள லாசாவை அடைந்து, இந்தியாவிற்குள் நுழைகின்றன.
- இத்தேயிலை குதிரை வர்த்தகச் சாலையின் தோற்றுருவானது சீனாவில் உள்ள டாங் வம்சத்தின் ஆட்சியில் (கி.பி 618-907) நிறுவப்பட்டது.
- புத்தத் துறவி யிஜிங்கின் (கி.பி 635-713) படைப்புகளில் சர்க்கரை, ஜவுளி மற்றும் அரிசி நூடுல்ஸ் போன்ற பொருட்கள் தென்மேற்கு சீனாவிலிருந்து திபெத்திற்குக் கொண்டு செல்லப் பட்டதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.
- இந்தியாவிலிருந்து குதிரைகள், தோல் பொருட்கள், திபெத்தியத் தங்கம், குங்குமப்பூ மற்றும் பிற மருத்துவ மூலிகைகள் சீனாவிற்கு கொண்டு செல்லப்பட்டன.

## தங்க நிற அட்டை குடியேற்றத் திட்டம்

- அமெரிக்காவில் நிரந்தர வசிப்பிடத்தினை நாடும் வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கு "தங்க நிற அட்டை" என்ற நுழைவு இசைவுத் திட்டத்தினை அதிபர் டொனால்ட் டிரம்ப் அறிவித்துள்ளார்.
- தங்க நிற அட்டையின் மதிப்பு சுமார் 5 மில்லியன் டாலராக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.
- இது பச்சை நிற அட்டையின் சலுகைகளையும் வழங்குகிறது என்பதோடு (அமெரிக்க) குடியுரிமை பெறுவதற்கான பாதையாகவும் உள்ளது.
- 1990 ஆம் ஆண்டு காங்கிரஸால் உருவாக்கப்பட்ட EB-5 திட்டம் ஆனது, அமெரிக்கக் குடியுரிமை மற்றும் குடியேற்றச் சேவைகள் (USCIS) என்ற அமைப்பினால் நிர்வகிக்கப் படுகிறது.
- இது அமெரிக்க நாட்டு வணிகங்களில் முதலீடு செய்யும் வெளிநாட்டினருக்கு நிரந்தர வசிப்பிட (பச்சை நிற அட்டை) வாய்ப்பினை வழங்குகிறது.

- இதில் முதலீட்டாளர்கள் குறைந்தபட்சம் 1.05 மில்லியன் டாலர் (சில குறிப்பிட்ட சூழலில் 800,000 டாலர்) முதலீடு செய்ய வேண்டும் என்பதோடு அமெரிக்கர்களுக்கு குறைந்தது 10 வேலைவாய்ப்புகளை வழங்க வேண்டும்.

## நீல நிற நுழைவு இசைவுச் சீட்டு - ஐக்கிய அரபு அமீரகம்

- சுற்றுச்சூழல் வளங்காப்பு மற்றும் நிலைத் தன்மைக்கு குறிப்பிடத்தக்க பங்களிப்பைச் செய்த தனிநபர்களை இலக்காகக் கொண்ட 10 ஆண்டு கால ஒரு வசிப்பிட அனுமதி வழங்கீட்டிற்கான ஒரு நீல நிற நுழைவு இசைவுச் சீட்டினை ஐக்கிய அரபு அமீரகம் அறிமுகப் படுத்தியுள்ளது.
- இந்த முன்னெடுப்பானது, சுற்றுச்சூழல் பாதுகாப்பிற்காக என்று தனது சேவையினை அர்ப்பணித்த உலகளாவியத் திறமையாளர்களை ஈர்த்து தக்க வைத்துக் கொள்வதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- தங்க நிறம் மற்றும் பச்சை நிற நுழைவு இசைவுச் சீட்டுகள் போன்ற ஐக்கிய அரபு அமீரகத்தின் தற்போதைய வசிப்பிடத் திட்டங்களுடன் கூடுதலாக நீல நிற நுழைவு இசைவுச் சீட்டு அறிமுகப்படுத்தப் படுகிறது.

## மூன்று தொடர் வெப்பமண்டலப் புயல்கள்

- ஐந்து நாட்களுக்குள் ரே, செரு மற்றும் ஆல்ஃபிரட் என பெயரிடப்பட்ட சில புயல்கள் உருவாகி தற்போது பசிபிக் பெருங்கடலில் சுழன்று கொண்டிருக்கின்றன.
- தெற்கு பசிபிக் பகுதியில் இதற்கு முன்னதாக 2021 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் ஒரே நேரத்தில் மூன்று வெப்பமண்டலப் புயல்கள் உருவாகின.
- அப்போது ஏற்பட்ட லூகாஸ், அனா மற்றும் பினா புயல்கள் ஒரே நேரத்தில் செயலில் இருந்தன.

## உலகளாவிய மார்பகப் புற்றுநோய் பாதிப்பு விகிதங்கள்

- ஆஸ்திரேலியா மற்றும் நியூசிலாந்து ஆகிய நாடுகளானது உலகிலேயே மிகவும் அதிக மார்பகப் புற்றுநோய் பாதிப்பு விகிதங்களைக் கொண்டுள்ளன.
- உலகளவில் 20 பெண்களில் ஒருவர் அவர்களின் வாழ்நாளில் மார்பகப் புற்றுநோயைக் கொண்டிருப்பர் என்பதோடு மேலும் 70 பேரில் ஒருவர் இந்த நோயால் உயிரிழப்பர்.
- ஆஸ்திரேலியா மற்றும் நியூசிலாந்தில் இந்த நோய்ப் பாதிப்பு விகிதங்கள் அதிகமாக உள்ளன.
- அதைத் தொடர்ந்து வட அமெரிக்கா மற்றும் வடக்கு ஐரோப்பா இடம் பெற்றுள்ளன என்ற நிலையில் தென்-மத்திய ஆசியாவில் மிகவும் குறைவான விகிதமே பதிவாகி உள்ளது.
- 2022 ஆம் ஆண்டில் ஆஸ்திரேலியா மற்றும் நியூசிலாந்தில் மார்பகப் புற்றுநோயின் வயது வாரியாக வரிசைப்படுத்தப்பட்ட பாதிப்பு விகிதம் (ASIR) ஆனது 100,000 பேருக்கு 100.3 பாதிப்புகளாக இருந்தது கண்டறியப்பட்டது.
- இதை ஒப்பிடுகையில், தென்-மத்திய ஆசியாவில் ASIR ஆனது சுமார் 100,000 பேருக்கு 26.7 பாதிப்புகளாக இருந்தது.

- மார்பகப் புற்றுநோய்க்கான ஒரு வயது வாரியான உயிரிழப்பு விகிதம் (ASMR) என்பது மெலனேசியாவில் 100,000 பேருக்கு 26.8 உயிரிழப்புகளாக மிக அதிகமாக இருந்தது.
- அதைத் தொடர்ந்து பாலினேசியா மற்றும் மேற்கு ஆப்பிரிக்கா ஆகியவை இதில் இடம் பெற்றுள்ளன என்ற நிலையில் கிழக்கு ஆசியாவில் சுமார் 100,000 பேருக்கு 6.5 உயிர் இழப்புகளாக மிகக் குறைவான ASMR பதிவானது.

## ஹேக் சேவை உடன்படிக்கை

- அமெரிக்கப் பங்குகள் மற்றும் பரிவர்த்தனை ஆணையம் (SEC) ஆனது, அதானி குழும நிறுவனருக்கு சட்ட ஆவணங்களை வழங்குவதற்கு என இந்திய அதிகாரிகளிடமிருந்து உதவி கோரியுள்ளது.
- இந்த உரிமைக் கோரிக்கை வழக்கை முறையாக அறிவிக்க அமெரிக்கக் குழு ஹேக் சேவை உடன்படிக்கையினை நாடியுள்ளது.
- ஹேக் சேவை உடன்படிக்கை ஆனது, 'உரிமையியல் அல்லது வணிக விவகாரங்களில் நீதித்துறை மற்றும் நீதிக்கு அப்பாற்பட்ட ஆவணங்ககள் தொடர்பான வெளிநாட்டுச் சேவைக்கான உடன்படிக்கை' என்று முறையாக அறியப்படுகிறது.
- பன்னாட்டு நாடுகளுக்கு இடையே சட்ட ஆவணங்களை வழங்கும் செயல்முறையை தரப்படுத்துவதற்காக இது நிறுவப்பட்டது.
- சுமார் 68 கையொப்பதார நாடுகளுடன், இந்த உடன்படிக்கையானது சர்வதேச சட்டச் சேவைக்கான மிகவும் பரவலாக அங்கீகரிக்கப்பட்ட முறையாக உள்ளது.

## மூளைக்காய்ச்சல் - பொது சுகாதாரப் பிரச்சினை

- உலக சுகாதார அமைப்பு மற்றும் சர்வதேச மூளைக்காய்ச்சல் அமைப்பு ஆகியவை ஒரு உலகளாவிய சுகாதாரப் பிரச்சினையாக நிலவும் மூளைக்காய்ச்சல் குறித்து ஒரு அறிவிப்பை வெளியிட்டுள்ளன.
- தொற்று மற்றும் தன்னுடல் தாக்க நோய்க் காரணிகளால் ஏற்படும் மூளைக்காய்ச்சல் ஆனது, வயது, பாலினம் அல்லது இனம் ஆகிய எதனையும் பொருட்படுத்தாமல் அது எவரையும் பாதிக்கக்கூடிய ஓர் ஆபத்தான மூளை வீக்கமாகும்.
- இது நிரந்தர மூளைக் காயம் உள்ளிட்ட கடுமையான நரம்பியல் விளைவுகளுக்கு வழி வகுக்கும்.
- 2024 ஆம் ஆண்டில் நடத்தப்பட்ட ஒரு கணக்கெடுப்பில், இந்தியாவில் உள்ள சுமார் 24 மாநிலங்கள் மற்றும் ஒன்றியப் பிரதேசங்களில் 1,548 ஜப்பானிய மூளைக் காய்ச்சல் பாதிப்புகள் பதிவாகியுள்ளன.

## சீனாவில் மிகப்பெரிய அளவு தோரியம்

- பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு நாட்டின் வளங்களைப் பூர்த்தி செய்யும் திறன் கொண்ட வரம்பற்ற ஆற்றல் மூலத்தினை சீனா கண்டறிந்துள்ளது.
- புதிய புவியியல் ஆய்வு ஆனது, சீனாவில் உள்ள தோரியம் இருப்புக்கள் ஆனது முன்பு நம்பப் பட்டதை விட மிக அதிகமாக இருக்கலாம் என்று கூறுகிறது.

- சீனாவின் பயான் ஓபோ சுரங்க வளாகத்தில் உள்ள கனிமங்கள் முழுமையாக எடுக்கப் பட்டால், 1 மில்லியன் டன் அளவிலான தோரியத்தினை உற்பத்தி செய்ய முடியும் என்று அறிவியலாளர்கள் மதிப்பிடுகின்றனர்.
- சுமார் 60,000 ஆண்டுகளுக்கு தேவையான சீனாவின் எரிசக்தித் தேவைகளைப் பூர்த்தி செய்ய இது போதுமானதாக இருக்கும்.

## சாம்பியாவில் தாமிரம் மற்றும் கோபால்ட் கனிம ஆய்வு

- தாமிரம் மற்றும் கோபால்ட் கனிம ஆய்விற்காக சாம்பியாவில் 9,000 சதுர கிலோமீட்டர் பரப்பிலான எவ்வித மேம்பாடுகளும் மேற்கொள்ளப்படாத வகை பசுமை நிலத்தினை இந்திய அரசாங்கம் பெற்றுள்ளது.
- தாமிர உற்பத்தியில் சாம்பியா (சிலி, பெரு மற்றும் காங்கோ ஜனநாயகக் குடியரசு ஆகியவற்றிற்கு அடுத்தபடியாக) உலகளவில் 7வது இடத்தில் உள்ளது.
- 2023-24 ஆம் ஆண்டில் இந்தியாவின் உள்நாட்டுத் தாது உற்பத்தி ஆனது 3.78 மில்லியன் டன்களாக இருந்தது என்ற நிலையில் இது 2018-19 ஆம் ஆண்டில் இருந்ததை விட 8% குறைவாகும்.

## கெய்ரோ பிரகடனம் 2025 - அரபு கூட்டமைப்பு

- அரபு லீக் / கூட்டமைப்பின் அவசர உச்சி மாநாடு ஆனது, காசாவை மீள்கட்டமைக்கச் செய்வதற்கான 53 பில்லியன் டாலர் மதிப்பிலான எகிப்தியத் திட்டத்தினை "விரிவான அரபு உத்தி"யாக ஏற்றுக் கொண்டுள்ளது.
- இந்த கெய்ரோ பிரகடனம் ஆனது 2024 ஆம் ஆண்டு மே மாதத்தில், மனாமாவில் நடைபெற்ற கடைசி அரபு கூட்டமைப்பு உச்சி மாநாட்டின் பஹ்ரைன் பிரகடனத்தைப் பின்பற்றுகிறது.
- இந்தத் திட்டம் ஆனது, கிழக்கு ஜெருசலேம் நகரினைப் பாலஸ்தீனத்தின் தலைநகராக கொண்டு, 1967 ஆம் ஆண்டில் இருந்த எல்லைகளை அடிப்படையாகக் கொண்ட இரு நாடுகள் தீர்வை ஆதரிக்கிறது.
- இது ஓர் இடைக்கால காலத்திற்குத் தகுதி வாய்ந்த காசா வாசிகளைக் கொண்ட "காசா நிர்வாகக் குழு" மற்றும் மீட்பு திட்டங்களுக்கான அறக்கட்டளை நிதி ஆகியவற்றைக் கோருகிறது.

## தங்கக் கவச எறிகணைப் பாதுகாப்பு அமைப்பு

- டொனால்ட் டிரம்ப் இஸ்ரேலின் இரும்புக் கவச எறிகணை பாதுகாப்பு அமைப்பினைப் போன்ற ஒரு 'தங்கக் கவச' அமைப்பினைக் கட்டமைக்க உள்ளதாக கூறியுள்ளார்.
- இந்தக் கவசம் ஆனது, அதிமீயொலி எறிகணைகள் போன்ற அதன் சார்பு மற்றும் அந்த நுட்பத்தினை ஒத்த எறிகணைகள் உள்ளிட்ட மிகப் பரந்த அளவிலான எதிரி நாட்டு எறிகணை அச்சுறுத்தல்களிலிருந்து எதிராக பாதுகாப்பினை வழங்கும்.
- அதிமீயொலி மற்றும் உந்துவிசை எறிகணைகள் உள்ளிட்ட சில மேம்பட்ட எறிகணை அச்சுறுத்தல்களிலிருந்து முழு அமெரிக்கப் பிரதேசத்தையும் இது பாதுகாக்கும்.

## பிராந்திய 3R மற்றும் சுழற்சி முறைப் பொருளாதார மன்றம்

- ஆசியா மற்றும் பசிபிக் பகுதிக்கான 12வது பிராந்திய 3R மற்றும் சுழற்சி முறைப் பொருளாதார மன்றம் ஆனது இந்தியாவின் ஜெய்ப்பூர் நகரில் நடைபெற்றது.
- ஆசிய-பசிபிக் பகுதியில் நீடித்த நிலையான மேம்பாட்டு இலக்குகள் மற்றும் கார்பன் நடுநிலைமை ஆகிய சில இலக்குகளை அடைவதற்காக சுழற்சி முறை செயல்பாட்டுச் சமூகங்களை ஈடுபடுத்துவது என்பதே இந்த நிகழ்வின் கருத்துருவாகும்.
- இந்த மன்றமானது, நிலையான உற்பத்தி மற்றும் நுகர்வு முறைகளுக்கான ஒரு செயல் திட்டத்தினை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டு, குறைத்தல், மறுபயன்பாடு மற்றும் மறுசுழற்சி (3R) கொள்கைகளில் மன்றம் கவனம் செலுத்தியது.
- இந்த மன்றமானது, இதற்கு முன்னதாக 2023 ஆம் ஆண்டில் கம்போடியா நாட்டில் நடத்தப் பட்டது.

## கேம்ப் ஹில் வைரஸ் – அமெரிக்கா

- அலபாமா பகுதியில் கண்டுபிடிக்கப்பட்ட மிகவும் ஒரு மர்மமான வைரஸ் ஆனது, அது கண்டுபிடிக்கப் பட்ட ஒரு சிறிய நகரத்தின் பெயரால் கேம்ப் ஹில் வைரஸ் என்று அழைக்கப் படுகிறது.
- வட அமெரிக்காவில் இதுவரையில் கண்டுபிடிக்கப்பட்ட முதல் ஹெனிபா வைரஸ் இது ஆகும்.
- 40% முதல் 75% வரையிலான உயிரிழப்பு விகிதம் கொண்ட ஹெனிபா வைரஸ்கள் அறிவியலுக்குத் தெரிந்த மிகவும் கொடிய வைரஸ்களில் ஒன்றாகும்.
- இந்த ஹெனிபா வைரஸ்கள் ஆனது வௌவால்கள், குதிரைகள், குரங்குகள், நாய்கள், பூனைகள் மற்றும் கொறித்துண்ணிகள் உள்ளிட்ட பல விலங்குகளைப் பாதிக்கக் கூடியது.
- தென்கிழக்கு ஆசியப் பகுதியில் தோன்றிய நிபா வைரஸ் மற்றும் ஆஸ்திரேலியாவில் தோன்றிய ஹென்ட்ரா வைரஸ் போன்றவை முன்னதாக தோன்றிய ஹெனிபாவைரஸ் தொற்றுகளாகும்.

## கொத்து வெடிமருந்துகள் தொடர்பான உடன்படிக்கை- லிதுவேனியா

- ரஷ்யா-உக்ரைன் போர் காரணமாக எழுந்துள்ள பாதுகாப்பு சார்ந்த கவலைகளைக் காரணம் காட்டி, லிதுவேனியா நாடானது கொத்து வெடிமருந்துகள் தொடர்பான உடன்படிக்கையிலிருந்து (CCM) அதிகாரப்பூர்வமாக விலகியது.
- இந்த உடன்படிக்கையில் இருந்து விலகிய முதல் நாடு லிதுவேனியா ஆகும்.
- இந்தியா இந்த உடன்படிக்கையில் கையெழுத்திடவில்லை.
- ரஷ்யாவோ அல்லது உக்ரைனோ இந்த உடன்படிக்கையில் கையெழுத்திடவில்லை.

## BRICS CCI WE உச்சி மாநாடு 2025

- BRICS CCI WE ஆனது, ஐந்தாவது BRICS CCI WE வருடாந்திர மகளிர் உச்சி மாநாடு மற்றும் பாராட்டு விழாவினை நடத்தியது.
- இந்த ஆண்டு உச்சி மாநாட்டிற்கான கருத்துரு, 'Women Changemakers: Transforming the World, Shaping the Future' என்பதாகும்.

## தெற்கு ஜார்ஜியா தீவில் A23a

- உலகின் மிகப்பெரியப் பனிப்பாறையானது தொலைதூரப் பிரிட்டிஷ் தீவான தெற்கு ஜார்ஜியா கடற்கரையிலிருந்து சற்று தொலைவில் ஆழமற்ற ஒரு கடல் பகுதியில் கரை ஒதுங்கியுள்ளது.
- இந்தப் பனிப் பாறையானது, கிரேட்டர் இலண்டன் அளவினை விட இரண்டு மடங்கு பெரியதாகும்.
- இது 1986 ஆம் ஆண்டில் அண்டார்டிகாவின் ஃபில்ச்னர் என்ற பனிப் படலத்தில் இருந்து பிரிந்து சென்றது.
- இது 30 ஆண்டுகளுக்கும் மேலாக வெட்டல் பெருங்கடலில் சிக்கியிருந்தது.

## AHAIC 2025

- ஆப்பிரிக்க சுகாதாரச் செயல்பாட்டு நிரல் குறித்த சர்வதேச மாநாடு (AHAIC 2025) ஆனது சமீபத்தில் ருவாண்டா நாட்டின் கிகாலி நகரில் நடைபெற்றது.
- நிலைத் தன்மையை உறுதி செய்வதற்கும் நன்கொடை நிதியைச் சார்ந்திருப்பதைக் குறைப்பதற்காகவும் சுகாதார நிதியுதவியில் அவசர சீர்திருத்தங்களை மேற்கொள்ள இந்த மாநாட்டில் அழைப்பு விடுக்கப்பட்டது.
- 1978 ஆம் ஆண்டு அல்மா-அட்டா பிரகடனம் ஆனது, அனைவருக்குமான ஆரோக்கிய சேவையினை அடைவதற்கு வேண்டி ஆரம்ப சுகாதாரப் பராமரிப்பு அவசியம் என்று அங்கீகரிப்பதுடன் உலகளாவிய பொது சுகாதாரத்தில் ஓர் அடையாளமாக உள்ளது.
- இந்த அல்மா-அட்டா பிரகடனம் என்ற ஆனது, ஆரம்ப சுகாதாரப் பராமரிப்பினை (PHC) பொது சுகாதாரக் காப்பீட்டின் (UHC) அடித்தளமாக ஆதரிக்கிறது.

## பருவநிலை இழப்பு மற்றும் சேத நிதியிலிருந்து அமெரிக்கா விலகல்

- சமீபத்தில் உருவாக்கப்பட்ட இழப்பு மற்றும் சேத நிதியின் குழுவிலிருந்து அமெரிக்கா விலகியுள்ளது.
- இந்த நிதியானது பருவநிலை மாற்றப் பேரழிவுகளால் பாதிக்கப்பட்ட பல நாடுகளுக்கு நிதி உதவி வழங்குகிறது.
- அமெரிக்காவானது ஏற்கனவே பாரிசு உடன்படிக்கையிலிருந்து வெளியேறியுள்ளது என்பதுடன், பசுமை சார் பருவநிலை நிதிக்கு முன்னர் உறுதியளிக்கப்பட்ட நிதித் தொகையினையும் ரத்து செய்துள்ளது.

## சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தின் பிடியாணை அடிப்படையிலான கைது

- மனிதகுலத்திற்கு எதிரான குற்றங்களுக்காக சர்வதேசக் குற்றவியல் நீதிமன்றத்தால் (ICC) தேடப்படும் முன்னாள் பிலிப்பைன்ஸ் அதிபர் ரோட்ரிகோ டுடெர்டே மணிலாவில் கைது செய்யப்பட்டார்.
- அவரது ஆட்சிக் காலத்தில், நாடு முழுவதும் சுமார் 5,000க்கும் மேற்பட்டோர் கொல்லப் பட்டனர் என்ற நிலையில் இதில் 2,041 போதைப் பொருள் கடத்தல்கள் தொடர்பான சந்தேகத்திற்குறிய நபர்கள் காவல் துறை நடவடிக்கைகளில் கொல்லப்பட்டனர்.

- அவர் 2019 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில், தி ஹேக் நகரினைத் தளமாகக் கொண்ட சர்வதேசக் குற்றவியல் நீதிமன்றத்தின் அங்கத்தினர் என்ற ஒரு அந்தஸ்தில் இருந்து பிலிப்பைன்ஸ் விலகுவதாக அறிவித்தார்.
- ஆனால் சர்வதேசக் குற்றவியல் நீதிமன்றத்தின் விதிகளின் கீழ், ஒரு நாடு முன்னர் ஒரு உறுப்பினராக இருந்து விலகியிருந்தாலும், அது உறுப்பினராக இருந்த ஒரு காலத்தில் அதன் நிர்வாகத்திற்குள் செய்யப்படும் குற்றங்கள் மீதான அதிகார வரம்பை அந்த நீதி மன்றம் தக்க வைத்துக் கொள்கிறது.

## குறைந்தபட்ச உணவுப் பன்முகத்தன்மை குறிகாட்டி

- குறைந்தபட்ச உணவுப் பன்முகத்தன்மை (MDD) குறித்த புதிய குறிகாட்டியை ஐக்கிய நாடுகளின் புள்ளி விவர ஆணையம் ஏற்றுள்ளது.
- இந்தக் குறிகாட்டியானது 2030 ஆம் ஆண்டு செயல்பாட்டு நிரலின் கீழ் உள்ள அதன் 17 இலக்குகளில் ஒன்றான பட்டினி நிலையின்மை குறித்த 2வது நிலையான மேம்பாட்டு இலக்கினை நோக்கிய முன்னேற்றத்தைக் கண்காணிக்க உதவும்.

## அமெரிக்க அரசின் 43 நாடுகளுக்கான பயணத் தடை 2025

- டொனால்ட் டிரம்ப் நிர்வாகம் ஆனது, 43 நாடுகளைச் சேர்ந்த குடிமக்களைப் பாதிக்கக் கூடிய மாபெரும் பயணத் தடையை அறிவிப்பது குறித்து பரிசீலித்து வருகிறது.
- மிக குறிப்பிடத்தக்க வகையில், இந்தியாவின் அண்டை நாடுகளான ஆப்கானிஸ்தான், பூடான், மியான்மர் மற்றும் பாகிஸ்தான் ஆகிய நான்கு நாடுகள் இந்தத் திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளன.
- இங்கு முன்மொழியப்பட்ட இந்தக் கொள்கையானது உலக நாடுகளை ஒவ்வொன்றும் வெவ்வேறு அளவிலான சில பயண வரம்புகளைக் கொண்டுள்ள வகையில் 'சிவப்பு', 'ஆரஞ்சு' மற்றும் 'மஞ்சள்' நிறப் பட்டியல்களாக வகைப்படுத்துகிறது.

## உலகின் மிகப்பெரிய வெள்ளை ஹைட்ரஜன் இருப்பு

- பிரான்சு நாடானது, மொசெல்லே என்ற பகுதியில் 92 டிரில்லியன் டாலர் மதிப்புள்ள 46 மில்லியன் டன் வெள்ளை ஹைட்ரஜன் இருப்பைக் கண்டறிந்துள்ளது.
- சாம்பல் மற்றும் பச்சை நிறங்கள் இல்ல ஹைட்ரஜனைப் போலல்லாமல், வெள்ளை ஹைட்ரஜனுக்கு தொழில்துறை உற்பத்தி தேவையில்லை என்பதோடு மேலும், $CO_2$ வாயுவினையும் இது வெளியிடுவதில்லை.
- ரஷ்யா, ஓமன், பிரான்சு, மாலி மற்றும் இதர பிற இடங்களிலும் வெள்ளை ஹைட்ரஜன் இருப்புகள் கண்டறியப்பட்டுள்ளன.

## மெக்சிகோவின் அரசியலமைப்பு சீர்திருத்தம்

- மெக்சிகோ நாட்டு அரசானது, தனது அரசியலமைப்பைத் திருத்தி, உள்நாட்டுச் சோள வகையினை தேசிய அடையாளத்தின் ஓர் அங்கமாக அங்கீகரித்து, மரபணு மாற்றப் பட்ட (GM) விதைகளை நடுவதைத் தடை செய்துள்ளது.

- இந்தப் பயிர் ஆனது சுமார் 9,000 ஆண்டுகளுக்கு முன்பு மெசோ அமெரிக்க நாட்டு விவசாயிகள் டீயோசின்டே எனப்படும் காட்டுப் புல் வகையினை வளர்த்ததன் மூலம் மெக்சிகோவில் தோன்றியது.
- அப்போதிலிருந்து இந்தச் சோள வகையானது மெக்சிகோ நாட்டவரின் வாழ்க்கையின் முக்கிய உணவாக உள்ளது.
- 1990 ஆம் ஆண்டுகளின் முற்பகுதியில் 3.1 மில்லியன் மெட்ரிக் டன்னாக இருந்த சோள இறக்குமதி ஆனது, இன்று சுமார் 23.4 மில்லியன் மெட்ரிக் டன்னாக உயர்ந்துள்ளது.

## SQUAD கூட்டணி – இந்தியா

- தென் சீனக் கடலில் பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்து கவனம் செலுத்தும் ராணுவக் கூட்டணியில் இந்தியா விரைவில் இணைய உள்ளது.
- SQUAD கூட்டணியானது அமெரிக்கா, ஆஸ்திரேலியா, ஜப்பான் மற்றும் பிலிப்பைன்ஸ் ஆகியவற்றை உள்ளடக்கியதாகும்.
- இந்திய-பசிபிக் பிராந்தியத்தில் சீனாவின் ஆதிக்கத்தை எதிர்ப்பதற்காக என உளவுத் துறை பரிமாற்றம் மற்றும் கூட்டு இராணுவப் பயிற்சிகள் மற்றும் நடவடிக்கைகளை மேற்கொள்வதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்தியா ஏற்கனவே நாற்கரப் பாதுகாப்பு பேச்சுவாரத்தையில் (குவாட்) உறுப்பினராக உள்ளது.

## 1798 ஆம் ஆண்டு சட்ட விரோதமாகக் குடியேறிய வெளிநாட்டவர் சட்டம் – அமெரிக்கா

- அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப், நாட்டில் சட்டவிரோதமாக தங்கியிருக்கும் மில்லியன் கணக்கான மக்களை நாடு கடத்தச் செய்வதற்கான அறிவிப்பில் சட்ட விரோதமாக குடியேறிய வெளிநாட்டவர் சட்டத்தினை செயல்படுத்தியுள்ளார்.
- ட்ரென் டி அரகுவா என்று பெயரிடப்பட்ட ஒரு வெளிநாட்டுத் தீவிரவாத அமைப்போடு தொடர்பு இருப்பதாகக் கூறப்படும் நூற்றுக்கணக்கான வெனிசுலா குடிமக்களை அமெரிக்காவிலிருந்து வெளியேற்றவும் அவர் உத்தரவிட்டார்.
- பிரான்சு நாட்டுடனான பிரச்சினைகளின் போது உளவுப் பணிகள் மற்றும் மிக அழிவு கரமான நடவடிக்கைகளை எதிர்த்துப் போராடுவதற்காகச் சட்டம் 1798 ஆம் ஆண்டில் சட்ட விரோதமாக குடியேறிய வெளிநாட்டவர் சட்டம் இயற்றப்பட்டது.
- இந்தச் சட்டம் ஆனது, இந்தச் செயலைச் செயல்படுத்தத் தூண்டிய நிகழ்வை அதிபர் பகிரங்கமாக அறிவிக்க வேண்டும்.
- அதிபர் அதை முடிவுக்குக் கொண்டு வரும் வரை இந்தச் சட்டம் அமலில் இருக்கும்.

## அமெரிக்காவில் H7N9 பறவைக் காய்ச்சல் தொற்று

- வணிக ரீதியான கோழி வளர்ப்பு பகுதிகளில், அதிக நோய்த்தொற்று மிக்க பறவைக் காய்ச்சல் (HPAI) வைரஸின் கொடிய H7N9 வகை தொற்று ஏற்பட்டுள்ளதாக அமெரிக்கா தெரிவித்துள்ளது.
- பறவைக் காய்ச்சல் A (H7N9) என்பது கடந்த காலங்களில் பறவைகளில் கண்டறியப் பட்ட இன்ஃப்ளுயன்ஸா வைரஸ்களின் ஒரு துணை வகையாகும்.

- இந்த வைரஸ் ஆனது, முதன்முதலில் 2013 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் சீனாவில் கண்டறியப் பட்டது.
- இது 2017 ஆம் ஆண்டு மார்ச் மாதத்திற்குப் பிறகு அமெரிக்காவில் பதிவாகும் ஒரு இரண்டாவது தொற்றுநோயாகும்.
- H7N9 பறவைக் காய்ச்சல் வைரஸ் ஆனது, இந்த கொடிய வைரசினால் பாதிக்கப்பட்ட மனிதர்களில் சுமார் 40 சதவீதம் பேர் உயிரிழந்ததுடன், மிக அதிக இறப்பு விகிதத்தைக் கொண்டிருப்பது நிரூபிக்கப்பட்டுள்ளது.

## நைட்ரஜன் வாயு செலுத்தி மரணதண்டனை வழங்கல் – லூசியானா, அமெரிக்கா

- லூசியானா மாநில அரசானது முதல் முறையாக நைட்ரஜன் வாயுவைப் பயன்படுத்தி ஒருவருக்கு மரணத் தண்டனையினை நிறைவேற்றியுள்ளது.
- 15 ஆண்டுகளில் இது அந்த அரசின் முதல் மரணதண்டனை ஆகும்.
- இந்த முறையைப் பயன்படுத்தி அமெரிக்காவில் இரண்டாவது முறையாக இத்தகைய மரண தண்டனை நிறைவேற்றப்பட்டது.
- அமெரிக்காவில் ஒருவருக்கு மரண தண்டனை விதிப்பதற்கு வேண்டி, நைட்ரஜன் வாயு செலுத்துதல் முறையானது நான்கு முறையில் மட்டுமே (அனைத்தும் அலபாமாவில்) பயன்படுத்தப்பட்டுள்ளது.
- நைட்ரஜன் ஹைபோக்ஸியா என்பது ஒரு கைதிக்கு ஆக்ஸிஜன் வழங்கீடு நிறுத்தப் படுவதால் அவரது மரணத்திற்கு வழி வகுக்கும் வகையில் ஒரு மரண தண்டனையை நிறைவேற்றும் முறையாகும்.

## ஒட்டாவா ஒப்பந்தம்

- போலந்து மற்றும் லிதுவேனியா, லாத்வியா மற்றும் எஸ்டோனியா போன்ற பால்டிக் நாடுகள் ஒட்டாவா ஒப்பந்தத்திலிருந்து வெளியேறத் தயாராகி வருகின்றன.
- கண்ணி வெடி தடை ஒப்பந்தம் என்றும் அழைக்கப்படும் ஒட்டாவா ஒப்பந்தம் ஆனது 1997 ஆம் ஆண்டில் நடைமுறைக்கு வந்தது.
- இது உலகளவில் மனிதர்களைத் தாக்குவதை இலக்காகக் கொண்ட, மனிதர்களுக்கு எதிரான கண்ணிவெடிகளின் பயன்பாட்டினைத் தடை செய்வதை ஒரு நோக்கமாகக் கொண்டுள்ள இந்த ஒப்பந்தத்தில் 160 க்கும் மேற்பட்ட நாடுகள் கையெழுத்திட்டன.
- ஆனால் சீனா, இந்தியா, ரஷ்யா, பாகிஸ்தான் மற்றும் அமெரிக்கா உள்ளிட்ட சில முக்கிய இராணுவ வலிமை நிறைந்த நாடுகள் இந்த ஒப்பந்தத்தில் கையெழுத்திட வில்லை.

## 2024 ஆம் ஆண்டில் புலம்பெயர்ந்தோரின் உயிரிழப்புகள்

- ஆபத்தானப் புலம் பெயர்வு பாதைகளில் சுமார் 9,000 பேர் மற்றும் 2024 ஆம் ஆண்டில் வன்முறையால் கொல்லப்பட்டவர்களில் 10 பேரில் ஒருவர் இப்புலம் பெயர்வின் போது உயிரிழந்தனர்.
- மத்தியத் தரைக் கடல் பகுதியினைக் கடக்கும் ஆசிய வழித்தடங்கள் என்பவை மிகவும் ஆபத்தான பாதையாகும் என்ற ஒரு நிலைமையில் அதைத் தொடர்ந்து சஹாரா பாலைவனத்தினை உள்ளடக்கிய ஆப்பிரிக்கா உள்ளது.

- ஆசியாவில் 2,788 பேரும், மத்தியதரைக் கடலில் 2,452 பேரும் மற்றும் ஆப்பிரிக்காவில் 2,242 பேரும் உயிரிழந்துள்ளனர்.
- ஈரான், மியான்மர், வங்காளதேசம் மற்றும் மெக்சிகோவில் வன்முறையால் மிக அதிக மரணங்கள் பதிவாகின.

## CHNV நன்னம்பிக்கை உறுதித் திட்டங்கள் – அமெரிக்கா

- சில குறிப்பிட்ட நாடுகளின் "சட்டப்பூர்வப் பாதைகளை" பயன்படுத்தி அமெரிக்க நாட்டிற்குள் புலம்பெயர்ந்தவர்களை அனுமதிக்கச் செய்யும் பிடன் ஆட்சி காலத்தின் திட்டத்தினை முடிவுக்குக் கொண்டுவருவதாக அமெரிக்கா அறிவித்துள்ளது.
- 2022 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் முதல் இது கியூபா, ஹைத்தி, நிகரகுவா மற்றும் வெனிசுலாவிலிருந்து அமெரிக்காவிற்கு வந்த 532,000 புலம்பெயர்ந்தோரின் தற்காலிக சட்டப் பூர்வ அந்தஸ்தினை ரத்து செய்ய உள்ளது.
- இந்தத் திட்டத்தின் கீழ் பணி அனுமதிகள் மற்றும் நாடு கடத்தலில் இருந்து பாதுகாப்பு உள்ளிட்ட அதன் நன்னம்பிக்கை உறுதிக் காலம் ஆனது ஏப்ரல் 24 ஆம் தேதியன்று காலாவதியாக உள்ளது.
- குடிவரவு மற்றும் தேசியச் சட்டத்தின் கீழான நன்னம்பிக்கை உறுதி ஆனது, DHS மேற் பார்வையின் கீழ் ஒரு நபருக்கு அமெரிக்காவில் நுழைந்து அங்கு தற்காலிகமாக என தங்குவதற்கான அனுமதியை அதிகாரப் பூர்வமாக வழங்குகிறது.
- 2022 ஆம் ஆண்டில், அதிபர் ஜோ பிடன் வெனிசுலா மக்களுக்கான நன்னம்பிக்கை உறுதி நுழைவுத் திட்டத்தினை அறிமுகப்படுத்தினார் என்பதோடு அதனை 2023 ஆம் ஆண்டில் கியூபா, ஹைத்தி மற்றும் நிகரகுவா போன்ற நாடுகளுக்கு அவர் அதனை விரிவுபடுத்தினார்.
- இந்த நான்கு நாடுகளுடன் அமெரிக்கா எவ்வித அரசு முறை உறவுகளையும் கொண்டு இருக்கவில்லை.

## மியான்மர் நிலநடுக்கம் 2025

- மியான்மர் நாட்டில் 7.7 மற்றும் 6.4 ரிக்டர் அளவிலான இரண்டு நிலநடுக்கங்கள் உடன் அடுத்தடுத்து ஏற்பட்டன.
- தாய்லாந்தின் தலைநகரான பாங்காக் ஆனது பேரிடர் பாதிப்பு பகுதியாக அறிவிக்கப் பட்டுள்ளது.
- மியான்மரின் இராணுவ அரசாங்கம் ஆனது, அந்நாட்டின் ஆறு பிராந்தியங்கள் மற்றும் மாநிலங்களில் அவசரகால நிலையை அறிவித்துள்ளது.
- மியான்மரின் மண்டலே பகுதியில் உள்ள 90 ஆண்டுகள் பழமையான அவா பாலம் ஐராவதி ஆற்றில் இடிந்து விழுந்தது.
- முன்னதாக மியான்மரில், 1930 முதல் 1956 ஆம் ஆண்டு வரையிலான காலக் கட்டத்தில் சகாயிங் பிளவு அருகே 7 அல்லது அதற்கு மேற்பட்ட ரிக்டர் அளவிலான ஆறு வலுவான நிலநடுக்கங்கள் ஏற்பட்டன.
- 2016 ஆம் ஆண்டில் மத்திய மியான்மரில் 6.8 ரிக்டர் அளவில் ஏற்பட்ட நிலநடுக்கம் ஆனது மூன்று பேரின் உயிரைப் பலி வாங்கியது.
- மியான்மரில் பேரிடர் நிவாரணம், தேடல் மற்றும் மீட்பு உதவிகளை வழங்குவதை ஒரு நோக்கமாகக் கொண்ட அவசர நிவாரண நடவடிக்கையான 'ஆபரேஷன் பிரம்மா'வை இந்தியா தொடங்கியுள்ளது.

# பொருளாதாரச் செய்திகள்

## வரிகள் மற்றும் இந்திய அறிக்கை – GTRI

- இந்திய அரசானது, உள்நாட்டுத் தொழில்துறைகள் மற்றும் வேளாண்மைக்குப் பாதகம் விளைவிக்காமல் அமெரிக்க இறக்குமதிகளுக்கான சில இறக்குமதி வரிகளை நீக்கக் கூடிய வரி வழிகளை (அல்லது தயாரிப்பு வகைகளை) அடையாளம் காணுமாறு உலகளாவிய வர்த்தக ஆராய்ச்சி முன்னெடுப்பு (GTRI) அரசாங்கத்திடம் ஒரு பரிந்துரை செய்துள்ளது.
- மிகவும் கடுமையான வரி உயர்வுகளைத் தடுப்பதற்காக 90 சதவீதத் தொழில்துறை பொருட்களின் மீதான வரிகளை நீக்கி, அமெரிக்க இறக்குமதிக்கு zero-for-zero என்ற உத்தியை இந்தியா முன்மொழியலாம்.
- 'zero-for-zero' என்ற வரி உத்தியானது உலக வர்த்தக அமைப்பின் (WTO) விதிகளை மீறினாலும், "முழு FTA பேச்சுவார்த்தையுடன் ஒப்பிடும் போது இது மிகவும் குறைவான பாதகத்தினையே விளைவிக்கும்.
- அமெரிக்கா ஒரு மிகவும் சமச்சீரான (ஒரே மாதிரியான) வரியை விதித்தால், இந்திய ஏற்றுமதிகள் ஆனது தற்போதைய 2.8 சதவீதத்துடன் ஒப்பிடும்போது 4.9 சதவீத கூடுதல் வரியை எதிர்கொள்ள நேரிடும்.
- இதனால் இறால், பால் மற்றும் பதப்படுத்தப்பட்ட உணவுகள் மீது 38.2 சதவீதம் வரை வரி விதிக்கப்படும் என்பதால் இந்திய வேளாண் ஏற்றுமதிகள் "கடுமையாக" பாதிக்கப் படும்.
- அமெரிக்காவிற்கு மேற்கொள்ளப்படும் இந்திய வேளாண் ஏற்றுமதிகள் மீது தற்போது சுமார் 5.3 சதவீத வரி விதிக்கப்படுகின்ற அதே நேரத்தில் இந்தியாவிற்கான அமெரிக்க வேளாண் ஏற்றுமதிகள் மீது 37.7 சதவீத இறக்குமதி வரி விதிக்கப்படுகின்றன.

## இந்தியாவின் பாலின வேலைவாய்ப்பு முரண்பாடு அறிக்கை

- கடந்த ஆறு ஆண்டுகளில் (2017-18 முதல் 2023-24 வரை) நகர்ப்புறப் பகுதி இந்தியாவில் பெண்களின் வேலைவாய்ப்பு ஆனது 10% அதிகரித்துள்ளது.
- ஆனால் 2023-2024 ஆம் ஆண்டில், 89 மில்லியனுக்கும் அதிகமான நகர்ப்புற இந்தியப் பெண்கள் இன்னும் தொழிலாளர் சந்தையில் பங்கேற்காமல் உள்ளனர்.
- இந்த 89 மில்லியன் ஆனது ஜெர்மனி, பிரான்சு அல்லது ஐக்கியப் பேரரசின் மக்கள் தொகையை விடவும், ஆஸ்திரேலியாவை விட மூன்று மடங்கு அதிகமாகவும் உள்ளது.
- இதற்கிடையில், நகர்ப்புற இந்தியாவில் இளம் ஆண்களின் வேலைவாய்ப்பின்மை ஆனது பெண்களை விட அதிகமாக உள்ளது (20-24 வயதுடையவர்களுக்கு 10% மற்றும் 7.5%).

## இந்திய நிதி அமைப்பின் நிலைத்தன்மை குறித்த மதிப்பீடு 2025

- “இந்திய நிதி அமைப்பின் நிலைத் தன்மை மதிப்பீடு” என்ற தலைப்பிலான இந்த ஒரு அறிக்கையானது சர்வதேச நாணய நிதியத்தால் வெளியிடப் பட்டுள்ளது.
- மின்சாரத் துறை கடன்களில் சுமார் 63% ஆனது, 2024 ஆம் நிதியாண்டில் ஒரு வகை NBFC நிறுவனங்களாக இருந்த மூன்று பெரிய உள்கட்டமைப்பு நிதி நிறுவனங்களில் இருந்து மட்டுமே பெறப்பட்டவை என்று கண்டறியப்பட்டுள்ளது.
- இது 2019-20 ஆம் ஆண்டில் 55% ஆக இருந்தது.

- மேலும், அவற்றின் கடன்களில் சுமார் 56% ஆனது, சந்தை சார் செயற்கருவிகள் மூலம் நிதியளிக்கப் பட்டது என்ற நிலையில் மீதமுள்ளவை மட்டுமே வங்கி கடன்கள் மூலம் நிதியளிக்கப் பட்டு ள்ளன.
- பொதுத்துறை வங்கிகள் (PSB) சுமார் 9% மட்டுமே மூலதன நிறைவு விகிதத்தை (CAR) பேணுவதில் சிரமங்களை சந்திக்க நேரிடுகின்றது.
- CAR என்பது இடர் உண்டாகும் சொத்துகள் மீதான மூலதன விகிதமாகும் என்பதோடு இது வங்கியின் இழப்பு ஏற்புத் திறனை அளவிட பயன்படுகிறது.
- இந்திய ரிசர்வ் வங்கியானது, PSB மற்றும் பட்டியலிடப்பட்ட வணிக வங்கிகளுக்கு என முறையே 12% மற்றும் 9% CAR விகிதத்தினைக் கட்டாயமாக்குகிறது.

## துபாயின் அந்நிய நேரடி முதலீட்டின் முக்கிய மூலமாக விளங்கும் இந்தியா

- தொடர்ந்து நான்காவது ஆண்டாக புதிய வெளிநாட்டு நிறுவனங்களின் அந்நிய நேரடி முதலீட்டு (FDI) திட்டங்களுக்கான உலகின் மிக முன்னணி இடமாக துபாய் தரவரிசைப் படுத்தப் பட்டுள்ளது.
- துபாயில் அந்நிய நேரடி முதலீட்டிற்கான (FDI) மிகவும் முக்கிய மூல நாடாக இந்தியா உருவெடுத்துள்ளது.
- 2024 ஆம் ஆண்டில், துபாயில் அந்நிய நேரடி முதலீட்டை மேற்கொள்ளும் நாடுகளில் அமெரிக்கா, பிரான்சு மற்றும் ஐக்கியப் பேரரசு நாடுகளை இந்தியாவானது முந்தி முதல் இடத்தில் உள்ளது.
- அந்நிய நேரடி முதலீட்டில் இந்தியாவின் பங்களிப்பு ஆனது 21.5% ஆக உள்ளது, அதைத் தொடர்ந்து அமெரிக்கா (13.7%), பிரான்சு (11%), ஐக்கியப் பேரரசு (10%) மற்றும் சுவிட்சர் லாந்து (6.9%) ஆகிய நாடுகளும் உள்ளன.

## வரியில்லாத வர்த்தக உத்தி – இந்தியா

- சமீபத்தில், இந்திய ஜவுளித் தொழில்துறைக் கூட்டமைப்பு (CITI) ஆனது, ஜவுளி மற்றும் ஆயத்த ஆடைத் துறையில் அமெரிக்காவுடன் வரியில்லாத வர்த்தக ஒப்பந்தத்தினைப் பரிந்துரைத்துள்ளது.
- இந்தியா மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகள் ஆனது, 2030 ஆம் ஆண்டிற்குள் இரண்டு ஆண்டுகளுக்கு இடையிலான இருதரப்பு வர்த்தகத்தினை 500 பில்லியன் டாலராக இரட்டிப்பாக்க ஒப்புக் கொண்டுள்ளன.

## வட்டி வழங்கீட்டு முறை இல்லாத பத்திர முறை

- நிதி அமைச்சகம் ஆனது, பவர் ஃபைனான்ஸ் கார்ப்பரேஷன் நிறுவனத்திற்காக, வட்டி வழங்கீட்டு முறை இல்லாத பத்திர முறையினை (ZCB) அறிவித்துள்ளது.
- இந்த நிறுவனம் ஆனது இதன் மூலம் 10,000 கோடி ரூபாய் வரை திரட்ட முடியும்.
- ZCB என்பது அது வெளியிடப்பட்ட காலத்தில் வட்டி வழங்காத, ஆனால் அதன் சந்தை மதிப்பை விட தள்ளுபடியில் விற்கப்படுகின்ற ஒரு கடன் பெறல் கருவியாகும்.
- இந்தப் பத்திரத்தின் கால வரம்பு நிறைவடையும் போது, முதலீட்டாளர் அதன் ஒரு முழு சந்தை மதிப்பைப் பெறுவார்.
- இந்த முறையில் வழக்கமாக வட்டி செலுத்தப் படாது.

- இந்தப் பத்திரங்கள் ஆனது, 121 மாதங்கள் அல்லது 10 ஆண்டுகள் மற்றும் ஒரு மாதம் நிறைவு கால மதிப்பைக் கொண்டிருக்கும்.

## இந்தியாவின் பண வரவு குறித்த ஆறாவது கணக்கெடுப்பு 2023/24

- 2010-11 ஆம் ஆண்டில் 55.6 பில்லியன் டாலராக இருந்த இந்தியாவின் பண வரவுத் தொகையானது 2023-24 ஆம் ஆண்டில் 118.7 பில்லியன் டாலர் ஆக இரு மடங்கிற்கும் மேலாக அதிகரித்துள்ளது.
- உலகளாவிய பணப் பரிமாற்றங்களில் 14.3 சதவீதப் பங்குடன், இந்தியாவின் மொத்தப் பண வரவுத் தொகையானது 2024 ஆம் ஆண்டில் 129 பில்லியன் டாலராக அதிகரித்தது.
- இந்தியாவின் மொத்தப் பண வரவுத் தொகையில் 27.7 சதவீதப் பங்கைக் கொண்டு மிகப்பெரியப் பங்களிப்பாளராக ஐக்கிய அரபு அமீரகத்தினை அமெரிக்கா விஞ்சி உள்ளது.
- இந்தக் காலக் கட்டத்தில் ஐக்கிய அரபு அமீரகத்தின் பெரும் பங்கானது சுமார் 26.9 சதவீதத்திலிருந்து 19.2 சதவீதமாகக் குறைந்துள்ளது.
- இதே போல், 2016-17 ஆம் ஆண்டில் 3 சதவீதப் பங்கை மட்டுமே கொண்டிருந்த ஐக்கியப் பேரரசு ஆனது, 2023-24 ஆம் ஆண்டில் 10.9 சதவீத பங்குடன் சவுதி அரேபியாவை விஞ்சி உள்ளது.
- 2023-24 ஆம் ஆண்டில் மகாராஷ்டிரா மாநிலமானது, 20.5 சதவீத பங்கைக் கொண்டு உள்ளது.
- அதே காலக் கட்டத்தில் சுமார் 10 சதவீதப் பங்கினைக் கொண்டிருந்த கேரள மாநிலத்தின் பங்கானது 19.7 சதவீதமாக அதிகரித்துள்ளது.
- அதைத் தொடர்ந்து தமிழ்நாடு (10.4 சதவீதம்), தெலுங்கானா (8.1 சதவீதம்) மற்றும் கர்நாடகா (7.7 சதவீதம்) உள்ளன.

## 2024-25 ஆம் ஆண்டில் இந்தியாவின் மொத்த ஏற்றுமதிகள்

- 2025 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதத்திற்கான இந்தியாவின் மொத்த ஏற்றுமதிகளின் மதிப்பானது (சரக்கு மற்றும் சேவைகள் ஒரு சேர) 71.95 பில்லியன் அமெரிக்க டாலர்கள் என மதிப்பிடப்பட்டுள்ளது.
- இது 2024 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதத்துடன் ஒப்பிடும்போது, இந்த ஆண்டில் 3.16 சதவீதம் என்ற நேர்மறையான வளர்ச்சியைப் பதிவாகியது.
- 2025 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதத்திற்கான மொத்த இறக்குமதிகள் (சரக்குகள் மற்றும் சேவைகள் ஒரு சேர) 67.52 பில்லியன் அமெரிக்க டாலர்களாக மதிப்பிடப்பட்டுள்ளது.
- 2024 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதத்துடன் ஒப்பிடும்போது (-)11.34 சதவீதம் என்ற எதிர் மறையான வளர்ச்சி பதிவாகியுள்ளது.
- 2024-25 ஆம் ஆண்டு ஏப்ரல்-பிப்ரவரி மாத காலக் கட்டத்தில், இந்தியாவின் மொத்த ஏற்றுமதிகள் ஆனது சுமார் 6.24 சதவீத நேர்மறையான வளர்ச்சியுடன் 750.53 பில்லியன் அமெரிக்க டாலர்களாக மதிப்பிடப்பட்டுள்ளது.
- 2024-25 ஆம் ஆண்டு ஏப்ரல்-பிப்ரவரி மாத காலக் கட்டத்தில், 7.28 சதவீத வளர்ச்சியுடன் மொத்த இறக்குமதிகள் ஆனது 839.89 பில்லியன் அமெரிக்க டாலர்களாக மதிப்பிடப் பட்டுள்ளது.

## இந்தியாவின் நிகர அந்நிய நேரடி முதலீடு 2024-25

- இந்தியாவில் நிகர அந்நிய நேரடி முதலீடு (FDI) ஆனது, 2024-25 ஆம் ஆண்டின் முதல் 10 மாதங்களில் (ஏப்ரல் 2024-ஜனவரி 2025) 1.4 பில்லியன் டாலராகக் குறைந்துள்ளது என்ற நிலையில் இது ஓராண்டிற்கு முன்னதாக 11.5 பில்லியன் டாலராக இருந்தது.
- இருப்பினும், மொத்த அந்நிய நேரடி முதலீடு உயர்ந்தே உள்ளது என்பதோடு 2024 ஆம் ஆண்ட ஏப்ரல் முதல் 2025 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் வருடாந்திர வளர்ச்சியுடன் 67.7 பில்லியன் டாலராக இருந்தது.
- இது 2023 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் முதல் 2024 ஆம் ஆண்டு ஜனவரி மாத காலக் கட்டத்தில் 60.2 பில்லியன் டாலராக இருந்தது.
- இந்தியாவில் நேரடி முதலீடு செய்தவர்களின் பணம் அனுப்புதல் / முதலீடு திரும்பப் பெறுதல் ஆனது 2024-25 ஆம் ஆண்டின் 10 மாதக் காலத்தில் சுமார் 46.1 பில்லியன் டாலராக உயர்ந்துள்ளது.
- வெளிநாடுகளில் உள்ள இந்திய நிறுவனங்களால் மேற்கொள்ளப்பட்ட வெளிநாட்டு முதலீடுகள், அதாவது, வெளிநாடுகளில் மேற்கொள்ளப்படும் FDI ஆனது, 2024 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் முதல் 2025 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் வரை 20.2 பில்லியன் டாலராக கடுமையாக உயர்ந்தது என்பதோடு இது ஓராண்டிற்கு முன்னதாக சுமார் 11.8 பில்லியன் டாலராக இருந்தது.
- இந்தக் காலக் கட்டத்தில் சிங்கப்பூர், மொரீஷியஸ், அமெரிக்கா, ஐக்கிய அரபு அமீரகம் மற்றும் நெதர்லாந்தில் இருந்து 75 சதவீதத்திற்கும் அதிகமான வருவாய் ஈட்டப்பட்டது.
- NRI வைப்புத் திட்டங்களில் வெளிநாட்டு இந்தியர்களிடமிருந்து வரும் பண வரவானது ஆண்டிற்கு 40.82 சதவீதம் அதிகரித்துள்ளது.
- 2024 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் முதல் 2025 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் வரையிலான காலக் கட்டத்தில் இது சுமார் 10.16 பில்லியன் டாலரில் இருந்து சுமார் 14.30 பில்லியன் டாலராக உயர்த்தப் பட்டுள்ளது.

## இந்தியாவின் புகையிலை ஏற்றுமதி 2024/25

- மிகவும் அதிகரித்து வரும் உலகளாவிய தேவை காரணமாக இந்தியாவின் புகையிலை ஏற்றுமதி கடந்த நான்கு ஆண்டுகளில் டாலர் மதிப்பின் அடிப்படையில் இரட்டிப்பாகி உள்ளது.
- 2021-22 ஆம் ஆண்டில் 923 மில்லியன் டாலராக இருந்த இந்தியாவின் ஏற்றுமதி மதிப்பு ஆனது, நடப்பு நிதியாண்டில் பிப்ரவரி மாதம் வரையில் 1,840 மில்லியன் டாலருக்கும் அதிகமாக அதிகரித்துள்ளது.
- மார்ச் மாத இறுதிக்குள் அவை 2 பில்லியன் டாலரைத் தொடும் என்று எதிர்பார்க்கப் படுகிறது.
- இங்கு புகையிலை ஏற்றுமதியானது 2024-25 ஆம் ஆண்டின் ஏப்ரல்-பிப்ரவரி மாத காலக் கட்டத்தில் 38.59 சதவீத வளர்ச்சியுடன் 1,840.70 மில்லியன் டாலராக இருந்தது என்ற ஒரு நிலையில் இது ஓராண்டிற்கு முன்னதாக 1,328.17 மில்லியன் டாலராக இருந்தது.
- புகையிலை ஏற்றுமதியானது பிப்ரவரி மாதத்தில் 141.80 மில்லியன் டாலராக (111.87 மில்லியன் டாலர்) இருந்தது.

## 2024–25 ஆம் நிதியாண்டில் இந்தியாவின் நிலக்கரி உற்பத்தி

- இந்தியாவானது 1 பில்லியன் டன் (bt) என்ற அளவிலான வருடாந்திர நிலக்கரி உற்பத்தி அளவினைக் கடந்து 1.03 பில்லியன் உற்பத்தியினை எட்டியுள்ளது.
- இது 2023-24 ஆம் ஆண்டில் பதிவான சுமார் 953.3 மில்லியன் டன்கள் என்ற மொத்த உற்பத்தியினை விட 5.24 சதவீதம் அதிகமாகும்.
- சீனாவிற்கு அடுத்தபடியாக இந்தியாவானது இரண்டாவது மிகப்பெரிய ஒரு நிலக்கரி உற்பத்தியாளராக உள்ளது என்பதோடு மேலும் அதன் மின்சாரத் தேவையில் சுமார் 75 சதவீதத்தினைப் பூர்த்தி செய்ய நிலக்கரி உற்பத்தியினைச் சார்ந்துள்ளது.
- இந்திய நாடானது, இந்தோனேசியா மற்றும் ஆஸ்திரேலியா போன்ற நாடுகளிலிருந்து உயர் தர நிலக்கரியை இறக்குமதி செய்கிறது.

## IBC தொடர்பான 4 அம்ச செயல் திட்டம்

- நிதித்துறைக்கான நிலைக்குழுவானது, மத்திய இயங்கலை தளம் மூலமான ஒரு தீர்வு காணல் திட்டங்களுக்கான நேரடிச் சமர்ப்பிப்பு முறையைச் செயல்படுத்துமாறு பெரு நிறுவன விவகார அமைச்சகத்திற்கு (MCA) உத்தரவிட்டுள்ளது.
- இந்த நடவடிக்கையானது சமர்ப்பிப்பு செயல்பாட்டில் இரகசியத் தன்மையை உறுதி செய்வதையும், சில தரப்பினருக்கு மட்டும் செல்லும் சில தேவையற்றப் பலன்களைத் தடுப்பதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- 4 அம்சங்கள்:
  - தீர்வு காணல் திட்டங்களுக்கான நேரடிச் சமர்ப்பிப்பு முறையைச் செயல்படுத்தச் செய்தல்:
  - தீர்வு வழங்கீட்டு நிபுணர்களின் பங்கு மற்றும் பொறுப்புணர்வை மேம்படுத்துதல்;
  - வழக்குத் தீர்வு காண்பதற்கான ஒரு காலக்கெடுவை மிகவும் வெளிப்படையாகக் கண்காணித்தல் மற்றும்
  - கடன் வழங்குநர்கள் குழுவின் (CoC) கட்டமைப்பை மதிப்பாய்வு செய்தல்.
- நொடிப்பு நிலை மற்றும் திவால்நிலைக் குறியீடு (IBC) திவால்நிலைத் தீர்வுக்கான காலக்கெடு மற்றும் கடன் வழங்குநர் சார்ந்த செயல்முறையை வழங்குவதை முக்கிய நோக்கமாகக் கொண்டுள்ளது.
- நொடிப்பு நிலை என்பது தனி நபர்கள் அல்லது நிறுவனங்கள் நிலுவையில் உள்ள தங்கள் கடன்களைத் திருப்பிச் செலுத்த முடியாத சூழ்நிலையைக் குறிக்கிறது.
- திவால்நிலை என்பது திவாலான, அதாவது தனது கடனை அடைக்க முடியாத ஒரு நபர் அல்லது நிறுவனத்திற்கு, தகுதி வாய்ந்த நீதிமன்றத்தினால் அறிவிக்கப்பட்ட சட்டப் பூர்வ அந்தஸ்து நிலையைக் குறிக்கிறது.

## சீனத் தயாரிப்புகள் மீதான இறக்குமதிக் குவிப்புத் தடுப்பு வரி

- 2025 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் இயல்பான விலையை விட குறைவாக சீனாவில் இருந்து இந்தியாவுக்கு ஏற்றுமதி செய்யப்பட்ட சுமார் ஐந்து தயாரிப்புகளுக்கு இந்தியா இறக்குமதிக் குவிப்புத் தடுப்பு வரியினை விதித்துள்ளது.
- இந்த இறக்குமதிக் குவிப்புத் தடுப்பு வரிகள் ஆனது, குறைவான காந்த நீக்குத்திறன் கொண்ட இரும்பு உள்ளகங்கள், வெற்றிட நிரப்பு அடிப்படையில் வெப்பக் காப்பிடப் பட்ட

குடுவைகள், அலுமினியத் தகடு, ட்ரைக்ளோரோ ஐசோசயனூரிக் அமிலம் (நீர் சுத்திகரிப்புக்குப் பயன்படுத்தப்படும் அமிலம்) மற்றும் பாலி வினைல் குளோரைடு கூழ்ம நெய்மம் (பிசின்) போன்றத் தயாரிப்புகளுக்காக விதிக்கப்பட்டன.

## இந்தியாவில் நிலவும் உள்நாட்டு புலம்பெயர்வின் விளைவுகள்

- குறைவான வருமானம் கொண்ட மாநிலங்களிலிருந்து அதிக வருமானம் கொண்ட மாநிலங்களுக்கு உழைப்பாளர்கள் புலம்பெயர்வதன் விளைவாக நாட்டின் தெற்கு மாநிலங்களான கேரளா மற்றும் தமிழ்நாடு போன்ற அதிக வருமானம் கொண்ட மாநிலங்களில் அதிகப் பணவீக்கம் ஏற்படுகிறது.
- சில்லறை விற்பனை விலைகளின் பிராந்திய வாரியான பகுப்பாய்வு ஆனது, தென் மாநிலங்கள் காய்கறிகள், சிறு தானியங்கள் மற்றும் பெரும்பாலான பருப்பு வகைகள் போன்ற பொருட்களுக்கான விலையில் அதிக உயர்வுப் போக்கைக் காட்டுகின்றன என்பதைக் குறிப்பிடுகிறது.
- தெற்கு மற்றும் கிழக்குப் பிராந்தியங்களில் அதிகப் பணவீக்கப் போக்குகள் உள்ள நிலையில் வடகிழக்கு மற்றும் மேற்குப் பிராந்தியங்கள் குறைவான பணவீக்கத்தைக் கொண்டுள்ளன.
- பெருந்தொற்றுக்குப் பிந்தையக் காலத்தில் (2021 முதல் 2025 ஆம் நிதியாண்டு வரை), வடகிழக்குப் பகுதிகளில் பணவீக்கம் 3.4% குறைந்துள்ளது, அதே நேரத்தில் தெற்குப் பிராந்தியத்தில் இது 2.6% மட்டுமே குறைந்தது.
- 2021 மற்றும் 2025 ஆம் நிதியாண்டு வரையிலான காலக் கட்டத்தில் 35 மாநிலங்கள் / ஒன்றியப் பிரதேசங்களில், தமிழ்நாட்டின் பணவீக்கம் ஆனது கடந்த 13 ஆண்டுகளுள் 9 ஆண்டுகளில் அகில இந்தியப் பணவீக்க அளவினை விட அதிகமாக இருந்தது.
- குஜராத் மற்றும் பஞ்சாப் மாநிலங்கள் கடந்த 13 ஆண்டுகளுள் 9 ஆண்டுகளில் அகில இந்தியப் பணவீக்க அளவினை விட குறைந்தப் பணவீக்கத்தைக் கொண்டிருந்தன.
- இந்திய மாநிலங்களின் விற்பனை வரி வசூலில் தென் மாநிலங்கள் 30% என்ற அதிக பட்ச பங்கைக் கொண்டுள்ளன, அதைத் தொடர்ந்து வடக்குப் பகுதியானது அதிகப் பங்கினை கொண்டுள்ளது.
- மாநிலங்களில், பிப்ரவரி மாதத்தில் கேரளா 7.3% என்ற மிக அதிக நுகர்வோர் விலைக் குறியீட்டுப் பணவீக்க விகிதத்தினையும், அதைத் தொடர்ந்து சத்தீஸ்கர் 4.9% என்ற விகிதத்தினையும் கொண்டுள்ளது.

## BHIM 3.0

- இந்தியத் தேசியக் கொடுப்பனவுக் கழகத்தின் (NPCI) -BHIM சேவை வழங்கீட்டுக் கழக (NBSL) நிறுவனம் ஆனது, பாரத் பண வழங்கீட்டு இடைமுகச் செயலி (BHIM) 3.0 என்பதை அறிமுகப் படுத்தியுள்ளது.
- மேம்பட்ட அணுகல், நிதி மேலாண்மைச் செயற்கருவிகள் மற்றும் வணிகங்களுக்கான பிரத்தியேக சலுகைகள் மூலம் தடையற்ற மற்றும் பயனருக்கு உகந்த அனுபவத்தினை வழங்குவதை BHIM 3.0 நோக்கமாகக் கொண்டுள்ளது.
- அதிக எண்ணிக்கையிலான பயன்பாட்டாளர்களுக்குச் சேவை வழங்குவதற்காக என தற்போது 15க்கும் மேற்பட்ட இந்திய மொழிகளில் இந்த வசதி கிடைக்கப் பெறுகிறது.

# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

## சூரிய வெப்பத் துளைகள்

- ஒரு புதிய ஆய்வு ஆனது, சூரிய வெப்பத் துளைகளுக்குள் உள்ள வெப்ப மற்றும் காந்தப் புல கட்டமைப்புகளின் இயற்பியல் அளவுருக்களை துல்லியமாக மதிப்பிட்டுள்ளது.
- அவை விண்வெளியின் வானிலை மற்றும் இந்தியக் கோடைக் காலத்திய பருவமழைப் பொழிவில் குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்துகின்றன.
- வெவ்வேறு அட்சரேகைகளில் உள்ள வெப்பத் துளைகளின் நிலவும் ஒரு வெப்பநிலைக் கட்டமைப்பில் எவ்விதக் குறிப்பிடத்தக்க மாறுபாடும் இல்லை.
- மேலும், வெப்பத் துளைகளுக்குள் உள்ள காந்தப்புலக் கட்டமைப்பின் வலிமையானது சூரியனின் நடுக்கோட்டு ரேகையிலிருந்து துருவங்கள் வரையில் அதிகரிப்பதால் அது அட்சரேகைக்கு ஏற்ப மாறுபடும்.
- வெப்பக் கட்டமைப்பைப் புரிந்து கொள்வது, வெப்பத் துளைகளின் தோற்றத்தினைக் குறித்து மதிப்பிட அறிவியலாளர்களுக்கு உதவுகிறது.

## செவ்வாய்க் கோளில் ஆதிகாலப் பெருங்கடல் இருந்ததற்கான சான்றுகள்

- சீனாவின் ஜுரோங் உலாவிக் கலமானது, செவ்வாய்க் கிரகத்தின் கரடுமுரடான நிலப் பரப்பில் ஒரு புதிய கடற்கரையைக் கண்டுபிடித்துள்ளது.
- இந்தக் கடற்கரை ஆனது செவ்வாய்க் கிரகத்தின் மேற்பரப்பிற்கு அடியில் புதைந்து காணப் படுகிறது.
- இந்தக் கண்டுபிடிப்பானது, மிகத் தோராயமாக 3.5 முதல் 4 பில்லியன் ஆண்டுகளுக்கு முன்பு டியூடெரோனிலஸ் என்று அழைக்கப்படுகின்ற கருதுகோள் சார் பெருங்கடல் இருப்பதைக் குறிக்கும் சமீபத்திய சான்றாகும்.
- பூமி, செவ்வாய் மற்றும் சூரிய மண்டலத்தின் பிற கிரகங்கள் தோராயமாக சுமார் 4.5 பில்லியன் ஆண்டுகளுக்கு முன்பு உருவாகின.
- செவ்வாய்க் கிரகத்தின் வரலாற்றில் சுமார் ஒரு பில்லியன் ஆண்டுகளுக்குப் பிறகு, அந்தக் கிரகத்தின் காலநிலை வியத்தகு முறையில் மாறிய போது டியூட்டரோனிலஸ் மறைந்திருக்கும் என நம்பப்படுகிறது.

## கடற்படை கப்பல் எதிர்ப்பு எறிகணை

- இந்தியா அதன் முதல் வகையான கடற்படை கப்பல் எதிர்ப்பு எறிகணையை ஒடிசா கடற்கரையில் உள்ள சந்திப்பூரில் இருந்து ஏவி மிக வெற்றிகரமாக சோதனை செய்து உள்ளது.
- இது சந்திப்பூரில் உள்ள ஒருங்கிணைந்த சோதனை தளத்தில் இருந்து (ITR) அதன் முதல் வகையான கடற்படை கப்பல் எதிர்ப்பு எறிகணை (NASM-SR) ஆகும்.
- இந்த எறிகணையானது முனைய வழிகாட்டுதலுக்காக ஓர் உள்நாட்டு வரைபடமாக்க அகச்சிவப்பு தேடு கருவியினைப் பயன்படுத்துகிறது.

## முதுகெலும்புத் தசைநார் வலுவிழப்பு நோய்

- ஒரு இரண்டரை வயது சிறுமிக்கு மரபணு கோளாறுக்கான எந்தவித அறிகுறிகளும் இல்லாத முதுகெலும்பு தசைநார் வழுவிழப்பு நோயால் (SMA) பாதிக்கப்பட்டுள்ளார்.

- இந்தப் பெண் கருப்பையில் இருக்கும்போதே இந்த நோய்க்கு சிகிச்சையைப் பெற்ற உலகின் முதல் நபர் ஆவார்.
- பலவீனப்படுத்தும் ஒரு மரபணு நிலையான இந்த SMA ஆனது உடல் இயக்கத்தைக் கட்டுப்படுத்தும் இயக்க நியூரான்களைப் பாதித்து, படிப்படியாக தசை பலவீனத்திற்கு வழி வகுக்கிறது.
- 10,000 பிறப்புகளில் ஒரு குழந்தைக்கு இந்த நிலையின் ஏதோ ஒரு வகையான பாதிப்பு உள்ளது.

## நாசாவின் சந்திர வழிகாட்டி

- நாசாவின் சந்திர வழிகாட்டி (Trailblazer) கருவியானது புவியில் உள்ள சில கட்டுப்பாட்டு அமைப்புகளுடன் தகவல் தொடர்பினை இழந்துள்ளது.
- சந்திர டிரெயில்பிளேசர் ஆனது, நிலவின் மேற்பரப்பில் நீரின் மிகுதி மற்றும் பரவல் பற்றிய நமது புரிதலை விரிவுபடுத்தும் நோக்கம் கொண்டு அனுப்பப் பட்ட ஒரு சிறிய செயற்கைக்கோள் ஆகும்.
- இந்த விண்கலம் ஆனது, உயர் தெளிவுத்திறன் கொண்ட வரைபடங்களை உருவாக்கும் வகையில் வடிவமைக்கப் பட்டுள்ளது என்பதோடு இது நிலவில் தண்ணீர் எங்கு, எந்த வடிவத்தில், எந்த அளவில் உள்ளது என்பதை தீர்மானிக்க உதவும்.

## Athena சந்திர தரையிறங்கு கலம்

- Intuitive Machines என்ற நிறுவனத்தின் ஏதீனா மற்றும் ஜப்பானிய தனியார் நிறுவனத் திட்டமான ரெசிலியன்ஸ் ஹகுடோ-R2 ஆகியவை நிலவில் தரையிறங்க உள்ள அடுத்த சந்திர தரையிறங்கு கலங்கள் ஆகும்.
- ஏதீனா கலமானது, ஒடிஸியஸ் என்ற தரையிறங்கு விண்கலத்தின் வெற்றி வாய்ப்பை மேம்படுத்துவதனை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- 1972 ஆம் ஆண்டில் அப்பல்லோ 17 கலத்திற்குப் பிறகு, நிலவில் மிதமான வேகத்திலான தரையிறக்கத்தை மேற்கொண்ட முதல் அமெரிக்க கலம் ஒடிஸியஸ் ஆகும்.
- ஜப்பான் நாட்டின தனியார் நிறுவனமான ஐஸ்பேஸால் இயக்கப்படும் ரெசிலியன்ஸ் ஹகுடோ-R2 என்ற விண்கலம் ஆனது, நிலவினை நோக்கி மறைமுகமானப் பாதையில் பயணிக்கிறது.
- ஹகுடோ-R1 விண்கலத்தின் இம்பாக்டர் கருவி மிகவும் வெற்றிகரமாக நிலை நிறுத்தப் பட்டதைத் தொடர்ந்து, நிலவில் தரையிறங்குவதற்காக என ஜப்பானின் இரண்டாவது பெரும் முயற்சியாக இந்தப் பணி மேற்கொள்ளப்படுகிறது.

## ப்ளூ கோஸ்ட் திட்டம் 1

- ஃபயர்ஃபிளை ஏரோஸ்பேஸ் எனும் ஓர் அமெரிக்க நிறுவனம் ஆனது, தனது விண்கலத்தினை நிலவில் வெற்றிகரமாக தரையிறக்கியுள்ளது.
- இது நிலவின் வடகிழக்குப் பக்கத்திற்கு அருகிலுள்ள மேரே கிரிசியத்தில் மோன்ஸ் லாட்ரெய்லெ எனப்படும் எரிமலை உருவாக்கத்திற்கு அருகில் உள்ளது.
- இந்த மைல்கல்லை எட்டிய ஒரு தனியார் நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட்ட இரண்டாவது ஆய்வுப் பயணத்தினை இது குறிக்கிறது, மேலும் அதனை சீர் முறையில்

செய்து முடித்த முதல் ஆய்வுப் பயணமும் இதுவாகும்.

- சோவியத் ஒன்றியம், அமெரிக்கா, சீனா, இந்தியா மற்றும் ஜப்பான் ஆகிய ஐந்து நாடுகள் மட்டுமே நிலவில் மிதமான முறையில் தரையிறக்கங்களை மேற்கொண்டு உள்ளன.

## ஆதித்யா-L1 – கர்னெல் எனப்படும் சூரியச் சுடரின் முதல் படம்

- இந்தியாவின் ஆதித்யா-L1 ஆய்வுக் கலமானது 'கர்னெல்' எனப்படும் சூரியச் சுடரின் முதல் படத்தைப் பிடித்துள்ளது.
- இந்த அரிய பதிவானது, சூரிய வளிமண்டலத்தின் கீழ் மட்டத்தில் மேற்கொள்ளப் பட்டது.
- இந்தப் படம் ஆனது ஒளிக்கோளம் மற்றும் நிறக் கோளத்தில் நிகழும் ஒரு நிகழ்வைக் காட்டுகிறது.

## மேப்பிள் சிரப் சிறுநீர் நோய்

- மேப்பிள் சிரப் சிறுநீர் நோய் (MSUD) எனப்படும் பலவீனமாக்கும் மரபணு கோளாறுக்கு அறிவியலாளர்கள் ஒரு புதிய மரபணு சிகிச்சையை உருவாக்கியுள்ளனர்.
- இந்தச் சிகிச்சையானது நோயுடன் பிறந்தக் கன்றுக் குட்டியில் கொடிய அறிகுறிகள் மீண்டும் ஏற்படுவதைத் தடுக்கலாம்.
- சில கிளைகள் கொண்ட சங்கிலித் தொடர் ஆல்பா-கீட்டோ அமில டீஹைட்ரஜனேஸ் கட்டமைப்பின் (BCKDH) புரதச் சார்பு அலகுகளை நன்கு குறியாக்கம் செய்யும் மூன்று மரபணுக்களில் ஏற்படும் பிறழ்வுகளினால் MSUD உருவாகிறது.

## ப்ளூ ஆரிஜின் நிறுவனத்தின் சுற்றுலா திட்டம்

- ஒரு பில்லியனரான ஜெஃப் பெசோஸின் விண்வெளி சார் நிறுவனமான ப்ளூ ஆரிஜின் என்ற நிறுவனம் அதன் 10வது விண்வெளிச் சுற்றுலாத் திட்ட நோக்கிலான கலத்தினை விண்ணில் ஏவியது.
- இது இந்திய வம்சாவளியைச் சேர்ந்த துஷார் மேத்தா உட்பட ஆறு பயணிகளை விண்வெளிக்கு அனுப்பியது.
- நியூ ஷெப்பர்ட் (NS) என்ற விண்கலத்தில் பயணிக்கும் ஆறு உறுப்பினர்கள் கொண்ட ஒரு குழுவிற்கு "Perfect 10" என்று பெயரிட்டுள்ளனர்.
- கோபி தோட்டகுராவுக்குப் பிறகு ப்ளூ ஆரிஜின் நிறுவனத்தின் கலத்தில் பயணித்த இரண்டாவது இந்திய வம்சாவளியைச் சேர்ந்த நபர் மேத்தா ஆவார்.

## போஸ் உலோகம்

- அறிவியல் ஆராய்ச்சியாளர்கள் சமீபத்தில் போஸ் உலோகம் என்ற ஒரு சாத்தியமான புதிய பருப்பொருள் நிலையைக் கண்டறிந்துள்ளனர்.
- $NbSe_2$ ஆனது, கூடுதல் 'திறன்களுடன்' குறைந்த வெப்ப நிலையில் ஒரு மீக்கடத்தியாக மாறுகிறது.
- ஒரு போஸ் உலோகம் என்பது ஒரு வகையான முரண்பாடான உலோக நிலை (AMS) ஆகும்.

## சந்திரயான்-3 - நிலவின் மேற்பரப்பிற்கு அடியில் பனிக்கட்டி

- சந்திரயான்-3 தரவுகளின் படி, நிலவின் மேற்பரப்பிற்கு அடியில் காணப்படும் பனிக் கட்டி ஆனது முன்பு நம்பப்பட்டதை விட அதிகமாக இருக்கலாம்.
- இஸ்ரோவின் சந்திரயான்-3 கலமானது 2023 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 23 ஆம் தேதியன்று நிலவின் தென் துருவத்திற்கு அருகில் மிக வெற்றிகரமாக மிதமான வேகத்தில் தரை இறங்கியது.
- ChaSTE கருவியானது நிலவின் மேற்பரப்பின் வெப்பக் கடத்துத்திறன் மற்றும் வெப்ப நிலையை அளவிடுவதற்காக வடிவமைக்கப்பட்டது.
- இது மேற்பரப்பிலிருந்து 10 செ.மீ ஆழம் வரையில் காணப்படும் ஒரு வெப்பநிலையை அளவிட்டது.
- 'சிவ சக்தி தளம்/புள்ளி' என்று பெயரிடப்பட்ட கலத்தின் தரையிறக்க தளத்தில், வெப்ப நிலையானது பகலில் 82 டிகிரி செல்சியஸ் முதல் இரவில் சுமார் -170 டிகிரி செல்சியஸ் வரையிலும் இருந்தது.

## SE2000 பகுதியளவு மீக்குளிர் நிலையிலான இயந்திரம்

- இஸ்ரோ விண்வெளி நிறுவனமானது, சமீபத்தில் பகுதியளவு மீக்குளிர் நிலையிலான இயந்திரத்தின் (SE2000) செயல் திறன் சோதனையை வெற்றிகரமாக நடத்தியது.
- இந்த சோதனையானது, முக்கியக் கூறு சோதனை (PHTA) என்றும், ஒரு பகுதியளவு மீக் குளிர் நிலையிலான இயந்திரங்களை உருவாக்கச் செய்வதற்கான முதல் வன்பொருள் சோதனை என்றும் அழைக்கப்படுகிறது.

## பிரம்மாஸ்திரா எறிகணை 2025

- இந்திய அறிவியலாளர்கள், மணிக்கு 12,144 கிலோ மீட்டர் வேகத்தில் பயணிக்கும் ஒரு நவீன கால 'பிரம்மாஸ்திரா' எறிகணையினை உருவாக்கியுள்ளனர்.
- மிக நீண்ட தூர தாக்குதல் வரம்புடைய கப்பல் எதிர்ப்பு எறிகணை (LRAShM) என்று பெயரிடப் பட்ட இந்த ஆயுதம் ஆனது, பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பினால் உருவாக்கப்பட்ட ஒரு அதி மீயொலி இழைவியக்க எறிகணை ஆகும்.
- 10 மாக் வேகத்தில் இயங்குகின்ற இந்த எறிகணை ஆனது ஒலியின் வேகத்தை விட 10 மடங்கு வேகமாக இயங்குகிறது.
- 1,000 கிலோ மீட்டர் தாக்குதல் வரம்பைக் கொண்ட சீனாவின் DF-17 போலல்லாமல், இந்தியாவின் LRAShM 1,500 கிலோ மீட்டர் வரையிலான தாக்குதல் வரம்பைக் கொண்டு உள்ளது.

## POLG மைட்டோகாண்ட்ரியல் நோய்

- லக்சம்பர்க் நாட்டின் இளவரசர் ஃபிரடெரிக் சமீபத்தில் POLG மைட்டோகாண்ட்ரியல் நோயால் உயிரிழந்தார்.
- இது 5,000 பேரில் ஒருவரைப் பாதிக்கும் ஓர் அரிய மரபணு கோளாறு ஆகும்.

- POLG என்பது உடலின் செல்களின் ஆற்றலை இழக்கச் செய்யும் ஒரு மரபணு சார்ந்த மைட்டோகாண்ட்ரியல் கோளாறு ஆகும்.
- இது பல் உறுப்பு செயலிழப்பு மற்றும் இறுதியில் உயிரிழப்பிற்கு வழிவகுக்கிறது.
- அவருக்கு இந்த நோய்ப் பாதிப்பு இருந்ததைக் கண்டறிந்ததைத் தொடர்ந்து, அவர் 2022 ஆம் ஆண்டில் POLG அறக்கட்டளையை நிறுவினார்.
- இந்த அறக்கட்டளையானது, இதற்கான ஆராய்ச்சியை மிக நன்கு ஆதரிப்பதையும் இந்த நோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு விழிப்புணர்வை நன்கு அதிகரிப்பதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.

## நீரின் நான்காவது வடிவம்

- Plastic Ice VII எனப்படுகின்ற நான்காவது வடிவப் பனிக்கட்டியை அறிவியலாளர்கள் தற்போது உறுதிப்படுத்தியுள்ளனர்.
- இந்த அரிய ஒரு நிலையானது நீர் மூலக்கூறுகள் திடமான அமைப்பில் இருக்கும் போது தடையின்றி சுழல அனுமதிக்கிறது.
- வழக்கமான ஒரு பனிக்கட்டியைப் போலல்லாமல், Plastic Ice VII ஆனது ஒரு கடினமான அமைப்பைக் கொண்டிருந்தாலும், மூலக்கூறு சுழற்சியை அனுமதிக்கிறது.

## பெரிய அளவிலான நிலை சார் தொகுப்பு ரேடார் – சீனா

- சீனாவின் யுனான் மாகாணத்தில் ஓர் ஆற்றல் வாய்ந்த பெரிய அளவிலான நிலை சார் தொகுப்பு ரேடார் (LPAR) கருவியினை நிலைநிறுத்தியுள்ளது.
- சுமார் 5,000 கிலோ மீட்டர்களுக்கு மேலான கண்டறியும் வரம்பைக் கொண்ட இந்த அமைப்பு ஆனது, பெய்ஜிங்க் இந்தியாவின் ஏறிகணை ஏவுதல்களை நிகழ்நேரத்தில் கண்காணிப்பதற்கு வழி வகுக்கிறது.
- இந்திய ஏறிகணை சோதனைத் தளம் ஆனது, சீனாவின் புதிய LPAR நிலையத்திலிருந்து தென்மேற்கே சுமார் 2,000-2,200 கிமீ தொலைவில் அமைந்துள்ளது.

## சுடரொளியற்ற சூரிய வெப்ப உமிழ்வு 2025

- சூரிய வளிமண்டலத்திலிருந்து ஒரு சுடரொளியற்ற சூரிய வெப்ப உமிழ்வு (CME) பற்றிக் கண்டறிந்துள்ளதாக அறிவியலாளர்கள் தெரிவித்துள்ளனர்.
- ஆதித்யா-L1 கலத்தில் உள்ள சூரியனின் கட்புலனாகும் ஒரு பகுதியின் வெப்ப உமிழ்வு கரொனா அடுக்கு ஆய்வுக் (VELC) கருவியின் உதவியுடன் இது கண்டறியப்பட்டது.

## SPHEREx விண்வெளி தொலைநோக்கி – நாசா

- பேரண்டத்தின் தோற்றுருவினை ஆராய்வதற்காகவும், பால்வெளி அண்டத்தின் புலப் படாத நீர் இருப்புப் பகுதிகளைத் தேடுவதற்காகவும் ஒரு நாசா தொலைநோக்கியானது விண்ணில் ஏவப்பட்டது.
- SPHEREx என்பது இந்தப் பேரண்டத்தின் உருவாக்கம் நிறமாலை ஒளி அளவியல், மறு அயனியாக்கம் மற்றும் பனி இருப்பு பற்றி அறிவதற்கான ஆய்வு என்பதன் சுருக்கம் ஆகும்.

- இது இரண்டு ஆண்டுகளில் முழு வானத்தையும் நான்கு முறைகள் என ஆய்வு செய்து வரைபடமாக்க உள்ளது.
- SPHEREx ஆனது ஒளியியல் மற்றும் அகச்சிவப்பு ஆகிய இவ்விரண்டு வகையான அண்ட ஒளியைக் கண்டறியும் அதே வேளையில் பேரண்டத்தினையும் வரைபடமாக்கும்.
- இது பால் வெளி அண்டத்தில் உள்ள உயிரியல் மூலக்கூறுகள் (கார்பன், ஹைட்ரஜன் மற்றும் ஆக்ஸிஜன் போன்றவை) என்றும் அழைக்கப்படும் நீர் மற்றும் உயிர்களை உருவாக்கும் மூலக்கூறுகளையும் அடையாளம் காணும்.

## சந்திரயான்-5 திட்டம்

- மத்திய அரசானது, நிலவினை ஆய்வு செய்வதற்காக வேண்டி சந்திரயான்-5 என்ற ஒரு திட்டத்திற்கு சமீபத்தில் ஒப்புதல் அளித்துள்ளது.
- சந்திரயான்-5 திட்டமானது, நிலவின் மேற்பரப்பை ஆய்வு செய்வதற்காக 250 கிலோ எடையுள்ள உலாவிக் கலத்தினை சுமந்து செல்ல உள்ளது.
- 2008 ஆம் ஆண்டில் வெற்றிகரமாக விண்ணில் ஏவப்பட்ட சந்திரயான்-1 கலமானது, நிலவின் வேதியியல், கனிமவியல் மற்றும் ஒளி சார் ரீதி புவியியல் வரைபடங்களை உருவாக்கியது.
- 2019 ஆம் ஆண்டில் சந்திரயான்-2 திட்டத்தின் கலமானது நிலவில் தரையிறங்கும் போது நிலவின் மேற்பரப்பில் மோதி இறங்கியதையடுத்து அந்தத் திட்டம் முடிவுக்கு வந்தது.
- சந்திரயான்-3 கலமானது, 2023 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 23 ஆம் தேதியன்று நிலவின் தென் துருவப் பகுதியில் மித வேகத்திலான ஒரு தரையிறக்கத்தை மிக வெற்றிகரமாக மேற் கொண்டது.
- சந்திரயான்-4 விண்வெளிக் கலமானது, 2027 ஆம் ஆண்டில் விண்ணில் ஏவப்படும் என்று எதிர்பார்க்கப் படுகிறது.
- நிலவில் இருந்து நிலவு மண் மாதிரிகளைச் சேகரித்து மேலும் ஆய்வுக்காகப் பூமிக்குக் கொண்டு வருவதை இது நோக்கமாகக் கொண்டிருக்கும்.

## விக்ரம் 3201 மற்றும் கல்பனா 3201

- இஸ்ரோ அமைப்பு மற்றும் சண்டிகரில் உள்ள குறைக்கடத்தி ஆய்வகம் (SCL) ஆகிய இரண்டும் இணைந்து விண்வெளித் திட்டப் பயன்பாடுகளுக்காக என பிரத்தியேகமாக வடிவமைக்கப் பட்ட இரண்டு அதிநவீன 32-பிட் நுண்செயலிகளை உருவாக்கியுள்ளன.
- விக்ரம் 3201 என்பது முழுமையாக உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட இந்தியாவின் முதலாவது 32-பிட் நுண்செயலி ஆகும் என்பதோடு இது ஏவுகணை வாகனங்களின் ஏவுதலின் போதான கடுமையான சூழ்நிலைகளில் பயன்படுத்த தகுதியுடையது.
- கல்பனா 3201 ஆனது, திறந்த மூல மென்பொருள் கருவிகளுடன் இணங்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது என்பதோடு அது பறக்கும் கலன்களின் மென்பொருளுடன் இணங்கி இயங்குகின்றதா இல்லையா என்றும் பரிசோதிக்கப்பட்டுள்ளது.

## கொல்கத்தாவில் மனித கொரோனா வைரஸ் HKU1

- கொல்கத்தாவில் ஒரு நோயாளி மனித கொரோனா வைரஸ் அல்லது HKU1 எனப்படும் ஒரு வகையான கொரோனா வைரஸால் பாதிக்கப்பட்டுள்ளார்.

- HKU1 வைரசானது பொதுவாக லேசான சுவாச கோளாறுகளுடன் தொடர்புடையதாக இருந்தாலும், இதில் பெருந்தொற்று ஏற்படுவதற்கான சாத்தியக்கூறு இல்லை.
- HKU-1 ஆனது, முதன்முதலில் 2005 ஆம் ஆண்டில் ஓர் அரிய தனிமைப்படுத்தல் தேவைப் படும் நோயாக அடையாளம் காணப்பட்டது.
- இது முக்கியமாக நுரையீரல் மற்றும் சுவாச மண்டலத்தைப் பாதிக்கிறது.

## இளஞ்சிவப்பு காய்ப்புழு பாதிப்பு எதிர்ப்புத் திறன் கொண்ட GM பருத்தி வகை

- லக்னோவில் உள்ள மத்திய அறிவியல் மற்றும் தொழில்துறை ஆராய்ச்சி சபையின் தேசிய தாவரவியல் ஆராய்ச்சி நிறுவனத்தின் (CSIR-NBRI) அறிவியலாளர்கள் உலகின் முதல் மரபணு மாற்றப்பட்ட (GM) பருத்தி வகையினை உருவாக்கியுள்ளதாகக் கூறியு உளனர்.
- இது இளஞ்சிவப்புக் காய்ப்புழு (PBW) பாதிப்பிற்கான முழு எதிர்ப்புத் திறன் கொண்டது.
- PBW என்பது இந்தியா, ஆப்பிரிக்கா மற்றும் ஆசியாவில் பருத்திப் பயிரைப் பாதிக்கும் ஒரு பேரழிவு தரும் பூச்சியாகும்.
- 2015-2016 ஆம் ஆண்டு முதல் மகாராஷ்டிரா, தெலுங்கானா, கர்நாடகா, குஜராத், ஆந்திரப் பிரதேசம் மற்றும் மத்திய மற்றும் தென்னிந்தியாவில் உள்ள பிற பருத்தி வளரும் பகுதிகளில் PBW தொற்று பதிவாகியுள்ளது.

## காந்தத்தின் மூன்றாவது வடிவம்

- மாற்று காந்தவியல் எனப்படும் மிக அரிதான மூன்றாவது வகை காந்தத்தின் முதல் உறுதியான ஆதாரத்தை அறிவியலாளர்கள் கண்டறிந்துள்ளனர்.
- ஒரு காந்தத்தின் மற்ற இரண்டு வடிவங்கள் ஃபெரோ/அயக்காந்தவியல் மற்றும் எதிர் அயக்காந்தவியல் ஆகியனவாகும்.
- மாற்று காந்தப் பொருட்கள் ஆனது, மற்ற இரண்டு வகைகளுக்கும் இடையில் உள்ள ஓர் அமைப்பைக் கொண்டுள்ளன.
- மாற்று காந்தங்களில், ஒவ்வொரு அலகும் அருகிலுள்ள காந்த அணுவுடன் ஒப்பிடும் போது சற்று முறுக்கப்பட்ட நிலையில் காணப்படும் என்பதோடு இதன் விளைவாக இது அயக்காந்தத்தன்மைக்கு ஒத்த பண்புகளைக் கொண்டிருக்கும்.
- மாற்றுக் காந்தங்கள் அயக்காந்த மற்றும் எதிர் அயக்காந்தப் பொருட்களின் சிறப்புப் பண்புகளை ஒருங்கே இணைந்தவாறு கொண்டுள்ளன.

## FireSat முன்னெடுப்பு

- காட்டுத்தீ அதிகரிப்பதற்கு முன்னதாக அவற்றைக் கண்டறிந்து நன்கு தடுப்பதற்காக என்று செயற்கைக் கோள்களைப் பயன்படுத்துவதை நோக்கமாகக் கொண்ட கூகுள் நிறுவனத்தின் ஆதரவு பெற்ற இந்த முன்னெடுப்பானது அதன் இலக்கை நோக்கி ஒரு படி முன்னேறியுள்ளது.
- FireSat திட்டத்தின் முதல் செயற்கைக்கோள் ஆனது புவித் தாழ்மட்ட சுற்றுப்பாதையில் (LEO) வெற்றிகரமாக நிலைநிறுத்தப்பட்டது.

- இந்த செயற்கைக்கோளானது இத்தகைய முதன் முதல் வகையான தொகுப்பில் உள்ள 50க்கும் மேற்பட்டவற்றில் முதன்மையானதாகும்.
- ஒரு வகுப்பறை அளவிலான (தோராயமாக 5×5 மீட்டர்) சிறிய காட்டுத் தீயைக் கூட கண்டறிந்து கண்காணிக்க செயற்கை நுண்ணறிவினைப் பயன்படுத்தும் வகையில் இது வடிவமைக்கப்பட்டுள்ளது.

### கயா திட்டத்தின் நிறைவு

- ஐரோப்பிய விண்வெளி முகமையின் ஐரோப்பிய விண்வெளிச் செயல்பாட்டு மையம் ஆனது, கயா விண்கலத்தின் சார்பு நிலை அமைப்புகளின் செயல்பாடுகளை நிறுத்தி, சூரியனைச் சுற்றிய ஒரு 'செயலிழப்பு சுற்றுப்பாதையினுள்' அதனை அனுப்பியுள்ளது.
- 2013 ஆம் ஆண்டில் விண்ணில் ஏவப்பட்ட இந்த விண்கலம் ஆனது, சுமார் இரண்டு பில்லியன் நட்சத்திரங்கள் மற்றும் பிற வானியல் பொருட்களின் நிலைகள், தூரங்கள், இயக்கங்கள் மற்றும் பண்புகளை வரைபடமாக்கியுள்ளது.
- இது பூமியிலிருந்து சுமார் 1.5 மில்லியன் கிலோமீட்டர் தொலைவில் உள்ள இரண்டாம் லக்ராஞ்சே புள்ளியில் நிலைநிறுத்தப்பட்டிருந்தது.

## சுற்றுச்சூழல் செய்திகள்

### கருப்பு நெகிழி மாசுபாடு

- கருப்பு நெகிழி என்பது பெரும்பாலும் கணினிகள், தொலைக்காட்சிகள் மற்றும் இதர உபகரணங்கள் போன்ற மறுசுழற்சி செய்யப் பட்ட சில மின்னணுக் கழிவுகளிலிருந்து தயாரிக்கப் படுகிறது.
- இந்த மின்னணுச் சாதனங்களில் பொதுவாக சுடர் தடுப்பு புரோமைன்; ஆண்டிமனி; மற்றும் ஈயம், காட்மியம் மற்றும் பாதரசம் போன்ற கன உலோகங்கள் போன்ற சில பொருட்கள் உள்ளன.

### ஃபென்டேல் எரிமலை வெடிப்பு

- எத்தியோப்பியாவில் உள்ள ஃபென்டேல் எரிமலை வளிமண்டலத்தில் மிக அதிக அளவு மீத்தேன் வாயுவினை வெளியேற்றியுள்ளது.
- இந்த எரிமலையானது ஆற்றல் வாய்ந்த பசுமை இல்ல வாயுவின் பெரிய பிழம்புகளை வெளியேற்றியதால், ஆராய்ச்சியாளர்கள் இந்த நிகழ்வை "பர்ப்" என்று விவரித்து உள்ளனர்.
- இந்த எரிமலை ஆனது ஒரு மணி நேரத்திற்கு 58 மெட்ரிக் டன் மீத்தேன் வாயுவினை வெளியேற்றியுள்ளது.
- மீத்தேன் ஆனது, 100 ஆண்டு காலத்தில் கார்பன் டை ஆக்சைடு வாயு உட்கிரகிக்கும் வெப்பத்தினை விட 28 மடங்கு அதிக வெப்பத்தைத் தேக்கி வைக்கிறது.
- இது உலக வெப்பமயமாதலுக்கு மிக அதிகளவுப் பங்கினை அளிக்கும் இரண்டாவது வாயுவாக உள்ளது.

- இது உலகின் மொத்தப் பசுமை இல்ல வாயுக்கள் உமிழ்வில் சுமார் 11% உமிழ்விற்கு காரணமாகும்.
- ஃபென்டேல் எரிமாலையானது அடிக்கடி வெடிக்காத எரிமலையாகும்.
- கடைசியாக 1820 ஆம் ஆண்டில் தான் இது வெடித்தது.

## சீனாவின் கடைசியாக எஞ்சியுள்ள காட்டு முதலைகள்

- சீனாவின் டிராகன் இனத்தின் உருவ அமைப்பிற்கு பயன்படுத்தப்படும் சிறிய முதலை இனமான சீன முதலை (அலிகேட்டர் சினென்சிஸ்) ஆனது மிகவும் கடுமையான அளவு அச்சுறுத்தல்களை எதிர் கொண்டு வருகிறது.
- சீன முதலை ஆனது, கிழக்கு சீனாவில் உள்ள நன்னீர் ஈரநிலங்களில் மட்டுமே காணப் படுகிறது.
- அவை முன்னர் மத்திய-கீழ் மட்ட யாங்சே மற்றும் மஞ்சள் நதிப் படுகைகளில் காணப் பட்டன.
- இன்று 200 காட்டு சீன முதலைகள் மட்டுமே காணப்படுகின்றன.

## இந்தியாவின் அதிக கழுகு எண்ணிக்கை

- சமீபத்தியக் கணக்கெடுப்பின் படி மத்தியப் பிரதேசத்தில் காணப்படும் கழுகுகளின் எண்ணிக்கை 12,981 ஆகக் கணக்கிடப்பட்டுள்ளது என்பதோடு இது கடந்த காலக் கணக்கெடுப்பை விட 2,136 அதிகரித்துள்ளது.
- 2024 ஆம் ஆண்டு கணக்கெடுப்பில், அம்மாநிலத்தில் உள்ள கழுகுகளின் எண்ணிக்கை 10,845 ஆகக் கணக்கிடப்பட்டது.
- கடந்த ஆறு ஆண்டுகளில், அம்மாநிலத்தில் உள்ள பறவை இனங்களின் எண்ணிக்கை 35 சதவீதம் அதிகரித்துள்ளது.
- 2019 ஆம் ஆண்டில், மத்தியப் பிரதேசத்தில் 8,397 கழுகுகள் இருந்தன, அதன் பின்னர் கழுகுகளின் எண்ணிக்கை சீராக அதிகரித்து வருகிறது.
- 2021 ஆம் ஆண்டில், அந்த மாநிலத்தில் உள்ள கழுகுகளின் எண்ணிக்கை 9,446 ஆக இருந்தது.
- சமீபத்தியக் கணக்கெடுப்பின்படி, மத்தியப் பிரதேசத்தில் ஏழு வகையான கழுகுகள் உள்ளன.
- அவற்றில் நான்கு உள்நாட்டு இனங்கள் மற்றும் மீதமுள்ள மூன்று இனங்கள் வலசை வருபவையாகும்.

## டூம்ஸ்டே மீன்

- "டூம்ஸ்டே மீன்" என்று பிரபலமாக அழைக்கப்படும் அரிய வகை துடுப்பு மீன் ஒன்று மெக்சிகோவின் பாஜா கலிபோர்னியா சுர் கடற்கரைக்கு அருகில் கண்டறியப்பட்டது.
- இந்த ஆழ்கடல் உயிரினம் ஆனது நீண்ட, நாடா போன்ற உடல் மற்றும் சில மின்னும் வெள்ளி நிற செதில்களைக் கொண்டதாகும்.
- ஜப்பானிய நாட்டுப்புறக் கதைகளில் துடுப்பு மீனுக்கு "ரியுகு நோ சுகாய்" அல்லது "கடல் கடவுளின் அரண்மனைத் தூதர்" என்ற புனைப்பெயர் உள்ளது.

- 17 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த இந்த நாட்டுப்புறக் கதையானது, துடுப்பு மீன் மேற் பரப்பிற்கு வருவது எதிர்கால இயற்கைப் பேரழிவுகளின் ஒரு முன்னெச்சரிக்கை என்று கூறுகிறது.

## CBD COP16 2025 - காலி நிதி

- ரோம் நகரில் நடைபெற்ற உயிரியல் பன்முகத் தன்மை உடன்படிக்கை (CBD) மீதான COP16 மாநாடானது, உலகளாவிய அளவில் வளங்காப்பு இலக்குகளுக்கு நிதியளிப்பது தொடர்பான வரலாற்றுச் சிறப்பு மிக்க ஒப்பந்தத்தினை எட்டியுள்ளது.
- 2024 ஆம் ஆண்டில் கொலம்பியா நாட்டின் காலி நகரில் இடைநிறுத்தப்பட்ட மாநாடு ஆனது, 2025 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதத்தில் ரோம் நகரில் மீண்டும் தொடங்கியது.
- இந்த ஒப்பந்தம் ஆனது, CBD உடன்படிக்கையின் கீழ் நீண்டகால நிதி வழிமுறைகளை நிறுவுகிறது.
- இதில் தற்போதுள்ள நிதி ஆதாரங்களை மேம்படுத்துதல் மற்றும் தனியார் துறைப் பங்களிப்புகள் மற்றும் கலப்பு நிதி போன்ற சில புதிய நிதி வாய்ப்புகளை ஆராய்தல் ஆகியவை அடங்கும்.
- 2030 ஆம் ஆண்டிற்குள் ஆண்டுதோறும் சுமார் 200 பில்லியன் டாலர் நிதி திரட்ட என்று அரசாங்கங்கள் உறுதியளித்துள்ளன.
- இது 2025 ஆம் ஆண்டிற்குள் ஆண்டிற்கு சுமார் 20 பில்லியன் டாலர் உட்பட, 2030 ஆம் ஆண்டிற்குள் சர்வதேச நிதி ஆதாரங்களில் இருந்து ஆண்டிற்கு 30 பில்லியன் டாலராக நிதி திரட்டுவதும் அடங்கும்.
- உலகளாவியச் சுற்றுச்சூழல் வசதி (GEF) ஆனது தனியார் துறையிலிருந்து 1.9 பில்லியன் டாலர் உட்பட கூடுதலாக சுமார் 22 பில்லியன் டாலர் நிதியுடன், ஏற்கனவே பல்லுயிர்ப் பெருக்க இலக்குகளை ஆதரிப்பதற்காக என 3 பில்லியன் டாலருக்கும் அதிகமாக நிதி ஒதுக்கியுள்ளது.
- COP17 ஆனது 2026 ஆம் ஆண்டில் ஆர்மேனியாவில் நடைபெற உள்ளது.

## ஆர்க்டிக் பனிப்பாறைகளில் மீத்தேன் கசிவு

- ஆர்க்டிக் பனிப்பாறைகள் வளிமண்டலத்தில் கணிசமான அளவு மீத்தேன் வாயுவினை வெளியிட்டு வருவதாக அறிவியலாளர்கள் கண்டறிந்துள்ளனர்.
- உருகும் பனிப்பாறை நதியில் காணப்படும் மீத்தேன் செறிவு ஆனது வளிமண்டல சம நிலை அளவை விட 800 மடங்கு அதிகமாக இருப்பது கண்டறியப்பட்டது.

## கடல் வாழ் யூனிகார்ன்கள் - நார்வால்கள்

- ஆர்க்டிக் பகுதியில் காணப்படும் நார்வால்கள் /கொம்பன் என்ற வகை திமிங்கலங்கள் வேட்டையாடுவதற்குத் தங்கள் தந்தங்களைப் பயன்படுத்துவது குறித்து ஆய்வு செய்து காட்சிகளை முதன்முறையாக கனடாவின் அறிவியலாளர்கள் கைப்பற்றியுள்ளனர்.
- நார்வால் (மோனோடான் மோனோசெரோஸ்) தொலைதூர ஆர்க்டிக் கடல் பகுதிகளில் வாழ்கின்றன.
- ஆண் திமிங்கலங்கள் ஆனது, அவற்றின் நீண்ட, சுழல் வடிவத் தந்தங்களுக்குப் பெயர் பெற்றவை. இது உண்மையில் அவற்றின் நீட்சியடைந்த பற்களாகும்.

## கோபிடிஸ் பெய்ஜிங்கென்சிஸ்

- கோபிடிஸ் பெய்ஜிங்கென்சிஸ் என்று அதிகாரப்பூர்வமாகப் பெயரிடப்பட்ட ஒரு புதிய வகை அயிரை மீன் இனமானது, சுமார் 40 ஆண்டுகளில் முதல் முறையாக சீனாவின் பெய்ஜிங் பகுதியில் கண்டறியப்பட்டுள்ளது.
- பின்யின் எனப்படுகின்ற சீன நாட்டின் எழுத்து முறையில் "பெய்ஜிங்" என்ற ஒரு சொல்லைப் பயன்படுத்தி ஒரு மீன் இனத்திற்கு பெயரிடப்பட்டது இதுவே முதல் முறை ஆகும்.
- வரலாற்று ரீதியாக, பெய்ஜிங் பகுதியில் 78 வகையான உள்நாட்டு மீன் இனங்கள் காணப் படுகின்றன.
- ஆனால் 2010 ஆம் ஆண்டில் சுமார் 40 இனங்கள் குறித்த தகவல் மட்டுமே சேகரிக்கப் பட்டன.

## ஓங்கில் கணக்கெடுப்பு 2025

- இந்தியாவின் முதல் நதி வாழ் ஓங்கில் கணக்கீட்டு அறிக்கையில் எட்டு மாநிலங்களில் உள்ள 28 ஆறுகளில் 6,327 ஓங்கில்கள் இருப்பதாக பதிவு செய்யப் பட்டுள்ளன.
- உத்தரப் பிரதேச மாநிலத்தில் அதிக எண்ணிக்கையிலான ஓங்கில்கள் இருப்பதாக பதிவாகியுள்ளது, அதைத் தொடர்ந்து பீகார், மேற்கு வங்காளம் மற்றும் அசாம் ஆகிய மாநிலங்களில் பதிவாகியுள்ளன.
- இந்தியாவில், கங்கை நதி ஓங்கில்கள் கங்கை-பிரம்மபுத்திரா-மேக்னா நதி வலை அமைப்பு மற்றும் அதன் துணை நதிகளில் வாழ்கின்றன.
- குறைவான எண்ணிக்கையிலான சிந்து நதி ஓங்கில்கள் சிந்து நதி வலையமைப்பில் வாழ்கின்றன.

## கிராசோலாபியம் த்ரிட்டியே – ஒடிசா

- ஒடிசா மாநிலத்தின் கியோஞ்சர் மாவட்டத்தின் தக்காண தீபகற்ப உயிரிப் புவியியல் மண்டலத்தில் மண்ணில் வாழும் உருளைப் புழு இனத்தை அறிவியல் ஆய்வாளர்கள் கண்டறிந்துள்ளனர்.
- விலங்கியல் மற்றும் வகைப்பிரித்தல் என்ற ஆராய்ச்சிக்கு இந்திய விலங்கியல் ஆய்வு அமைப்பின் (ZSI) தலைவர் டாக்டர் த்ரிதி பானர்ஜியின் மிகப்பெரும் பங்களிப்புகளை அங்கீகரிக்கும் விதமாக, கிராசோலாபியம் த்ரிட்டியே என்ற இனத்திற்கு பெயரிடப் பட்டுள்ளது.

## ஒருங்கிணைந்த ஈரநில வாழ் பறவைகள் கணக்கெடுப்பு 2025 – தமிழ்நாடு

- 2025 ஆம் ஆண்டு ஒருங்கிணைந்த ஈரநில வாழ் பறவைகள் கணக்கெடுப்பின் போது பல்வேறு ஈரநில வாழ் பறவை இனங்கள் காணப்பட்டு பதிவு செய்யப்பட்டன.
- திருச்சி மாவட்டத்தில் நடத்தப்பட்ட இந்தக் கணக்கெடுப்பு 20 ஈரநிலப் பகுதிகளை உள்ளடக்கியதாகும்.
- வலசை போகும் பறவைகளைக் கண்காணித்தல், ஏரிகள், குளங்கள் மற்றும் இதர பிற நீர்நிலைகளில் பறவை வாழ்விடங்களை மதிப்பிடுதல் மற்றும் ஈரநிலப் பறவைகளின் பயனுள்ள மேலாண்மை மற்றும் வளங்காப்பினை உறுதி செய்வதை நோக்கமாகக் கொண்டு இந்தக் கணக்கெடுப்பானது மேற்கொள்ளப்பட்டுள்ளது.

- புதுக்கோட்டை மாவட்டத்தில், கவிநாடு குளம், ஆரியூர் குளம், அன்னவாசல் 'பெரிய குளம்' மற்றும் சிறுங்காகுளம் உள்ளிட்ட 25 ஈரநிலங்களில் இந்தக் கணக்கெடுப்பு மேற் கொள்ளப் பட்டது.
- அரியலூர் மாவட்டத்தில் கரைவெட்டி பறவைகள் சரணாலயத்தை உள்ளடக்கிய 10 சதுப்பு நிலங்களில் இந்தக் கணக்கெடுப்பு மேற்கொள்ளப்பட்டது.
- பெரம்பலூர் மாவட்டத்தில் சுமார் 20 சதுப்பு நிலங்களில் இந்தக் கணக்கெடுப்பு மேற் கொள்ளப் பட்டது.

## உலகக் காற்றுத் தர அறிக்கை 2024

- அசாமில் உள்ள பைர்னிஹாட் நகரம் இந்தப் பட்டியலில் முதலிடத்தில் இடம் பெற்று உள்ளதுடன், உலகின் மிகவும் மாசுபட்ட சுமார் 20 நகரங்களில் பதின்மூன்று நகரங்கள் இந்தியாவில் உள்ளன.
- உலகளவில் மிகவும் மாசுபட்ட தலைநகராக டெல்லி தொடர்ந்து இடம் பெற்றுள்ளது.
- 2023 ஆம் ஆண்டில் மூன்றாவது இடத்தில் இருந்த இந்தியா, 2024 ஆம் ஆண்டில் உலகின் ஐந்தாவது மாசுபட்ட நாடாக தரவரிசைப்படுத்தப்பட்டுள்ளது.
- ஒட்டு மொத்தமாக, 35 சதவீத இந்திய நகரங்களில் ஆண்டுதோறும் PM2.5 அளவுகள் உலக சுகாதார அமைப்பின் கன மீட்டருக்கு 5 மைக்ரோகிராம் என்ற வரம்பினை விட 10 மடங்கு அதிகமாக இருப்பதாகக் கூறப்படுகிறது.
- காற்று மாசுபாடானது, இந்தியாவில் ஒரு கடுமையான சுகாதார அபாயமாக உள்ளது என்பதோடு இது ஆயுட்காலத்தினை 5.2 ஆண்டுகள் குறைக்கிறது.

## தமிழ்நாட்டில் புதிய விலாங்கு மீன் இனங்கள்

- இந்திய வேளாண் ஆராய்ச்சி சபையின் (ICAR) ஆராய்ச்சியாளர்கள், புதிய காங்கிரிட் இன குடும்ப விலாங்கு மீன் இனத்தைக் கண்டறிந்து அதற்கு தமிழின் பெயரைச் சூட்டி உள்ளனர்.
- அரியோசோமா இனத்தைச் சேர்ந்த இந்த இனம் ஆனது தூத்துக்குடிக் கடற்கரையில் கண்டறியப் பட்டுள்ளது.
- உலகின் பழமையான மொழியானத் தமிழைக் குறிக்கும் வகையில், இதற்கு தமிழிகம் என்று பெயரிடப் பட்டுள்ளது.

## தமிழ்நாட்டில் சிற்றாமைகளின் வலை அமைப்பு 2025

- தன்னார்வலர்கள் மற்றும் தமிழ்நாடு வனத்துறை ஆகியவை இணைந்து மாநிலம் முழுவதும் இதுவரையில் 2,53,719 ஆமை முட்டைகளைச் சேகரித்துள்ளனர் என்ற ஒரு நிலையில் இது கடந்த ஆண்டில் சேகரிக்கப்பட்ட சுமார் 2,58,907 என்ற மொத்த எண்ணிக்கையினை நெருங்குகிறது.
- இது கடந்த ஆறு ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு அதிகமாகும்.
- ஜனவரி மற்றும் பிப்ரவரி மாதங்களில், சென்னை மற்றும் செங்கல்பட்டு மாவட்டக் கடற்கரைகளில் 1,200 க்கும் மேற்பட்ட ஆமைகள் உயிரிழந்து கரை ஒதுங்கின.

- மார்ச் 11 ஆம் தேதி நிலவரப்படி, 89,784 முட்டைகள் சேகரிக்கப்பட்டுள்ளதுடன் கடலூர் முதலிடத்தில் உள்ளது.
- அதைத் தொடர்ந்து 47,082 முட்டைகளுடன் சென்னை ப்பிரிவு இடம் பெற்றுள்ளது.
- 73,728 முட்டைகளுடன் நாகப்பட்டினம் மூன்றாவது இடத்தில் உள்ளது.
- விழுப்புரம் மற்றும் இராமநாதபுரம் ஆகிய பிரிவுகளில் முறையே 23,403 மற்றும் 18,073 முட்டைகள் சேகரிக்கப்பட்டுள்ளன.

## நோத்தோபிரான்சியஸ் சில்வாடிகஸ் - 'கில்லி மீன்'

- கென்ய நாட்டின் காடுகளில் மட்டுமே காணப்படும் ஒரு புதிய வகையான 'கில்லி மீன்' இனத்தினை அறிவியலாளர்கள் கண்டறிந்து விவரித்துள்ளனர்.
- ஆனால் இது ஏற்கனவே மிகவும் அருகி வரும் நிலையில் உள்ளது மற்றும் விரைவில் அழிந்து போகக் கூடும்.
- கில்லி மீன் என்பது முட்டையிட்டுக் குஞ்சு பொரிக்கின்ற மீன் இனமாகும்.
- அவை முக்கியமாக அமெரிக்கா, தெற்கு ஐரோப்பா, ஆப்பிரிக்காவின் பெரும் பகுதி, மத்தியக் கிழக்கு மற்றும் ஆசியாவின் நன்னீர் அல்லது உவர் நீரில் காணப்படுகின்றன.
- சுமார் 1,270 வகையான கில்லி மீன் இனங்கள் காணப்படுகின்றன.
- அவை பருவகாலத்திற்கு பின் வறண்டு போகும் தற்காலிக குளங்களில் வாழ்கின்றன என்பதால் அவை "வருடாந்திர கில்லிமீன்" என்றும் அழைக்கப்படுகின்றன என்பதோடு அவற்றின் முட்டைகள் அடுத்த மழைக் காலம் வரை வறண்ட சேற்றில் உயிர் வாழும்.

## IUCN பசுமை பட்டியல் - நான்கு புதிய தளங்கள்

- IUCN அமைப்பின் பசுமை/பச்சை நிறப் பட்டியலில் நான்கு புதிய தளங்கள் சேர்க்கப் பட்டுள்ளன மற்றும் மூன்று மீண்டும் பட்டியலிடப்பட்டுள்ளன.
- இப்பட்டியலில் புதிதாக சேர்க்கப்பட்டுள்ள நான்கு தளங்கள் மேற்கு ஆசியாவினைச் சேர்ந்தவை.
- அவையாவன,
    - ஷரான் இயற்கை காப்புப் பகுதி - சவுதி அரேபியா
    - சவுதி அரேபியாவின் மன்னர் அப்துல்அஜிஸ் ராயல் இயற்கை காப்புப் பகுதி
    - ஜோர்டானின் அகபா கடல் சார் காப்புப் பகுதி மற்றும்
    - ஐக்கிய அரபு அமீரகத்தின் சர் பு நாயர் பாதுகாக்கப்பட்ட பகுதி.
- IUCN அமைப்பின் பசுமைப் பட்டியல் என்பது பயனுள்ள, சமமான மற்றும் மிகவும் வெற்றிகரமான பாதுகாக்கப்பட்ட மற்றும் வளங்காக்கப்பட்டப் பகுதியை அடைவதை ஊக்குவிப்பதை நோக்கமாகக் கொண்ட ஒரு உலகளாவியச் சான்றிதழ் வழங்கீட்டுத் திட்டமாகும்.

## Transforming Forest Finance அறிக்கை

- UNDP அமைப்பினால் மிக ஆதரிக்கப்படும் வனப் பிரகடன மதிப்பீட்டு அமைப்பானது, "Transforming Forest Finance" என்ற புதிய அறிக்கையினை வெளியிடப்பட்டுள்ளது.

- காடழிப்பை நிறுத்த ஆண்டிற்கு சுமார் 460 பில்லியன் டாலர் நிதித் தேவைப்பட்டாலும், ஆனால் வழங்கப்படும் உண்மையான நிதி உதவி மிகவும் குறைவாகவே உள்ளது.
- வனப் பாதுகாப்பிற்காக ஒவ்வொரு ஒரு டாலர் செலவிடப்படும் போதும், காடழிப்பைத் தூண்டும் நடவடிக்கைகளுக்காக 6 டாலர் செலவிடப்படுகிறது.
- 2023 ஆம் ஆண்டில், தனியார் நிதி நிறுவனங்கள் ஆனது காடழிப்புடன் தொடர்புடைய துறைகளில் 6.1 டிரில்லியன் டாலர் முதலீடு செய்துள்ளன.
- REDD+ முன்னெடுப்பின் கீழ், ஒரு டன் கார்பன் டை ஆக்சைடுக்கு 5–10 டாலர் வரை வழங்கப் படும் நிதிகள் போதுமானதாக இல்லை.
- ஆனால், உமிழ்வைக் குறைப்பதற்கான உண்மையானச் செலவினம் டன்னுக்கு 30–50 டாலர் என மதிப்பிடப்பட்டுள்ளது.

## உலகப் பொருளாதார மன்றத்தின் Uplink முன்னெடுப்பு

- உலகப் பொருளாதார மன்றத்தின் Uplink அமைப்பு ஆதரவு பெற்ற துணிகர முதலீட்டு முன்னெடுப்புகள் ஆனது கடந்த இரண்டு ஆண்டுகளில் சுமார் 142,400 டன் கார்பன் டை ஆக்சைடு உமிழ்வினைத் தடுத்துள்ளன.
- இது சுமார் 30,000க்கும் மேற்பட்ட கார்களின்/மகிழுந்துகளின் வருடாந்திர உமிழ்விற்கு இணையான அளவாகும்.
- இந்தப் புத்தொழில் நிறுவனங்கள், அமேசான் மழைக்காடுகளின் ஐந்தில் ஒரு பங்கு பரப்பளவான 140 மில்லியன் ஹெக்டேர் நிலப்பரப்பு மற்றும் நீர்வாழ் பகுதிகளைப் பாதுகாத்துள்ளன.
- 2.5 பில்லியன் லிட்டர் அபாயகரமான கழிவுநீரைச் சுத்திகரித்தல் மற்றும் 28 மில்லியன் டன் கழிவுகளைக் கண்காணித்தல் ஆகியவையும் மேற்கொள்ளப்பட்டன.
- இந்தியாவில், இந்திரா வாட்டர் நிறுவனமானது, கழிவுநீர்ச் சுத்திகரிப்புத் திறனை மிக நன்கு அதிகரித்து, 2024 ஆம் ஆண்டில் 1.2 பில்லியன் லிட்டர் கழிவு நீரைச் சுத்திகரித்து உள்ளது.
- இது 2022 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது 243 சதவீதம் அதிகரிப்பைக் குறிக்கிறது.

## ஜார்ஜ் VI பனிப் படலம் - பன்னிரண்டு வகையான புதிய இனங்கள்

- ஜார்ஜ் VI பனிப் படலத்தில் இருந்து பிரிந்த A-84 பனிப்பாறையால் புதிதாக வெளிப் படும் கடற்பரப்பில் பன்னிரண்டு வகையான மிகப் புதிய உயிரினங்களை அறிவியல் ஆய்வாளர்கள் கண்டறிந்துள்ளனர்.
- இந்தப் புதிய இனங்களில் இராட்சதக் கடல் சிலந்திகள், பேய்க் கணவாய் /ஆக்டோபி மற்றும் பவளப் பாறைகள் அடங்கும்.
- அவர்கள் சுபாஸ்டியன் எனப்படுகின்ற தொலைதூரக் கட்டுப்பாட்டு அமைப்பு மூலம் இயக்கப் படும் வாகனத்தினைப் (ROV) பயன்படுத்தி கடலின் அடிப்பகுதியை மிக நன்கு ஆராய்ந்து, 1,300 மீட்டர் ஆழத்தில் மிகவும் வளம் மிக்க சுற்றுச்சூழல் அமைப்புகளைக் கண்டறிந்துள்ளனர்.

## ஆப்பிரிக்கப் பென்குயின் வளங்காப்பு

- ஆப்பிரிக்கப் பென்குயின்களை அழிவிலிருந்து காப்பாற்றச் செய்யும் ஒரு முயற்சியில், தென்னாப்பிரிக்க நாட்டின் அரசானது, ஆறு முக்கிய இனப்பெருக்கத் தளங்களைப் பாதுகாப்பதற்கான நடவடிக்கைகளை நிறுவியுள்ளது.
- இனப்பெருக்கப் பகுதிகளைச் சுற்றியுள்ள வணிக ரீதியான மீன் பிடித்தலுக்கு அந்த நாட்டு நீதிமன்றம் 10 ஆண்டு காலத் தடை விதித்துள்ளது.
- ஆப்பிரிக்கப் பென்குயின்கள் ஆனது பேரரசப் பெங்குயின்களை விட மிகச் சிறியவை என்பதோடு மேலும் இவை தென்னாப்பிரிக்காவில் மட்டுமே மிகப் பிரத்தியேகமாகக் காணப் படுகின்றன.
- தற்போதைய சரிவு விகிதத்தில், மிகவும் தனித்துவமான இந்தப் பறவைகள் 2035 ஆம் ஆண்டிற்குள் அதன் இயற்கை வாழிடங்களில் அழிந்து விடக் கூடும்.

## புலிகள், வேட்டை இனங்கள் மற்றும் பிற பாலூட்டிகளின் நிலை – 2024

- ஆந்திரப் பிரதேசம் நல்லமலை வனப்பகுதியில் உள்ள நாகார்ஜுனா சாகர்-ஸ்ரீசைலம் புலிகள் வளங்காப்பகத்தில் (NSTR) 2023 ஆம் ஆண்டில் 74 ஆக இருந்த பெரும்பூனை இனங்களின் எண்ணிக்கையானது 2024 ஆம் ஆண்டில் 76 ஆக அதிகரித்துள்ளது.
- 2018 ஆம் ஆண்டில், அந்த வளங்காப்பகத்தில் 47 புலிகள் இருந்த நிலையில் இது கடந்த ஆறு ஆண்டுகளில் 61.7 சதவீத அதிகரிப்புடன் 76 ஆக உயர்ந்துள்ளது.
- கர்நாடக அரசு மேற்கொண்ட 2024 ஆம் ஆண்டு நான்காம் கட்ட கண்காணிப்பின் படி, கர்நாடக மாநிலத்தின் ஐந்து புலிகள் வளங்காப்பகங்களில் (பந்திப்பூர், நாகர்ஹோல், பிலிகிரி ரங்கநாதசுவாமி கோவில், பத்ரா மற்றும் காளி புலிகள் காப்பகம்) 393 புலிகள் உள்ளன.
- 2023 ஆம் ஆண்டு கண்காணிப்பு நடவடிக்கைகளில், கர்நாடக மாநிலத்தில் 408 புலிகள் இருந்ததாகப் பதிவு செய்யப்பட்ட நிலையில் இது 2022 ஆம் ஆண்டில் 417 ஆகவும், 2018 ஆம் ஆண்டில் 472 ஆக பதிவானது.

# அறிக்கைகள் மற்றும் குறியீடுகள்

## உலகின் பரபரப்பான விமான நிலையம் 2025 - OAG அறிக்கை

- துபாய் சர்வதேச விமான நிலையம் (DXB) ஆனது 2025 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் 5.2 மில்லியன் இருக்கைகளுடன் கூடிய உலகின் மிகவும் பரபரப்பான சர்வதேச விமான நிலையமாக தனது நிலையைத் தக்க வைத்துக் கொண்டுள்ளது.
- 4 மில்லியன் இருக்கைகளுடன் இலண்டன் ஹீத்ரோ விமான நிலையம் (LHR) ஆனது இரண்டாவது இடத்தில் உள்ளது.
- சிங்கப்பூர் நாட்டின் சாங்கி விமான நிலையத்தின் இருக்கைகளின் எண்ணிக்கை 5% அதிகரித்து மூன்றாவது மிகப் பரபரப்பான சர்வதேச விமான நிலையமாக முன்னேறி உள்ளது.
- தென் கொரியாவின் சியோல் நகர இஞ்சியோன் சர்வதேச விமான நிலையம் (ICN) ஆனது 3.58 மில்லியன் இருக்கைகளுடன் நான்காவது இடத்தில் உள்ளது.

## யுனெஸ்கோ அமைப்பின் பன்மொழி கல்வி குறித்த அறிக்கை 2025

- யுனெஸ்கோ அமைப்பினால் 'Language Matter: Global Guidance on Multilingual Education' என்ற தலைப்பிலான அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.
- உலக மக்கள் தொகையில் 40 சதவீதம் பேருக்கு அவர்கள் பேசும் அல்லது புரிந்து கொள்ளும் மொழியில் கல்வி கிடைப்பதில்லை.
- இந்த எண்ணிக்கையானது சில குறைந்த மற்றும் நடுத்தர வருமானம் கொண்ட நாடுகளில் 90% ஆக உயர்ந்துள்ளது.
- 31 மில்லியனுக்கும் அதிகமான புலம்பெயர்ந்த இளையோர்கள் கல்வியில் மொழி சார்ந்த தடைகளை எதிர்கொள்கின்றனர்.

## நைட் ஃபிராங்க் நிறுவனத்தின் செல்வ வளம் குறித்த அறிக்கை 2025

- தற்போது 85,698 என்ற உயர் நிகர சொத்து மதிப்புள்ள தனிநபர்கள் எண்ணிக்கையுடன் (HNWIs) உலகளவில் நான்காவது இடத்தைப் பிடித்து, ஒரு மிக முன்னணி உலகளாவிய செல்வ வளம் கொண்ட மையமாக இந்தியா உருவெடுத்துள்ளது.
- இது அமெரிக்கா, சீனா மற்றும் ஜப்பானுக்கு அடுத்தபடியாக உள்ளது.
- குறைந்தபட்சமாக சுமார் 1 மில்லியன் டாலர் முதலீடு செய்யக்கூடிய சொத்துக்களைக் கொண்ட தனிநபர்கள் என வரையறுக்கப்படும் HNWI நபர்கள் எண்ணிக்கையானது 2024 ஆம் ஆண்டில் உலகளவில் 4.4% அதிகரித்துள்ளது.
- குறிப்பிடத்தக்க வகையில், 100 மில்லியன் டாலருக்கும் அதிகமான சொத்துக்களைக் கொண்ட அதி உயர் நிகர சொத்து மதிப்புள்ள தனிநபர்களின் (UHNWIs) எண்ணிக்கை என்பது முதல் முறையாக 100,000 எண்ணிக்கையினைத் தாண்டியது.
- 2024 ஆம் ஆண்டில், UHNWI எண்ணிக்கையில் சுமார் 5.2% அதிகரிப்புடன் அமெரிக்கா உலகிலேயே முன்னணியில் இருந்தது.
- அதனைத் தொடர்ந்து, சுமார் 5% விகித அதிகரிப்புடன் ஆசியாவும், 4.7% அதிகரிப்புடன் ஆப்பிரிக்காவும் இடம் பெற்றுள்ளன.

## பணியாளர் வளத்தில் பெண்களின் பங்கு மற்றும் தாக்கக் குறியீடு 2025

- கடந்த இரண்டு ஆண்டுகளாக உழைக்கும் பெண்களுக்கு சிறந்த ஒரு நாடாக திகழ்ந்த ஐஸ்லாந்து நாட்டினை விஞ்சி, சுவீடன் நாடானது 2025 ஆம் ஆண்டிற்கான குறியீட்டில் முதலிடத்தைப் பிடித்துள்ளது.
- OECD அமைப்பு நாடுகளில், பெண்களின் பாராளுமன்றப் பிரதிநிதித்துவத்தில் மிகவும் ஒரு சராசரியாக 34% அதிகரிப்பு என்பது பதிவானது.
- ஜப்பான் மற்றும் பிரிட்டன் ஆகிய நாடுகளில் பிரதிநிதித்துவம் ஆனது முறையே 16% (10 சதவீதத்திலிருந்து) மற்றும் 41% (35 சதவீதத்திலிருந்து) ஆக குறிப்பிடத்தக்க அளவில் அதிகரிப்பு பதிவாகியுள்ளன.
- இதற்கு நேர்மாறாக, பிரதிநிதித்துவம் 28.7% ஆகக் குறைந்துள்ளதுடன், அமெரிக்காவில் ஒரு சிறிய சரிவு என்பது பதிவானது.
- சுவீடனில் பெண்களின் சராசரி மாதச் சம்பளம் ஆண்களின் சராசரி மாத சம்பளத்தில் 90% ஆகும்.
- பாலினம் சார்ந்த மகப்பேறு விடுப்பைப் பாலின நடுநிலை சார்ந்த விடுப்பாக மாற்றிய முதல் நாடும் சுவீடன் ஆகும்.

## உலகத் தீவிரவாதக் குறியீடு 2025

- 2024 ஆம் ஆண்டில் தீவிரவாத சம்பவங்கள் பதிவு செய்யப்பட்ட உலக நாடுகளின் எண்ணிக்கை 58லிருந்து 66 ஆக அதிகரித்துள்ளது.
- இது 2024 ஆம் ஆண்டில் தீவிரவாதத்தினால் ஏற்பட்ட அனைத்து உயிரிழப்புகளில் பாதிக்கும் மேலான பெரும் பதிவுகளுடன் சாஹேல் பகுதியானது, உலகளவில் மிகவும் பாதிக்கப் பட்ட பகுதியாக உள்ளது.
- இந்த ஆண்டு தீவிரவாதத்தினால் அதிகம் பாதிக்கப்பட்ட ஒரு நாடாக புர்கினா பாசோ உள்ளது.
- தீவிரவாதத்தினால் ஏற்பட்ட உயிரிழப்புகளில் நைஜர் மற்றும் பாகிஸ்தான் ஆகிய இரு நாடுகளில் மிகப்பெரிய அதிகரிப்புகள் பதிவாகியுள்ளன.
- மேற்கு நாடுகளில் தீவிரவாதத் தாக்குதல்கள் 63% அதிகரித்துள்ளன என்ற நிலையில், ஐரோப்பாவில் தாக்குதல்கள் இரட்டிப்பாகி 67 ஆக உயர்ந்தன.
- ஏழு மேற்கத்திய நாடுகள், மிகவும் பாதிக்கப்பட்ட முதல் 50 நாடுகளில் ஒன்றாக இடம் பெற்றுள்ளன.
- இஸ்லாமிய அரசு (IS) என்ற அமைப்பானது, அதன் செயல்பாடுகளை 22 நாடுகளுக்கு விரிவுபடுத்தி, உலகின் மிகவும் ஒரு ஆபத்தான அமைப்பாக (சிரியா மற்றும் DRC ஆகிய நாடுகளில் செயலில்) உள்ளது.
- இக்குறியீட்டில் இந்தியா 14வது இடத்தில் உள்ளது.

## SIPRI அறிக்கை 2020-24

- ஸ்டாக்ஹோம் சர்வதேச அமைதி ஆராய்ச்சி நிறுவனம் (SIPRI) என்ற நிறுவனமானது ஆயுதப் பரிவர்த்தனைகள் குறித்த இந்த அறிக்கையை வெளியிட்டுள்ளது.
- 2020-2024 ஆம் ஆண்டில் உலகின் மிகப்பெரிய ஆயுத இறக்குமதியாளராக உக்ரைன் இருந்தது.
- 2015-2019 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது அந்நாட்டின் இறக்குமதி சுமார் 100 மடங்கு அதிகரித்துள்ளது.
- உக்ரைனுக்கு ஏற்றுமதி செய்யப்பட்ட சில முக்கிய ஆயுதங்களில் பெரும்பாலானவை அமெரிக்காவிலிருந்தும் (சுமார் 45 சதவீதம்), அதைத் தொடர்ந்து ஜெர்மனி (12 சதவீதம்) மற்றும் போலந்து (11 சதவீதம்) ஆகிய நாடுகளில் இருந்தும் மேற்கொள்ளப்பட்டன.
- அதே காலக் கட்டத்தில் உலக ஆயுத இறக்குமதியில் இந்தியா இரண்டாவது இடத்தைப் பிடித்தது.
- 2015–19 மற்றும் 2020–24 ஆகிய சில ஆண்டுகளுக்கு இடையில் இந்தியாவின் ஆயுத இறக்குமதி 9.3 சதவீதம் குறைந்துள்ளது.
- உலகளாவிய ஆயுத ஏற்றுமதியில் அமெரிக்கா தனது பங்கைச் சுமார் 43 சதவீதமாக அதிகரித்த அதே நேரத்தில் ரஷ்யாவின் ஏற்றுமதி 64 சதவீதம் குறைந்துள்ளது.
- 2020–24 ஆம் ஆண்டில் சீனா நான்காவது பெரிய ஆயுத ஏற்றுமதியாளராக இருந்தது என்பதோடு இது உலகளாவிய ஆயுத ஏற்றுமதியில் 5.9 சதவீதமாகும்.

## உலக சுகாதார அமைப்பு - உலகளாவியப் பேறுகாலத் தாய்மார்கள் உயிரிழப்பு நெருக்கடி

- 2020 ஆம் ஆண்டில் ஒவ்வொரு நாளும், கர்ப்பம் மற்றும் பிரசவம் தொடர்பாக உள்ள தடுக்கக் கூடிய காரணங்களால் சுமார் 800 பெண்கள் உயிரிழந்தனர் என்ற நிலையில் இது ஒவ்வொரு இரண்டு நிமிடங்களுக்கும் ஒரு மரணத்திற்குச் சமமாகும்.
- 2020 ஆம் ஆண்டில், உலகளவில் 287,000 மகளிர் பேறுகால உயிரிழப்பு காரணங்களால் உயிரிழந்ததாக மதிப்பிடப்பட்டுள்ளது.
- 2020 ஆம் ஆண்டில், உலகளாவியப் பேறுகாலத் தாய்மார்கள் உயிரிழப்பு விகிதம் (MMR) ஆனது, 100,000 பிறப்புகளுக்கு 223 உயிரிழப்பாக இருந்தது.
- உலகளவில், மிகவும் பெரும்பாலான கர்ப்பம் தொடர்பான தொற்று உயிரிழப்புகள் ஆனது பிரசவத்திற்குப் பிறகு 42 நாட்கள் வரை நீடிக்கின்றப் பிரசவத்திற்குப் பிந்தைய காலத்தில் நிகழ்ந்தன.
- நிலையான மேம்பாட்டு இலக்குகளின் 3.1 என்ற இலக்கு ஆனது, 2030 ஆம் ஆண்டிற்குள் உலகளாவிய MMR விகிதத்தினை 100,000 நேரடிப் பிறப்புகளுக்கு 70க்கும் குறைவாகக் குறைப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

## உணவு தானியங்கள் குறித்த FAO அறிக்கைகள் 2025

- ஐக்கிய நாடுகள் சபையின் (UN) உணவு அமைப்பு மற்றும் உணவு மற்றும் வேளாண் அமைப்பு (FAO) ஆகிய அமைப்புகள் ஆனது 'Cereal Supply and Demand Brief' மற்றும் ' Crop Prospects and Food Situation' ஆகிய இரண்டு முக்கிய அறிக்கைகளை வெளியிட்டுள்ளது.
- கோதுமை உற்பத்தியானது, 2025 ஆம் ஆண்டில் 796 மில்லியன் டன்களை (Mt) எட்டக் கூடும் என்ற நிலையில் இது முந்தைய ஆண்டை விட 1% அதிகரிப்பைக் குறிக்கிறது.

## QS அமைப்பின் பாட வாரியான உலகப் பல்கலைக்கழகத் தரவரிசை 2025

- மாசசூசெட்ஸ் தொழில்நுட்ப நிறுவனம் (MIT) ஆனது, QS அமைப்பின் 2025 ஆம் ஆண்டு உலகப் பல்கலைக்கழக தரவரிசையில் தொடர்ந்து 13வது ஆண்டாக முதலிடத்தைத் தக்க வைத்துக் கொண்டுள்ளது.
- இதில் லண்டன் இம்பீரியல் கல்லூரியானது இரண்டாவது இடத்தையும், ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகம் மற்றும் ஹார்வர்ட் பல்கலைக்கழகம் முறையே மூன்றாவது மற்றும் நான்காவது இடத்தையும் பிடித்துள்ளன.
- கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகம் முதல் ஐந்து இடங்களில் ஒன்றாக இடம் பிடித்துள்ளது.

| நிறுவனம் | தரவரிசை | துறை |
|---|---|---|
| **ஐஐடி மெட்ராஸ்** | 31வது | பொறியியல் - பெட்ரோலியம் |
| **ஐஎஸ்எம் தன்பாத்** | 20வது | பொறியியல் - கனிம மற்றும் சுரங்கப் பிரிவு |
| **ஐஐடி மும்பை** | 40வது | பொறியியல் - கனிம மற்றும் சுரங்கப் பிரிவு |
| **ஐஐடி காரக்பூர்** | 45வது | பொறியியல் - கனிம மற்றும் சுரங்கப் பிரிவு |
| **ஐஐடி டெல்லி** | 47வது | பொறியியல் - மின்சாரம் மற்றும் மின்னணு துறை |

| | | |
|---|---|---|
| **ஐஐடி மும்பை** | 50வது | பொறியியல் - மின்சாரம் மற்றும் மின்னணு துறை |
| **ஐஐடி அகமதாபாத்** | 27வது | வணிகம் மற்றும் மேலாண்மைப் படிப்பு |
| **ஐஐடிபெங்களூரு** | 40வது | வணிகம் மற்றும் மேலாண்மை படிப்பு |
| **ஜவஹர்லால் நேரு பல்கலைக் கழகம்** | 29வது | மேம்பாட்டுப் பிரிவு படிப்பு |

## Future of Free Speech அமைப்பின் குறியீடு 2025

- அமெரிக்காவின் ஒரு சுயாதீனச் சிந்தனைக் களஞ்சியமான Future of Free Speech என்ற அமைப்பானது, 'Who in the World Supports Free Speech?' என்ற ஒரு தலைப்பிலான இந்த அறிக்கையினை வெளியிட்டுள்ளது.
- பேச்சுச் சுதந்திரத்திற்கான ஆதரவு குறித்த கேள்வி தொடர்பாக கணக்கெடுக்கப்பட்ட 33 நாடுகளில் இந்தியா 24வது இடத்தைப் பிடித்தது.
- இந்தக் குறியீட்டில் நார்வே மற்றும் டென்மார்க் முதலிடத்தில் உள்ளன.
- இந்தோனேசியா (56.8), மலேசியா (55.4), மற்றும் பாகிஸ்தான் (57.0) ஆகியவை இதில் மதிப்பெண்களின் அடிப்படையில் மிகப்பெரியதொரு அளவில் முன்னேற்றங்களைக் கொண்டு உள்ளன.
- அமெரிக்கா, இஸ்ரேல் மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகள் 2021 ஆம் ஆண்டிலிருந்து பேச்சுச் சுதந்திர ஆதரவில் சரிவைக் கண்டுள்ளன.

## சர்வதேச கடன் அறிக்கை 2024

- 2024 ஆம் ஆண்டு சர்வதேச கடன் அறிக்கையானது உலக வங்கியால் வெளியிடப் பட்டு உள்ளது.
- மிகக் குறைவான மற்றும் நடுத்தர வருமானம் கொண்ட நாடுகளின் (LMICs) கடன் மதிப்பானது, 2023 ஆம் ஆண்டின் இறுதியில் 8.8 டிரில்லியன் அமெரிக்க டாலர்களை எட்டியுள்ளன என்பதோடு இது 2020 ஆம் ஆண்டில் இருந்த அளவை விட 8% அதிகமாகும்.
- வெளிநாட்டுக் கடன் ஆனது 18% அதிகரித்து 1.1 டிரில்லியன் அமெரிக்க டாலர்களை எட்டியுள்ளது.
- இதன்படி 2023 ஆம் ஆண்டில் அதிகாரப்பூர்வ கடன் வழங்குநர்களிடமிருந்து பெற்ற கடன்களுக்கான வட்டி விகிதங்கள் 4 சதவீதத்திற்கும் அதிகமாக இரட்டிப்பாகியுள்ளன.
- வட்டி விகிதங்கள் ஆனது சுமார் 6% ஆக உயர்ந்துள்ளன, இது 15 ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு மிக அதிகம் ஆகும்.
- இந்தியாவைப் பொறுத்தவரை, வெளிநாட்டுக் கடன் 31 பில்லியன் டாலர் அதிகரித்து 2023 ஆம் ஆண்டில் சுமார் 646.79 பில்லியன் டாலர்களை எட்டியுள்ளதாக அறிக்கை குறிப்பிடுகிறது.
- வட்டி வழங்கீடுகள் ஆனது, 2022 ஆம் ஆண்டில் 15.08 பில்லியன் டாலர்களிலிருந்து 2023 ஆம் ஆண்டில் 22.54 பில்லியன் டாலர்களாக உயர்ந்துள்ளன.
- நீண்ட காலக் கடன்கள் 7% அதிகரித்துள்ளதோடு, குறுகிய காலக் கடனில் சிறிது சரிவு ஏற்பட்டுள்ளது.

## உலக மகிழ்ச்சித் தரவரிசை 2025

- பின்லாந்து தொடர்ந்து எட்டாவது ஆண்டாக உலகின் மகிழ்ச்சியான நாடாக தனது நிலையைத் தக்க வைத்துள்ளது.
- அதைத் தொடர்ந்து டென்மார்க் மற்றும் ஐஸ்லாந்து ஆகியவை இடம் பெற்றுள்ளன.
- ஹமாஸ் மோதல் இருந்த போதிலும் இஸ்ரேல் 8வது இடத்தைப் பிடித்துள்ளது.
- 2012 ஆம் ஆண்டில் 11வது இடத்தில் இருந்த அமெரிக்கா, இதில் 24வது இடத்தில் கடைசி இடத்திற்குச் சரிந்துள்ளது.
- ஆப்கானிஸ்தான் இந்தத் தரவரிசையில் கடைசி இடத்தில் உள்ளது.
- முந்தைய ஆண்டில் 126வது இடத்திலிருந்த இந்தியா, சமீபத்தில் வெளியிடப்பட்ட 2025 ஆம் ஆண்டு உலக மகிழ்ச்சி அறிக்கையில் 118வது இடத்தைப் பிடித்துள்ளது.
- இதில் இந்தியாவின் அண்டை நாடுகளில், இலங்கை 133வது இடத்திலும், வங்காள தேசம் 134வது இடத்திலும், பாகிஸ்தான் 109வது இடத்திலும், நேபாளம் 92வது இடத்திலும், சீனா 68வது இடத்திலும் உள்ளன.
- இது ஆக்ஸ்போர்டு பல்கலைக் கழகத்தின் நல்வாழ்வு ஆராய்ச்சி மையத்துடன் கேலப், ஐ. நா. அமைப்பின் நிலையான மேம்பாட்டுத் தீர்வுகள் வலையமைப்பு மற்றும் ஒரு தன்னாட்சிக் கொண்ட தலையங்கக் குழு ஆகியவற்றால் வெளியிடப்படுகிறது.

## பருவநிலை குறித்த அறிக்கை 2024

- 2024 ஆம் ஆண்டானது 175 ஆண்டு காலக் கண்காணிப்பு பதிவில் மிகவும் வெப்பமான ஆண்டாகப் பதிவாகியுள்ளது.
- தொழில்துறைக்கு முந்தைய சகாப்தத்தை விட 1.5°C க்கும் அதிகமாக இருந்த முதல் ஆண்டாக இது இருக்கலாம்.
- உலகளாவிய சராசரி மேற்பரப்பு வெப்பநிலையானது 1850-1900 ஆம் காலக் கட்டத்தில் பதிவான சராசரியை விட 1.55 ± 0.13°C அதிகமாக உள்ளது.
- 1960 ஆம் ஆண்டு முதல் வெப்பமயமாதல் விகிதங்கள் இரட்டிப்பாகியுள்ளதுடன், 2024 ஆம் ஆண்டில், கடந்த 65 ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு கடல் வெப்பம் அதிகமாக இருந்தது.
- 1993 மற்றும் 2002 ஆகிய ஆண்டுகளுக்கு இடையில் பதிவான 2.1 மில்லிமீட்டர் என்ற வருடாந்திர அதிகரிப்பு ஆனது 2015 மற்றும் 2024 ஆகிய ஆண்டுகளுக்கு இடையில் 4.7 மில்லிமீட்டர் அதிகரிப்பினை விட குறைவாகும்.
- 2024 ஆம் ஆண்டில் வெப்பமண்டலப் புயல்கள், வெள்ளம், வறட்சி மற்றும் இன்ன பிற ஆபத்துகள் காரணமாக 2008 ஆம் ஆண்டிற்குப் பிறகு மிக அதிக எண்ணிக்கையிலான மக்கள் இடம்பெயர்ந்தனர்.
- 2024 ஆம் ஆண்டில் சுமார் 36 மில்லியன் மக்கள் தங்கள் வீடுகளை விட்டு வெளியேற வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது.
- எட்டு நாடுகளில், 2023 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது குறைந்தது ஒரு மில்லியன் மக்கள் கடுமையான உணவுப் பாதுகாப்பின்மை நிலையை எதிர்கொண்டனர்.
- 2023 ஆம் ஆண்டில், வளிமண்டல $CO_2$ வாயு அளவானது தொழில்துறைக்கு முந்தைய நிலைகளில் 151% அளவினை எட்டியது என்பதோடு இது 800,000 ஆண்டுகளில் இல்லாத அளவிற்கு மிக அதிகமாகும்.

## ஐக்கிய நாடுகள் சபையின் உலக நீர் மேம்பாட்டு அறிக்கை 2025

- 'Mountains and Glaciers; Water Towers' எனப்படும் 2025 ஆம் ஆண்டு உலக நீர் மேம்பாட்டு அறிக்கையானது யுனெஸ்கோ அமைப்பினால் வெளியிடப்பட்டுள்ளது.
- ஆசிய-பசிபிக் பகுதியானது, உலகின் மிக உயரமான மலைகள் மற்றும் பரந்து விரிந்த பனிப்பாறை அமைப்புகளுக்கு முக்கியத் தாயகமாக உள்ளது, மேலும் இது பருவநிலை மாற்றத்தினால் அதிகளவில் பாதிக்கப்படக் கூடிய ஒன்றாக உள்ளது.
- உருகும் பனிப்பாறைகள் ஆனது, உலகெங்கிலும் உள்ள 2 பில்லியன் மக்களின் உணவு மற்றும் நீர் விநியோகத்தில் அச்சுறுத்தலை ஏற்படுத்துகின்றன.
- இந்து குஷ் இமயமலை (HKH) பகுதியானது கடும் பருவநிலை மாற்றத்தால் மிகப்பெரிய அளவு இழப்புகளை எதிர் கொள்கிறது என்பதோடு, இது முந்தைய தசாப்தத்தை விட 2011-2020 ஆம் ஆண்டுகளில் 65 சதவீதம் வேகமாக உருகியது.
- 1.5°C மற்றும் 4°C வெப்பநிலைக்கு இடையில் அதிகரித்தால், உலகளவில் உள்ள மலை சார்ந்தப் பனிப்பாறைகள் 2015 ஆம் ஆண்டில் இருந்த நிலைகளுடன் ஒப்பிடும் போது 2100 ஆம் ஆண்டில் அவற்றின் மொத்த நிறைவில் சுமார் 26 முதல் 41 சதவீதம் வரையில் இழக்கும் என்று கணிக்கப்பட்டுள்ளது.

## உலகளாவிய எரிசக்தி மதிப்பாய்வு 2025

- 2025 ஆம் ஆண்டு உலகளாவிய எரிசக்தி மதிப்பாய்வு 2025 என்ற தலைப்பிலான ஒரு அறிக்கையானது சர்வதேச எரிசக்தி முகமையினால் வெளியிடப்பட்டுள்ளது.
- உலகளாவிய மின்சாரத் தேவையானது 2024 ஆம் ஆண்டில் 4.3 சதவீதம் அதிகரித்து உள்ளதோடு இது 2023 ஆம் ஆண்டில் பதிவான 2.5 சதவீதத் தேவை அதிகரிப்பினை விட அதிகமாகும்.
- 2024 ஆம் ஆண்டில் பதிவான தீவிர வெப்பநிலையானது இது வரை பதிவு செய்யப்பட்ட மிக வெப்பமான ஆண்டு ஆக, 2023 ஆம் ஆண்டில் பதிவான முந்தைய அதிக வெப்ப நிலையை விஞ்சியது.
- உலகளாவிய அளவில் கட்டிட மின்சார நுகர்வானது, 2024 ஆம் ஆண்டில் 600 டெராவாட் மணி நேரங்களுக்கு மேல் (TWh) அல்லது ஐந்து சதவீதம் அதிகரித்துள்ளது.
- 2024 ஆம் ஆண்டில் மின்சாரத் தேவையில் ஏற்பட்ட ஒரு மொத்த அதிகரிப்பில் தொழில் துறையானது சுமார் 40 சதவீத பங்கினை எட்டியது.
- 2024 ஆம் ஆண்டில் தொழில்துறையின் மின்சாரப் பயன்பாடு என்பது சுமார் 4 சதவீதம் அதிகரித்துள்ளது.
- 2024 ஆம் ஆண்டில், உலகளாவிய மின்சார உற்பத்தியில் பதிவான 80 சதவீத வளர்ச்சி புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மூலங்கள் மற்றும் அணுசக்தி மூலம் உற்பத்தி செய்யப் பட்டது.
- 2024 ஆம் ஆண்டில் உலகளாவிய நிலக்கரிவழி உமிழ்வு ஆனது சுமார் 0.9 சதவீதம் (135 மெட்ரிக் டன் $CO_2$) அதிகரித்துள்ளது.
- உலகளாவிய நிலக்கரிப் பயன்பாட்டில் 58 சதவீதப் பங்குடன், உலகளவில் மிகப்பெரிய நிலக்கரி நுகர்வு நாடாக சீனா தொடர்ந்து திகழ்ந்து வருகிறது.

# மாநிலச் செய்திகள்

## எச்.ஐ.வி சுய பரிசோதனை - மிசோரம்

- இந்தியாவின் அனைத்து மாநிலங்களிலும், மிசோரமில் உள்ள வயது வந்தோர் மக்கள் தொகையில் எச்.ஐ.வி பாதிப்பு அதிகமாக உள்ளது.
- 2.73% ஆக உள்ள இந்த பாதிப்பு சதவீதமானது, 0.2% என்ற தேசிய சராசரியை விட அதிகமாகும்.
- இந்தியாவில் 25.44 லட்சம் பேர் எச்.ஐ.வி. பாதிப்புடன் வாழ்கின்றனர்.
- நாகாலாந்து (1.37%), மணிப்பூர் (0.87%), ஆந்திரப் பிரதேசம் (0.62%) மற்றும் தெலுங்கானா (0.44%) ஆகியவை வயது வந்தோர் மக்கள் தொகையில் மிக அதிக எச்.ஐ.வி பாதிப்பு கொண்ட ஐந்து மாநிலங்கள் ஆகும்.

## ஜூமூர் நடனம் 2025

- வரலாற்றில் "மிகப்பெரிய" ஜூமூர் நடன நிகழ்வு ஆனது அசாமில் நடைபெற்றது.
- 2025 ஆம் ஆண்டில், அசாம் மாநிலத்தின் தேயிலைத் தொழில் துறையின் 200வது ஆண்டு நிறைவைக் குறிக்கும் வகையில் ஜூமோயர் பினாண்டினி என்னுமிடத்தில் சுமார் 8,600 நடனக் கலைஞர்கள் இந்த நிகழ்வினை நிகழ்த்தினர்.
- இங்கு "tea tribe-தேயிலை பழங்குடி" என்ற ஒரு சொல் ஆனது தேயிலைத் தோட்டத் தொழிலாளர்கள் மற்றும் அவர்களின் சந்ததியினரின் பல கலாச்சார, பல இனம் சார் சமூகத்தைக் குறிக்கிறது.
- இந்த மக்கள் மத்திய இந்தியாவிலிருந்து, 19 ஆம் நூற்றாண்டில் அசாமில் குடியேறி ஆங்கிலேயர்கள் அமைத்து வந்த தேயிலைத் தோட்டங்களில் வேலை செய்தனர்.
- அவர்கள் பெரும்பாலும் இன்றைய ஜார்க்கண்ட், ஒடிசா, சத்தீஸ்கர் மற்றும் மேற்கு வங்காளத்தைச் சேர்ந்தவர்கள் ஆவர்.

## சோலிகா பழங்குடியினர்

- பிலிகிரி ரங்கணா மலைகள் (BRT) என்ற புலிகள் வளங்காப்பகத்தில் உள்ள புலிகள் எண்ணிக்கை அதிகரிப்பதில் சோலிகா பழங்குடியினர் சமூகத்தின் பங்கைப் பிரதமர் பாராட்டியுள்ளார்.
- சோலிகா பழங்குடி இனத்தின் மக்கள் தொகையானது, சுமார் 40,000 ஆகும் என்பதோடு அவர்களில் பலர் கர்நாடகாவின் சாமராஜ்நகர் மாவட்டத்தில், குறிப்பாக பிலிகிரி ரங்கணா மலைப் பகுதியில் வாழ்கின்றனர்.
- 2011 ஆம் ஆண்டில் இந்தப் புலிகள் வளங்காப்பகத்திற்குள் வனம் சார்ந்த நிலம் மீதான உரிமைகளைப் பெற்ற முதல் இனத்தவர் இவர்களே ஆவர்.
- இங்கு சில ஆண்டுகளுக்கு முன்னதாக சுமார் 8-10 புலிகளாக இருந்தப் புலிகளின் எண்ணிக்கை தற்போது சுமார் 50 புலிகளாக அதிகரித்துள்ளது.

## சம்பல் நதியில் 10 கங்கைநீர் முதலைகள்

- ❖ மத்தியப் பிரதேச மாநில முதல்வர், மொரேனாவில் உள்ள தேசிய சம்பல் கங்கைநீர் முதலைகள் (கரியல்) சரணாலயத்தினூடே உள்ளே சம்பல் நதியில் 10 கங்கைநீர் முதலைகளை விடுவித்தார்.
- ❖ இந்த மாநிலத்தில் இந்தியாவிலேயே மிகவும் அதிக எண்ணிக்கையிலான கங்கை நீர் முதலைகள் உள்ளன என்பதோடு 2024 ஆம் ஆண்டின் ஒரு கணக்கெடுப்பின்படி இந்த சரணாலயத்தில் 2,456 முதலைகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.
- ❖ கங்கை நீர் முதலைகள் என்பது நீண்ட மூக்கு கொண்ட, மீன் உண்ணும் முதலைகள் இனமான கவியாலிஸ் கேஞ்செடிகஸின் ஓர் இனமாகும்.
- ❖ உலகளவில், கங்கை நீர் முதலை இனத்தின் எண்ணிக்கையில் 1997 ஆம் ஆண்டு வரை நிலையான மீட்சிப் பதிவானது ஆனால் 1997 மற்றும் 2006 ஆகிய சில ஆண்டுகளுக்கு இடையில், இந்த எண்ணிக்கை 58% குறைந்து, 436 எண்ணிக்கையிலிருந்து 182 ஆகக் குறைந்துள்ளது.
- ❖ 1975 மற்றும் 1982 ஆகிய சில ஆண்டுகளுக்கு இடையில், இந்தியாவில் 16 காப்பினப் பெருக்கம் மற்றும் அதன் வெளியீட்டு மையங்களும் ஐந்து கங்கை நீர் முதலைகள் சரணாலயங்களும் நிறுவப்பட்டது.
- ❖ மூன்று மாநிலங்களை உள்ளடக்கிய சம்பல் சரணாலயம் ஆனது, இந்தியாவின் மிகத் தூய்மையான நதிகளில் ஒன்றான சாம்பல் நதியின் சுமார் 435 கி.மீ நீளப் பகுதிகளைப் பாதுகாக்கிறது.
- ❖ IUCN அமைப்பின் செந்நிறப் பட்டியலின்படி இது மிகவும் அருகி வரும் நிலையில் உள்ள இனமாகும்.

## குஜராத்தில் MISHTI திட்டம்

- ❖ மத்திய அரசானது, 2023 ஆம் ஆண்டில் MISHTI (கடற்கரை வாழ்விடங்கள் மற்றும் மிக உறுதியான வருமானங்களுக்கான சதுப்புநில முன்னெடுப்பு) திட்டத்தினை அறிமுகப் படுத்தியுள்ளது.
- ❖ இது மாநிலங்கள் மற்றும் ஒன்றியப் பிரதேசங்களின் கடற்கரைகளில் சதுப்புநிலக் காடுகளை விரிவுப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- ❖ இது கடலோரச் சமூகங்கள் மற்றும் கடல் சார் சூழல் அமைப்பின் பாதுகாப்பையும் வளங்காப்பையும் உறுதி செய்கிறது.
- ❖ இரண்டு ஆண்டுகளில் குஜராத் மாநில அரசானது, இந்த முன்னெடுப்பின் கீழ் 19,000 ஹெக்டேர்களுக்கு மேலான சதுப்புநிலங்களை வெற்றிகரமாக உருவாக்கியது.

## போபால் இரசாயனக் கழிவுகளை எரித்தல்

- ❖ யூனியன் கார்பைடு நிறுவனத்தின் நச்சுக் கழிவுகளின் சுமார் 10 டன் அடங்கிய முதல் தொகுதியை எரித்து அகற்றும் செயல்முறை ஆனது சமீபத்தில் மேற்கொள்ளப்பட்டது.
- ❖ போபால் எரிவாயு துயரச் சம்பவத்தின் 40 ஆண்டு பழமையான கழிவுகளை அப்புறப் படுத்துவதற்கான முதல் சோதனை ஓட்டத்தின் ஒரு பகுதியாகும்.
- ❖ எரித்தல் அல்லது எரித்து அகற்றுதல் என்ற செயல்முறையானது நிறைவடைய சுமார் 72 மணி நேரம் ஆகும்.

- பிதாம்பூரில் உள்ள சுமார் 358 டன் யூனியன் கார்பைடு கழிவுகளை அப்புறப்படுத்தும் மத்தியப் பிரதேச அரசின் திட்டங்களை எதிர்த்து தாக்கல் செய்யப்பட்ட மனுவை உச்ச நீதிமன்றம் நிராகரித்த சிறிது நேரத்திலேயே இந்த செயல்முறை தொடங்கியது.
- 1984 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் நடைபெற்ற வாயுக் கசிவின் மிகவும் ஒரு சோக நிகழ்விலிருந்து, சுமார் 40 ஆண்டுகளுக்கும் மேலாக போபாலில் உள்ள தற்போது செயல்படாத யூனியன் கார்பைடு இந்தியா லிமிடெட் (UCIL) தொழிற்சாலையில் இந்த இரசாயனக் கழிவுகள் தேங்கிக் கிடக்கின்றன.

## காந்திசாகர் சரணாலயம் - மத்தியப் பிரதேசம்

- சிவிங்கிப் புலிகள் மறு அறிமுகம் திட்டம் ஆனது, தற்போது குஜராத்தில் உள்ள பன்னி புல்வெளிகள் மற்றும் மத்தியப் பிரதேசத்தில் உள்ள காந்திசாகர் சரணாலயத்தில் விரிவாக்கப்பட உள்ளது.
- குஜராத்தின் கட்ச் மாவட்டத்தில் அமைந்துள்ள பன்னி புல்வெளிகள், சுமார் 2,500 சதுர கி.மீ பரப்பளவிலான ஒரு பாதுகாக்கப்பட்ட வன சுற்றுச்சூழல் அமைப்பாகும்.
- இது ஆப்பிரிக்க சவன்னா புல்வெளிகளைப் போன்ற பகுதியளவு வறண்ட ஒரு நிலப் பரப்பைக் கொண்டுள்ளது என்பதோடு சிவிங்கிப் புலிகளுக்கு ஏற்ற வாழ்விடத்தினை இது வழங்குகிறது.
- காந்திசாகர் சரணாலயம் மாண்ட்சௌர் மற்றும் நீமுச் மாவட்டங்களில் பரவியுள்ளது.
- இராஜஸ்தான் மாநில எல்லையில் அமைந்துள்ள நிமார் என்றும் அழைக்கப்படும் ஒரு பகுதியானது வறண்ட, பகுதியளவு வறண்ட நிலப்பரப்பைக் கொண்டுள்ளது.
- இந்தப் பகுதியின் புவியியல் நிலைமைகள் ஆப்பிரிக்காவில் காணப்படும் சிவிங்கிப் புலிக்கு ஏற்ற நிலப்பரப்புகளை ஒத்திருக்கின்றன.

## பஞ்சாப் – வேளாண் உள்கட்டமைப்பு நிதி திட்டம்

- வேளாண் உள்கட்டமைப்பு நிதி (AIF) திட்டத்தின் கீழ் மத்திய அரசு வழங்கிய 4,713 கோடி ரூபாய் தொகையினையும் பஞ்சாப் மாநில அரசு பயன்படுத்தியுள்ளது.
- இதன் மூலம், இந்தத் திட்டத்தினை நன்கு செயல்படுத்துவதில் பஞ்சாப் மாநிலமானது இந்தியாவிலேயே முதலிடத்தில் உள்ளது.

## தன்னாட்சி நிர்வாக சபை குறித்த அசாம் மாநிலத்தின் திருத்த மசோதா

- ஏழு தன்னாட்சி நிர்வாகச் சபைகள் தொடர்பான திருத்த மசோதாக்களை அசாம் மாநிலச் சட்டமன்றம் நிறைவேற்றியுள்ளது.
- தேர்தல்களை நடத்துவது "நடைமுறைக்கு மாறானது" எனக் கண்டறியப்பட்டால், இந்த அமைப்புகளின் செயல்பாட்டை ஆளுநரே மேற்கொள்வதற்கு இது அங்கீகாரத்தினை அளிக்கிறது.
- இந்த அமைப்புகளை நிர்வகிக்கும் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் சபையின் பதவிக் காலத்தினை அதிகபட்சமாக ஓராண்டுக்கும் மேலாக நீட்டிக்கும் விதிமுறை உள்ளது.
- தேர்ந்தெடுக்கப்பட்ட சபையின் வழக்கமான பதவிக் காலம் ஆனது ஐந்து ஆண்டுகள் ஆகும்.

## தீக்காயங்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கான கொள்கை

- தீக்காயங்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கு தனி விரிவான கொள்கையைக் கொண்ட இந்தியாவின் முதல் மாநிலமாக கர்நாடகா மாறியுள்ளது.
- இந்தக் கொள்கையில் காப்பீடு, வீட்டுவசதி, மறுவாழ்வு, வேலைவாய்ப்பு மற்றும் தீக் காயத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு ஓய்வூதியம் உள்ளிட்ட இன்ன பிற நலன்புரி நடவடிக்கைகள் அடங்கும்.

## ஒடிசாவில் மெலியோடோசிஸ்

- ஒடிசாவில் மெலியோடோசிஸ் பாதிப்பு குறித்த தகவல்களை சேகரிக்கும் நிகழ்வானது தொற்றுகள் பருவகாலமாக ஏற்படுகின்றன என்பதையும், மிக அதிக மழைப்பொழிவு, அதிக ஈரப்பதம், அதிக மேகமூட்டம் மற்றும் குறைந்த சூரிய ஒளி போன்ற பல்வேறு சூழ்நிலைகளின் போது அதன் பாதிப்பு அதிகமாக உள்ளது என்பதையும் காட்டுகிறது.
- மெலியோடோசிஸை 'சுற்றுச்சூழலால் தோன்றும் தொற்று நோயாக' கருதலாம்.
- இது பர்கோல்டேரியா சூடோமல்லே என்ற பாக்டீரியாவால் ஏற்படும் அதிகரித்து வரும் வெப்ப மண்டல நோயாகும்.
- இது உலகளவில் பரவி வரும் ஓர் அரிய நோயாகும் என்பதோடு மேலும் இந்தியா உள்ளிட்ட தெற்கு மற்றும் தென்கிழக்கு ஆசியாவில் இது காணப் படுகிறது.

## சிஷ்டாச்சர் பிரிவு

- டெல்லி காவல்துறையானது, 'பெண்களைக் கேலி செய்வதைத் தடுத்தல்' படைகள் என்றும் அழைக்கப்படுகின்ற 'சிஷ்டாச்சர்' படைப் பிரிவினைத் தொடங்க உள்ளது.
- இது தேசிய தலைநகரில் பெண்களின் பாதுகாப்பை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்த முக்கிய முன்னெடுப்பானது, "தனிநபர்கள் மீது தனிப்பட்ட அல்லது கலாச்சார ஒழுக்கத்தைத் திணிப்பதை விட, சட்டத்தை அமல்படுத்துவதில் கவனம் செலுத்தும்".
- ஒவ்வொரு மாவட்டத்திலும் காவல் துறை உதவி ஆணையர் (ACP) தலைமையிலான படைப் பிரிவுகள் நிறுவப்படும்.

## ஹமர் மற்றும் சோமி பழங்குடியினர்

- மணிப்பூரில் அமைதியைக் கொண்டு வருவதற்காக என ஹமர் இன்புய் மற்றும் சோமி சபை ஆகியவை இணைந்து பணியாற்ற ஒப்புக்கொண்டுள்ளன.
- ஹமர் பழங்குடியினர் பெரிய சின்-குகி-மிசோ இனக்குழுவைச் சேர்ந்தவர்கள் ஆவர்.
- சோமிகள் மிசோ, குகி மற்றும் சின் சமூகங்களை உள்ளடக்கிய மாபெரும் சோ இனக் குழுவின் அங்கத்தினராவர்.
- ஹமர் குக்கி-சின்-மிசோ மொழிக் குடும்பத்தின் ஒரு பகுதியாக உள்ள ஹமர் பேச்சு வழக்கு மொழியினைப் பேசுகின்றனர்.
- சோமிகள் குகி-சின் மொழியியல் குடும்பத்திற்குள் உள்ள குகிஷ் மொழி பேச்சு வழக்குகளில் ஒரு மொழியினைப் பேசுகின்றனர்.

## சிறப்புப் பிரிவு அந்தஸ்திற்கான கோரிக்கை - பீகார்

- பீகார் அரசு ஆனது 16வது நிதி ஆணையத்திடம் சிறப்புப் பிரிவு அந்தஸ்துக்கான புதிய கோரிக்கையை முன்வைத்துள்ளது.
- தற்போது, எந்த மாநிலமும் சிறப்பு வகை அந்தஸ்து கொண்டிருக்கவில்லை.
- இது திட்ட ஆணையத்தின் செயல்பாட்டுக் காலத்தில் நடைமுறையில் இருந்தது.
- அந்த வகைப்பாடு ஆனது திட்ட ஆணையம் மாற்றப் பட்டதுடன் முடிவுக்கு வந்தது.

## ஷ்யாமா பிரசாத் முகர்ஜி நகர்ப்புற வசதிகளைக் கிராமப்புறத்தில் வழங்கும் திட்டம்

- கிராமப்புறச் சமூக வாழ்க்கையைப் பாதுகாத்து, கிராமப்புற இந்தியாவில் நகர்ப்புற வசதிகளை அணுகுவதை நன்கு உறுதி செய்வதோடு, சுமார் 300 கிராமக் குழுக்களை மேம்படுத்துவதே இந்தத் திட்டத்தின் நோக்கமாகும்.
- கிராமப்புற-நகர்ப்புற இடைவெளியினை இணைக்கும் ஒரு நோக்கம் கொண்ட இது 34 மாநிலங்கள் மற்றும் ஒன்றியப் பிரதேசங்களை உள்ளடக்கியது.
- தேசிய அளவிலான இத்தரவரிசையில் 96.32 மதிப்பெண்களுடன் தமிழ்நாடு மாநிலம் முதலிடத்திலும், அதைத் தொடர்ந்து மிசோரம் (93.96), உத்தரப் பிரதேசம் (92.37), மற்றும் தெலுங்கானா (91.87) ஆகிய மாநிலங்கள் இடம் பெற்றுள்ளன.

## முதல் அறிவியல் பூர்வ நிலக்கரி சுரங்கத் தொகுதி

- மலைப் பாங்கான கிழக்கு ஜெயின்சியா என்ற மாவட்டத்தின் பைண்டிஹாட்டி என்ற பகுதியில் உள்ள சரிங்க்காம்-A எநனுமிடத்தில் முதல் 'அறிவியல் பூர்வ' நிலக்கரிச் சுரங்கத் தொகுதியை மேகாலயா அரசு திறந்து வைத்துள்ளது.
- வாக்கியான் மற்றும் ராஷியாங் ஆறுகள் இந்தப் பகுதி வழியாகப் பாய்கின்றன.
- வைலாங் ஆற்றின் துணை நதியான வாக்கியான், இந்நிலக்கரித் தொகுதியின் தெற்கு எல்லையில் பாய்கிறது.

## கேரளாவில் பெருங்கற்கால மற்றும் ஒடிசாவில் புத்தர் காலக் கண்டுபிடிப்புகள்

- கேரளாவின் பாலக்காட்டில் உள்ள மலம்புழா அணை அருகே மேற்கொள்ளப்பட்ட ஒரு சமீபத்திய தொல்பொருள் அகழ்வாராய்ச்சியின் போது ஏராளமான பெருங்கற்காலக் கட்டமைப்புகள் கண்டறியப்பட்டுள்ளன.
- ஆந்திரப் பிரதேசத்தில் உள்ள கடப்பாவின் இலங்கமலை காப்புக் காடுப் பகுதியிலும் பண்டைய கால கல்வெட்டுகளை இந்தியத் தொல்லியல் துறை கண்டறிந்துள்ளது.
- இந்த ஆய்வு ஆனது மூன்று முக்கியப் பாறை உறைவிடங்களைக் கண்டுபிடிப்பதற்கு வழி வகுத்தது.
- இவற்றில் ஒன்று விலங்குகள், வடிவியல் வடிவங்கள் மற்றும் மனித உருவங்களைச் சித்தரிக்கும் வரலாற்றுக்கு முந்தைய கால ஓவியங்களைக் கொண்டுள்ளது.
- இந்த ஓவியங்கள் பெருங்கற்கால (இரும்பு காலம்) மற்றும் முற்கால வரலாற்றுக் காலங்களைச் (கி.மு.2 ஆம் நூற்றாண்டு) சேர்ந்தவை.

- ஒடிசாவின் ரத்னகிரியில், மூன்று மாபெரும் புத்தர் தலைகள், ஒரு குறுக்குக் கோட்டு வடிவமைப்பைக் கொண்ட ஒரு கல் ஸ்தூபி, ஒரு செவ்வக வடிவப் பிரார்த்தனை கூடங்கள்/சைத்ய வளாகம், மற்றும் தாரா, சுண்டா, மஞ்சுஸ்ரி போன்ற பல்வேறு தெய்வங்களைக் கொண்ட நினைவு ஸ்தூபிகள் கண்டறியப்பட்டன.

### எரி பட்டுக்கான சான்றிதழ்

- வடகிழக்கு கைவினைப்பொருட்கள் மற்றும் கைத்தறி மேம்பாட்டுக் கழகம் (NEHHDC) ஆனது எரி பட்டுக்காக ஜெர்மனியிடமிருந்து ஓயெகோ-டெக்ஸ் சான்றிதழைப் பெற்று உள்ளது.
- எரி பட்டு ஆனது முதன்மையாக இந்தியாவின் வடகிழக்கு மாநிலங்களில், குறிப்பாக அசாம், மேகாலயா, அருணாச்சலப் பிரதேசம், நாகாலாந்து மற்றும் மணிப்பூரின் சில பகுதிகளில் உற்பத்தி செய்யப்படுகிறது.
- அசாம் அதன் எரி பட்டு உற்பத்திக்குப் பிரபலமானது.
- இது "அஹிம்சா பட்டு" அல்லது "அமைதிப் பட்டு" என்றும் அழைக்கப்படுகிறது.
- இது பட்டுப்புழுக்களைக் கொல்லாமல், சுற்றுச்சூழலுக்கு உகந்த மற்றும் நிலையான உற்பத்தி முறையில் உற்பத்தி செய்யப்படுகிறது.

## பிரபலமானவர்கள், விருதுகள், மற்றும் நிகழ்வுகள்

| இசை அகாடமி விருதுகள் | |
|---|---|
| **R.K. ஸ்ரீராம்குமார் – வயலின் இசைக் கலைஞர்** | சங்கீத கலாநிதி விருது |
| **ஊர்மிளா சத்தியநாராயணா - நடனக் கலைஞர்** | நிருத்ய கலாநிதி விருது |
| **சியாமளா வெங்கடேஸ்வரன் – பாடகி**<br>**வித்துவான் T.R. கோவிந்தராஜனுக்கு – தவில்** | சங்கீத கலா ஆச்சார்யா விருதுகள் |
| **மாடம்பி சுப்பிரமணிய நம்பூதிரி – கதகளி நடனக் கலைஞர்**<br>**J.T. ஜெயராஜ் கிருஷ்ணன் மற்றும்**<br>**ஜெயஸ்ரீ ஜெயராஜ் கிருஷ்ணன் – வீணை கலைஞர்கள்** | TTK விருதுகள் |

| ACM A.M. டூரிங் விருது 2024 | |
|---|---|
| **ஆண்ட்ரூ G. பார்டோ** | **மாசசூசெட்ஸ் பல்கலைக்கழகம், ஆம்ஹெர்ஸ்ட்** |
| **ரிச்சர்ட் S. சட்டன்** | **ஆல்பர்ட்டா பல்கலைக்கழகம்** |

| e-Toycathon 2025 | |
|---|---|
| **கோயம்புத்தூரில் உள்ள ஸ்ரீகிருஷ்ணா பொறியியல் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரி – விரிப்பு பலகை விளையாட்டு பொம்மை தயாரிப்பு** | முதல் பரிசு |
| **நொய்டாவில் உள்ள ஜெய்பீ தகவல் தொழில்நுட்பக் கல்வி நிறுவனம் - ரோபோ-மென்டர் AI எனும் எந்திரம்** | இரண்டாவது பரிசு |
| **துர்காபூர் தேசியத் தொழில்நுட்பக் கல்விக் கழகம் - ஊடாடும் வகையிலான கல்வி பயன்பாட்டு விளக்கப்படம்** | மூன்றாவது பரிசு |

| ஹாக்கி இந்தியா வருடாந்திர விருதுகள் 2024 | |
|---|---|
| **ஹர்மன்ப்ரீத் மற்றும் சவிதா (ஆடவர் மற்றும் மகளிர் பிரிவு)** | ஆண்டின் சிறந்த வீரருக்கான பல்பீர் சிங் சீனியர் விருது |
| **1975 ஆம் ஆண்டில் வெற்றி பெற்ற ஹாக்கி அணி** | மேஜர் தியான் சந்த் வாழ்நாள் சாதனையாளர் விருது |
| **பிரசார் பாரதி** | ஹாக்கி இந்தியா ஜமன் லால் சர்மா விருது |

| தேசிய தன்வந்தரி ஆயுர்வேத விருதுகள் 2025 | |
|---|---|
| **வைத்ய தாரா சந்த் சர்மா** | நாடி வைத்தியர் மற்றும் எழுத்தாளர் |
| **வைத்ய மாயா ராம் உனியல்** | திரவியகுண விஞ்ஞானத்தின் புகழ்பெற்ற அறிஞர் |
| **வைத்ய சமீர் கோவிந்த் ஜமதக்னி** | விஸ்வ வியாக்யன்மாலா தேசிய மாநாட்டின் நிறுவனர் |

| ஆஸ்கார் விருதுகள் 2025 | |
|---|---|
| **அனோரா** | சிறந்த படம், சிறந்த நடிகை (மைக்கி மேடிசன்), சிறந்த இயக்குனர், சிறந்த திரைப்பட தொகுப்பு மற்றும் சிறந்த அசல் திரைக்கதை |
| **அட்ரியன் பிராடி – தி ப்ரூடலிஸ்ட்** | சிறந்த நடிகருக்கான ஆஸ்கார் விருது |
| **ஜோ சல்டானா – எமிலியா பெரெஸ்** | சிறந்த துணை நடிகை விருது |
| **I'm Still Here – பிரேசில்** | சிறந்த சர்வதேச திரைப்படம் |

| ஃபோர்ப்ஸ் இதழின் இந்தியத் தலைமைத்துவ விருதுகள் (FILA) 2025 | |
|---|---|
| **பிரவுசர் ஸ்டாக்** | ஆண்டின் சிறந்தப் புத்தொழில் நிறுவனம் |
| **அஜய் சிங்**<br>**கத்ரீனா கைஃப்** | ஜகான்ஸ் ஆஃப் எக்ஸலன்ஸ் விருது |
| **ஜெய் ஷா** | சிறந்த தலைவர் விருது |
| **ராஜேஷ் ஜெஜுரிக்கர்** | ஆண்டின் சிறந்த தலைமை நிர்வாக அதிகாரி |

| கலைச் செம்மல் விருது 2024 | |
|---|---|
| **A. மணிவேலு** | பாரம்பரிய ஓவியப் பிரிவு |
| **V. பாலசந்தர் மற்றும் K. கன்னியப்பன்** | சிறப்புப் பிரிவு |
| **K. முரளிதரன் மற்றும் A. செல்வராஜ்** | நவீன ஓவியப் பிரிவு |
| **N. இராகவன்** | சிறப்புப் பிரிவு |

| மற்ற விருதுகள் | | |
|---|---|---|
| **பரிசு / விருது** | **விருது பெற்றவர்** | **தொடர்புடைய துறை** |
| **ஞானபீட விருது** | வினோத் குமார் சுக்லா | இந்தி மொழிக் கவிஞர், புதின ஆசிரியர் |
| **ஏபெல் பரிசு 2025** | மசாகி காஷிவாரா | ஜப்பானியக் கணிதவியலாளர் |
| **ஸ்டாக்ஹோம் நீர் பரிசு 2025** | குண்டர் ப்ளோஷ்ல் | ஆஸ்திரியா நாட்டின் நீர்ப் பொறியியலின் முன்னோடி |

## பிராணி மித்ரா மற்றும் ஜீவ் தயா விருது 2025

- "பிராணி மித்ரா மற்றும் ஜீவ் தயா விருது விழா" என்ற விருதானது இந்திய விலங்கு நல வாரியத்தினால் (AWBI) ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.
- இந்த ஆண்டு "பிரானி மித்ரா விருதுகள்" ஆனது ஐந்து பிரிவுகளின் கீழ் 5 தனிநபர்கள் / அமைப்புகளுக்கு வழங்கப்பட்டன:
- 1960 ஆம் ஆண்டு விலங்குகள் மீதான வன்கொடுமை தடுப்பு (PCA) சட்டத்தின் கீழ் AWBI நிறுவப்பட்டுள்ளது.
- விலங்குகளைத் தேவையற்ற வலிகள் அல்லது துன்பத்திற்கு ஆளாக்காமல் இருப்பதை உறுதி செய்வதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.

## கடிதங்களின் திருவிழா 2025

- கலாச்சாரத் துறை அமைச்சகத்தின் கீழ் சாகித்ய அகாடமியானது, அதன் வருடாந்திர கடிதங்கள் திருவிழாவை புது டெல்லியில் ஏற்பாடு செய்துள்ளது.
- இது ஆசியாவின் மிகப்பெரியதொரு இலக்கியத் திருவிழாவாகும் என்பதோடு இந்தத் திருவிழாவில் நாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்து 50க்கும் மேற்பட்ட மொழிகளைப் பிரதிநிதித்துவப்படுத்தும் சுமார் 700 எழுத்தாளர்கள் கலந்து கொள்கிறார்கள்.
- இந்தத் திருவிழாவின் கருத்துரு, “Indian Literary Traditions” என்பதாகும்.

## தேசியப் பொதுப் பேருந்துப் போக்குவரத்து விருதுகள் 2023-24

- தமிழ்நாடு மாநிலப் போக்குவரத்துக் கழகமானது, 2023-24 ஆம் ஆண்டிற்கான 19 தேசியப் பொதுப் பேருந்து போக்குவரத்து விருதுகளைப் பெற்றுள்ளன.
- இதில் கும்பகோணம் பிரிவு ஆனது, 2023-24 ஆம் ஆண்டிற்கான மாநிலச் சாலைப் போக்குவரத்து நிறுவனங்கள் சங்கத்தின் (ASRTU) வழங்கப்பட்ட ஐந்து தேசியப் பொதுப் பேருந்து போக்குவரத்து விருதுகளைப் பெற்றுள்ளது.
- TNSTC சேலம் மற்றும் மதுரை பிரிவுகள் ஆனது தலா நான்கு விருதுகளைப் பெற்று உள்ளன.
- மாநில விரைவுப் போக்குவரத்துக் கழகம் (SETC) ஆனது மூன்று விருதுகளை வென்று உள்ளது.
- சென்னையின் MTC ஆனது இரண்டு விருதுகளையும், TNSTC விழுப்புரம் பிரிவு ஆனது ஒரு விருதையும் பெற்றுள்ளன.

## இளையராஜா சிம்பொனி 2025

- மூத்த இசையமைப்பாளர் இளையராஜா "வேலியண்ட்" எனப்படுகின்ற தனது "முதல் மேற்கத்தியப் பாரம்பரிய சிம்பொனி / இசைத் தொகுப்பினை" இலண்டன் நகரில் வெளியிட்டார்.
- இலண்டனில் இந்தச் சாதனையைப் படைத்த ஆசியத் திரைத்துறையினைச் சேர்ந்த முதல் இசைக்கலைஞர் இவரே ஆவார்.
- இளையராஜா ஸ்காட்லாந்து நாட்டு தேசிய இசைக்குழுவுடன் இணைந்து வேலியண்ட் இசைத் தொகுப்பினை பதிவு செய்துள்ளார்.
- மேற்கத்தியப் பாரம்பரிய இசையின் பல கூறுகளை திரைப்பட இசைக்காக வேண்டி பயன்படுத்திய முதல் இந்திய இசையமைப்பாளர்களில் இவரும் ஒருவர் ஆவார் என்ற நிலையோடு அதே போல் முழு நீள அளவில் சிம்பொனியை இயற்றிய முதல் இசை அமைப்பாளர்களில் இவரும் ஒருவர் ஆவார்.

## மீன்வளம் சார் புத்தொழில் மாநாடு 2.0

- மீன்வளம், கால்நடைப் பராமரிப்பு மற்றும் பால்வள அமைச்சகத்தின் கீழ் இயங்கும் மீன்வளத் துறையானது, ஐதராபாத்தில் மீன்வளம் சார்ந்தப் புத்தொழில் மாநாடு 2.0 நிகழ்ச்சியினை ஏற்பாடு செய்தது.
- இந்த நிகழ்வு ஆனது, மீன்வளம் மற்றும் மீன்வளர்ப்புத் துறைகளில் தொழில்முனைவு, தொழில்நுட்ப முன்னேற்றங்கள் மற்றும் நிலைத் தன்மையை மேம்படுத்துவதை ஒரு முக்கிய நோக்கமாகக் கொண்டதாகும்.
- இந்த மாநாட்டின் போது, NFDP கைபேசி செயலி அறிமுகப்படுத்தப்பட்டது.
- இது பிரதான் மந்திரி மத்ஸ்ய சம்ரிதி சஹ்-யோஜனா (PM-MKSSY) எனும் திட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்டது.
- இந்தச் செயலியானது மிகவும் குறிப்பாக மீன்வளத் துறையில் உள்ள புத்தொழில் நிறுவனங்கள் மற்றும் பங்குதாரர்களுக்கு நன்குப் பயனளிக்கும் வகையில் அவர்கள் அரசாங்கத் திட்டங்களை அணுகுவதை எளிதாக்குவதற்காக என வடிவமைக்கப் பட்டு உள்ளது.

## RBI – எண்ணிம மாற்ற விருது 2025

- இலண்டனில் உள்ள மத்திய வங்கியால் அறிவிக்கப்பட்ட மத்திய வங்கி விருதின் 2025 ஆம் ஆண்டு எண்ணிம மாற்ற விருதை இந்திய ரிசர்வ் வங்கி (RBI) பெற்றுள்ளது.
- அதன் பிரவாஹ் மற்றும் சார்த்தி எண்ணிம முன்னெடுப்புகளை அங்கீகரிப்பதற்காக இந்த விருதிற்காக இந்திய ரிசர்வ் வங்கி தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.
- இந்திய ரிசர்வ் வங்கியின் பல்வேறு அனைத்து உள் செயல்பாடுகளையும் எண்ணிம மயமாக்குவதற்காக என 2023 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் 'தேர்' என்ற இந்தி மொழி சொல்லின் மூலம் பெயரிடப்பட்ட சார்த்தி அமைப்பு தொடங்கப்பட்டது.
- இது ஊழியர்களுக்கு ஆவணங்களை பாதுகாப்பாக சேமித்து பகிர்ந்து கொள்வதற்கும், ஆவணப் பதிவு நிர்வாகத்தினை மேம்படுத்துவதற்கும், அறிக்கைகள் மற்றும் முகப்புப் பக்கம் மூலம் தரவுப் பகுப்பாய்வினை மேம்படுத்துவதற்கும் உதவுகிறது.
- இந்தி மொழியில், 'மென்மையானப் பாய்வு' என்று பொருள்படும் பிரவாஹ் அமைப்பு ஆனது 2024 ஆம் ஆண்டு மே மாதத்தில் அறிமுகப்படுத்தப்பட்டது.
- இந்தத் தளம் ஆனது, இந்திய ரிசர்வ் வங்கியின் அலுவலகங்களுக்குள் செயலாக்கம் செய்வதற்காக சார்த்தி தரவுத் தளத்துடன் தடையின்றி ஒருங்கிணைத்து, வங்கி சாராத வெளிப்புறப் பயனர்கள் தம் ஒழுங்குமுறை விண்ணப்பங்களை எண்ணிம முறையில் சமர்ப்பிக்க அனுமதிக்கிறது.

## சுனிதா வில்லியம்ஸ்

- சுமார் ஒன்பது மாதங்களுக்கும் மேலாக சர்வதேச விண்வெளி நிலையத்தில் (ISS) தங்கி இருந்த பிறகு விண்வெளி வீரர்கள் சுனிதா வில்லியம்ஸ் மற்றும் புட்ச் வில்மோர் ஆகியோர் பூமிக்குத் திரும்பியுள்ளனர்.
- திரு. வில்மோர் மற்றும் திருமதி. வில்லியம்ஸ் விண்வெளியில் 286 நாட்கள் தங்கி இருந்தனர்.
- அவர் விண்வெளிக்குப் பயணம் மேற்கொண்ட போது எதிர்பார்த்ததை விட சுமார் 278 நாட்கள் அதிக நாட்கள் விண்வெளியில் செலவிட்டுள்ளனர்.
- அவர்கள் பூமியை 4,576 முறை சுற்றி வந்தனர் மற்றும் விண்கலப் பெட்டகம் புவிக்குத் திரும்பும் நிலையில் போது சுமார் 121 மில்லியன் மைல்கள் (சுமார் 195 மில்லியன் கிலோமீட்டர்) பயணம் செய்தனர்.
- ஒன்பது விண்வெளி நடைப் பயணங்களில், 62 மணி நேரம் விண்வெளியில் நடந்து, பெண் விண்வெளி வீரர்களில் அதிக நேரம் விண்வெளி நடைப் பயணத்தில் செலவிட்ட பெண்மணி என்ற சாதனையை வில்லியம்ஸ் படைத்துள்ளார்.
- கடந்த ஆண்டு ஜூன் 05 ஆம் தேதியன்று நாசாவின் போயிங் என்ற பயணக் குழுவின் விண்வெளிப் பயணச் சோதனையில் நாசாவின் இரண்டு விண்வெளி வீரர்களும் விண்வெளிக்குச் சென்றனர்.
- ஸ்பேஸ்எக்ஸ் நிறுவனத்தின் டிராகன் என்ற விண்கலம் ஆனது, பூமியின் சுற்றுப்பாதை மற்றும் அதற்கு அப்பாலான பகுதிகள் வரை ஏழு பயணிகளை ஏற்றிச் செல்லக் கூடிய வகையில் உள்ளது.

## 4வது உலகளாவியப் புலனாய்வு மற்றும் பாதுகாப்புத் தலைவர்கள் மாநாடு

- இந்தியாவின் தேசியப் பாதுகாப்பு ஆலோசகர் (NSA), 4வது உலகளாவியப் புலனாய்வு மற்றும் பாதுகாப்புத் தலைவர்கள் தலைமையேற்று நடத்தினார்.
- இதில் ஐங்கண் கூட்டணியின் தலைவர்கள் உட்பட 20க்கும் மேற்பட்ட நாடுகளைச் சேர்ந்த புலனாய்வு அதிகாரிகள் பங்கேற்றனர்.
- இந்த உயர்மட்ட வருடாந்திரப் பாதுகாப்பு பேச்சுவார்த்தையானது, 2025 ஆம் ஆண்டு ரைசினா பேச்சுவார்த்தையின் ஒரு பகுதியாக ஏற்பாடு செய்யப்பட்டது.
- இது வருடாந்திர முனிச் / மியூனிக் பாதுகாப்பு மாநாடு மற்றும் சிங்கப்பூரின் ஷாங்க்ரி-லா பேச்சுவார்த்தையின் மாதிரியில் வடிவமைக்கப்பட்டுள்ளது.

## ISA ஆணையத்தின் 30வது அமர்வு

- சர்வதேசக் கடற்படுகை ஆணையத்தின் (ISA) 30வது அமர்வு ஆனது ஜமைக்காவில் தொடங்கியுள்ளது.
- சுமார் 170 உறுப்பினர் நாடுகளும், ஐரோப்பிய ஒன்றியமும் ஆழ்கடல் சுரங்கத்திற்கான விதிமுறைகளைப் பற்றி விவாதிப்பதற்காக கூடியுள்ளன.
- ISA என்பது 1994 ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்ட மிகவும் தன்னாட்சி மிக்க சர்வதேச அமைப்பாகும்.
- 1982 ஆம் ஆண்டில் ஐக்கிய நாடுகளின் கடல் மீதான சட்டம் தொடர்பான ஒரு உடன் படிக்கை (UNCLOS) நடைமுறைக்கு வந்தபோது இது உருவாக்கப் பட்டது.
- சர்வதேசக் கடற்படுகையின் சுரங்கம் மற்றும் அதனுடன் தொடர்புடையப் பல்வேறு நடவடிக்கைகளை ISA நிர்வகிக்கிறது.
- ஆழ்கடல் சுரங்கமானது, 200 மீட்டருக்கும் அதிகமான ஆழத்தில் கடல் தளத்திலிருந்து கனிமங்களை பிரித்தெடுப்பதை உள்ளடக்கியது.

## ஆரோக்கியமான நகரங்களுக்கான கூட்டாண்மை உச்சி மாநாடு – 2025

- இந்த உச்சி மாநாட்டினை ப்ளூம்பெர்க் தொண்டு நிறுவனம், உலக சுகாதார அமைப்பு (WHO), வைட்டல் ஸ்ட்ராட்டஜிஸ் மற்றும் சிட்டி ஆஃப் பாரிஸ் ஆகியவை இணைந்து நடத்துகின்றன.
- ஆரோக்கியமான நகரங்களுக்கான ஒரு கூட்டாண்மை என்பது தொற்றாத நோய்கள் மற்றும் காயங்களைத் தடுக்க என்று செயல்படும் 74 நகரங்களின் உலகளாவிய வலை அமைப்பாகும்.
- இந்த ஆண்டு, தொற்றாத நோய்கள் (NCDs) மற்றும் காயங்களைத் தடுப்பதில் சாதனை படைத்ததற்காக, கோர்டோபா (அர்ஜென்டினா), ஃபோர்டலேசா (பிரேசில்) மற்றும் மான்செஸ்டர் (ஐக்கியப் பேரரசு) ஆகியவற்றிற்கு உலக சுகாதார அமைப்பினால் இந்த விருதுகள் வழங்கப்பட்டன.

# விளையாட்டுச் செய்திகள்

## ஆசியக் கோப்பை உலக தரவரிசை வில்வித்தைப் போட்டி – 2025

- ஆசியக் கோப்பை உலகத் தரவரிசை வில்வித்தைப் போட்டியின் முதல் கட்டத்தின் பதக்கப் பட்டியலில் இந்தியா முதலிடத்தைப் பிடித்தது.
- இந்தப் போட்டிகளின் முடிவில் சுமார் 5 தங்கம் உட்பட எட்டு பதக்கங்களை இந்தியா பெற்றது.
- இரண்டு தங்கம் உட்பட ஐந்து பதக்கங்களுடன் தென்கொரியா நாடு இந்த பதக்கப் பட்டியலில் இரண்டாவது இடத்தைப் பிடித்தது.

## 2025 ஆம் ஆண்டு IPL போட்டிகளில் இருந்து ஹாரி புரூக் விலகல்

- இங்கிலாந்து பேட்ஸ்மேன் ஹாரி புரூக் தொடர்ந்து இரண்டாவது முறையாக, இந்தியன் பிரீமியர் லீக் (IPL) போட்டிகளில் (2025) இருந்து விலகியுள்ளார்.
- இந்த மாத இறுதியில் தொடங்க உள்ள புதிய IPL போட்டித் தொடருக்காக அவர் டெல்லி கேபிடல்ஸ் அணியுடன் ஒப்பந்தம் செய்யப்பட்டார்.
- ஏலத்தில் பதிவு செய்து, ஏலத்தில் தேர்வு செய்யப்பட்ட பிறகு, அந்தப் போட்டித் தொடர் தொடங்குவதற்கு முன்னதாக அந்தப் போட்டிகளில் இருந்து விலகிக் கொள்ளும் ஒரு விளையாட்டு வீரர் இரண்டு போட்டித் தொடர்களுக்கு IPL ஏலத்தில் பங்கேற்கத் தடை விதிக்கப்படுவார்.

## மாற்றுத் திறனாளிகளுக்கான உலக கிராண்ட் பிரிக்ஸ் போட்டிகள் 2025

- புது டெல்லியில் நடைபெற்ற மாற்றுத் திறனாளிகளுக்கான உலக கிராண்ட் பிரிக்ஸ் போட்டியானது இந்தியா நடத்திய முதலாவது சர்வதேச மாற்றுத் திறனாளிகளுக்கான போட்டியாகும்.
- இது 2028 ஆம் ஆண்டு வரையில் ஆண்டுதோறும் நடைபெறும் போட்டியாக நடைபெற உள்ளது.
- இந்திய அணியானது 45 தங்கம், 40 வெள்ளி மற்றும் 49 வெண்கலப் பதக்கங்களுடன் மொத்தம் 134 பதக்கங்களை வென்றதன் மூலம் பதக்கப் பட்டியலில் முதலிடத்தில் இருந்தது.

## உலக குளிர்காலச் சிறப்பு ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டிகள் 2025

- இத்தாலி நாட்டின் டூரின் என்ற நகரில் நடைபெற்ற உலக குளிர்காலச் சிறப்பு ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டிகளின் இறுதி நாளில் இந்தியா 12 பதக்கங்களைப் பெற்றது.
- 8 தங்கம், 18 வெள்ளி மற்றும் 7 வெண்கலப் பதக்கங்கள் உட்பட இந்தியாவின் மொத்தப் பதக்க எண்ணிக்கை 33 ஆகும்.
- பனிச்சறுக்கு மற்றும் மலைச் சரிவு பனிச்சறுக்கு ஆகியப் போட்டிகளில் இந்தியா தலா 10 பதக்கங்களையும் பலகைப் பனிச்சறுக்கு விளையாட்டில் ஆறு பதக்கங்களையும் பெற்றது.

- குறுகிய பாதை வேகச் சறுக்கு, நாடு கடந்த பனிச்சறுக்குப் போட்டி மற்றும் தரைப் பந்து ஆகியப் போட்டிகளில் முறையே நான்கு, இரண்டு மற்றும் ஒரு பதக்கங்களை இந்தியா வென்றது.

## மாற்றுத் திறனாளிகளுக்கான கேலோ இந்தியா விளையாட்டுப் போட்டிகள் 2025

- மாற்றுத் திறனாளிகளுக்கான இரண்டாவது கேலோ இந்தியா விளையாட்டுப் போட்டிகளின் தர வரிசையில் 34 தங்கப் பதக்கங்களுடன் ஹரியானா அணியானது மீண்டும் முதலிடத்தைப் பிடித்துள்ளது.
- ஹரியானா மாநில அணியானது மொத்தம் 104 பதக்கங்களுடன் (34 தங்கம், 39 வெள்ளி மற்றும் 31 வெண்கலம்) மீண்டும் பதக்கப் பட்டியலில் முன்னிலை பெற்றுள்ளது.
- தமிழ்நாடு மாநில அணியானது 74 பதக்கங்களுடன் (28 தங்கம், 19 வெள்ளி மற்றும் 27 வெண்கலம்) இரண்டாவது இடத்திற்கு முன்னேறியுள்ளது.
- கடந்த முறை இரண்டாவது இடத்தைப் பிடித்த உத்தரப் பிரதேச மாநில அணியானது, 64 பதக்கங்களுடன் (23 தங்கம், 21 வெள்ளி மற்றும் 20 வெண்கலம்) இந்த முறை இதில் மூன்றாவது இடத்தைப் பிடித்துள்ளது.

# முக்கிய தினங்கள்

| தேதி | முக்கிய தினங்கள் | கருத்துரு |
|---|---|---|
| **மார்ச் 01** | பாகுபாடு ஒழிப்பு தினம் | We stand together |
| **மார்ச் 01** | உலக குடிமைப் பாதுகாப்பு தினம் | – |
| **மார்ச் 01** | உலக கடற்புல் தினம் | – |
| **மார்ச் 03** | உலக வனவிலங்கு தினம் | Wildlife Conservation Finance: Investing in People and Planet |
| **மார்ச் 03** | உலக செவித்திறன் தினம் | Changing mindsets: Empower yourself to make ear and hearing care a reality for all |
| **மார்ச் 03** | உலக உடல் பருமன் தினம் | Changing System, Healthier Lives |
| **மார்ச் 04** | தேசியப் பாதுகாப்பு தினம் | Safety & Well-Being Crucial for Viksit Bharat |
| **மார்ச் 04** | உலகப் பொறியியல் தினம் | Unleashing the power of the engineers to advance the Sustainable Development Goals |
| **மார்ச் 05** | சர்வதேச ஆயுதக் குறைப்பு மற்றும் ஆயுதப் பரவல் தடுப்பு விழிப்புணர்வு தினம் | – |
| **மார்ச் 06** | உலக பல் மருத்துவர் தினம் | – |
| **மார்ச் 07** | ஜன் ஔஷதி திவாஸ் | – |
| **மார்ச் 08** | சர்வதேச மகளிர் தினம் | For ALL Women and Girls: Rights. Equality. Empowerment |

| | | |
|---|---|---|
| **மார்ச் 08** | சர்வதேச மகளிர் தினம் | Accelerate Action |
| **மார்ச் 10** | சர்வதேசப் பெண் நீதிபதிகள் தினம் | – |
| **மார்ச் 10** | CISF ஸ்தாபன தினம் | – |
| **மார்ச் 10** | காமன்வெல்த் தினம் | Together We Thrive |
| **மார்ச் 12** | புகையிலை எதிர்ப்பு தினம் | – |
| **மார்ச் 13** | உலக சிறுநீரக தினம் | Are Your Kidneys OK? Detect early, protect kidney health |
| **மார்ச் 14** | பை (π) தினம் | – |
| **மார்ச் 14** | நதிகளுக்கான சர்வதேச நடவடிக்கை தினம் | Our Rivers, Our Future |
| **மார்ச் 14** | உலக தூக்க தினம் | Make Sleep Health a Priority |
| **மார்ச் 15** | உலக நுகர்வோர் உரிமைகள் தினம் | A Just Transition to Sustainable Lifestyles |
| **மார்ச் 16** | தேசியத் தடுப்பூசி தினம் | – |
| **மார்ச் 18** | போர்த்தளவாட/ஆயுதத் தொழிற்சாலைகள் தினம் | – |
| **மார்ச் 20** | சர்வதேச மகிழ்ச்சி தினம் | Caring and Sharing |
| **மார்ச் 20** | உலகச் சிட்டுக்குருவிகள் தினம் | A Tribute to Nature's Tiny Messengers |
| **மார்ச் 20** | உலக வாய் சுகாதார தினம் | A happy mouth is... A HAPPY MIND |
| **மார்ச் 20** | வசந்தகால சம இரவு பகல் நாள் | – |
| **மார்ச் 20** | சர்வதேச நௌரஸ் தினம் 2025 | – |
| **மார்ச் 21** | உலகப் பனிப்பாறைகள் தினம் | – |
| **மார்ச் 21** | சர்வதேச வன தினம் | Forest and Food |
| **மார்ச் 21** | உலக மன நலிவு நோய் தினம் | Improve Our Support Systems |
| **மார்ச் 21** | சர்வதேச இன பாகுபாடு ஒழிப்பு தினம் | – |
| **மார்ச் 21** | உலகப் பொம்மலாட்ட தினம் | Robots, AI and the dream of the puppet? |
| **மார்ச் 22** | உலக தண்ணீர் தினம் | Glacier Preservation |
| **மார்ச் 22** | பீகார் மாநில தினம் | Advanced Bihar, Developed Bihar |
| **மார்ச் 22** | புவி நேரம் 2025 | The Power of Nature |
| **மார்ச் 23** | ஷாஹீத் திவாஸ் | – |
| **மார்ச் 23** | உலக வானிலை தினம் | Closing the early warning gap together |
| **மார்ச் 24** | உலக காசநோய் (TB) தினம் | Yes! We Can End TB: Commit, Invest, Deliver |
| **மார்ச் 25** | அடிமைத்தனம் மற்றும் அட்லாண்டிக் நாடுகளிடையேயான அடிமை வர்த்தகம் ஆகியவற்றால் பாதிக்கப்பட்டவர்களை நினைவு கூரும் சர்வதேச தினம் | Acknowledge the past. Repair the present. Build a future of dignity and justice |

| | | |
|---|---|---|
| **மார்ச் 25** | கருவில் உள்ள சிசுக்களுக்கான சர்வதேச தினம் | – |
| **மார்ச் 27** | உலக நாடக தினம் | – |

# பன்னாட்டு இராணுவ பயிற்சிகள்

| பயிற்சியின் பெயர் | பங்கேற்ற நாடுகள் | நடைபெற்ற இடம் |
|---|---|---|
| **சீ டிராகன் 2025 என்ற கடற்படைப் பயிற்சி** | இந்தியா, ஜப்பான், ஆஸ்திரேலியா மற்றும் தென் கொரியக் குடியரசு | மேற்கு பசிபிக் பெருங் கடல் |
| **கஞ்சர் - XII கூட்டு இராணுவப் பயிற்சி** | இந்தியா மற்றும் கிர்கிஸ்தான் | கிர்கிஸ்தானின் டோக்மோக் |
| **4வது இருதரப்புப் பயிற்சி, போங்கோசாகர்-23**<br><br>**6வது ஒருங்கிணைந்த ரோந்துப் பயிற்சி (CORPAT)** | இந்தியக் கடற்படை மற்றும் வங்காளதேசக் கடற்படை | வங்காள விரிகுடாவின் வடக்குப் பகுதி |
| **2025 ஆம் ஆண்டு கடல்சார் பாதுகாப்பு மண்டல கடற்படைப் பயிற்சி** | ரஷ்யா, ஈரான் மற்றும் சீனா | ஓமன் வளைகுடா |
| **23வது 'வருணா' இரு தரப்பு கடற்படைப் பயிற்சி** | இந்தியா மற்றும் பிரான்ஸ் | கோவா கடற்கரை |

# இதரச் செய்திகள்

## 2025 ஆம் ஆண்டின் மிகவும் மதிப்புமிக்க இந்திய நிறுவனங்கள்

- இப்பட்டியலில், 31.6 பில்லியன் டாலர் நிறுவன மதிப்புடன் டாடா குழுமம் முதலிடத்தில் உள்ளது.
- அதனைத் தொடர்ந்து, இன்ஃபோசிஸ் நிறுவனம் ஆனது இரண்டாவது மதிப்புமிக்க ஒரு இந்திய நிறுவனமாக இடம் பெற்றுள்ளது.
- தொடர்ந்து நான்கு ஆண்டுகளாக உலகளவில் மூன்றாவது மிக மதிப்புமிக்கத் தகவல் தொழில்நுட்ப சேவை நிறுவனமாகவும் இது அங்கீகரிக்கப்பட்டுள்ளது.
- அதைத் தொடர்ந்து சுமார் 14.2 பில்லியன் டாலர் மதிப்புடன் HDFC குழுமம், சுமார் 7.4 பில்லியன் டாலர் மதிப்புட லார்சன் அண்ட் டூப்ரோ (L&T) மற்றும் 6.5 பில்லியன் டாலர் மதிப்புடன் ஜியோ குழுமம் ஆகியவை இடம் பெற்றுள்ளன.
- 2025 ஆம் ஆண்டில் வேகமாக வளர்ந்து வரும் இந்திய நிறுவனமாக LIC உருவெடுத்து உள்ளது.

## ஃப்ரீமேசன்ஸ் மன்றம்

- சென்னையில் உள்ள ஃப்ரீமேசன்ஸ் மன்றமானது சமீபத்தில் தனது நூறு ஆண்டுகளை நிறைவு செய்துள்ளது.
- 1786 ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட தி லாட்ஜ் ஆஃப் பெர்ஃபெக்ட் யூனிமிட்டி (PU) மிகவும் பழமையானது.
- இம்மாகாணத்தில் உள்ள உள்ள அனைத்து தங்கும் விடுதிகளின் நிர்வாக அமைப்பான சென்னையின் மாபெரும் மாவட்ட விடுதியானது (DGL) 1866 ஆம் ஆண்டில் நடைமுறை புழக்கத்திற்கு வந்தது.
- இது ஜாக்சன் & பார்க்கரின் கட்டிடக் கலை நிறுவனத்தினால் வடிவமைக்கப்பட்டது.
- ஃப்ரீமேசன்ஸ் மன்றமானது 1925 ஆம் ஆண்டு பிப்ரவரி 26 ஆம் தேதியன்று ஆளுநர் லார்ட் கோசென் என்பவரால் திறந்து வைக்கப்பட்டது.

## நேரப் பயன்பாடு குறித்த கணக்கெடுப்பு 2024

- இரண்டாவது அகில இந்திய நேரப் பயன்பாட்டு கணக்கெடுப்பு 2024 ஆனது, சமீபத்தில் புள்ளி விவரங்கள் மற்றும் திட்ட அமலாக்கத் துறை அமைச்சகத்தினால் வெளியிடப் பட்டு உள்ளது.
- 2024 ஆம் ஆண்டில் பெண்கள் ஊதியம் வழங்கப்படாத வீட்டு வேலைகளில் தங்கள் வீட்டு உறுப்பினர்களுக்காக ஒரு நாளில் செலவிடும் நேரம் 10 நிமிடங்கள் குறைந்து 289 நிமிடங்களாகக் குறைந்தது.
- இது 2019 ஆம் ஆண்டில் 299 நிமிடங்களாக இருந்தது.
- கடந்த ஆண்டு ஆண்களை விட பெண்கள் வீட்டு உறுப்பினர்களுக்கான ஊதியம் வழங்கப்படாத வீட்டு சேவைகளில் ஒரு நாளில் 201 நிமிடங்கள் அதிகமாகச் செலவிட்டு உள்ளனர்.
- ஆண்களை விட பெண்கள் தம் வீட்டு உறுப்பினர்களுக்கான ஊதியம் வழங்கப்படாத பல பராமரிப்பு நடவடிக்கைகளில் ஒரு நாளில் 62 நிமிடங்கள் அதிகமாகச் செலவிட்டு உள்ளனர்.
- 15 முதல் 59 வயதுடைய பெண்கள் சுமார் 305 நிமிடங்கள் அதிக நேரம் செலவிட்டதால் ஊதியம் வழங்கப்படாத வீட்டு வேலைகளில் அவர்களின் பங்கு 2024 ஆம் ஆண்டில் அதிகமாகவே இருந்தது.
- இருப்பினும், வேலை மற்றும் அது தொடர்புடைய நடவடிக்கைகளுக்கு என்று, ஆண்கள் பெண்களை விட சுமார் 132 நிமிடங்களை அதிகமாகச் செலவிட்டனர் (பெண்கள் 341 நிமிடங்கள், ஆண்கள் 473 நிமிடங்கள்).
- இங்கு ஒட்டு மொத்தமாக, 2024 ஆம் ஆண்டில் ஒரு நாளில் சுமார் 83.9 சதவீதப் பெண்கள் ஊதியம் வழங்கப்படாத செயல்பாடுகளில் ஈடுபட்டுள்ளனர்.
- இது 2019 ஆம் ஆண்டில் 84.0 சதவீதமாக இருந்த நிலைக்கு கிட்டத்தட்டச் சமம் ஆகும்.
- ஊதியம் வழங்கப்படாதச் செயல்பாடுகளில், அவர்களின் பங்கு 2019 ஆம் ஆண்டில் 17.1 சதவீதத்திலிருந்து 2024 ஆம் ஆண்டில் 20.6 சதவீதமாக அதிகரித்துள்ளது.
- ஊதியம் வழங்கப்படாதச் செயல்பாடுகளில் ஆண்களின் பங்கேற்பு விகிதம் 2019 ஆம் ஆண்டில் 43.9 சதவீதத்திலிருந்து 2024 ஆம் ஆண்டில் 45.8 சதவீதமாக அதிகரித்துள்ளது.

- ஊதியம் வழங்கப்படாத வேலைகளில், அவர்களின் பங்கு 54.8 சதவீதத்திலிருந்து 60.5 சதவீதமாக அதிகரித்துள்ளது.
- 2024 ஆம் ஆண்டில் ஆண்கள் கற்றல் நடவடிக்கைகளில் 415 நிமிடங்கள் செலவிட்டனர் என்ற நிலையில் இது 2019 ஆம் ஆண்டில் பதிவான முந்தைய 426 நிமிடங்களிலிருந்து குறைவாகும்.
- பெண்கள் 2024 ஆம் ஆண்டில் அத்தகையச் செயல்பாடுகளில் சுமார் 413 நிமிடங்கள் செலவிட்டனர் என்ற ஒரு நிலைமையில் இது 2019 ஆம் ஆண்டில் பதிவான சுமார் 423 நிமிடங்களிலிருந்து குறைந்துள்ளது.

## இந்தியப் பெருந்தகைமை குறித்த அறிக்கை 2025

- சமூகத் துறை நிதியளிப்பு ஆனது கடந்த ஐந்து ஆண்டுகளில் சுமார் 13% அதிகரித்து 2024 ஆம் நிதியாண்டில் 25 லட்சம் கோடி ரூபாயை எட்டியுள்ளது.
- சமூகத் துறையளிப்பு ஆனது 2029 ஆம் நிதியாண்டில் 45 லட்சம் கோடி ரூபாயை எட்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.
- நிதி ஆயோக் அமைப்பானது, இத்துறைக்குச் சுமார் 14 லட்சம் கோடி ரூபாய் நிதிப் பற்றாக்குறை இருப்பதாக மதிப்பிட்டுள்ளது.
- 2025 ஆம் ஆண்டின் பெரு அறிக்கையின் படி, இந்த நிதி இடைவெளி ஆனது 2029 ஆம் நிதி ஆண்டில் 16 லட்சம் கோடி ரூபாயாக அதிகரிக்கும்.
- இதில் சமூகச் செலவினங்களானது, மொத்த நிதியில் சுமார் 95% பங்கினைக் கொண்ட பொதுத் துறையால் பெரும்பாலும் வழங்கப்படுகின்றன.
- பொதுத்துறை நிதியளிப்பு ஆனது, 2024 ஆம் நிதியாண்டில் 23 லட்சம் கோடி ரூபாயாக இருந்தது என்பதோடு இது அடுத்த ஐந்து ஆண்டுகளில் 43 லட்சம் கோடி ரூபாயை எட்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.
- மொத்த உள்நாட்டு உற்பத்தியில் பொதுத்துறையின் செலவினம் ஆனது 2024 ஆம் நிதி ஆண்டில் 7.9% ஆக இருந்தது. இது 2019 ஆம் நிதியாண்டில் 6.8% ஆக இருந்தது.
- 2024 ஆம் நிதியாண்டில், தனியார் செலவினமானது சுமார் 1.31 லட்சம் கோடி ரூபாயை எட்டியது என்ற நிலையில் இது 2023 ஆம் நிதியாண்டில் இருந்ததை விட வெறும் 7% அதிகமாகும்.

## கற்களான புதைபடிவம் – ஜார்க்கண்ட்

- பாகுர் மாவட்டத்தில் உள்ள பர்மாசியாஎன்ற கிராமத்திற்கு அருகிலுள்ள ராஜ்மஹால் மலைகளில் புவியியலாளர்கள் ஓர் அரிய மற்றும் நன்கு பதப்படுத்தப்பட்ட கல்லான புதைபடிவத்தினைக் கண்டறிந்துள்ளனர்.
- இது சுமார் 100-145 மில்லியன் ஆண்டுகள் பழமையானது என்று மதிப்பிடப்பட்டுள்ளது.
- இந்த அளவிலான புதைபடிவம் ஆனது ஜார்க்கண்டில் மட்டுமல்லாமல், இந்தியாவிலும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது இதுவே முதன்முறையாகும்.
- இந்த ஆய்வாளர்கள் குழு ஆனது, 14 பகுதிகளாகப் பிரிக்கப்பட்ட சுமார் 20 அடி நீள மரத்தைக் கண்டறிந்துள்ளது.

## S&P உலகளாவிய நிலைத்தன்மை தரவரிசை 2025

- யெஸ் வங்கி ஆனது, தொடர்ந்து மூன்றாவது ஆண்டாக நிலைத்தன்மையில் மிக அதிக மதிப்பீடு பெற்ற இந்தியாவின் முன்னணி வங்கியாக உருவெடுத்துள்ளது.
- 2025 ஆம் ஆண்டு S&P உலகளாவிய நிலைத் தன்மை ஆண்டு அறிக்கையில் சேர்க்கப் பட்டுள்ள ஒரே இந்திய கடன் வழங்கீட்டு நிறுவனம் இதுவாகும்.
- இது ESG செயல்திறனை மிக நன்கு அடிப்படையாகக் கொண்ட உலகளாவிய வங்கி நிறுவனங்களில் முதல் 15% நிறுவனங்களின் பட்டியல் ஆகும்.

## இந்தியாவில் மொழியியல் தரவு

- இந்தி மொழி பேசாதவர்கள் பொதுவாக புதிய மொழிகளைக் கற்க தயாராக உள்ளனர், அதே நேரத்தில் இந்தி மொழி பேசுபவர்கள் மிக குறைவான பன்மொழித் தன்மையைக் கொண்டுள்ளனர்.
- 1991 ஆம் ஆண்டில், தமிழ்நாட்டில் தமிழ் மொழியைத் தாய்மொழியாகப் பேசும் 84.5% நபர்கள் (மாநிலத்தில் தமிழ் மொழியை முதல் மொழியாகப் பேசுபவர்கள்) ஒருமொழி பேசுபவர்களாக இருந்தனர், இது 2011 ஆம் ஆண்டில் 78% ஆகக் குறைந்தது.
- இதே போல், ஒடிசாவில் தாய்மொழியாக ஒடியா மொழி பேசுபவர்களின் (ஒருமொழி பேசும் நபர்கள்) பங்கு 86 சதவீதத்திலிருந்து 74.5% ஆகக் குறைந்தது.
- இதற்கு நேர்மாறாக, இந்தி மொழி முதன்மையான மொழியாக இருக்கும் சில மாநிலங்களில் ஏற்கனவே ஒரு மொழி பேசுபவர்களின் பங்கு மிக அதிகமாக இருந்தது, என்பதோடு மேலும் பல சூழல்களில் இந்தப் பங்கானது காலப்போக்கில் அதிகரித்தது.
- உதாரணமாக, 1991 ஆம் ஆண்டில், பிரிக்கப் படாத பீகார் மாநிலத்தில் இந்தி மொழி பேசுபவர்களில் 90.2% பேர் ஒருமொழி பேசுபவர்களாக இருந்தனர்.
- 2011 ஆம் ஆண்டில், பிரிக்கப்பட்ட பீகாரில், இந்த எண்ணிக்கை 95.2% ஆக உயர்ந்தது.
- இதே போல், இராஜஸ்தானில் 1991 ஆம் ஆண்டில் இந்தி மொழி பேசுபவர்களில் 93% ஆக இருந்த ஒரு மொழி பேசுபவர்களின் பங்கு ஆனது 2011 ஆம் ஆண்டில் 94.3% ஆக அதிகரித்தது.
- தமிழ்நாட்டில், 1991 ஆம் ஆண்டில் 13.5% தமிழ் பேசுபவர்கள் ஆங்கில மொழியையும் பேசுபவர்களாக உள்ளனர், இது 2011 ஆம் ஆண்டில் 18.5% ஆக உயர்ந்தது.
- இதற்கு நேர்மாறாக, ஹரியானாவில், ஆங்கில மொழியையும் பேசும் இந்தி மொழி பேசுபவர்களின் பங்கு ஆனது அதே காலக் கட்டத்தில் 17.5 சதவீதத்திலிருந்து 14.6% ஆகக் குறைந்துள்ளது.
- தமிழ்நாட்டில், 1991 ஆம் ஆண்டில் தமிழ் மொழியைத் தாய்மொழியாகக் கொண்ட 0.5% பேர் மட்டுமே இந்தி மொழியை பேசினர் என்பதோடு இந்த எண்ணிக்கை ஆனது 2011 ஆம் ஆண்டில் 1.3% ஆக சற்று உயர்ந்தது.
- ஆனால், குஜராத் மற்றும் மகாராஷ்டிராவில் இந்தி மொழியையும் பேசும் தாய்மொழி பேசுபவர்களின் பங்கில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பு பதிவானது.

## செலினியம் மற்றும் முடி உதிர்தல் இடையிலான தொடர்பு

- பஞ்சாப் மற்றும் ஹரியானாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டு, அரசு ரேஷன் கடை அல்லது பொது விநியோக கடைகள் மூலம் வழங்கப்படும் கோதுமையில் ஆபத்தான அளவில் அதிக அளவு செலினியம் இருப்பது கண்டறியப்பட்டுள்ளது.

- செலினியம் ஆனது, நமது உடல்கள் ஆக்ஸிஜனேற்றச் சேதத்தை எதிர்த்துப் போராட உதவுகிறது மற்றும் தைராய்டு ஹார்மோன் செயல்பாட்டிற்கு உதவுகிறது.
- ஆனால், உடலில் அதன் அதிகப்படியான அளவு ஆனது செலினோசிஸ் என்ற நிலைக்கு வழிவகுக்கும் என்பதோடு இது முடி உதிர்தல், எளிதில் உடையக் கூடிய நகங்கள், தோல் பிரச்சினைகள் மற்றும் பிற உடல்நலப் பிரச்சினைகளை ஏற்படுத்துகிறது.
- கழுவப்படாத கோதுமையில் ஒரு கிலோவிற்கு சுமார் 14.52 மி.கி செலினியம் இருப்பது கண்டறியப் பட்டது என்ற நிலையில் கழுவப்பட்ட கோதுமையில் கூட ஒரு கிலோவிற்கு 13.61 மி.கி செலினியம் இருந்ததாக கண்டறியப்பட்டுள்ளது.
- இவை கோதுமையில் இயல்பாக இருக்க வேண்டிய கிலோவிற்கு 1.9 மில்லி கிராம் என்ற பாதுகாப்பான அளவை விட சுமார் எட்டு மடங்கு அதிகமாகும்.
- இந்த பகுதியின் மலைத்தொடரின் பாறைகளில் இயற்கையாகவே செலினியம் உள்ள நிலையில் மழைக்காலத்தில், இந்தப் பாறைகளைக் கரைத்து வழிந்தோடும் மழைநீர் செலினியம் நிறைந்த வண்டல்களைக் கடத்திச் செல்கிறது.
- இந்த வண்டல்கள் என்பது தண்ணீரில் கரைந்து பஞ்சாப் மாநிலத்தில் உள்ள வேளாண் நிலங்களில் ஓடி, அந்தப் பகுதியில் உள்ள மண்ணில் செலினியத்தின் அளவினை மிக நன்கு அதிகரிக்கின்றன.

## விலங்கு மீட்பு மையம் - வன்தாரா

- 3,500 ஏக்கர் பரப்பளவில் பரந்து விரிந்துள்ள இந்த மையத்தில், "உலகின் மிகப்பெரிய சிவிங்கிப் புலி வளங்காப்பு திட்டம்" மேற்கொள்ளப்படுகிறது.
- வன்தாரா பகுதியில் 2,000க்கும் மேற்பட்ட இனங்கள் மற்றும் உலகம் முழுவதிலுமிருந்து சுமார் 1.5 லட்சத்திற்கும் மேற்பட்ட மீட்கப்பட்ட, அருகி வரும் மற்றும் அச்சுறுத்தலுக்கு உள்ளான விலங்குகள் காணப்படுகின்றன.
- மத்திய அரசு ஆனது, சமீபத்தில் வன்தாராவுக்கு மதிப்புமிக்க 'பிராணி மித்ரா' எனப் படும் தேசிய விருதை வழங்கியது என்பதோடு இது இந்தியாவின் விலங்குகள் நலன் மீதான க்கான மிக உயரிய விருதாகும்.
- இந்த மையங்கள் ஆனது ICU, MRI, CT ஊடுருவு ஆய்வுக் கருவிகள், ஊடு கதிர் ஆய்வுக் கருவிகள், அல்ட்ராசவுண்ட், பல்வேறு உள்நோக்குக் குழாய்கள், பல் ஆய்வுக் கருவிகள், அதிரலைச் சிகிச்சை, இரத்தச் சுத்திகரிப்பு (கூழ்மப்பிரிப்பு) மற்றும் அறுவை சிகிச்சை முறைகளின் போது நேரடி ஒளிப்பதிவு நடைமுறைகளுக்கான ஒரு மிகவும் அதிநவீன தொழில்நுட்பத்தைக் கொண்டுள்ளன.

## பல்லுயிர்ப் பெருக்கத்தில் வாலஸ் எல்லைக் கோடு

- 19 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில், இங்கிலாந்து நாட்டினைச் சேர்ந்த ஒரு இயற்கை ஆர்வலரான ஆல்ஃபிரட் ரஸ்ஸல் வாலஸ் என்பவர் ஆசியாவிலிருந்து ஆஸ்திரேலியா, நியூ கினியா மற்றும் அதன் அருகிலுள்ள இதர பிற தீவுகளுக்கு புலம் பெயர்ந்த போது, உயிரினங்களின் வாழ்வியலில் ஒரு வியத்தகு மாற்றத்தைக் கவனித்தார்.
- அவர் பெருங்கடலில், பின்னர் வாலஸ் எல்லைக் கோடு என்றும் அழைக்கப்பட்ட ஒரு புலனாகா எல்லையினை உருவாக்கினார்.

- இது பாலி மற்றும் லோம்போக் ஆகிய தீவுகளுக்கு வழியாக சென்று, அதன் வடக்கில் போர்னியோவிற்கும் தெற்கே சுலவேசிக்கும் இடையில் மிண்டானாவோவின் தெற்கே வளைந்து செல்கிறது.
- வாலஸ் கோட்டின் மேற்கில் ஆசிய சுற்றுச்சூழல் அமைப்பின் மிகவும் சிறப்பியல்பு இனங்களான குரங்குகள், மனிதக் குரங்குகள், காண்டாமிருகங்கள், அணில்கள், புலிகள் மற்றும் இருவாச்சிகள் (ஹார்ன்பில்கள்) காணப்படுகின்றன.
- வாலஸ் கோட்டின் கிழக்கே ஆஸ்திரேலிய சுற்றுச்சூழல் அமைப்புடன் தொடர்புடைய மர வாழ் கங்காருக்கள், கொண்டைக் கிளி மற்றும் தேன் உண்ணி பறவைகள் உள்ளன.
- வாலஸ் கோட்டிற்கும் வெபர் கோட்டிற்கும் இடையிலான ஒரு பகுதி வாலஸ்யா என்று அழைக்கப் படுகிறது.
- தனியாக அமைந்த வாலஸ் தீவுகள் ஆனது, அருகிலுள்ள கண்டங்களை விட குறைந்த பல்லுயிர்ப் பெருக்கத்தைக் கொண்டுள்ளன என்பதோடு மேலும், உடும்பு, மான்பன்றி/ பாபிருசா மற்றும் இராட்சதத் தேனீக்கள் போன்ற தனித்துவமான உயிரினங்களைக் கொண்டுள்ளன.

## இலங்காமலா சைவ சமய மையம் – ஆந்திரப் பிரதேசம்

- மைசூரில் உள்ள இந்தியத் தொல்பொருள் ஆய்வு மையம் (ASI) ஆனது, இலங்காமலா வனவிலங்கு சரணாலயத்தில் பண்டைய காலக் கல்வெட்டுகள் மற்றும் வரலாற்றுக்கு முந்தைய காலப் பாறை ஓவியங்களைக் கண்டறிந்துள்ளது.
- சித்தமாத்ரிகா, சங்கு எழுத்து வடிவம் மற்றும் தேவநாகரியில் எழுதப்பட்ட 12 சிட்டை / முத்திரைக் கல்வெட்டுகள் ஆவணப்படுத்தப்பட்டுள்ளன.
- இவை கி.பி. நான்காம் நூற்றாண்டு முதல் 16 ஆம் நூற்றாண்டு வரையிலானவையாகும்
- வட இந்தியப் பகுதி பக்தர்கள் வருகை தரும் ஒரு முக்கிய சைவ யாத்திரை மையமாக இலங்காமாலா இருந்தது என்பதை இது குறிக்கிறது.
- அரிய சங்க எழுத்து வடிவங்களில் எழுதப்பட்ட 14 மற்றும் பிராமி எழுத்து வடிவில் எழுதப் பட்ட ஒன்று உட்பட சுமார் 15 கூடுதல் சிட்டைக் கல்வெட்டுகளை ஆய்வுக் குழு அடையாளம் கண்டுள்ளது.
- ஆக இராயலசீமா பகுதியில் சங்க எழுத்து வடிவங்களில் எழுதப்பட்ட கல்வெட்டுகளின் முதல் கண்டுபிடிப்பு இதுவாகும்.
- இது ஒரே பாறையில் செதுக்கப்பட்ட வகையில் இரு வெவ்வேறு காலக் கட்டங்களைச் சேர்ந்த 2 கல்வெட்டுகள் ஆகும்:
- இதில் பிராமி எழுத்து வடிவில் எழுதப்பட்ட 4 ஆம் நூற்றாண்டினைச் சேர்ந்த ஒன்று மற்றும் சங்க எழுத்து வடிவில் எழுதப் பட்ட சுமார் 6 ஆம் நூற்றாண்டினைச் சேர்ந்த மற்றொன்றும் உள்ளது.
- இது தென்னிந்தியாவில் எழுந்த எழுத்து வடிவப் பாணிகளின் பரிணாமம் பற்றிய சில நுண்ணறிவுகளை வழங்குகிறது.
- இந்தக் குழுவானது மூன்று பாறை உறைவிடங்களையும் கண்டறிந்துள்ளது, அவற்றில் ஒன்று வரலாற்றுக்கு முந்தையப் பாறை ஓவியங்களைக் கொண்டுள்ளது.
- இந்தத் தளம் ஆனது பெருங்கற்காலம் (இரும்பு வயது) மற்றும் முற்கால வரலாற்றுக் காலங்களுக்கு (கி.மு. 2500 – கி.பி. 2 ஆம் நூற்றாண்டு) முந்தையதாக நம்பப்படுகிறது.

## ஷிங்கிள்ஸ் நோய்

- பிப்ரவரி 24 முதல் மார்ச் 02 ஆம் தேதி வரையில் ஷிங்கிள்ஸ் நோய்/அக்கி அம்மை விழிப்புணர்வு வாரம் அனுசரிக்கப்படுகிறது.
- இக்கணக்கெடுப்பில் பங்கேற்ற 50 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட இந்தியர்களில் 56.6% பேருக்கு ஷிங்கிள்ஸ் நோய் பற்றி அதிகம் தகவல் அல்லது எந்த ஒரு தகவலும் தெரியவில்லை என்று ஒரு புதிய உலகளாவியக் கணக்கெடுப்பு கூறுகிறது.
- 50 வயதுக்கு மேற்பட்ட பெரியவர்களில் சுமார் 90 சதவீதத்திற்கும் அதிகமானோர் இந்த வைரஸ் பாதிப்பினைக் கொண்டுள்ளதால், அவர்கள் இந்த நோயால் பாதிக்கப்படும் ஒரு அபாயத்தினைக் கொண்டுள்ளனர்.
- சின்னம்மையினை ஏற்படுத்தும் வைரஸான வெரிசெல்லா-ஜோஸ்டர் வைரஸ் (VZV) மீண்டும் எழுச்சி பெறுவதால் ஷிங்கிள்ஸ் நோய் ஏற்படுகிறது.
- ஷிங்கிள்ஸ் என்பது கடுமையான மற்றும் நீண்ட கால அளவில் பல்வேறு சிக்கல்களை ஏற்படுத்தக் கூடிய ஒரு வலிமிகுந்த நோயாகும்.

## உலகின் மிகவும் விலையுயர்ந்த கால்நடை

- இந்திய வம்சாவளியைச் சேர்ந்த ஒரு பசுவானது, உலகின் மிகவும் விலையுயர்ந்த கால்நடையாக உள்ளது.
- 2023 ஆம் ஆண்டு பிரேசிலின் மினாஸ் ஜெரைஸில் நடைபெற்ற ஏலத்தில் வியாடினா-19 என்ற பசுவானது 40 கோடி ரூபாய்க்கு மேலான விலையில் விற்கப்பட்டது.
- இந்தப் பசுவின் எடை சுமார் 1,101 கிலோவாகும் என்பதோடு இது நெல்லூர் இனத்தைச் சேர்ந்த மற்ற பசுக்களின் சராசரி எடையை விட இரண்டு மடங்கு அதிகமாகும்.
- ஓங்கோல் இனம் என்றும் அழைக்கப்படுகின்ற இந்த வியாடினா-19 ஆனது நெல்லூர் இனத்தைச் சேர்ந்ததோடு இது முதன்முதலில் 1800 ஆம் ஆண்டுகளில் பிரேசிலுக்கு கொண்டு வரப்பட்டது.
- இந்த வியடினா-19 ஆனது, டெக்சாஸின் ஃபோர்ட் வொர்த் நகரில் நடைபெற்ற "உலக சாம்பியன்" போட்டியில் மிஸ் தென் அமெரிக்கா பட்டத்தினை வென்றது.
- வெப்பமண்டலப் பருவநிலைக்கு ஏற்ற ஒரு தகவமைப்பு மற்றும் நோய் எதிர்ப்பு சக்தி போன்ற அதன் திறனுக்காக நெல்லூர் இனம் நன்கு அறியப்பட்டதாகும்.
- பிரேசில் நாடானது, தற்போது நெல்லூர் கால்நடைகளை அதிகளவில் இனப்பெருக்கம் செய்யும் உலகின் மிகப்பெரிய நாடாகும்.
- இந்த வகை இனம் ஆனது அர்ஜென்டினா, பராகுவே, வெனிசுலா, மத்திய அமெரிக்கா, மெக்சிகோ, அமெரிக்கா மற்றும் பல நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது.
- பிரேசிலில் உள்ள பசுக்களில் குறைந்தது 80 சதவீதம் ஆனது ஜெபு கால்நடைகள் ஆகும் என்ற நிலையில் இது இந்தியாவில் தோன்றிய ஒரு கிளையினமாகும் என்பதோடு இது அதன் திமில் மற்றும் அசை தாடி ஆகியவற்றினால் வேறுபடுத்தி பார்க்கப்படுகிறது.

## YouGov India மதிப்புத் தரவரிசை 2025

- மதிப்புமிக்க YouGov India நிறுவனத்தின் 2025 ஆம் ஆண்டு மதிப்பீட்டுத் தரவரிசையில் குஜராத் கூட்டுறவுப் பால் சந்தைப்படுத்தல் கூட்டமைப்பு (Amul) ஆனது இந்தியாவின் மூன்றாவது மிகவும் மதிப்புமிக்க நிறுவனமாக தரவரிசைப்படுத்தப்பட்டுள்ளது.

- இந்தப் பட்டியலில் முதல் மூன்று இடங்களில் இடம் பெற்றுள்ள மிகவும் அதிகமாக விற்பனையாகும் நுகர்வோர் பொருட்கள் (FMCG) உற்பத்தி நிறுவனங்களில் அமுல் நிறுவனமும் ஒன்றாக விளங்குகிறது.
- அமேசான் 56.5 மதிப்பெண்களுடன் முதலிடத்திலும், அதைத் தொடர்ந்து பிளிப்கார்ட் 53.0 மதிப்பெண்ணுடன் இரண்டாம் இடத்திலும் உள்ளது.
- இந்தத் தரவரிசை விமான நிறுவனங்கள், மின்னணுவியல், வாகன உற்பத்தித் துறை, காப்பீடு, பயண முன்பதிவு மற்றும் இணைய வணிகம் உள்ளிட்ட ஆறு முக்கியத் தொழில்துறைகளை உள்ளடக்கியது.

## மோதலால் உருவான உலகின் பழமையான பள்ளம்

- மேற்கு ஆஸ்திரேலியப் பகுதியில் ஒரு விண்கல் மோதலால் உருவான உலகின் மிகவும் பழமையான பள்ளத்தினை ஆராய்ச்சியாளர்கள் கண்டறிந்துள்ளனர்.
- 3.5 பில்லியன் ஆண்டுகளுக்கு முன்பு ஒரு பெரிய விண்கல் பூமியைத் தாக்கி, பில்பாரா பகுதியில் வட துருவ டோம் தளத்தினை உருவாக்கியதாக மதிப்பிடப்பட்டுள்ளது.

## கீத் கவாய் வரவேற்பு

- இந்தியப் பிரதமர், மொரீஷியஸ் நாட்டில் உள்ள இந்தியப் புலம்பெயர்ந்தோரின் பெரும் பாரம்பரிய பீஹாரி வரவேற்பைப் பெற்றார்.
- அந்தப் பெண்கள் கீத் கவாய் எனப்படும் பீஹாரி கலாச்சார நிகழ்ச்சியுடன் அவரை வரவேற்றனர்.
- கீத் கவைன் என்பது இந்தியாவின் போஜ்புரி என்ற பகுதியைச் சேர்ந்த பெண்களால் மொரீஷியஸுக்குக் கொண்டு வரப்பட்ட, மிக வளமான கலாச்சாரப் பாரம்பரியத்தை உள்ளடக்கிய ஒரு பாரம்பரிய போஜ்புரி இசைக் குழுவாகும்.
- இது 2016 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் யுனெஸ்கோ அமைப்பின் மனிதகுலத்தின் தொட்டுணர முடியாத கலாச்சாரப் பாரம்பரியத்தின் பதிவுப் பட்டியலில் சேர்க்கப் பட்டது.
- 2 நாட்கள் அளவிலான இந்தப் பயணத்தின் போது, பிரதமர் மொரீஷியஸ் நாட்டின் மிக உயரிய விருதான கிராண்ட் கமாண்டர் ஆஃப் தி ஆர்டர் ஆஃப் தி ஸ்டார் அண்ட் கீ ஆஃப் தி இன்டியன் ஓசன் எனும் விருதைப் பெற்றார்.

## புற்றுநோய்க்கான CAR-T செல் சிகிச்சை

- இந்தியாவின் முதல் CAR-T செல் சிகிச்சையின் மருத்துவப் பரிசோதனை முடிவுகள் சுமார் 73 சதவீத நோயாளிகளில் சாதகமாக செயலாற்றியுள்ளன.
- இந்தியாவில் இருந்து சர்வதேச இதழில் வெளியிடப்பட்ட CAR-T செல் சிகிச்சையின் முதல் மருத்துவப் பரிசோதனை இதுவாகும்.
- CAR-T செல் சிகிச்சை அல்லது சைமெரிக் ஆன்டிஜென் ஏற்பி T-செல் சிகிச்சை ஆனது புற்றுநோய் செல்களை அடையாளம் கண்டு அழிக்க உடலில் உள்ள நோயெதிர்ப்பு செல்களைப் பயிற்றுவிக்கிறது.

## கைபேசி அகலப்பட்டை இணைய சேவைக் குறியீடு

- நோக்கியா நிறுவனமானது, அதன் வருடாந்திரக் கைபேசி அகலப் பட்டை இணைய சேவைக் குறியீட்டின் (MBiT) தகவல்களை வெளியிட்டுள்ளது.
- 2024 ஆம் ஆண்டில் இந்தியாவில் 5G தரவுப் பயன்பாட்டில் ஆண்டிற்கு மூன்று மடங்கு அதிகரிப்பு பதிவானது.
- 2024 ஆம் ஆண்டில் ஒரு பயனருக்குச் சராசரி மாதாந்திரத் தரவு நுகர்வு 27.5 ஜிகா பைட்டுகளாக அதிகரித்தது.
- செயலில் உள்ள 5G சாதனங்களின் எண்ணிக்கையானது ஆண்டிற்கு இரட்டிப்பாகி 2024 ஆம் ஆண்டில் 271 மில்லியனை எட்டியது.

## பெண்கள் தலைமையிலான புத்தொழில் நிறுவனங்களுக்கான உலகளாவிய நிதி - 2024

- உலகளாவியத் தொழில்நுட்பத் துறையில் பெண்கள் நிறுவிய 69,000க்கும் மேற்பட்ட தொழில்நுட்ப நிறுவனங்கள் உள்ளன என்பதொடு அவை கூட்டாக இன்றுவரையில் 309 பில்லியன் டாலர் நிதி திரட்டியுள்ளன.
- 2024 ஆம் ஆண்டில், பெண்கள் தலைமையிலான புத்தொழில் நிறுவனங்கள் மொத்த நிதியில் 11.7% பங்கினை மட்டுமே கொண்டிருந்தன.
- உலக அளவில் பெண்கள் தலைமையிலான தொழில்நுட்ப நிறுவனங்கள் 2024 ஆம் ஆண்டில் 29.6 பில்லியன் டாலர் பங்கினைப் பெற்றன.
- இது 2023 ஆம் ஆண்டில் பதிவான 33.1 பில்லியன் டாலரில் இருந்து 11% சரிவையும், 2022 ஆம் ஆண்டில் பதிவான 37.5 பில்லியன் டாலரில் இருந்து 21% சரிவையும் குறிக்கிறது.
- இந்தியாவில் பெண்கள் தலைமையிலான செயலில் உள்ள சுமார் 7,000க்கும் மேற்பட்ட புத்தொழில் நிறுவனங்கள் உள்ளன என்ற ஒரு நிலையில் இது நாட்டிலுள்ள அனைத்து செயலில் உள்ள புத்தொழில் நிறுவனங்களில் 7.5% ஆகும்.
- பெண் நிறுவனர்களைக் கொண்ட நிறுவனங்களால் திரட்டப்பட்ட அனைத்து நேர நிதி உதவியின் அடிப்படையில், அமெரிக்காவிற்கு அடுத்தபடியாக சுமார் 26 பில்லியன் டாலர் மதிப்பிலான மொத்த மூலதனத் திரட்டலுடன் இந்தியா இரண்டாவது இடத்தில் உள்ளது.

## ஆசிய-பசிபிக் பிராந்தியத்தில் அதிக வளர்ச்சியடைந்த நிறுவனங்கள் 2025

- இந்திய நேரடிக் கடன் வழங்கும் தளமான லென்ட்பாக்ஸ் நிறுவனம் பைனான்சியல் டைம்ஸ் மற்றும் ஸ்டாடிஸ்டா ஆகியவற்றின் 500 மிக அதிக வளர்ச்சியடைந்த ஆசிய-பசிபிக் நிறுவனங்களின் தர வரிசையில் முதலிடத்தைப் பிடித்துள்ளது.
- ப்ளூஸ்மார்ட் (6வது), மீஷோ (72வது), டைட்டன் நிறுவனம் (301வது), ஆதித்யா பிர்லா கேபிடல் (374வது), மற்றும் ஹேவெல்ஸ் (396வது) போன்ற பிற குறிப்பிடத்தக்க இந்திய நிறுவனங்களும் இந்த பட்டியலில் இடம் பெற்றுள்ளன.
- மொத்தத்தில், இந்தியாவைச் சேர்ந்த 81 நிறுவனங்கள் இப்பட்டியலில் இடம் பெற்று உள்ளன.
- இந்த ஆண்டு தர வரிசையில் 108 நிறுவனங்கள் இதில் இடம் பெற்றுள்ளதுடன், அதிக எண்ணிக்கையிலான நிறுவனங்கள் இடம் பெற்றுள்ள நகரம் மற்றும் நாடு சிங்கப்பூர் ஆகும்.

## விக்ரமஷீலா பல்கலைக் கழகம்

- மத்திய அரசானது, 2015 ஆம் ஆண்டில் இந்தப் பல்கலைக்கழகத்தின் மேம்பாட்டிற்காக முதலில் 500 கோடி ரூபாய் நிதி ஒதுக்கியது.
- தற்போது பீகாரின் ஆன்டிசக் கிராமத்தில் நிலக் கையகப்படுத்தலுக்காக 87.99 கோடி ரூபாய்க்கு மாநில அரசு ஒப்புதல் அளித்துள்ளது.
- நாளந்தா பல்கலைக்கழகம் ஆனது குப்தர்கள் காலத்திலிருந்து (கி.பி 320-550) 12 ஆம் நூற்றாண்டு வரை செழித்து திகழ்ந்து வந்தது என்ற ஒரு நிலைமையில் விக்ரமஷீலா பாலர்களின் ஆட்சிக் காலத்தில் செழித்து வளர்ந்தது.
- இதனை 8 ஆம் ஆண்டின் பிற்பகுதியிலிருந்து 9 ஆம் நூற்றாண்டின் முற்பகுதி வரை ஆட்சி செய்த பாலர் வம்சத்தின் மன்னர் தர்மபாலர் என்பவர் நிறுவினார்.

## லப்பிஸ் லசுலி - ஆப்கானிஸ்தான்

- லப்பிஸ் லசுலி என்பது சில சமயங்களில் தங்க நிறக் கோடுகள் மற்றும் அரிய கல் மணிகள் / ஒரு இரத்தினக் கல்லாக பயன்படுத்தப்படும் ஒரு தெளிவான நீல நிறப் பாறையாகும்.
- இதில் லசுரைட் (25-40%) எனப்படும் ஒரு அசாதாரண கனிமம் காணப்படுவதனால் இது இந்த நிறத்தைப் பெறுகிறது.
- அதன் நீலநிறத் தன்மையானது, இந்த கனிமத்தில் உள்ள கந்தகத்தின் அளவு மற்றும் கட்டமைப்பைப் பொறுத்தது.
- லாபிஸ் லசுலி ஆனது இதுவரையில் சிலி, ரஷ்யா மற்றும் அமெரிக்கா உள்ளிட்ட பல நாடுகளில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.
- ஆனால் மிகவும் உயர்ந்த தரமான ஒரு பாறையானது ஆப்கானிஸ்தானின் படாக்சான் மாகாணத்திலிருந்து பெறப்படுகிறது என்பதோடு இங்கு அது 6,000 ஆண்டுகளுக்கும் மேலாக வெட்டி எடுக்கப்படுகின்றது.
- இந்தப் பாறையானது இரண்டு மொழிகளில் இருந்து அதன் பெயரைப் பெறுகிறது: லப்பிஸ் என்பது 'கல்' எனப் பொருள்படும் இலத்தீன் மொழி சொல் ஆகும், அதே சமயம் 'லசுலி' என்பது 'நீலம்' என்று பொருள்படும் லாஷ்வர்டு எனும் பாரசீகத்தின் மொழிச் சொல்லில் இருந்து பெறப்பட்டது.

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★